(258)

## பொருளடக்கம்.


| | பக்கங்கள் |
|---|---|
| 1 வினாக்கள்—விடைகள்— | 793—817 |
| 2 அறிவிப்பு— | |
| அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு குறித்து .. | 818 |
| 3 கவன ஈர்ப்பு— | |
| (1) மதுரை சீதாலட்சுமி நூற்பாலையில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்வது குறித்து | 818—819 |
| (2) குடியாத்தம் நகரில் குடிநீர் சரிவர விநியோகம் செய்யாதது குறித்து | |
| 4 அரசின் தீர்மானம்— | |
| வேளாண்மை குறித்த கொள்கை விளக்க குறிப்பு. | 820—896 |
| 5 அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் .. .. | 896—897 |


Vol 216. No 5.

28 June 1985

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம் சென்னை-600 008.
143955
V21,32'N85
N85.216.5



## தமிழ் நாடு சட்டமன்ற மேலவை

வெள்ளிக்கிழமை, 1985 ஜூன் 28.

ஆனி 14, குரோதன—திருவள்ளுவாண்டு 2015.

ஆனி 14, குரோதன—திருவள்ளுவாண்டு-2016.

முற்பகல் 10-00 மணியளவில் மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்.

### வேளாண்மைப் பணிகட்கு மின்கட்டணத்தைக் குறைத்தல்

* 66 வினா.—திரு. எல். ஜெயச்சந்திரன்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

வேளாண்மைப் பணிகளுக்காக விசைக்குழாய் அமைப்புகட்கு வழங்கப்படும் மின்சாரத்திற்கு வாங்கப்படும் மின் கட்டணத்தை, குதிரை சக்திக்கு ரூ. 75 என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளதை, ரூ. 50 ஆகக் குறைக்கும் கருத்துரு ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இல்லை.

திரு. எல். ஜெயச்சந்திரன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விசைக்குழாய் அமைப்புகட்கு வழங்கப்படும் மின்சாரத்திற்குக் கட்டணம் ரூ. 75 ஆக இருப்பதை ரூ. 50 ஆகக் குறைக்கும் எண்ணம் இல்லை என்று சொல்லியிருக்கின்றார்கள். ஏழை விவசாயிகள் ரூ. 75 ஆக இருப்பது மிகவும் அதிகமாக இருக்கின்றது என்று கருதுகிறார்கள். தற்சமயம் குறைப்பதாக இல்லை என்றாலும், வருங்காலத்திலாவது ரூ. 50 என்று ஆக்கும் எண்ணம் அரசுக்கு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, ஏழையெளிய விவசாயிகள் இலவசமாக மின்சாரம் பெற்று வருகின்றனர். ஆகவே இந்தப் பிரச்சினையில் அவர்கள் அடங்க மாட்டார்கள்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: இப்போது இந்த விசைக்குழாய்கள் அமைப்புகட்கு வழங்கப்படுகின்ற மின்சாரத்திற்குக் குதிரைத் திறனுக்கு ரூ. 75 வீதம் கட்டணம் வசூலிக்கின்றார்கள். சில பகுதிகளிலே இதை ஆண்டு முழுவதும் பயன்படுத்துவதில்லை. மூன்று மாதங்கள் பயன்படுத்துபவர்கள்

இருக்கின்றார்கள். 6 மாதம், 9 மாதம், 12 மாதம் முழுவதும் பயன் படுத்துபவர்கள் என்று இருக்கின்றார்கள். அதுபோல விரல்விட்டு எண்ணக் கூடிய நாட்களுக்கு மட்டும் பயன்படுத்துபவர்களும் இருக்கின்றார்கள். அப்படிப்பட்ட பகுதிகள் இருக்கின்றன. அவர்கள் எல்லாம் கூட கட்டாயமாக அந்தத் தொகையைச் செலுத்தவேண்டிய நிலையிலே இருக்கின்றார்கள். அப்படிப்பட்டவர்கள் ஏற்கெனவே மீட்டர் இருந்த நிலையிலேயே வைத்துக் கொண்டு கட்டுவதற்கு அனுமதி கேட்டிருக்கின்றார்கள். இப்போது பழைய முறையில் கட்ட ஆப்ஷன் கொடுக்கலாம். கர்நாடகத்திலே ரூ. 50 என்று கட்டணம் வசூலிக்கின்றார்கள். இப்போது ரூ. 75 ஆக இருப்பதை ரூ. 50 ஆகக் குறைக்காவிட்டாலும் அவர்கள் தற்போதைக்கு பழைய மீட்டர் முறையிலேயே கட்டிக்கொள்ள வழிவகை செய்யப்படுமா? அவர்கள் பயன் படுத்தாமலேயே பணம் கட்டவேண்டியதாக இருக்கின்றது. அவர்களுக்காவது அரசு ஏதாவது செய்யுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** விவசாயிகள் கேட்டுக் கொண்டதன் பேரில் மீட்டர் வைத்து, ஒரு அளவு வைத்து அதன்படி கட்டணம் கட்ட வேண்டும் என்பதைவிட, சராசரி குதிரைத் திறனுக்கு இவ்வளவு கட்டணம் என்று போடுவது சிறந்தது என்ற அடிப்படையிலேதான் ரூ. 75 என்று போடப்பட்டிருக்கிறது. விவசாயிகளின் மூலம் மின் வாரியத் திற்கு எவ்வளவு வருமானம் வருகிறது என்று பார்த்து கட்டணம் விதிக்கப் பட்டிருக்கிறது. ஒரு விவசாயிக்கு பாதகமாக இருந்தால், இன்னொரு விவசாயிக்கு அது நன்மையாக இருக்கிறது. மூன்று மாதம், 9 மாதம், 12 மாதம் பயன்படுத்துகின்றவர்களுக்குத்தான் பாதிப்பு இருக்கிறது. இதன் மூலம் அரசாங்கத்திற்கு அதிகமான வருமானம் வருவதில்லை. விவசாயிகள் அனைவரும் ஒட்டுமொத்தமாக ஒரே வர்க்கம் என்றுதான் நாங்கள் நினைக்கிறோம்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** ஏழையெளிய விவசாயிகளுக்கு மின்சாரம் இலவசமாக வழங்குவதாகவும் மற்ற விவசாயிகளுக்கு ஃப்ளாட் ரேட்டில் விலக்களித்து மின்சாரம் வழங்குவதாகவும் சொல்கின்றார்கள். அதனால் பயன்பெறுகின்ற விவசாயிகள் எத்தனை பேர்கள்? இதனால் அரசுக்கு எவ்வளவு இழப்பு ஏற்பட்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** சுமார் ஒரு லட்சம் விவசாயிகள் இதனால் பலன் பெற்றிருக்கின்றார்கள். ரூ. 9 கோடிக்கு இதனால் இழப்பு ஏற்படுகிறது.



**திரு. பா. ரா. தாமஸ்:** ஒரு விவசாயி என்று எடுக்கும்போது. அது நஞ்சை நிலமாக இருந்தால், 2½ ஏக்கருக்கு ரூ. 75 என்று இருக்கின்றது. ஒரு குதிரைத் திறனுக்கு என்று வைத்திருக்கின்றார்கள். ஆனால் அந்தக் குடும்பத்திற்கு வெவ்வேறு இடங்களிலே நிலம் இருந்து, அந்த ஆயக்கட்டிலேயே ஒரு கேணியிலே இவ்வாறு மின்விசைக் குழாய் பொருத்தி யிருந்தால், இருவருடைய நிலத்தையும் சேர்த்து 2½ ஏக்கர் நிலம் இருந்தால் இலவசமாகத் தர முடியாது, ஆகவே குதிரைத் திறனுக்கு ரூ. 75 கட்ட வேண்டும் என்று கட்டாயமாக வசூலிக்கப்படுகிறது. அப்படி விதிமுறைகள் இருக்கின்றதா? கணவனும் மனைவியும் சுதந்திரமானவர்களாகக் கருதப்பட வேண்டாமா? அது குறித்து அரசின் கருத்தை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** குடும்பம் என்ற முறையில்தான் கருதப்படுகிறது. கணவன், மனைவியைத் தனியாகப் பிரித்து வைக்கக் கூடாது.

**திரு. க. சுப்பு:** இந்த முறையால் தண்ணீர் அதிகமாக இருக்கின்ற பகுதி களிலே நிலம் உள்ள விவசாயிகளுக்கு லாபமிருக்கிறது. ஆனால் வறண்ட பகுதியில் இருப்பவர்கள் தண்ணீர் இல்லாமல் அதனால் அவர்கள் கஷ்டபட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்குக் கட்டாயம் கட்டணம் கட்டுவது என்று இப்படி 'ஃப்ளாட்' ரேட்டிலே போடுவதால் பாதிப்பு இருக்கிறது. அப்படி பாதிக்கப்படுகிற விவசாயிகள் எண்ணிக்கை அதிகமாக இருப்பதால், அரசாங்கம் அதைப்பற்றிப் பரிசீலிக்குமா?

(முற்பகல் 10-05)

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** வறண்ட பகுதியில் இருக்கிற விவசாயிகள் அல்லது வெள்ளம் உள்ள பகுதியில் உள்ள விவசாயிகள் என்று பார்க்கும்போது, 'ஃப்ளாட் ரேட்' அத்தகைய சாதக பாதகங்களை உருவாக்குமென்று விவசாயிகள் சங்கத்திற்குச் சொல்லப்பட்டது. இருந்தாலும், அவர்களுக்குச் சௌகரியமாக இருக்குமென்ற வகையில் ஹார்ஸ் பவருக்கு ஒரு 'ஃப்ளாட் ரேட்' வேண்டுமென்று கேட்டார்கள். இதனால் பெரிய பாதகம் வராது. ஏனென்றால் ஏழை விவசாயிகளுக்கு மின்சாரத்தை இலவசமாகத் தருகிறோம். வசதி உள்ளவர்கள்தான் இந்த 75 ரூபாயைக் கட்ட வேண்டி யிருக்கிறத். எனவே மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்ற அவசியம் அரசுக்கில்லை. இது குறித்து பெரிய விவசாயிகள் நீதி மன்றத்திற்குச் சென்று 'ஸ்டே' வாங்கியிருக்கிறார்கள்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** அமைச்சரவர்கள் மிகப் பெரும்பாலோர் பாதிக்கப்படவில்லை, விவசாயிகள் சமுதாயமே ஒன்றுதான், அந்தப் பாதகம் அல்லது பாதிப்பை ஏற்றுக்கொள்வார்கள் என்று பதில் சொல்கிறார்கள், மறு

பரிசீலனை இல்லை என்றும் சொல்லுகிறார்கள். ஒரு வேண்டுகோளாகச் சொல்கிறோம். இதைப் பரிசீலிக்க வேண்டும். ஒரு முறை புள்ளிவிவரம் எடுத்துப் பார்த்தால் உணர முடியும். அப்போதாவது அதற்குரிய நடவடிக்கைகளை, நாங்கள் சொன்ன வகைகளிலே செய்ய முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இந்தச் சலுகையே வேண்டுகோள்களின் அடிப்படையில் அமைந்ததுதான்.

## Cattle of Tamil Nadu.

* 61. Q.—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Labour be pleased to state :

(*a*) whether it is a fact that nearly thirteen lakhs of cattle head per year are being transported to Kerala State from Tamil Nadu, for being exported as beef to Arabian countries; and

(*b*) if so, the steps taken to prevent this?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ) தமிழ் நாட்டில் இருந்து கால்நடைகள் கேரளாவிற்குக் கொண்டு செல்லப்படுகின்றன.

(இ) தமிழ் நாட்டில் இருந்து பிற மாநிலங்களுக்கு ,கால்நடைகளைக் கொண்டு செல்ல தடை ஏதும் இல்லை. இம்மாநிலத்தில் பசுக்கள் வெட்டப் படுவதைத் தடுப்பதற்கும், ஏனைய கால்நடைகளைப் பாதுகாப்பதற்கும் வகை செய்யும் சட்ட முன்வடிவு (சட்ட முன்வடிவு எண் 21/1982) 1982 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்டது. இந்தச் சட்ட முன்வடிவு சட்டமன்ற கூட்டாய்வுக் குழுவின் (Joint Select Committee) ) அறிவுரை பெற அனுப்பப்பட்டது. 15—11—1984-ல் சட்டமன்றப் பேரவை கலைக்கப்பட்டதால், மேற்படி பசு பாதுகாப்புச் சட்ட முன்வடிவு காலாவதியாகிவிட்டது. இந்தச் சட்ட முன்வடிவை மத்திய அரசின் ஒப்புதல் பெற்று மீண்டும் சட்டசபையில் கொண்டுவருவதற்கு தக்க நடவடிக்கை தனியே எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. பா. ரா. தாமஸ்: தலைவரவர்களே, மதுரை, கோவை, கன்னியாகுமரி போன்ற மாவட்டங்களின் மூலமாக ஒரு வாரத்திற்கு ஏறத்தாழ 25,000 மாடுகள் வெளியே போய்க்கொண்டிருக்கின்றன. பசு மாடுகள், காளை மாடுகள் அதிகமாகக் கடத்தப்பட்டு, இறைச்சிக்காக அங்கே கொல்லப்படுகிறது கேரளாவில் கிலோ 6 ரூபாயிலிருந்து 12 ரூபாய் விற்கிறது என்றாலும்,



அராபிய நாடுகளிலே கிலோ 150 ரூபாய் என்ற அளவிலே விற்கப்பட்டு, அவர்கள் ஏராளமாகச் சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்காக கேரள வியாபாரிகள் இங்கேயிருந்து மாடுகளைக் கடத்துகிறார்கள். இது தமிழக மக்களுக்குப் பெருத்த இழப்பாக இருக்கிறதே, உடனே அந்தந்த முனைகளிலேயே அதைத் தடுத்து நிறுத்தக்கூடிய அவசரச் சட்டத்தைப் போட்டு, அதை நிறுத்தக்கூடாதா? ஏனென்றால் நம்முடைய கால்நடைச் செல்வங்களை இழக்கும் நிலைமை இருக்கிறது என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: பிற மாநிலங்களுக்குக் கால்நடைகள் செல்வதும், வருவதும் இன்றைக்கு நடைமுறையாக இருக்கிறது. அவசியமான கால்நடைகளைப் பெறவும் வேண்டியிருக்கிறது, கொடுக்கவும் வேண்டியிருக்கிறது. எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தை ஆய்ந்து, தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. க. சுப்பு: அமைச்சரவர்கள் குறிப்பிடும்போது, பசுவதைத் தடைச் சட்டம் வருவதாக இருக்கிறதென்று சொன்னார்கள். அது பசு வதையைத் தடுப்பதற்காகத்தான் என்று நினைக்கிறேன். மேலும் அது கேரளாவில் அமுலாகாது. எனவே அந்தச் சட்டம் இதற்குப் பயன்படாது. மாடுகள் வெளியே போவதைத் தடுக்க தனியாக விசேட நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். எனவே அதற்குரிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்க இருக்கிறதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மேலவைத் தலைவரவர்களே, சட்டபூர்வமாக இதைத் தடுக்கலாமா என்ற ஒரு ஆய்வு அரசிடத்தில் இருக்கிறது.

டாக்டர் இரா. சனார்த்தனம்: இப்படிக் கொண்டுபோகிற மாடுகள் அடி மாடுகள் என்று சொல்லுகிறார்கள். அவை அப்படிப் போவதில் தவறில்லை. இந்த மாடுகளை குறுக்கு வழி என்று காட்டுப் பாதையில் கொண்டு போவதால், மாட்டின் வியாதிகள் வன விலங்குகளுக்கு வருவதாகத் தெரிவிக்கிறார்கள். எனவே இந்தப் பகுதி மூலமாகத்தான் கொண்டு போகலாம் என்று கட்டுப்பாடு விதிக்க அரசு ஆலோசிக்குமா?

(முற்பகல் 10-10)

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: அது பரிசீலிக்கப்படும்.

செல்வி ஆ. லீலாவதி: பசு வதைத்தடுப்புச் சட்ட கூட்டாய்வுக் குழுவிலே நானும் ஓர் அங்கத்தினராக இருந்தேன். சமூக நலத் துறை அமைச்சர் அவர்களும் அதிலே தலைமை தாங்கியிருந்தார்கள். அந்தக் குழு காலாவதியாகிவிட்டது என்று இங்கே அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மீண்டும் ஒன்றைச் சொல்கிறேன். அந்தக் குழு சற்றேறக்குறைய எல்லா வகையிலும் ஒரு தீர்மானத்திற்கு வந்து விட்டது. அதை ஏற்று உடனடியாக பசு வதைத் தடுப்புச் சட்டத்தைக் கொண்டுவர அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: ஜனாதிபதியினுடைய ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டிருக்கிறது. அது வந்ததற்குப் பின்னால் சட்டமாக்கப்படும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாடுகளைப் படை படையாக ஓட்டிச் செல்வதை இரவு நேரங்களில் நாம் சில இடங்களில் காண முடிகிறது. ஓட்டிச் செல்கின்ற அந்த மாடுகளை அங்கீகரிக்கப்படாத காடு, மலை போன்ற பகுதிகளில் வெட்டி இறைச்சியாக்கி ஏற்றுமதி செய்யும் நிலை இருப்பதாகவும், அந்தப் பகுதிகளில் சுகாதாரக் கேடுகளை உண்டுபண்ணுவதாகவும், இந்த விதமாக அரசையும் அவர்கள் ஏமாற்றுவதாகவும் சொல்கிறார்கள், பத்திரிகையிலும் செய்தி வந்திருக்கிறது. சட்டம் வருவதற்கு முன்பே உடனடியாக இதனைக் கட்டுப்படுத்துவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: துரிதமாக சட்டமே கொண்டு வரப்படும்.

சென்னையில் பாரதிதாசனுக்கு நினைவுச்சின்னம்.

*68. வினா. திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) சென்னையில், பாரதிதாசன் வாழ்ந்த இல்லத்தை, நினைவுச் சின்னமாக்க வேண்டுமென்று, அரசுக்கு, தமிழ்க் கவிஞர் மன்றத்திடமிருந்து, 1984, ஜூனில் கோரிக்கை ஏதும் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில் அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: (அ) இல்லை.

(இ). கேள்வி எழாது.





திரு. க. மீனாட்சிசுந்தரம்: பாவேந்தர் பாரதிதாசன் தமிழ் இனத்திற்கு ஒரு தன்மான உணர்வை, மொழி உணர்வை, புரட்சிகரமான எண்ணங்களை மக்கள் மனதில் ஊட்டியவர் என்பதற்காக நாமெல்லாம் அவருடைய புகழைப் பாராட்டிக்கொண்டிருக்கிறோம். இந்நிலையில் அவருக்கு ஒரு நினைவுச் சின்னம் அமைப்பது குறித்த கருத்துரு இப்போது அரசின் பரிசீலனையில் இல்லையென்றாலும் கூட, வருங்காலத்திலே இதனை அமைத்தால். அரசுக்கும், தமிழ் மக்களுக்கும் பெருமை அளிப்பதாக இருக்கும். அந்த வகையில் அரசு இதுபற்றிப் புனர் பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: இங்கே கேட்டிருக்கின்ற வினா "சென்னையில், பாரதிதாசன் வாழ்ந்த இல்லத்தை, நினைவுச் சின்னமாக்க வேண்டுமென்று, அரசுக்கு, தமிழ்க்கவிஞர் மன்றத்திடமிருந்து, 1984, ஜூனில் கோரிக்கை ஏதும் வந்துள்ளதா?" என்பதாகும். அதற்கு 'இல்லை' யென்று ஏற்கெனவே பதில் சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பாவேந்தர் பாரதிதாசன் அவர்களுக்கு நினைவுச் சின்னம் எழுப்ப அல்லது அவரது பெயரை நிலைநிறுத்துகின்ற வகையில் அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது அல்லது எடுக்க இருக்கிறது என்று கேட்டால் அதற்குத் தகுந்த பதிலைச் சொல்வேன்.

டாக்டர் இரா. சனார்த்தனம்: பாரதிதாசன் அவர்களுடைய இறுதிக்கால ஆசையாக, பாரதியார் பற்றி திரைப்படம் எடுக்க வேண்டுமென்று விருப்பம் கொண்டிருந்ததாகச் சொல்கிறார்கள். அப்படி அவர் எழுதியிருக்கிறாரா? அந்தத் திரைப்படத்தை எடுப்பதற்கு இந்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: அப்படிப்பட்ட செய்தி ஒன்று பரவலாகப் பேசப்பட்டது. சில பத்திரிகைகளிலும் செய்தியாக வந்தது. அதைப்பற்றிய எந்த விபரமும் அரசிடத்தில் இல்லை. யாரும் அரசுக்குத் தரவும் இல்லை. அப்படிப்பட்ட விவரம் உறுப்பினரிடம் இருந்தால், அதை அரசுக்கு அளித்தால், அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: தமிழ்க் கவிஞர் மன்றத்திடமிருந்து அரசுக்கு அனுப்பப்பட்ட வேண்டுகோளின் நகல் எனக்கு வந்ததன் அடிப்படையில்தான் நான் இதைக் கேட்டேன். அந்தப் பேப்பரை இங்கே கொண்டு வராமல் நேராக வந்துவிட்டேன். அது அரசுக்குக் கிடைக்கா விட்டாலும் கூட, அரசு பாவேந்தர் பாரதிதாசன் அவர்களுடைய பெயரை நிலை நிறுத்துகின்ற வகையில் இதுவரை எடுத்திருக்கும் நடவடிக்கைகள் எவை எவை என்று அறிய விரும்புகிறேன். அந்த நடவடிக்கைகளுடன் இவர்களுடைய கோரிக்கையும் சேர்த்து பரிசீலிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: பாவேந்தர் பாரதிதாசன் அவர்களுடைய நினைவைப் போற்றுகின்ற வகையில் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு பாவேந்தர் அவர்களுடைய பிறந்த நாள் விழாவை ஆண்டுதோறும் மிகச்சிறப்பாக இந்த அரசின் சார்பிலே கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

(முற்பகல் 10-15)

அவர்களுடைய பிறந்த நாளின் நினைவாக ஒவ்வொரு ஆண்டும் பாவேந்தர் பாரதிதாசன் விருது என்ற பெயரால் ஒரு சிறந்த கவிஞருக்கு ரூ. 10,000 பொற்கிழியும் 4 பவுன் எடையுள்ள தங்கப்பதக்கமும் வழங்கப்பட்டு வருகிறது. அதைத் தவிர, பாரதிதாசனுடைய கவிதை நூல்களை நாட்டுடைமையாக்க வேண்டுமென்று அரசு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது. அதற்கு சம்பந்தப்பட்ட, பாரதிதாசன் அவர்களுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்களையும் அழைத்துப் பேசிக் கொண்டிருக்கிறோம்.

## திருவதிகை அருள்மிகு வீரட்டாணேசுவரர் ஆலயம்

* 69 வினா—திரு. அ.ப. சிவராமன் : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

பண்ருட்டி நகரத்தையொட்டியுள்ள திருவதிகை அருள்மிகு வீரட்டாணேசுவரர் ஆலயத்தில், குடமுழுக்கு செய்யும் கருத்துரு ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : திருவதிகை அருள்மிகு வீரட்டானேசுவரர் ஆலயத்திருப்பணி மற்றும் குடமுழுக்கு ஆகியவைகள் செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

திரு. அ. ப. சிவராமன் : தலைவரவர்களே. உழவாரப்பணிபுரிந்த அப்பர் பெருமான் வாழ்ந்த ஊர், தெய்வீக நெறி பரப்பிய திலகவதியார் திருத்தொண்டாற்றிய திருக்கோயில் திருவதிகை அருள்மிகு வீரட்டாணேசுவரர் ஆலயம். இறைவன் தடுத்தாட்கொண்ட சுந்தர மூர்த்தி நாயனார் திருநாவால் பாடிய திருத்தலம். இப்படிப் பாடல்பெற்ற இந்த திருவீரட்டாணம் என்கிற திருவதிகை வீரட்டானேசுவரர் ஆலயம், புனரமைப்பு மற்றும் குடமுழுக்கு செய்யப்படாமல் கடந்த 20 ஆண்டுகளாகக் கேட்பாரற்று இருந்தது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பெருமனது கொண்டு இந்தப் பணியை ஆரம்பித்திருக்கிறார்கள். சென்ற வாரம் அந்தப் பகுதி பெருமக்களோடு,



ஆத்திகப் பெருமக்களும் இந்த அரசையும், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களையும் நெஞ்சார வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள். அம்மக்கள் சார்பில் என் இதயம் கனிந்த நன்றியையும் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்பணிக்காக மேலும் கூடுதல் நிதி ஒதுக்கப்படுமா ? இப்பணி எப்போது நிறைவு பெறும் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : திருமுன்ற கண்ட சோழ மன்னனின் ஆயிரமாவது முடிசூட்டு விழா ஆண்டின் நினைவாகவும், அவனுடைய பெருமையை நினைவு கூர்கிற அளவில், இந்த ஆண்டு 60 ஆலயங்களில், பொது மக்கள் ஆதரவுடன் சரித்திரப் புகழ் பெற்ற ஆலயங்களில், திருப்பணிகளை மேற்கொள்வது என்று அறநிலையத் துறை முடிவெடுத்து, அந்தத் திட்டத்தின் கீழ் இந்த ஆலயங்களின் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்தத் திருப்பணிகள் நன்கொடையாளர்களால் மனமுவந்து நடத்தப்படுகின்றன. அவ்வாறுதான் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. ஆலயத்தில் ஒவ்வொரு பகுதியையும் திருப்பணி செய்வதற்கு ஒவ்வொரு நன்கொடையாளர் முன்வந்திருக்கிறார்கள். அவர்கள் பொறுப்பில்தான் அவை நடக்கின்றன. இது தவிர, ஒரு லட்சம் ரூபாய் பொதுவாக, பொதுமக்களிடத்தில் வசூலித்து, மற்ற திருப்பணிகளை நிறைவேற்ற வேண்டுமென்ற திட்டமும், அறநிலையத் துறைக்கு வந்திருக்கிறது. ஆகவே, எவ்வளவு மொத்தமாகச் செலவாகும் என்று கணக்கிடப்படவில்லை. பொதுமக்களிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டிய தொகை ஒரு லட்சம் ரூபாய் என்று மட்டும் கணக்கிடப்பட்டிருக்கிறது. பல திருப்பணிகள் தனியார்களால் அவர்களது சொந்த நன்கொடையால் நடத்தப்படுகின்றன.

திரு. அ. ப. சிவராமன் : இந்தக் கோயில் மிகப்பெரியது. ராஜகோபுரங்களே நான்கு இருக்கின்றன. ஒரு கோபுரத்தை முடிக்க நான்கைந்து லட்ச ரூபாய் செலவாகும். நாங்கள் பல்வேறு பணிகளை அங்கே முடித்து வைத்திருக்கிறோம் என்றாலும் கூட, அரசுடைய ஒத்துழைப்பு இல்லாமல் அத்தகைய பெரும் பணியைச் செய்ய முடியாது என்பதையும் உணர்ந்திருக்கிறோம். ஆகவே அமைச்சர் அவர்கள் அருள் கூர்ந்து, எத்தனையோ கோயில்களின் திருப்பணிகளைச் செய்து வருவதுபோல், இந்தக் கோயிலுக்கும் போதுமான நிதியுதவி செய்து, அவர்கள் பெயரை ஆயிரம், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு நிலை நிறுத்த வேண்டும். அந்த வகையில் கூடுதலாக நிதி ஒதுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** தமிழ் மக்களுக்குச் சிறப்பையும் புகழையும் சேர்த்து வைத்திருக்கிற சான்றோர்களில் திருநாவுக்கரசுப் பெருமான் தலைசிறந்த சான்றோராகத் திகழ்கிறார்கள். அவர் வாழ்ந்த அந்தப் பகுதியில் உள்ள அந்தத் திருக்கோயில் தமிழ் மக்கள் போற்றிப் பாதுகாக்கவேண்டிய திருக்கோயில் என்பதை அறநிலைத்துறை உணர்ந்திருக்கிறது. எவ்வளவு செலவாகும் என்பதைப்பற்றி அறநிலையத் துறை கணக்கில் எடுத்துக்கொள்ளாமல், எவ்வளவு செலவானாலும் இந்தத் திருப்பணிகள் முறையாக நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### சென்னையில் சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சி

*** 70 வினா.**—திரு. அ. மயில்சாமி (திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் சார்பில்): மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னையில், சுற்றுலா—வர்த்தகப் பொருட்காட்சியை நிரந்தரமாக அமைக்க, அரசு முடிவு செய்துள்ளது என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அது எப்பொழுது முதல் அமைக்கப்படும் ?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** (அ) மற்றும் (இ) கொள்கையளவில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

அரசின் பரிசீலனைக்குப் பின் முழுதிட்டமும் செயல்படுத்தப்படும்.

(முற்பகல் 10-20)

**திரு. அ. மயில்சாமி :** சென்னை, கோவை. திருச்சி போன்ற பெரு நகரங்களிலெல்லாம், அண்மைக் காலங்களில் அரசே பொருட்காட்சியை ஏற்று நடத்துவதால், மக்களுக்கு நல்ல பயன் விளைவதாக எல்லோருமே சொல்கிறார்கள். அந்த அடிப்படையில்தான், சென்னை போன்ற பெருநகரங்களில் உல்லாசப் பயணிகள் எப்போதும் அதிகம் வரும் காரணத்தினால், பொருட்காட்சியை நிரந்தரமாக வைத்தால், அதிகப்பயன் விளையும் என்று கருதி அரசு நிரந்தரமாக வைக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** அரசு மாவட்டத் தலைநகரங்களில் நடத்துகிற பொருட்காட்சிகள் மூலம் மக்கள் நல்ல பயன் அடைகிறார்கள்' என்று சொல்லக் கேள்விப்பட்ட செய்திகளை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததற்கு, அவருக்கு நன்றி. அவரே கோவை மாவட்டத்தைச் சார்ந்த உறுப்பினர். அவரே பொருட் காட்சிக்கு சென்று பார்த்துத் தெரிந்திருக்கலாம். சொல்லக் கேட்டதை வைத்து இங்கே பாராட்டுகின்றார். அதற்கு நான் என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்து, சென்னையில் முதலில் இப்படிப்பட்ட பொருட்காட்சியை நிரந்தரமாக அமைக்க வேண்டுமென்று அரசு முடிவெடுத்திருக்கிறது. சென்னையில் அமைத்ததற்குப் பிறகு மற்ற மாவட்டத் தலைநகரங்களில் தொடர்ந்து அது போன்ற முயற்சிகளில் அரசு ஈடுபட இயலும்.





**டாக்டர் இரா. சனார்த்தனம் :** சுற்றுலாப் பொருட்காட்சி தமிழகத்திலே அரசால் நடத்தப்படுவது, மக்களிடையே நல்லாதரவைப் பெற்று வருகிறது. சென்னையில் நிரந்தரப் பொருட்காட்சியை அமைத்ததற்குப் பிறகு, அடுத்த இடமாக கோவை தேர்ந்தெடுக்கப்படுமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன். காரணம், அதிகக் கட்டணம் கொடுத்து பொருட்காட்சியைப் பார்க்க கோவை மக்கள் தயாராக இருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** சென்னையைப் பொறுத்தவரை, சுற்றுலா வளர்ச்சிக் கழகம்தான் பொருட்காட்சியை நடத்துகிறது. மாவட்டத் தலைநகரங்களில் அரசின் சார்பிலே செய்தித் துறை இத்தகைய பொருட்காட்சிகளை நடத்திக் கொண்டிருக்கிறது. அந்த வகையில் கோவை மாநகரத்திலே நடைபெறுகிற பொருட்காட்சியே முதலிடத்தை வகித்துக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மகிழ்கின்ற வகையில் மாவட்டத் தலைநகரங்களில் அப்படிப்பட்ட நிரந்தரப் பொருட்காட்சி அமைக்கின்ற முடிவு எடுக்கின்றபோது, முதலிடம் கோவை மாநகரத்திற்குத்தான் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எல். ஜெயச்சந்திரன் :** சென்னையில் பொருட்காட்சியை நிரந்தரமாக அமைப்பதுபற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலளித்தார்கள். இதுபோன்ற பொருட்காட்சி, தென்னாற்காடு மாவட்டத் தலைநகரமான கடலூரிலே சமீபகாலமாக இரண்டு, மூன்று ஆண்டு காலத்திற்குள் நடந்ததில்லை. அரசு, நிரந்தரமாக இல்லாவிட்டாலும், ஆண்டுக்கு ஒரு முறை என்றாவது, வரும் ஆண்டுகளில் இப்படிப்பட்ட பொருட்காட்சியை நடத்த முன்வருமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** தலைவர் அவர்களே, செய்தித் துறை சார்பிலே நடத்தப்படுகின்ற இந்தப் பொருட்காட்சிகள் எல்லா மாவட்டத் தலைநகரங்களில் நடத்தப்பட வேண்டுமென்பது அரசினுடைய திட்டம்.

அதிலே இதுவரை அநேகமாக எல்லா பெரிய மாவட்டத் தலைநகரங்களிலெல்லாம் நடத்தப்பட்டு விட்டன. ஆண்டுதோறும் நடந்தும் வருகின்றன. அதிலே கடலூர் விடுபட்டிருக்கிறது. இரண்டாண்டுகளுக்கு முன்பே பொருட்காட்சியை அங்கே நடத்த வேண்டுமென்று முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. மற்ற நகரங்களில் நடத்துகிறபோது, கடலூர் நகரத்துக்கு, எந்தத் தேதியும் சரியாக ஒத்துவராத காரணத்தினாலே, தள்ளிக்கொண்டே வந்துவிட்டது. இந்த ஆண்டோ அல்லது விரைவிலோ பொருட்காட்சியை கடலூரிலே நடத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

**திரு. பா. ரா. தாமஸ் :** இத்தகைய பொருட்காட்சிகள் மூலமாக சுற்றுலாத் துறை ஏராளமாக வருவாய் ஈட்டி வருவதாக அறிய வருகிறோம். எந்த அளவுக்கு வருவாய் அதிகமாகப் பெற்றிருக்கிறோம்? எந்த எந்த மாவட்டங்கள் அதில் வருவாய் கொடுத்திருக்கின்றனவோ அந்த அந்த மாவட்டங்களின் முன்னேற்றப் பணிகளுக்கு இந்த வருவாயிலிருந்து ஏதேனும் தொகை கொடுக்கக்கூடிய திட்டம் ஏதேனும் அரசு வைத்திருக்கிறதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** இது போன்ற பொருட்காட்சிகள் மூலமாக ஏராளமான வருவாயைச் சுற்றுலாக் கழகம் பெற்றுக்கொண்டிருக்கிறதென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள், அப்படி ஏராளமான வருவாயை நாம் இன்னும் பெறவில்லை. சுற்றுலா வளர்ச்சிக் கழகம் பொருட்காட்சியை சென்னையில் மாத்திரம் தான் நடத்துகிறது. மற்ற மாவட்டத் தலைநகரங்களில் நடத்துகிற பொருட்காட்சிகள் அரசினுடைய செய்தித் துறை சார்பிலே நடத்தப்படுகின்றன. ஆகவே மற்ற மாவட்டத் தலைநகரங்களில் நடத்துவதில் இதுவரை மிகப் பெரிய வருமானம் கிடைக்கின்ற பொருட்காட்சி கோவை, அதற்கு அடுத்து சேலம். இந்த இரண்டும் தான். ஆகவே, இதுவரை சென்னையைத் தவிர 26 இடங்களில் பொருட்காட்சிகளை நடத்தி முடித்திருக்கிறோம்.

(முற்பகல் 10-25)

அந்த 26 பொருட் காட்சிகளில் ஏறத்தாழ 1 கோடியே 7 லட்சம் ரூபாய் என்கிற அளவுக்கு வருமானம் செய்தித் துறைக்குக் கிடைத்திருக்கிறது. இந்தியாவிலேயே செலவு மாத்திரம் செய்து கொண்டிருக்கிற ஒரு துறையாகிய செய்தித் துறை தமிழ் நாட்டிலே தான் வருமானம் ஈட்டுகிற துறையாகவும் விளங்கிக் கொண்டிருக்கிறது. ஆகவே இந்த 1 கோடியே 7 லட்சம் ரூபாய் மூதலீட்டை வைத்துக்கொண்டு மேலும் நம்முடைய மாநில அரசினுடைய





நிதியைப் பெற்று மத்திய அரசின் உதவியைப் பெற்று மாவட்டத் தலைநகரங்களிலே கலையரங்குகள் உருவாக்கப்பட வேண்டுமென்பது கொள்கையாக எடுக்கப்பட்டிருக்கிறது. அதற்கு முதலிலே கோவையிலே அப்படிப்பட்ட ஒரு அரங்கம் உருவாக்குவதற்கு 25 லட்சம் ரூபாய் அனுமதித்து 15 லட்ச ரூபாய் சென்ற நிதி ஆண்டிலே வழங்கப் பெற்றிருக்கிறது. அப்படிக் கிடைக்கின்ற நிதியைப் பயன்படுத்தி இந்தக் கலையரங்குகள் உருவாக்கப்பட வேண்டுமென்பது அரசின் திட்டம்.

மலை வாழைப்பழம்.

*71. **வினா.—திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) கொடைக்கானல் பகுதியில், மலை வாழைப்பழம் (சிறுமலைப் பழம்) பயிரிடுவது சிறுகச்சிறுக குறைந்து, தற்போது அறவே இந்த மலை வாழைப்பழச் சாகுபடியை கைவிடும் நிலை உருவாகியுள்ளது என்பது உண்மையா?

(இ) இது குறித்து, அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** (அ) ஆம்.

(இ) கொடைக்கானல் பகுதிகளில் முடிக்கொத்து என்ற வைரஸ் நோயை ஒழிக்க மைய அரசின் முழு உதவியுடன் முடிக் கொத்து நோய் ஒழிப்புத் திட்டம் ஒன்று 1—10—1976 முதல் செயலாக்கப்பட்டது. இந்த நோயை ஒழிப்பதற்கு சாகுபடியாளர்களின் முழு ஒத்துழைப்பு கிடைக்காததால் இத்திட்டம் 1979 ஜூலை மாத இறுதியுடன் கைவிடப்பட்டது. இருந்தாலும் கொடைக்கானல் பகுதியில் இந்நோய் தடுப்பு முறைகள் பற்றிய தொழில் நுட்ப ஆலோசனை பயிற்சி வழி தொடர்புத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டு வருகிறது. இந்நோய் முழுமையாக ஒழிந்த இடத்தில் 8,000 நோய் தாக்காத வாழைக்கன்றுகள் ஆண்டுதோறும் வினியோகிக்கப்படுகின்றன.

**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவர் அவர்களே, சிறு மலைப் பழம் ஒரு புகழ் பெற்ற பழம். கடந்த 10, 15 ஆண்டுகளுக்கு முன்னாலே 2 ஆயிரம் ஏக்கரில் பயிரிடப்பட்டதாகச் சொன்னார்கள். இப்பொழுது அது எந்த அளவுக்குப் பயிரிடப்படுகிறது? அரசாங்கம் தனிச் சிறப்பு எடுத்துக்கொண்டு கொடைக்கானல், பழனி மலைப்பகுதிகளிலே சிறு மலைப் பழம் உற்பத்தி செய்வதற்கான தீவிர முயற்சி எடுக்கப்படுமா? அரசாங்கத்தின் தீவிரமான

முயற்சியின் மூலம்தான் இந்த மலை வாழைப் பழத்தைக் காப்பாற்ற முடியுமென்று நான் கருதுகிறேன். எனவே அரசு தீவிர அக்கரை செலுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, 1972-73-ல் 12 ஆயிரம் ஹெக்டேரில் காப்பியிலே ஊடு பயிராகவும், 2,400 ஹெக்டேரில் தனிப் பயிராகவும் பயிரிடப்பட்ட இந்த சிறு வாழை 1983-84-லே 4 ஆயிரம் ஹெக்டேரில் காப்பி ஊடு பயிராகவும், 1885 ஹெக்டேரிலே தனிப் பயிராகவும் பயிரிடப்பட்டது. 1972-73-லே 1 லட்சத்து 75 ஆயிரம் டன் கிடைத்தது. 1983-84-லே 84 ஆயிரம் டன்னாகக் குறைந்திருக்கிறது. இருந்தாலும், இந்த நிலைமையைச் சரிக்கட்டுகின்ற வகையில் சேலம் மாவட்டம் சின்னக் கல்ராயன் மலை கருமாந்துறையில் 40 ஹெக்டேரிலே வாழைத் தோட்டம் ஒன்றும் அமைக்கப்பட்டு, இந்த முடிக்கொத்து நோய் தாக்காத அளவிலே அங்கே உருவாக்கப்பட்டு 1984-85-லே 75 ஆயிரம் கன்றுகள் வினியோகம் செய்யப்பட்டது. கொடைக்கானலிலே இதற்குப் பதிலாக நாம் மான்டரின் ஆரஞ்சுக் கொடிகளை வழங்கி அதன்மூலம் ஆரஞ்சு உற்பத்தி செய்து கொண்டிருக்கிறோம்.

**திரு. க. சுப்பு :** இதுகுறித்து அமைச்சர் அவர்கள் குறிப்பிடும்போது விவசாயிகள் ஒத்துழைப்புக் கொடுக்காததால் அந்த முடிக்கொத்து நோயை எல்லாம் தவிர்க்க முடியவில்லை என்று சொன்னார்கள். என்ன வழிகளிலே அவர்கள் ஒத்துழைப்பு கொடுக்க வில்லை? அதற்கு என்ன காரணம் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** இந்தத் துறை மூலமாக எடுக்கப் படக்கூடிய நடவடிக்கைகளை அவர்கள் மேற்கொண்டு அந்த நோயைத் தடுத்திருக்க வேண்டும். அந்த வகையிலே ஒத்துழைப்பு தரவில்லை.

**திரு. பா. ரா. தாமஸ் :** சிறு மலை வாழைப் பழம் தற்சமயம் சிறு மலையில் பயிரிடப்படுகிறதா? அந்த மலையில் இருந்துதான் பழங்கள் பொதுவாக உற்பத்தி செய்யப்பட்டன. அந்த முறையிலே அங்கே நம்முடைய வேளாண்மைத் துறை ஒரு மாதிரிப் பண்ணையை அமைத்து உற்பத்தி செய்து பிறகு முன்மாதிரியாக அமைக்கலாம் அல்லவா? அதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** சிறு மலையில் அது சிறு அளவு பயிரிடப்படுகிறது. அந்த நோய் தாக்கிய பகுதிகளில் அது பரவக் கூடுமென்ற காரணத்தினாலேதான் வேறு இடங்களிலே, சின்னக் கல்ராயன் போன்ற [illegible]



**திரு. ஏ. ஜே. தாஸ் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, திண்டுக்கல்லிலே மலை வாழைப் பழம் அதிகமாகப் பயிரிடப்பட்டு வந்தது. இப்போது அந்தப் பகுதியிலே அந்தப் பழங்களும் குறைந்து விட்டன. அதற்கு என்ன காரணம் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, இதுதான் காரணம்.

**செல்வி ஆ. லீலாவதி :** வாழைப் பழம் அப்போதெல்லாம் ஏழை மக்கள் வாங்கிச் சாப்பிடும் பழமாக இருந்தது. அது 10 பைசாவுக்கு எல்லாம் முன்பு விற்பனை ஆகிக்கொண்டிருந்தது. ஆனால் இப்போது ஒரு பழம் 50 பைசா கொடுத்தால்தான் வாங்க முடிகிறது. ஆகையால் இந்த வாழைப் பழங்களை அதிகமாகப் பயிரிட்டு ஏழை மக்களுக்கு மலிவான விலையில் கொடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** இப்போது வாழைக்கன்றுகள் எல்லாம் பயிராகி வாழை அதிகமாகின்ற நேரத்தில் விலை குறையும்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** மலை வாழை அல்லவோ கல்வி என்று கவிஞர்கள் சொன்ன காரணத்தினாலேதான் இந்த மலை வாழைப் பழத்தை அதிகம் கவனிக்கிறார்களா? பல்வேறு பழங்கள் இருப்பதாகச் சொல்கிறார்கள். அதுவும் தமிழ் நாட்டில்தான் பல்வகை என்று சொல்கிறார்கள். அத்தனையும் காப்பாற்றி ஏழை மக்களுக்குக் குறைந்த விலையில் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** அவ்வளவையும் கவனிக்கிறோம்,

## வேளாண்மைப் பொறியியல் கருவிகள்

* 72. **வினா—திரு. அ. ப. சிவராமன் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்படும் ஆழ்துளைக் கிணறு தோண்டும் கருவி (Bore well) மற்றும் காற்று அழுத்தும் கருவி (Air Compressor) ஆகியவற்றிற்கு, நாள் வாடகை பல மடங்கு உயர்த்தப்பட்டுள்ளது என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், இந்த உயர்வுக்குக், காரணம் யாது?

[1985 ஜுன் 28

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) விவசாயிகளுக்கு வாடகைக்கு விடப்படும் சிறுபாசன இயந்திரங்களின் வாடகை விகிதம், சீராய்வு செய்யப்பட்டு, புதிய வாடகை விகிதங்கள் நிர்ணயிக்கப்பட்டன.

(இ) இயந்திரங்களின் பராமரிப்புச் செலவு, இயக்குபவரின் ஊதியம், இடு பொருட்களின் விலை உயர்வு, ஆகியவற்றையும் விவசாயிகள் இடு பொருட்களை வாங்குவதற்கு படும் சிரமத்தை கருத்திற் கொண்டும் இவ் வாடகை விகிதங்கள் மாற்றி அமைக்கப்பட்டன.

[முற்பகல் 10-30]

திரு. அ. ப. சிவராமன் : தலைவர் அவர்களே, விவசாயிகள் உற்பத்தி செய்யும் விளைபொருள்களுக்கு விலை உத்தரவாதமில்லை. விவசாயத் தொழில் அங்கீகரிக்கப்படவில்லை. நாம் சோற்றில் கை வைக்க வேண்டு மென்றால், விவசாயி சேற்றில் கால் வைக்க வேண்டும். இந்த நிலையை உணர்ந்துதான் மாண்புமிகு புரட்சித் தலைவரின் அரசு விவசாயிகளுக்கு மிகுந்த உற்சாகம் அளிக்கிற வகையில் கூடுதலான சலுகைகளைத் தருகிறது. கடன் வசதி செய்து தருகிறது. இலவச மின்சாரம் அளித்து வருகிறது. இநத நிலையில் ஆழ் துளை கிணறு தோண்டும் கருவிக்கு உரிய கட்டணத்தை 5 ரூபாயிலிருந்து ரூ. 25 ஆக உயர்த்தப்பட்டிருப்பது அதாவது 5 மடங்கு அதிக மாக உயர்த்தியிருப்பதும், ஏர் கம்பரசருக்கான கட்டணத்தை ரூ. 40-லிருந்து 120 ரூபாயாக உயர்த்தியிருப்பதும் மிகவும் அதிகப்படியான கட்டண உயர்வு என்றுதான் நான் கருதுகிறேன். எனவே இதன் காரணமாக விவசாயிகள் பெருந் தொல்லைக்கு ஆளாவதைக் கருத்தில் கொண்டு இந்தக் கட்டணங்களை யெல்லாம் குறைக்க வேண்டுமென்று நான் கேட்கவில்லை, அறவே நீக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : முன்பு இந்தக் கருவிகளுக்குத் தேவையான துளை முனை, டீசல் போன்றவைகளை விவசாயிகளே வாங்கிக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அப்படி விவசாயிகள் அவற்றை வாங்கு வதில் உள்ள சிரமங்களைக் கருத்தில் கொண்டு இப்போது துறை மூலமாகவே அந்தப் பொருள்களைப் பெற்று அதற்குரிய கட்டணத்தையும் சேர்த்துக் கணக்கிட்டு அத்துடன் இயக்குவோரின் ஊதியத்தையும் உயர்த்த வேண்டும் என்பதையும் கருத்தில் கொண்டு கட்டணம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. விவசாயிகளையும் நாம் கவனிக்க வேண்டும், தொழிலாளர்களையும் நாம் கவனிக்க வேண்டும். அந்த வகையில்தான் கட்டண விகிதங்கள் நிர்ணயிக்கப் படுகின்றன. இருந்தாலும் இதையேகூட சற்று மாற்றியமைக்கலாமா? அப்படி முடியுமா என்பதைப்பற்றி துறை பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.



1985 ஜுன் 28]

திரு. அ. ப. சிவராமன் : இந்தக் கட்டணங்கள் சிறிது மாற்றியமைக்கப் பட்டிருக்கின்றன என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே குறிப் பிட்டார்கள். அப்படியென்றால் எந்த விதத்தில் மாற்றியமைக்கப் பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : விவசாயத்திற்குப் பயன்படக் கூடிய இந்தக் கருவிகளுக்கு டீசல் இல்லாமல் ரூ. 115 என்றும், விவசாயம் அல்லாத காரியங்களுக்கு டீசல் இல்லாமல் ரூ. 170 என்றும் மாற்றியமைக்கப் பட்டிருக்கிறது. அதாவது விவசாயிகளுக்கு 32 சதவீதம் ஊக்குவிப்புத் தொகை வழங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : ஆழ் துளைக் கிணறு போடும் போர் வெல் போட்டு எடுக்கப்படுகிற நீர் தொடர்ந்து கிடைப்பதில்லை. கொஞ்ச காலத் திற்குக் கிடைக்கிறது. பிறகு நீர் வற்றி வறண்டுவிடுகிறது. எனவே அதை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டியிருக்கிறது. கேணி கூட சிறிது காலத்திற்குத் தான் நீர் சுரந்து தண்ணீர் தருகிறது. பிறகு அதிலும் தூர் வாற வேண்டியிருக்கிறது. இத்தகைய கருவிகளை இயக்குவதற்கு அந்த ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுக்க விவசாயிகள் தயாராக இருக்கிறார்கள் என்றாலும், முதன் முறை இல்லாமல் அடுத்தடுத்து இத்தகைய கருவிகளை விவசாயிகள் பயன்படுத்த நேரும்போது அதாவது வற்றிப் போன இடத்தில் இருந்து வேறு இடத்திற்கு மாற்றிப் போட்டு தண்ணீர் பெற முயற்சிக்கும் போது, வாடகை இல்லாமல் இக்கருவிகளை விவசாயிகளுக்குத் தருவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : வாடகை இல்லாமல் இலவச மாகத் தருகிற உத்தேசம் அரசுக்கு இல்லை. எதுவும் இலவசமாக வழங்கப் பட்டால், அதில் யாருக்கும் பொறுப்புணர்ச்சி இருக்காது என்பதோடு தவறுகள் நடப்பதற்கான வாய்ப்புகள் உண்டு. எனவே விவசாயிகள் பாதிக்கப்படாத அளவுக்கு அவர்களுக்கு இது சுமையாக இல்லாத அளவுக்கு எந்த அளவுக்கு மாற்றியமைக்க வேண்டுமோ அப்படிச் செய்ய இருக்கிறோம்.

திரு. எல். ஜெயச்சந்திரன் : இந்தக் கருவிகளுக்குரிய வாடகையைப் பற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். விவசாயிகள் இத்தகைய கருவிகளை அதிகமான கட்டணம் கொடுத்துப் பயன்படுத்தத் தயாராக இருந்தாலும், இக்கருவிகள் தேவைப்படும்போது விரைவாகக் கிடைப்ப தில்லை. கடலூரைப் பொறுத்த வரையில் 30 முதல் [illegible] நாட்கள் என்பார்.

சில சமயங்களில் 3 மாதம் கூட காத்திருக்க வேண்டியதாகிவிடுகிறது. எனவே மாவட்டங்கள் தோறும் இந்தக் கருவிகளை நிறைய வாங்கி வைத்து விவசாயிகள் கேட்கும்போது உடனடியாகக் கொடுத்து உதவ அமைச்சர் அவர்கள் நடவடிக்கை மேற்கொள்ளுவாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** அரசிடம் நிறைய இருந்தால், எந்த விதச் சிக்கலும் இல்லாமல் அவ்வப்போது கொடுத்துவிடலாம். அப்படி வாங்குவதற்கு நிறைய வசதி தேவை என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

### அர்விந்த் சாராய ஆலை

* 73. **வினா—திரு. அ. ப. சிவராமன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தென் ஆற்காடு மாவட்டம், காடாம்புலியூரில் உள்ள அர்விந்த்—சாராய ஆலை (Distillery) யின் கழிவுநீர் மாம்பட்டு ஓடையில் விடப்படுவதால், அதன் கரையோரங்களில் வாழும் மக்கள், சுகாதாரக் கேடுகளால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை அரசு அறியுமா ?

(இ) ஆம் எனில், இது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** (அ) திருவாளர்கள் அர்விந்த் எரிசாராயம் மற்றும் இரசாயனத் தொழிற்சாலையினின்று சுத்திகரிக்கப்படாத தொழிற்சாலைக் கழிவுநீர் மாம்பட்டு ஓடையில் விடப்படுகிறது. அவ்வோடை நீரை மக்கள் பயன்படுத்துவதால் அவர்களின் உடல் நலம் பாதிக்கப்பட வாய்ப்புள்ளது.

(இ) அரசு, தமிழ் நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் மூலம் இது குறித்து நடவடிக்கை எடுத்து வருகின்றது.

(முற்பகல் 10-35)

**திரு. அ. ப. சிவராமன் :** இந்த அர்விந்த் சாராய ஆலையினுடைய கழிவு நீர் கடிலம் வழியாக வந்து மாம்பட்டு ஓடையில் விடப்படுகிறது. மாம்பட்டு ஓடையின் ஓரங்களில் கிராமங்கள் இருக்கின்றன. இந்த ஓடையைத் தாண்டி சாத்திப்பட்டு, முத்தாசன் குப்பம் போன்ற பல்வேறு கிராமங்களுக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. அப்படி இந்த ஓடையைக் கடந்து செல்லுகிறபோது, காலில் படுகிற தண்ணீரால் அரிப்பு ஏற்பட்டு பிறகு காயம் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. அங்கே சைக்கிளைத் தள்ளிக் கொண்டு போனால்கூட



சைக்கிளினுடைய ரிம்கள் நிரந்தரமாகத் துரு பிடித்துவிடுகின்றன. அந்த ஓடை நீரைக் குடிக்கிற கால்நடைகள் பெருந்துயரடைந்து நாளாவட்டத்தில் மடிந்துவிடுகின்றன. கரையோரங்களில் உள்ள மரங்கள்கூட பட்டுப் போயிருக்கின்றன. மகசூல்கூட செய்ய முடியவில்லை. வாட்டர் பொலூஷன் ஏற்பட்டு, அதனால் அந்தப் பகுதியில் உள்ள கிணறுகளில் கூட தண்ணீர் எடுக்க முடியாத நிலை இருக்கிறது. எனவே இந்த நிலைகளையெல்லாம் கருத்திற்கொண்டு இத்தகைய மிகப் பெரிய துயரை மாற்றியமைக்க உடனடியாக தக்க நடவடிக்கை அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** இந்தத் தொழிற்சாலையைப் பொறுத்த வரையில், 6—3—1984 அன்று அங்கே ஒரு இன்ஸ்பெக்ஷன் நடத்தினோம். அந்த இன்ஸ்பெக்ஷன் அடிப்படையில்—

The effluent, without proper dilution from the secondary anelobic lagoon, was found to have been discharged into the nearby Mambattu Odai which joins the river Gedilam.

என்று குறிப்பு தரப்பட்டிருக்கிறது. அப்படி சரியான வகையிலே டைலூட் செய்யாமல் விடப்பட்டிருக்கிறது. டைலூட் செய்யப்பட்டு, பிறகு சுத்திகரிக்கப்பட்டு வெளியே அந்த ஓடைக்கு விடப்பட வேண்டுமென்று நடவடிக்கையை எடுக்காமல், அவர்கள் நம்முடைய உத்தரவை மீறிச் செய்தார்கள். ஆகவே அதற்கான நோட்டீஸ் கொடுத்து, அதற்குப் பிறகு அந்த 'எஃப்லுயன்டை' எடுத்து அனலைஸ் செய்ததில்—

It was found that the existing treatment system adopted by the industry was inadequate. The industry was asked to strengthen the bunds.

கரைகளை உயர்த்தி ட்ரீட்மென்ட்க்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று சொன்னோம். அதற்குப் பிறகு 1974-ஆம் ஆண்டு பிரவென்ஷன் ஆஃப் பொலூஷன் கன்ட்ரோல் சட்டத்தின் பிரிவு 26-ன் அடிப்படையில் அவர்களுக்கு ஒரு நோட்டீஸ் கொடுத்து, உடனடியாகச் சரிப்படுத்த வேண்டும் என்று ஆணையிட்டிருக்கிறோம்.

**திரு. எல். ஜெயச்சந்திரன் :** மூலக் கேள்வியைச் சேர்ந்தது இல்லை என்றாலும், அதையொட்டி ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன். வட ஆற்காடு மாவட்டம், ஆம்பூரில் உள்ள தோல் பதனிடும் தொழிற்சாலையிலிருந்து வெளியிடும் கழிவு நீர் பாலாற்றில் கலந்துவிடுவதால் ஏற்படும் ஆபத்து பற்றிய கேள்வி எழுந்தபோது, மூன்று மாதங்களுக்கு முன்பு

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள், தோல் பதனிடும் தொழிற்சாலையைச் சேர்ந்த அதிபர்கள் எல்லாம் சேர்ந்து ஒரு கோடி ரூபாய் அளவில் ஒரு யந்திரம் வைத்து அந்தக் கழிவுநீரைச் சுத்தம் செய்யவிருப்பதாகக் கூறினார்கள். அந்தப் பணி இப்போது எந்த நிலையில் இருக்கிறது? அந்த இயந்திரத்தை அமைத்துவிட்டார்களா? அண்மையில் கிண்டியில் உள்ள கிங் இன்ஸ்டிட்யூட்டில், பாலாற்றின் நீர் குடிப்பதற்கு லாயக் கற்றது என்று சான்றிதழ் கொடுத்திருக்கிறார்கள். அது குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** இது பற்றிய முழு விவரங்கள் கொடுக்க முடியாது. ஏனென்றால் இப்போது என்னிடம் அது பற்றிய விவரம் இல்லை. மூலக் கேள்விக்கும் இதற்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினரே சொல்லிவிட்டார்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** அடுத்த கேள்வி தனியாக வருகிறது. இதற்குப் பதில் சொல்லலாமா ?

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அமைச்சர் விரும்பினால் எதுவும் சொல்லலாம். உறுப்பினரே மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லையென்று சொன்னார். அப்போதே அமைச்சர் பதில் சொல்லியிருக்க வேண்டும். அமைச்சர் பதில் சொல்ல விரும்பிய பிறகு, நான் எப்படித் தடுக்க முடியும்?

**திரு. அ. மயில்சாமி:** தமிழகத்திலே மேட்டுப்பாளையத்தில் விஸ்கோஸ் கம்பெனி, மேட்டூரில் கெமிக்கல்ஸ் கம்பெனி போன்ற மிகப் பெரிய தொழிற்சாலைகளில் இருந்து வரும் கழிவுநீர் அந்தந்தப் பகுதிகளில் உள்ள ஆறுகளில் கலந்து ஆற்று நீரைப் பாதுகாப்பாற்ற நீராக மாற்றுகின்றது. அந்த நீரை மக்கள் இன்றைக்குக் குடித்துக்கொண்டிருக்கிறார்கள். இதனால் பொதுவாக சுகாதாரக் கேடுகள் வருகின்றன. அந்தப் பகுதி மக்கள் இதற்காகப் போராட்டம் கூட பல நேரங்களில் நடத்துகிறார்கள். ஆகவே அரசு குடிநீரை வேறு முறையில் அளிக்கும் திட்டம் வைத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** இந்தக் கழிவு நீரை சுத்திகரித்து வெளியிட வேண்டும் என்று எல்லாத் தொழிற்சாலைகளுக்கும் ஆணையிட்டிருக்கிறோம். அதற்காக 1974-ஆம் ஆண்டு Prevention and control of Pollution Act— இருக்கிறது.





... "Penalty for contravention of provision of section 24:— Whoever contravenes the provision of section 24 shall be punishable with imprisonment for a term which shall not be less than six months but which may extend to six years and with fine". என்று கடுமையான சட்டம் இருக்கிறது. இது 1974 ஆம் ஆண்டு அகில இந்தியச் சட்டம். தமிழகத்திலுள்ள இரண்டு சபைகளும் ஏற்றுக்கொண்ட பிறகு, 1981 ஆம் ஆண்டிலிருந்து தமிழகத்தில் இயங்கி வருகிறது. இதை நாம் அமல்படுத்தியிருக்கிறோம். படிப்படியாக நாம் 'டைட்' செய்து கொண்டுதான்

(முற்பகல் 10-40)

இருக்கிறோம். முன்னதாக தொழிற்சாலைகளுக்கு நோட்டீஸ் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். நாம் முன்னேற்றம் கண்டுகொண்டிருக்கிறோம். அந்தச் சட்டத்திலேயுள்ள ஷரத்துக்களைச் சரியான வகையிலே செய்யவேண்டியவைகளை அமுல்படுத்தவில்லை என்றால், தயவு தாட்சண்யம் இல்லாமல் 24-வது ஷரத்தின் கீழ் அவர்களைக் கொண்டுவந்து தண்டிக்க வேண்டிய துர்பாக்கியமான நிலைக்கு அரசாங்கம் வரவேண்டியதாக இருக்கும், இந்த தொழிற்சாலைகளின் தவறான போக்குகள் காரணமாக. உறுப்பினர் கேட்ட பொதுவான கேள்விக்கு இதுதான் என் பொதுவான பதில்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** ஆற்றிலே கலப்பது என்று மட்டுமல்ல, காற்றிலேயும் கலந்துவிடுகிறது. மதுக்கரை ஏ.சி.சி. சிமெண்ட் ஆலையிலிருந்து வருகின்ற சிமெண்ட் பொள்ளாச்சிப் பாதையில் உள்ள மரங்களை மாத்திரம் அல்ல, அந்தப் பாதையிலே போகின்ற மனிதர்களையும்கூட மாற்றிவிடுகிறது. அதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** 1981-ஆம் ஆண்டு 'ஏர் பொல்லூஷன்' சட்டத்தின் கீழே நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஏ. ஜே. தாஸ் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லும்போது காடாம்புலியூரில் உள்ள அர்விந்த் சாராய ஆலையின் கழிவு நீர் பற்றி அந்த ஆலைக்கு நோட்டீஸ் கொடுத்ததாகச் சொன்னார்கள். அப்படி நோட்டீஸ் கொடுத்த பிறகு என்ன கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** அதற்குப் பிறகு அவர்கள் அனுமதி கேட்க வேண்டும். செக்ஷன் 26-ன் கீழே 2—5—1985 அன்று அனுமதி கேட்டிருக்கின்றார்கள். அந்த அனுமதி கொடுப்பதற்கு பி.ஓ.டி., அதாவது பையோலாஜிகல் ஆக்சிஜன் டிமாண்ட் குறிப்பிட்ட எல்லைக்குள்ளே இருக்கின்றதா என்று பார்த்து அனுமதிக்கலாம்.

### பெண்களுக்கு கொடுமைகள்.

* 74 வினா.—திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள் பற்றிய புகார்களை ஆராய, தமிழக அரசு ஒவ்வொரு மாவட்டத்திலும் குழு அமைத்திருக்கிறது என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் விபரங்கள் யாவை ?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** (அ) இல்லை. பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள் பற்றிய புகார்களை ஆராய தமிழக அரசு ஒவ்வொரு மாவட்டத்திலும் குழு ஒன்று அமைப்பது பற்றி சமூக நல இயக்குநரின் விவர அறிக்கை கேட்கப்பட்டுள்ளது. இயக்குநரின் அறிக்கை பெற்று ஆய்வு செய்யப்பட்டபின் ஒரு முடிவு எடுக்கப்படும்.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவர் அவர்களே, கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த பெண்கள் உரிமைக் கழகம் சார்பாக ஜனநாயக மாதர் சங்கம் மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பார்த்ததாக நான் கேள்விப்பட்டேன். அதன்பேரில்தான் கேள்வி போட்டேன். அப்படி ஏதாவது கோரிக்கை வந்திருக்கின்றதா ? இது ஒன்று. இரண்டாவது, பெண்களுக்குக் கொடுமை என்று சொன்னால் என்னவிதமான கொடுமைகள் பெண்களுக்குச் செய்யப்படுகின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வார்களா ? வரதட்சிணைக் கொடுமை, மாமியார் கொடுமை என்று எல்லாம் இருக்கின்றனவே ! எந்தவிதமான கொடுமைகள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** கணவன்மார் கொடுமைகள்கூட சொல்லலாம்.





**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** ஆண்களுக்குப் பெண்கள் செய்கின்ற கொடுமைகள் இருக்கின்றன. அது வேறு இது வேறு. பெண்களுக்கு ஆண்கள் செய்கின்ற கொடுமைகள். இப்படி பெண்களுக்குப் பலவிதமான கொடுமைகள் இருக்கலாம். அதில் எந்தவிதமான கொடுமைகள் நடப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறது ?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியதுபோல, அந்தப் பெண்கள் சங்கத்தினர் என்னைப் பார்த்தனர். சமுதாயத்தில் பெண்களுக்கு இழைக்கப்படுகின்ற கொடுமைகள் பற்றி என்னிடம் எடுத்துக்கூறியிருக்கிறார்கள். ஒரு கோரிக்கையையும் என்னிடம் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் வைத்திருக்கின்றார்கள். அந்தக் கோரிக்கையை பரிசீலிப்பதற்காகத்தான் இன்றைக்கு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். இன்றைக்கு சமுதாயத்தில் உள்ள பெண்களுக்கு பல வகைகளிலேயும் கொடுமைகள் இழைக்கப்படுகின்றன. இந்தக் கொடுமைகளைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். நான் எடுத்துச் சொல்லவேண்டிய அவசியமில்லை. பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளைத் தடுக்க வழிவகைகளை ஆராய்வதற்குத்தான் அரசு எதிர்காலத்தில் ஒரு குழுவை அமைத்து அதற்கு என்ன நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று ஆராய வேண்டும். அதற்கு இன்றைக்கு. அரசு பரிசீலித்துக்கொண்டு இருக்கிறது என்பதையும் இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

**திரு. எல். ஜெயச்சந்திரன் :** இப்போது அண்மையிலே பத்திரிகைகளிலே பார்க்கும்போது, பெண்களுக்கு குறிப்பாக வரதட்சிணைக் கொடுமைகள் காரணமாகத்தான் அநீதி இழைக்கப்பட்டு அவர்கள் மரணம் அடைந்திருக்கிறார்கள். அது கொலையாகவும் இருக்கும் என்று கருதப்படுகிறது. காவல் துறையில் 10 வருடங்களுக்குள் தீக்குளித்து உயிர் விட்டிருந்தால், அது தற்கொலையாக இருந்தாலும், அதைப்பற்றி ஆராயவேண்டும் என்று சட்டமே இருக்கிறது. அதுபோல் நடந்திருக்கிறது. அந்த நிலையில் பெண்கள் இருந்துகொண்டிருக்கிறார்கள். அது குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-45)

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** வரதட்சிணைக் கொடுமைகளைப் பற்றியெல்லாம் ஆராய்ந்து பிறகு, அவைகளுக்குச் சரியான வகையில்

[1985 ஜூன் 28

வழிவகை செய்ய வேண்டுமென்பதற்காகத்தான் எதிர்காலத்தில் குழு அமைப்பது என்ற யோசனை அரசின் பரிசீலனையில் இருக்கிறதென்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

செல்வி ஆ. லீலாவதி: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயச்சந்திரன் அவர்கள் குறிப்பிட்டதுபோல, அண்மையிலே மிக அதிகமான கொடுமைகள் பெண்களுக்கு இழைக்கப்படுகின்றன. 20, 25 ஆண்டுகளுக்கு முன்பு இம்மாதிரி வரதட்சிணைக் கொடுமைகள் இல்லை. இப்போது அது மிக அதிகமாகியிருக்கிறது. மேலும் பெண்களைக் கற்பழிக்கும் கொடுமைகளும் இருக்கின்றன. அது சாதாரண காரியமாக இருக்கிறது. இவைகளையெல்லாம் நமது சினிமாப் படங்களிலே அதிகமாகக் காட்டுவதால்தான் மக்கள் கெட்டு விடுகிறார்கள் என்று சொல்கிறார்கள். இம்மாதிரி கற்பழிக்கும் காட்சிகளை எல்லாம் சினிமாப் படங்களிலிருந்து விலக்க மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சரவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: வரதட்சிணைக் கொடுமை, பெண்கள் கற்பழிக்கப்படுகின்ற கொடுமை ஆகியவைபற்றி மாண்புமிகு உறுப்பினரவர்கள் எடுத்துக் காட்டி, அந்தக் கொடுமைகளிலிருந்து பெண்களை விடுவிப்பதற்கான வழி வகைகளைச் செய்ய வேண்டுமென்று குறிப்பிட்டதோடு, சினிமாப் படங்களிலிருந்து பெண்களைக் கற்பழிக்கின்ற காட்சிகளை நீக்க வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சரவர்களிடம் இதைக் குறிப்பிட்டு, அதற்கான வழி வகைகளை மேற்கொள்வோம். இதையெல்லாம் ஆராய்வதற்காகத்தான் குழு அமைக்கப்படுமென்று முன்பே குறிப்பிட்டிருக்கிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: பெண்களுக்குக் கொடுமை என்பது மாமியார் கொடுமை மாத்திரமல்ல. பெண்களை இழிவாக விளம்பரப்படுத்துவதும், பெண்களை இழிவாகச் சித்தரிப்பதும், பெண்களை இழிவாகப் போஸ்டர் போட்டு ஒட்டுவதும் கொடுமையாகக் கருதப்படுகிறது. குறிப்பாக பெண்கள் படிக்கும் கல்லூரிகளுக்கு முன்பாகவும், பள்ளிகளுக்கு முன்பாகவும் இது போன்ற விளம்பரங்களை ஒட்டுகிறார்கள். இதையாவது தடுக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: நிச்சயமாக அரசு பரிசீலனை செய்யும்.



1985 ஜூன் 28]

டாக்டர் இரா. சனார்த்தனம்: இந்தக் குழுவை அமைக்கின்றபோது வழக்கறிஞர்களாக இருக்கின்ற பெண்களை, அந்தக் குழுவிலே உறுப்பினர்களாகப் போடும் எண்ணம் அரசுக்குண்டா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: குழு அமைக்கின்றபோது, பெண் வழக்கறிஞர்களை இதில் இணைப்பதற்கான வழிவகைகளை நிச்சயம் அரசு பரிசீலிக்கும்.

திரு. ஆர். டி. சீத்தாபதி: பெண்கள் படும் கொடுமைகளை அகற்ற குழு அமைக்க இருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். பெண்களாலே ஆண்கள் கொடுமைப்படுத்தப்படுவதாக நான் அறிகிறேன். அதற்கும் குழு அமைக்கப்படுமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: அப்படிப்பட்ட செய்திகளைப் பத்திரிகைகளில் நான் பார்க்கவில்லை.

திரு. பா. ரா. தாமஸ்: வரதட்சிணைக் கொடுமைகளுக்கு, பெண்களுக்குச் சரியான வேலை வாய்ப்புகள் இல்லாததும் ஒரு காரணமாக இருப்பதாகப் பொதுவாகச் சொல்லப்படுகிறது. எனவே அவர்களுக்குத் தகுதியான வேலை வாய்ப்புகளை வழங்கினால், இந்தக் கொடுமை நீங்கும். எனவே பெண்கள் எல்லோருக்கும் வேலை வாய்ப்பு வழங்கும் திட்டத்தை அமைச்சரவர்கள் வைத்திருக்கிறார்களா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: வேலையின்மையால் வரதட்சிணைக் கொடுமை ஏற்படுகிறதென்று உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். குழு அமைக்கும்போது, இந்தக் கருத்தையும் குழு ஆராயும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: வினா 75 ஒத்திவைக்கப்படுகிறது. வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(முற்பகல் 10-50)

## 2. அறிவிப்பு.

### அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ஏற்கெனவே முடிவெடுத்தவாறு மேலவை 28—6—1985 அன்றுடன் முடிவடைந்து மீண்டும் 11—7—1985 அன்று கூடும். 11—7—1985 அன்று தொழில்கள் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பும் 12—7—1985 அன்று பழங்குடியினர், ஆதி திராவிடர் மற்றும் பிற்பட்டோர் நலன் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகளும் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

மேற்கொண்டு நிகழ்ச்சி விவரம் பின்னர் முடிவு செய்யப்படும். மேலவை வழக்கம்போல் காலை 10-00 மணிக்குக் கூடும்.

## 3. கவன ஈர்ப்பு.

### (1) மதுரை சீதாலட்சுமி நூற்பாலையில் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்வது குறித்து.

**திரு. க. சுப்பு :** தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

"மதுரை சீதாலட்சுமி நூற்பாலையில் தொழிலாளர்கள், நிர்வாகத்தின் பழிவாங்கும் போக்கைக் கண்டித்து, 29—5—1985 முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளதால் தோன்றியுள்ள அவசர நிலையைக் குறித்து".

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** தலைவரவர்களே, ஒரு விவர அறிக்கை @ அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. க. சுப்பு :** அறிக்கையில் தொழிற் சங்கத் தரப்பில் சொல்லப்படும் சில விவரங்கள் இல்லை. தொழிலாளர்கள் தொழிற் சங்கத்தை அமைக்க முடியாத அளவுக்கு நிர்வாகம் பலவித நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது. அதன் காரணமாக வேலை நிறுத்தம் ஏற்பட்டது. வேலை நிறுத்தம் ஏற்பட்டதால், பலர் வேலையை விட்டு சஸ்பெண்ட் செய்யப்பட்டனர், பலர் மீது வழக்கு போடப்பட்டுள்ளது. மற்றும் சம்பளம் பிடித்தம் செய்யப்பட்டது என்றும் சொல்கிறார்கள். இப்படி தொழிற் சங்க உரிமையைப் பறிக்கின்ற செயலைச் செய்கிற அந்த நிர்வாகத்தின் மீது அரசு நடவடிக்கை எடுக்க என்ன திட்டம் வைத்திருக்கிறது?

@ 106 ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.



**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** கடந்த ஒரு மாத காலமாக வேலை நிறுத்தம் நடைபெறுகிறது. 1,300 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே கடுமையைப் போக்க தொழிலாளர் நலத் துறையால் ஒரு மாத காலத்தில் 6 முறை நிர்வாகத்தினர் மற்றும் தொழிற் சங்கத்தினர் ஆகிய இரு தரப்பினரையும் அழைத்து இருவர் மத்தியில் பேசப்பட்டது. இன்று, 28—6—1985 அன்று காலை 10 மணிக்கு சென்னையில் தொழிலாளர் நலத் துறை ஆணையாளர் அலுவலகத்தில் இரு தரப்பாரும் கூடி ஒரு சுமுகமான முடிவுக்கு வர தீவிரமாக அரசு முயன்று வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. சுப்பு :** தொடர்ந்து வேலை நிறுத்தம் நடைபெறுவதால் உற்பத்திக் குறைவும் அதன் காரணமாக தொழிலாளர்களுக்கு சம்பளக் குறைவும் ஏற்படும் நிலையைத் தவிர்க்க இதனை தொழில் கோர்ட்டுக்கு அனுப்பி வைக்க ஆவன செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** இன்றைக்கு நடைபெறுகின்ற பேச்சுவார்த்தையில் இரு தரப்பாரும் ஒரு சுமுகமான முடிவுக்கு வருகிறார்களா என்பதைக் கண்டறிந்து, அப்படி வரவில்லையென்றால், தொழிலாளர்களினுடைய மன நிலையை அறிந்து, அவசியமானால் தொழில் நீதிமன்றத்திற்கு இந்த அரசு அனுப்பி வைக்கும்.

### (2) குடியாத்தம் நகரில் குடிநீர் சரிவர விநியோகம் செய்யாதது குறித்து.

**திரு. எல். ஜெயச்சந்திரன் :** தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

"குடியாத்தம் நகரில் குடிநீர் சரிவர விநியோகம் செய்யாததால் அப்பகுதி மக்கள் படும் இன்னல் குறித்து".

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவரவர்களே, ஒரு விவர அறிக்கை @ அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. எல். ஜெயச்சந்திரன் :** அறிக்கையைப் பார்த்ததில் 1981 ஆம் ஆண்டிலிருந்த மக்கள் தொகை அடிப்படையில் தான் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. இப்போது மக்கள் தொகை எண்ணிக்கை உயர்ந்துள்ள நிலையில், கடந்த சில மாதங்களாக அங்குள்ள மக்கள் குடிநீருக்காக மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இதுகுறித்து பல்வேறு கட்சிகளின் பிரமுகர்களும் பெரிய

@ 106-107 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

கூட்டங்களைக் கூட்டிப் பேசினார்கள். அது பத்திரிகைகளில் கூட வந்திருக்கிறது. அடுத்து 99.40 லட்சம் ரூபாய் செலவில் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை விரைவில் ஆரம்பிப்பார்களா? அதற்குக் காலதாமதமாகுமானால், மாற்று ஏற்பாடாக அந்தப் பகுதி மக்களுக்கு உடனடியாகக் குடிநீர் கிடைக்க ஏதாவது ஏற்பாடு செய்வார்களா ?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** வளர்ந்திருக்கின்ற மக்கள் தொகை அடிப்படையில் தான் இத்திட்டம் தீட்டப்பட்டு ஆய்வு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆய்வு முடிந்தவுடன், முழுமையாக அங்குள்ள சிக்கல் தீரும் வகையில் இது பலனளிக்கும். இடைக்கால நிவாரணமாக குடிநீர் பற்றாக் குறையைப் போக்க இந்த அரசு முயற்சி செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எல். ஜெயச்சந்திரன் :** குடியாத்தம் நகரைப் போன்றே கடலூர் போன்ற இடங்களில் குடிநீர் சரிவரக் கிடைக்காமல் மக்கள் இன்னல்படுகிறார்கள். இப்போது குடிநீர் வழங்கலுக்கான பொறுப்பை அந்தந்த நகராட்சிகளும் பஞ்சாயத்துக்களும் ஏற்றிருக்கின்றன. இந்நிலையை மாற்றி குடிநீர் வடிகால் வாரியமே இப்பொறுப்பினை ஏற்று நல்லவகையில், குடிநீர் பற்றாக் குறை இருக்கிற நகரங்களுக்குக் குடிநீர் வழங்க ஏற்பாடு செய்ய இந்த அரசு முன்வருமா ?.

(முற்பகல் 10-55)

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, இது ஒரு முக்கியமான கொள்கைப் பிரச்சினை. இப்போது அதைப் பொறுத்தவரையில். சிக்கல்கள் இருக்கின்றன. இரண்டு தரப்பிலும் இணைந்து முடிவெடுத்து அந்தச் சிக்கல்களைத் தீர்க்க முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

## 4. அரசின் தீர்மானம்.

## வேளாண்மை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள வேளாண்மை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு @ பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப் படவேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

@ 107-167 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.





**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள வேளாண்மை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, வேளாண்மை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீது பொதுவாக சில கருத்துக்களையும், குறிப்பாக தஞ்சை மாவட்டத்தை மனதில் வைத்துக் கொண்டு ஒரு சில ஆலோசனைகளையும் இந்த அரசுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் காவிரி டெல்டாவில் உள்ள விவசாயிகளின் பம்ப் செட்டுகளுக்கு 12 மணி நேரம் மின்சாரம் அளிக்கப்படும் என்று அரசின் சார்பில் இன்று ஒரு தகவல் பத்திரிகைகளில் வந்திருக்கிறது. 15 நாட்களுக்கு முன்பு இதே மாதிரி, மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள், விவசாயிகளின் பம்ப் செட்டுகளுக்கு தினசரி 22 மணி நேரம் தடையில்லாமல் மின்சாரம் அளிக்கப்படும் என்று அறிக்கை வெளியிட்டார்கள். தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் விவசாயிகளுடைய பம்ப் செட்டுகளுக்கு 24 மணி நேரமும் மின்சாரம் அளிக்கப்படும் என்று ஓர் அறிக்கை வெளியிட்டார். மின்சார வாரியத்தின் தலைவராக இருக்கிற திரு. விஜயராகவன் அவர்கள், 6 மணி நேரம்தான் மின்சாரம் சப்ளை செய்யப்படும் என்று ஓர் அறிக்கை கொடுத்திருக்கிறார். ஆகவே 15 நாட்களுக்குள் மூன்று விதமான அறிக்கைகளை அரசாங்கத்தின் சார்பில் வெளியிட்டிருக்கிறார்கள். இதிலே யார் சொல்வதை விவசாயிகள் எடுத்துக்கொண்டு, விவசாய வேலைகளைக் கவனிப்பது என்ற தயக்க நிலை அவர்களிடையே ஏற்பட்டிருக்கிறது. 22 மணி நேரம் நமக்கு மின்சாரம் கிடைக்கும் என்று அவர்கள் விவசாய வேலைகளுக்கான ஆயத்தங்களைச் செய்ததால், ஏராளமான இழப்புக்கு அவர்கள் ஆளாக நேரிட்டிருக்கிறது.

நான் இதுகுறித்து, முதன் முதலில் ஒன்றை அரசுக்குச் சொல்ல விரும்புகிறேன். மின்சாரத் துறை அமைச்சர், மின்சார வாரியத்தின் தலைவர், மாவட்ட ஆட்சித்தலைவர் மூன்றுபேரும் இதுகுறித்து அறிக்கை வெளியிடுவதற்கு முன்பாக கலந்து பேசி, எவ்வளவு நேரம், எவ்வளவு நாளைக்கு மின்சாரம் அளிக்கப்படும் என்று உறுதியாகச் சொல்லிவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்யாததனால் பல்லாயிரக்கணக்கான விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்படுகிறது என்பதையும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

இரண்டாவதாக, 12 மணி நேரம் விவசாயிகளின் பம்பு செட்டுகளுக்கு மின்சாரம் கொடுக்கப்படும் என்று சொல்லி, ஆறு, ஆறு மணி நேரம் விட்டு விட்டுக் கொடுப்பதால், ஏற்படும் பயன் குறைவாகிவிடுகிறது. காரணம் 6 மணி நேரம் பம்புசெட்டுகள் வேலைசெய்து தண்ணீர் வந்தால், ஒன்றரை அல்லது இரண்டு ஏக்கருக்குத்தான் தண்ணீர் பாயும். ஏற்கெனவே காய்ந்து கிடக்கிற நிலத்தில் அதிகபட்சம் 2 ஏக்கருக்கு மேல் தண்ணீர் பாய முடியாது என்ற நிலையும் இருக்கிறது. குறைந்த பட்சம், தொடர்ந்து 14 மணி நேரம் சப்ளை கொடுத்தால்தான், நாம் எதிர்பார்க்கிற பலன் கிடைக்கும் என்று விவசாயிகள் சொல்கிறார்கள். கொடுக்கிற மின்சாரத்தை தொடர்ந்து கொடுத்து, விவசாயிகளின் பம்ப் செட்டுகள் மூலம் பயன் ஏற்பட ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, காவிரி நீர் சரியான நேரத்தில் இந்த ஆண்டு வரவில்லை. வழக்கமாக ஜூன் 12 ஆம் தேதி மேட்டூர் அணை திறக்கப்பட்டிருக்க வேண்டும். இன்றையதினம் பத்திரிகையில், நமது பாசனத்துறை அமைச்சர் அவர்கள் சொல்லியதாக ஒரு செய்தி வந்திருக்கிறது. நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மழை பெய்துகொண்டிருப்பதால், மேட்டூரிலிருந்து தண்ணீர் விரைவில் திறந்து விடப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். 'விரைவில்' என்று சொல்வதைப் புரிந்துகொள்வதில் ஏராளமான வித்தியாசம் இருக்கிறது. அது ஒரு வாரம், பதினைந்து நாள் என்றெல்லாம் கூட இருக்கலாம். யார் அதைச் சொல்கிறார்கள், யாருக்குச் சொல்கிறார்கள் என்பதைப் பொறுத்து அது இருக்கிறது. விவசாயிகள், 'விரைவில்' என்றால், '2 நாளில் கிடைக்குமா' என்று கேட்கிறார்கள். ஒரு தொழிலதிபருக்கு 'விரைவில்' என்பது ஒரு மாதம் ஆகும். ஆகவே, பாதிக்கப்படுபவர்களைப் பொறுத்துத்தான் 'விரைவு' என்பது அர்த்தத்தைக் கொடுக்கிறது. ஆகவே, எவ்வளவு நாட்களில்

(முற்பகல் 11-00)

தண்ணீர் கிடைப்பதற்கு வாய்ப்பிருக்கிறது என்பது பற்றி ஒரு குறிப்பை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்தார். விவசாயிகள் அதன்படி நடவடிக்கை எடுப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தது, காவிரி நீர்ப் பிரச்சினை. காவிரி நீர்ப் பிரச்சினைபற்றி பல ஆண்டுகளாகப் பேசப்படுகிறது. நம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் "காவிரி நீர்ப் பிரச்சினை குறித்து முன்பு போடப்பட்ட ஒப்பந்தம் இன்னும் காலாவதியாகவில்லை, தொடர்ந்து இருக்கிறது" என்று சொல்கிறார்கள்.





ஆனால் கர்நாடக மாநில அரசைச் சேர்ந்தவர்கள், "ஒப்பந்தம் காலாவதியாகிவிட்டது. எங்கள் இஷ்டப்படிதான் நடப்போம்" என்று சொல்கிறார்கள். இவ்வாறு இப்பிரச்சினைக்கு இன்னும் தீர்வு ஏற்படாமலிருக்கிறது. நன்கு மழை பெய்து காவிரியில் நீர் நன்கு வருகின்றபோது இந்தப் பிரச்சினையைப் பற்றி இரு அரசுகளும் அவ்வளவாகப் பேசுவதில்லை. ஆனால் ஒரு நான்கு ஆண்டுகள் நன்கு மழை பெய்துவிட்டு, ஐந்தாவது ஆண்டு மழை பெய்யாமல், காவிரியில் நீர் குறைந்து பாதிப்பு ஏற்பட்டவுடன், எல்லோரும் காவிரி நீர்ப் பிரச்சினை பற்றிப் பேசுகிறோம். பிறகு மழை பெய்தால் பேசுவதை விட்டு விடுகிறோம். அதன் பிறகு மறுபடியும் மழை பெய்யாதபோது பேசுகிற நிலைமைதான் இருக்கிறது. இதில் யார் பேரில் தவறிருக்கிறதென்று தெரியவில்லை. தமிழக அரசுக்கும், கர்நாடக அரசுக்குமிடையில் உடன்பாடு ஏற்படவில்லை என்று சொன்னால், அந்த உடன்பாட்டை யார் கொண்டு வர வேண்டும்? மத்திய அரசுதான் கொண்டுவர வேண்டும். இரண்டு மாநில அரசுகளும் அடிக்கடி பேசுகிறார்கள். ஆனால் முடிவுதான் ஏற்படவில்லை.

முன்பு மத்திய அரசின் பாசன அமைச்சராக மாண்புமிகு திரு. கே. எல். ராவ் அவர்கள் இருந்தார்கள். அப்போது அவர் நடுவராக இருந்து, தமிழ் நாடு அரசின் பாசன அமைச்சர் அவர்களையும், கர்நாடக அரசின் பாசன அமைச்சர் அவர்களையும் கூட்டிவைத்து, தொடர்ந்து கூட்டம் போடுவார். அதுபோல் மாண்புமிகு திரு. ஜெகஜீவன்ராம் அவர்கள் இருந்தபோதும் இரு மாநில அரசுகளின் பிரதிநிதிகளையும் கூட்டிவைத்துப் பேசுவார்கள். ஆனால் கடந்த சில ஆண்டுகளாக, மத்திய அரசினுடைய எந்தப் பிரதிநிதியும் இல்லாமல், மாநில முதலமைச்சர்களோ பாசன அமைச்சர்களோ மட்டும் இப் பிரச்சினைமேல் பேசுகிறார்கள். ஆனால் எந்தவொரு முடிவுக்கும் வர முடியவில்லை. நம் பிரச்சினையை நாம் சொல்லிக்கொண்டே இருக்கிறோம். அவர்கள் பிரச்சினையை அவர்கள் சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள். ஒரு முடிவுக்கே வர முடியவில்லை. எனவே, நான் வற்புறுத்துவது என்னவென்றால், இதற்கு ஒரு விடிவிமோசனம் வரவேண்டுமென்றால், மத்திய அரசு முன்வந்து இந்த இரு மாநில அரசுகளின் முதல் அமைச்சர்களையோ, அமைச்சர்களையோ கூட்டிவைத்துப் பேச வேண்டும். இது மிகவும் முக்கிய பிரச்சினையாகும். எனவே, நமது பிரதமர் அவர்கள்கூட இதைச் செய்யலாம். இதற்கு முன்பு இரு அரசுகளும் பேசி எந்தவிதப் பலனும் ஏற்படவில்லை. எனவே பாரதப் பிரதமர் அவர்கள் முன்னின்று, இரு மாநில முதலமைச்சர்களையும் அழைத்து, இப் பிரச்சினையின் அவசரத் தன்மை கருதி, அதன் அடிப்படையில் முடிவு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இது மாநிலப் பிரச்சினை மட்டுமல்ல. காவிரி நீர் வராமல் பயிர் செய்யப்பட

[திரு. ஜி. சுவாமிநாதன்] [1985 ஜூன் 28

வில்லை எனில், அதனால் தேசத்திற்கு எவ்வளவு நஷ்டம் என்று பார்க்க வேண்டும். எனவே இதைத் தேசியப் பிரச்சினை என்ற கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டும். அகில இந்தியப் பிரச்சினையாக இப்பிரச்சினையை மத்திய அரசு கருத வேண்டும் என்ற கருத்தை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்பிரச்சினையை 'நதித் தகராறு சட்ட' (River Water Disputes Act) த்தின் கீழ் விரைவாக முடிக்க, தாவாவுக்கு விட வேண்டும். மத்திய அரசு அதன்மேல் எந்தவித முடிவும் எடுக்கவில்லை என்று சொன்னால், அதற்குமேல் உச்ச நீதிமன்றத்திற்குப் போக முடியும். இப்போதே உச்சநீதிமன்றத்திற்குப் போகக்கூடாது. போனால் என்னவாகும்? அங்கே போனால் தீர்ப்பு கிடைக்க குறைந்தது பத்தாண்டுகளுக்கு மேலாகும். மாண்புமிகு உறுப்பினர்களில் சிலர்கூட கேட்டார்கள். இப்பிரச்சினையை ஏன் நீதிமன்றத்திற்கு எடுத்துக்கொண்டு போகவில்லை என்று கேட்டார்கள். நீதிமன்றத்திற்குக் கொண்டு சென்றுவிட்டு, பின் எத்தனை ஆண்டுகாலம் தீர்ப்புக்காக உட்கார்ந்திருப்பது? அதுவரை விவசாயிகளின் நிலைமை என்ன ஆவது? எனவேதான் மத்திய அரசாங்கம் இப்பிரச்சினையை ஒரு அவசர முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையாகக் கருதி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாண்புமிகு அவைத் தலைவர் மூலமாக வற்புறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்போது தஞ்சாவூர் மாவட்டத்தில் காவிரிநீர் குறைவாக வருவதால், சம்பா மட்டும் ஒரு போகம் சாகுபடி செய்ய முடியும் என்று ஒரு பிரச்சினையைக் கிளப்புகிறார்கள். தஞ்சாவூர் மாவட்டத்திலே இரண்டு போக சாகுபடியாக குறுவை, சம்பா, தாளடி போட்டால்தான் தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்குத் தேவையான வருவாய் கிடைக்கும் என்பதைக் கருத்திற் கொண்டு, ஒரு போக சாகுபடி மட்டும் செய்யலாம் என்று அரசு கருதுவது தவறான கருத்தாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 11-05)

அடுத்து, நெல்லுக்கு விலையாக குவிண்டாலுக்கு ரூ. 135 என்ற அளவுக்கு அரசு கொடுக்கிறது. மேலும் ஒரு குவிண்டாலுக்கு 15 ரூபாய் உரமாகவும் நாம் கொடுக்கிறோம். ஆனால் இப்போது விவசாயச் செலவுகள் மிகவும் அதிகமாக ஆகிற நிலைமையையும் பார்க்கிறோம். இந்த நிலைமையிலே, நம்முடைய மாநில அரசின் சார்பாக அக்ரிகல்சரல் பிரைசஸ் கமிஷனுக்குக் குறைந்த பட்சம் 150 ரூபாயாவது ஒரு குவிண்டாலுக்குக் கொடுக்க வேண்டு



1985 ஜூன் 28] (திரு. ஜி. சுவாமிநாதன்)

மென்று நாம் முன்பே சொன்னோம். தஞ்சையில் இருக்கிற விவசாயிகள் குவிண்டாலுக்கு 200 ரூபாயாவது கொடுத்தால்தான், இன்னும் ஏதாவது பலன் ஏற்படுமென்று கருதுகிறார்கள். ஆகவே மறுபடியும், மாநில அரசு இந்த விலையை ஏற்றுவதற்கு அக்ரிகல்சரல் பிரைசஸ் கமிஷனுக்கும், நம்முடைய மத்திய அரசுக்கும் தகுந்த பரிந்துரையை மிக விரைவாகச் செய்ய வேண்டுமென்று நான் குறிப்பிட விரும்புகிறேன். நான் இதைச் சொல்வதற்கு இன்னும் ஒரு முக்கியமான காரணம் உண்டு, கிராமங்களிலே இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு உரிய விலை கிட்டவேண்டும். கிராமப் பொருளாதாரம் ஒரு நல்ல நிலைமையிலே வந்தால்தான், நகரப் பொருளாதாரம் நல்ல நிலைமையிலே வளர முடியும். இந்தியப் பொருளாதாரமும் நல்ல நிலைமையிலே வளர முடியும். கிராமத்திலே இருக்கிறவர்களுக்குக் குறைத்துக் கொடுத்து, அவர்களுக்கு வாய்ப்பு வசதி இல்லாமல், புரடியூசருடைய பெனிபிட்டைப் பார்க்காமல், கன்ஸ்யூமருடைய பெனிபிட்டை மட்டும் பார்த்துக் கொண்டிருந்தால், நாளாவட்டத்தில் கிராமங்கள் நசித்துபோய், விவசாயிகள் நசித்துபோய் நாட்டின் பொருளாதாரமே பாதிக்கப்படக்கூடிய ஒரு துர்ப்பாக்கியமான நிலைமை ஏற்படும். ஆனால் இந்தப் பிரச்சினையைப் பொறுத்து மத்திய அரசாங்கத்தில் ஒரு கருத்து நிலவுவது எனக்குத் தெரியும். இன்னும் அதிக விலை கொடுத்தால், அந்த அதிக விலை பெரிய நிலச்சுவான்தார்களாக இருப்பவர்களைத்தான் போய்ச் சேரும். கிட்டத்தட்ட 10 ஏக்கர், 15 ஏக்கர் வைத்திருப்பவர்கள் இருக்கிறார்கள். பெரும்பாலான நிலங்கள் அவர்களுடைய கையில் இருக்கிறது. ஆனால் 2 ஏக்கர், 1 ஏக்கர், ½ ஏக்கர் வைத்திருப்பவர்கள் ஆயிரக் கணக்கான, லட்சக் கணக்கான பேர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு அதனுடைய பயன் எட்டாது. There will not be seepage of benefits to the people lower down என்ற ஒரு கருத்து இருக்கிறது. ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன். இந்த விலையைக் கொடுக்கும்போது எல்லோருக்கும் ஒரு விலை என்று கொடுப்பது சரியானதாக எனக்குத் தெரியவில்லை. காரணம், பெரிய நிலச்சுவான்தார்களாக இருப்பவர்களுக்கு ஓரளவு 150 ரூபாய் என்று விலை நிர்ணயித்தால், சாதாரண நிலைமையில் இருக்கக் கூடிய விவசாயிகளுக்கு ½ ஏக்கர், 1 ஏக்கர் வைத்திருப்பவர்களுக்கு— 180 ரூபாய், 200 ரூபாய் என்று நாம் விலை நிர்ணயம் செய்யலாம். அதாவது different price for different holdings. அதிலே இரண்டு லாபம் இருக்கிறது. எப்படிச் செய்ய முடியுமென்று பார்த்தால், லெவி கொள்முதல் செய்யும்போது, அவரவர்களுக்கு எவ்வளவு நிலம் இருக்கிறது, அந்த நிலத்திற்கு எவ்வளவு லெவி கொடுக்க வேண்டுமென்று நாம் வைத்திருக்கிறோம்.

அந்த லெவி அடிப்படையிலே ஒருவர் எவ்வளவு நிலம் வைத்திருக்கிறாரோ அவ்வளவு நெல் அவர்கள் கொடுக்கலாம் என்ற கருத்தை வைத்து, அந்த நெல்லுக்கு விலை அதிகமாகக் கொடுத்தால் சாதாரண விவசாயிகளுக்கு. . .

திரு. எம். பி. சுப்பிரமணியம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் கூறும்போது, சிறிய விவசாயிகளுக்குக் கூடுதலான விலை கொடுக்கலாமென்று சொல்கிறார்கள். அப்படியானால் பெரிய விவசாயிகள் விளைவித்த நெல்லை எல்லாம் சிறிய விவசாயிகள் மூலமாகக் கொடுத்து அதிக விலையை அவர்களும் பங்கிட்டுக்கொள்கிற ஆபத்தும் இருக்கிறது அல்லவா? இரண்டாவது, இவ்வளவு நெல் உற்பத்தியாகியும் கூட, விலைக்கு வாங்கிச் சாப்பிடக்கூடியவர்கள்தான் தமிழ் நாட்டிலே—கிராமம் உட்பட, சிறிய விவசாயிகள் உட்பட—அதிகம் இருக்கிறார்கள். பெரும்பாலான மக்கள் விலைக்கு வாங்கிச் சாப்பிடுகிறார்கள். ஆகவே அந்த விலையைக் கொடுத்தால், மொத்தத்தில் நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்படாதா? அது குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்து என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன் : அதுதான் நான் முதலிலே சொன்னது, அதாவது லெவி போடுகிறபோது, ஒரு ஏக்கர் வைத்திருப்பவர்களுக்கு 10 குவின்டால், இரண்டு ஏக்கர் வைத்திருப்பவர்களுக்கு 20 குவின்டால் என்ற அளவிலே நாம் லெவி போடுகிறோம். அந்த லெவியினுடைய அடிப்படையில் 1 ஏக்கர் வைத்திருக்கக்கூடிய ஒரு பட்டாதார் இருந்தால், 10 குவின்டால் அளவுக்குக் கூடுதல் விலை வைக்கலாம். அதனாலே உள்ள லாபம் என்னவென்று, தஞ்சையைப் பொறுத்தவரையில் சொல்கிறேன். 10 ஏக்கர், 15 ஏக்கர் என்று வைத்திருப்பவர்கள் எவ்வளவு பேர்கள் இருப்பார்கள் என்று பார்த்தால், 3 ஆயிரம், 4 ஆயிரம் பேர்கள் தஞ்சாவூரில் இருப்பார்கள். ஆனால் அந்த 3 ஆயிரம், 4 ஆயிரம் பேர்களிடம் எவ்வளவு நிலம் இருக்கிறது என்று பார்த்தால், கிட்டத்தட்ட இருக்கக்கூடிய நிலத்திலே 40 சதவிதம்தான் அவர்கள் கையில் இருக்கிறது. சிறிய மிராசுதார்களாக இருப்பவர்கள், ½ ஏக்கர், 1 ஏக்கர் வைத்திருப்பவர்கள் பல்லாயிரக்கணக்கான பேர்கள் இருக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய லேண்டு ஹோல்டிங்லைப் பார்த்தால், குறைவாக இருக்கும். ஆகவே சிறிய விவசாயிகளினுடைய கையிலே அந்தப் பணம் போய்ச் சேரவேண்டும். நம்முடைய அரசு கூட இப்போது அவர்களுக்கு வேண்டிய உபகரணங்களுக்காக சப்சிடி கொடுத்துக் கொண்டிருக்கிறது. இந்த சப்சிடியிலே ஏராளமான கோளாறுகள் ஏற்படுகின்றன.





சிறு விவசாயிகளுக்கு சப்சிடி என்று சொல்லி, 1 ஏக்கருக்குக் கீழே இருப்பவர்களுக்கு உபகரணம் எல்லாம் கொடுக்கிறோம் என்று சொல்கிறோம். நாம் உபகரணம் கொடுக்கும்போது அதிலே எவ்வளவு அவர்களுக்குப் போய்ச் சேருகிறது என்று தெரியாத அளவில் பலவிதமான சிக்கல்கள், சங்கடங்கள் எல்லாம் அங்கே ஏற்படுகின்றன. ஆகவே நாம் சப்சிடி கொடுப்பதை நிறுத்திவிட்டு, இந்தமாதிரி விலையை சாதாரண விவசாயிகளுக்குக் கொடுத்தால் நல்லது. அப்படிக் கொடுத்தால், பெரிய விவசாயி சிறிய விவசாயிகளிடம் நெல்லைக் கொடுத்து, அவர்கள் தங்களுடையது என்று சொல்லிக் கொண்டு போடக்கூடிய ஒரு நிலைமை ஏற்படாது என்பது மட்டுமல்ல, விலை யாருக்குப் போய்ச் சேர வேண்டுமோ அவர்களுக்குச் சேருவதற்கு ஒரு வாய்ப்பு ஏற்படும் என்ற ஒரு கருத்தை நான் சொல்ல விரும்புகிறேன். விலையை ஏற்ற வேண்டுமென்பதற்கு இன்னொரு காரணம் இருக்கிறது. இப்பொழுது மறுபடியும் விவசாயக் கூலியை அதிகப்படுத்தியிருக்கிறோம். தஞ்சாவூரைப் பொறுத்தவரையில் அதை அதிகப்படுத்திக் கொண்டே போகும்போது ஒரு முக்கியப் பிரச்சினை வருகிறது. நிலச்சுவான்தார்களைக் கேட்டால், "முன்பு ஒருவர் செய்த வேலையை இப்போது 3 பேர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள்

(முற்பகல் 11-10)

இப்படி கூலி அதிகப்படுத்தப்படும்போது, நாங்கள் 3 பேருக்குக் கூலி கொடுத்துவிட்டு ஒருவர் செய்கிற வேலையைத்தான் வாங்க முடிகிறது" என்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் இதைப்பற்றி என்ன கருதுகிறாரோ எனக்குத் தெரியாது. ஆனால் அங்குள்ள நிலச்சுவான்தார்களின் கருத்தை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். விவசாயக் கூலிகளுக்குக் கூலி நிர்ணயம் செய்வதற்கு முன்பாக 'புரொடக்டிவிடி.' பற்றியும் நிர்ணயிக்க வேண்டும். அது மிகவும் முக்கியம். அப்படிப்பட்ட புரொடக்டிவிடியை தொழிற்சாலைகளில் நாம் வைத்திருக்கிறோம். இத்தனை மணிக்கு வர வேண்டும், இத்தனை மணிக்குத்தான் போக வேண்டும், இவ்வளவு காரியம் செய்ய வேண்டும் என்று நிர்ணயித்துவிட்டு, கூலியை நிர்ணயம் செய்தால் தான், ஒரு நல்ல நிலையை உருவாக்க முடியும். ஆனால் புரொடக்டிவிடியைப் பற்றிப் பேசாமல் கூலியை மட்டுமே ஏற்றிக்கொண்டே இருந்தால், அல்லது கன்சியூமர் பெனிபிட் பற்றி மட்டும் பேசிக்கொண்டு விவசாயிகளுக்கு உரிய விலையைக் கொடுக்காமல் இருந்தால், நிச்சயமாக கிராமப் பொருளாதாரம் பாதிக்கப்படும். அதன் காரணமாக அகில இந்தியப் பொருளாதாரமே பாதிக்கப்படும். அதைத்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்களும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதாவது கிராமப் பொருளாதாரம் பாதிக்கப்பட்டால்,

அகில இந்தியாவின் பொருளாதாரமும் பாதிக்கப்படும். வெறும் தொழில் முன்னேற்றத்தை மட்டும் வைத்துக்கொண்டு நாம் முன்னேற முடியாது என்பதை நான் இங்கே அழுத்தந்திருத்தமாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, நமது மாநிலத்தில் பாசனப் பகுதிகளை மேம்பாடு செய்வதற்கான திட்டத்தைப்பற்றி நாம் முக்கியமாக கவனம் செலுத்த வேண்டும். இப்போது ஏதோ கொஞ்சம் செய்து கொண்டிருக்கிறார்கள். என்றாலும் கடந்த 100 ஆண்டுகளுக்கு மேலாகவே தஞ்சை மாவட்டத்தில் உள்ள ஆறு, குளங்களில் தூர் வாரப்படவில்லை. ஆறுகளுக்கு இவ்வளவு தண்ணீர் போக வேண்டும், வாய்க்கால்களுக்கு இவ்வளவு தண்ணீர் போக வேண்டுமென்றெல்லாம், அளவு வைத்திருக்கிறார்கள். ஆனால் வைத்திருக்கிற அளவுக்கும், வருகிற தண்ணீருக்கும் சம்பந்தமே இருப்பதில்லை. சாதாரணமாக 50 சதவீதம் அளவுக்குக்கூட அவைகளில் தண்ணீர் வருவதில்லை. இதுதான் உண்மையான நிலை. இந்த நிலையில் கடந்த 200 ஆண்டுகளாகவே தஞ்சை மாவட்டத்தில் உள்ள ஆறுகளில், குளங்களில் தூர் வாரப்படவில்லை. எனவே அதையும் ஒரு முக்கியமான காரியமாக அரசு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நில்ச்சுவான்தார்கள் கருதுகிறார்கள் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், பல இடங்களில் கரும்பை சாகுபடி செய்கிறார்கள். ஆனால் அவ்வாறு உற்பத்தி செய்யப்படும் கரும்பைப் பொறுத்தவரையில், உரிய நேரத்தில் 'கட்டிங் ஆர்டர்' கொடுக்கப்படுவதில்லை என்ற குறைபாடு இருக்கிறது. பொதுவாக பிப்ரவரி மாதத்திலேயே கரும்புக்கு 'கட்டிங் ஆர்டர்' கொடுக்க வேண்டும். ஆனால் உண்மையில் மார்ச்சு-எப்ரல் மாதம் வரை கரும்புக்கான 'கட்டிங் ஆர்டர்' கொடுக்கப்படுவதில்லை. இதன் காரணமாகக் கரும்பில் உள்ள சாறு குறைந்து, விவசாயிகளுக்கு நியாயமாக எவ்வளவு தொகை கிடைக்க வேண்டுமோ அந்த அளவுக்குக் கிடைக்காமல் போய் அவர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து, கரும்பு ஆலைகள் உரிய நேரத்தில் கரும்பை வெட்டுவதற்கான கட்டிங் ஆர்டரைக் கொடுக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்றையும் நான் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவிக்க விரும்புகிறேன். அது ரெஜிஸ்ட்ரேஷன் கட்டணத்தைப் பொறுத்ததாகும். மாண்புமிகு திரு. சோமசுந்தரம் அவர்கள் அமைச்சராக இருந்தபோது, ரெஜிஸ்ட்ரேஷன்—பதிவுக் கட்டணத்தை 6 சதவீதத்திலிருந்து 13 சதவீதமாக உயர்த்தியமைத்து



விட்டார்கள். அது போதாதென்று இப்போதுள்ள மாண்புமிகு அமைச்சர் திரு. கிருஷ்ணசாமி அவர்களும் கிராமப்புற நிலங்களுக்கும் பதிவுக் கட்டணத்தை இன்னும் அதிகமாக்கப் போகிறோம் என்றும் சொல்லியிருக்கிறார்கள். இதன் காரணமாக எங்கள் மாவட்டத்திலும் பிற இடங்களிலும் தங்களுடைய நிலத்தை விற்றாலும்கூட, அந்த விற்பனையைப் பதிவு செய்வதில்லை. நான் எனக்கு ஏற்பட்ட அனுபவத்தையே இங்கே குறிப்பிட விரும்புகிறேன். என்னிடமிருந்த நிலத்தை ஒருவர் வாங்கினார். அதற்குரிய பணத்தை ஏறக்குறைய 99 சதவீதம் செலுத்திவிட்டார். இன்னும் கொஞ்சம் கொடுத்தால் முடிந்துவிடும். எனவே அவர் கொடுக்க வேண்டிய "1000 அல்லது 2000 ரூபாயைக் கொடுத்துவிட்டு விரைவில் ரெஜிஸ்தர் செய்து கொள்ளுங்கள்" என்று சொல்லியனுப்பினேன். ஆனால் நிலம் வாங்கியவர் என்ன சொன்னார் என்றால், இப்போது ரெஜிஸ்தர் செய்தால் 13 சதவீதம் பதிவுக் கட்டணம் செலுத்த வேண்டியிருக்கிறது. அதனால்தான் முழுத் தொகையையும் கொடுத்து பதிவு செய்யாமல் இருக்கிறேன், வேறு ஒன்றுமில்லை" என்று குறிப்பிட்டார். இது எனக்கு ஏற்பட்ட அனுபவம். ஒரு லட்சம் ரூபாய்க்கு நிலம் வாங்கினால் 13,000 ரூபாய் பதிவுக் கட்டணமாகக் கொடுக்க வேண்டியிருக்கிறது. இந்தக் காரணத்திற்காகவே பலர் ரெஜிஸ்தர் செய்யாமலேயே நிலத்தை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இப்படி தஞ்சை மாவட்டத்தில் கடந்த 2 ஆண்டுகளாக பல நிலங்கள் பதிவு செய்யப்படாமலேயே கை மாறிக் கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். தற்போதே நகர்ப்புறங்களில் குறைவாகவும் கிராமப்புறங்களில் அதிகமாகவும் பதிவுக் கட்டணம் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். இப்போதே கிராமப்புறங்களில் அதிகம் என்று சொல்லுகிறார்கள், மாண்புமிகு அமைச்சர் திரு. கிருஷ்ணசாமி அவர்கள் நான் பேசத்துவங்கும்போது இங்கே அமர்ந்திருந்தார்கள். இப்போது அவர் அவையில் இல்லை என்றாலும், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் இந்தக் கருத்தையும் அவருக்குத் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வேளாண்மைத் துறையும் பாசனத் துறையும் ஒருங்கே இருந்து செயல்பட வேண்டும். காரணம் வேளாண்மையும் பாசன வசதியும் ஒருங்கிணைந்த பிரச்சினைகள். தற்போது வேளாண்மைக்கு ஒரு அமைச்சரும், பாசனத் துறைக்கு என்று வேறொரு அமைச்சரும் இருக்கிறார்கள். இங்கே வேளாண்மைத் துறை அமைச்சர் வேளாண்மையைக் குறித்துப் பேசுகிறார். நேற்று பாசனத் துறை அமைச்சர் அவர்கள் காவிரிப் பிரச்சினையைப்பற்றி அந்த அவையில் பேசியிருக்கிறார்கள். இப்படி இரண்டும் இரண்டு அமைச்சர்களிடம் இருந்து வருவது சரியல்ல. எனவே அரசுக்கு நான் ஒரு ஆலோசனை

யாக ஒரு கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். இந்தத் துறைகள் இரண்டிற்கும் ஒரே அமைச்சரைப் போட்டால்தான், இரண்டு துறைகளையும் சிறப்பாக நிர்வகிக்க முடியும், அதன் மூலம் நிறைந்த பலனைப் பெற முடியும் என்று கூறி, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பின்மீது சில கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு நான் விரும்புகிறேன்.

தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த மேலவைத் துணைத் தலைவர் அவர்கள் எங்கள் மாவட்டத்தைப் பொறுத்த பிரச்சினைகளை இங்கே தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக காவிரி டெல்டா பகுதியில் 24 மணி நேரமும் மின்சாரம் தரப்பட்டாலும் கூட, அங்கே எடுப்பதற்கு நிலத்தடி நீர் இல்லை என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 11-15)

நிலத்தடி நீர் என்பது கடைமடைப் பகுதியாக இருந்தால் உப்பாக இருக்கிறது. நன்றாக இருக்கக்கூடிய நீர் நிறைவாகக் கிடைக்கவில்லை. தொடர்ந்து எடுக்கும்போது தண்ணீர் நன்றாக இல்லாத சூழ்நிலை இருக்கிறது.

மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் மற்றொரு சிறந்த கருத்தைச் சொன்னார்கள். வேளாண்மைத் துறைக்கும், பாசனத் துறைக்கும் ஒரே அமைச்சர் இருந்தால் நல்லது என்று எடுத்துச் சொன்னார்கள். இது பரிசீலிக்கப்பட வேண்டிய ஒரு கருத்தாகும். நாம் இதிலே பேசும்போது அவரும் இருந்து குறிப்பு எடுத்துக்கொள்ள வேண்டும். அல்லது இரு துறைக்கும் ஒருவரே அமைச்சராக இருந்தால் சிறப்பாக அமைய முடியும்.

கடைமடைப் பகுதியைப் பொறுத்தவரையில், வெள்ளத்தால் பாதிப்பு ஏற்படுகிறது. ஆண்டுதோறும் வெள்ளம் வருகிறது. பாசனத்தின்போது கூட தண்ணீர் கடைசியில்தான் அங்கே வருகிறது. எல்லாப் பகுதிக்கும் போய் மிச்சம் இருந்தால் வருகிறது. அப்போது வறட்சியாக இருக்கிறது. வெள்ளம் வருகிறபோதும் வெள்ளம் நிலத்தை அழித்துவிடுகிறது. ஆகவே, ஆண்டுதோறும் காவிரி டெல்டா பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்படுகிறது. எனவே வெள்ளத்தால் வீணாகிற நீரை வேறு வகையிலே திருப்பிவிடலாம். அங்கே உப்பளங்கள் நிறைய இருக்கின்றன. ஏரிப் பகுதிகள், பள்ளப் பகுதிகள் நிறைய இருக்கின்றன. பள்ளப் பகுதிகளில் கரையெடுத்து மடை கட்டி அவற்றை ஏரியாக்கி வீணாகிற நீரை அதிலே





தேக்கி, நீர் தட்டுப்பாடு ஏற்படுகிறபோது, மின்சாரப் பம்புசெட்டுகளின் மூலமாக பாய்ச்சி உபயோகித்துக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இதை அரசு பரிசீலிக்க வேண்டும். தண்ணீர் விடும் காலங்களில் கடைமடைப் பகுதியில் தண்ணீர் வாராமல் பாதிக்கப்படுகிறது, வெள்ளக் காலங்களில் அதிக நீர் வந்து அடித்துச் செல்லப்பட்டு பாழாகிறது. இப்படி இரு வழியில் காவிரி டெல்டா பகுதி மிகவும் பாதிப்புக்கு இலக்காகிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து அதற்கு ஏதேனும் மாற்று ஏற்பாடு செய்தாக வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், அந்தப் பகுதியில் சென்ற ஆண்டு ஜூன் 12 ஆம் தேதி தண்ணீர் விட்டார்கள் என்று கருதுகிறேன். இப்போது மேட்டூர் அணையில் தண்ணீர் 38, 39, 40 அடி என்று வந்திருக்கிறது. அமைச்சர் அவர்கள் 'விரைவில் திறக்கப்படும்' என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு விளக்கம் துணைத் தலைவர் அவர்கள் சொன்னார்கள். அரசு 'மிக விரைவு' என்றால் ஆண்டுக்கணக்காக ஆகும் என்றும், 'பரிசீலனை' என்றால் பரிசீலனை இல்லாமலே குப்பைத் தொட்டிக்குப் போகும் என்றும் பொருள்படும் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: மாண்புமிகு தலைவர் அவர்களே, அரசுபற்றி மாண்புமிகு உறுப்பினர் தவறாக கருதிக் கொண்டிருக்கிறார்கள். 'விரைவு' என்பதற்கும் 'பரிசீலனை' என்பதற்கும் உண்மையிலேயே என்ன பொருளோ அந்தப் பொருள்தான் அரசாங்கத்திற்கும், அமைச்சர்கள் 'பரிசீலனை செய்கிறோம்' என்று சொல்லும்போது, அவைகள் கோப்புகளாக வடிவம் பெறுகின்றன. அவைகள் குப்பைத் தொட்டிகளுக்குப் போகின்றன என்பது தவறு.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: நன்றி. அது செயல்முறைக்கு வந்தால் மகிழ்ச்சியடைகிறோம். இப்படி தண்ணீர் தட்டுப்பாடு மிக அதிகமாக இருப்பதால், விவசாயிகள் விவசாயம் செய்ய முடியாமல் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். விவசாயத்தைத் தொடங்க விதைகளைச் சேகரிக்கும் இந்த நேரத்தில், கடன்களைப் பெற முயற்சி செய்யும் இந்த நேரத்தில் அங்கே ஜப்தி நடக்கிறது. அறுவடை காலத்திலே, வரவேண்டிய வசூலை செய்ய நடவடிக்கை எடுத்திருந்தால் பரவாயில்லை. விவசாயம் தொடங்கக்கூடிய இந்த நேரத்தில் ஜப்தி நடவடிக்கை மிகக் கடுமையாக எடுக்கப்படுகிறது. இதனால் விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். அங்கே இப்போது விவசாயிகளுக்கு எப்படித் தொல்லை தருகிறார்கள் என்பதை நீங்களே பாருங்கள். அமைச்சர் அவர்கள் உளப்பூர்வமாக உணருவார்கள்—எப்படியெல்லாம் தம்முடைய அரசு

விவசாயிகளுக்கு உறுதிமொழி தந்தது, எப்படியெல்லாம் நடக்கிறது என்பதையெல்லாம் அமைச்சர் அவர்கள் உணர்வார்கள் என்று கருதுகிறேன். அரசுத் தரப்பிலே ஒன்று சொல்லப்பட்டது. 1980 ஆம் ஆண்டு என்று கருதுகிறேன். "ரிசர்வ் வங்கியில் ஒத்துக்கொண்டாலும், ஒத்துக்கொள்ளாவிட்டாலும், மத்திய அரசு ஏற்றுக் கொண்டாலும் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், அனைத்துக் கடன்களையும் நாங்கள் ரத்து செய்வோம்" என்று அரசால் சொல்லப்பட்டது. இயற்கை பாதிப்பால் விவசாயிகளுக்கு மிக பாதிப்பு ஏற்பட்டது, வெள்ளத்தால் பாதிப்பு ஏற்பட்டது, வறட்சியால் பாதிப்பு ஏற்பட்டது. இப்படி பல்வேறு பாதிப்புகள் இயற்கையால் ஏற்பட்டன. அதற்குப் பிறகு கிராம நிர்வாகத்தில் மாற்றம் செய்தார்கள். அங்கே கிராம நிர்வாக அலுவலர்கள் வந்து மூன்றாண்டுக் காலம் பழகி நடைமுறையைத் தெரிந்துகொள்ள காலம் ஆனது.

(மாற்றுத் தலைவர் திரு. வி. வி. வி. ஆனந்தம் தலைமை)

(முற்பகல் 11-20)

ஆக இப்படியெல்லாம் காலத்தைக் கடத்திவிட்டு அந்த விவசாயிகளும் 'ஏதோ அரசு தள்ளுபடி செய்துவிடும், தள்ளுபடி செய்துவிடும்' என்ற எண்ணத்தைத் தோற்றுவித்துக்கொண்டு இருக்கும்படி செய்தார்கள். 'நாம் பணம் கட்ட வேண்டாம்' என்ற எண்ணத்தை அவர்களுக்கு உருவாக்கிவிட்டார்கள். இப்போது, 12 ஆண்டுகள் சென்ற பிறகு, 'வாங்கியதையெல்லாம் கட்டுங்கள்' என்று சொன்னால், ஒருவர் 3 ஆயிரம் ரூபாய் 1976-ல் வாங்கியிருந்தால், இன்றைக்கு அதுவே 15 ஆயிரம் ரூபாய் என்று கட்டவேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. அதற்கு வட்டி, வட்டிக்கு வட்டி, அபராத வட்டி இப்படியெல்லாம் சேர்த்து இன்றைக்கு 15 ஆயிரம் ரூபாய் அவர்களுடைய கணக்கிலே கட்டவேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. இந்த நேரத்திலே போய், அதுவும் விவசாயி விவசாயம் தொடங்கிய இந்த நேரத்திலே போய், மிகவும் கெடுபிடியாக விவசாயிகள் மீதியிலே நடவடிக்கை எடுத்தால் அவன் எப்படி விவசாயம் செய்ய முடியும்? எப்படி விளைவைப் பெருக்க முடியும்? அவன் விதை நெல்லை எல்லாம் எப்படிச் சேகரிக்க முடியும்? இதை அரசு பரிவோடு பரிசீலிக்க வேண்டும் என்பதற்காகத்தான் நான் சொல்கிறேனே தவிர. அரசைக் குறை கூற வேண்டும் என்பதற்காக அல்ல. அரசே கூட நெய்வேலி மின் நிலையத்தில் 120 கோடி ரூபாய் இன்னும் பாக்கி வைத்திருக்கின்றது. மின்சாரத்திற்காக பாக்கியிருக்கிறது. அவர்கள் என்ன ஜப்தி நடவடிக்கை எடுக்கவா வந்து விட்டார்கள்? அவர்கள் ஜப்தி நடவடிக்கை எடுப்பது என்றால், அரசு மீது எடுப்பதா, அமைச்சர் மீது எடுப்பதா, யார்





மீது எடுப்பது என்ற பிரச்சினை வருமல்லவா? அப்படி 120 கோடி ரூபாய் பாக்கி இருக்கின்றது. இங்கே விவசாயிகளிடமிருந்து வரக்கூடிய வரியையெல்லாம் சேர்த்தால்கூட, சத்துணவுக்கு நாம் என்ன செலவழிக்கிறோமோ அதற்குட்பட்ட தொகையாகத்தான் இருக்கும். அரசு அதை 'ரைட் ஆப்' பண்ணினாலும்கூட, அரசுக்குப் பெரிய பாதிப்பு நிலைமை எதுவும் வந்து விடாது. ஆனால் அங்கே மிகக் கடுமையான முறையிலே ஜப்தி நடவடிக்கைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. சினிமாககாரர்கள்—அப்படி சொல்லக்கூடாது, பெருந்தனக்காரர்கள்—வருமான வரியைக் கட்ட வேண்டியவர்கள், இப்படிப்பட்டவர்கள் எல்லாம் கோடிக்கணக்கிலே பாக்கி வைத்திருக்கின்றார்கள். கடத்தல்காரர்கள், கள்ள மார்க்கெட்காரர்கள் மீதெல்லாம் பாயாத சட்டம் இன்றைக்கு விவசாயிகள் மீது பாயக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. நான் உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல வேண்டும் என்று நினைத்தேன். மாண்புமிகு தலைவர் அவர்கள் இருப்பார்கள் என்று கருதினேன். காரணம் அவருடைய சீடர் ஒருவர் இதிலே பாதிக்கப்பட்டிருக்கின்றார். அதை நான் சொல்லலாம் என்று கருதினேன். இங்கே அவர்கள் இல்லாமல் போய்விட்டார்கள். 4—6—1985 அன்று திருத்துறைப்பூண்டியிலே ஒரு ஜப்தி நடவடிக்கை எடுக்கப்பட்டது. யார், யார் ஜப்திக்கு வரவேண்டும் என்று சட்டமே இருக்கின்றது. நடவடிக்கை எடுப்பதற்கு முன்னால் சொசைட்டியிலே கடன் வாங்கியிருந்தால், சில ஆபீசர்கள் வரவேண்டும். சொசைட்டி, செக்கரட்டரி வரவேண்டும். சொசைட்டியினுடைய ஸ்டாப் மட்டும்தான் வரவேண்டும். இது சொசைட்டி விதி 65-லே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இங்கே நடப்பது என்ன என்று சொன்னால், ஏதோ வெளிநாட்டுக்காரன் படையெடுத்து வருவதைப்போல, ஒரு உள்நாட்டுப் போரே அங்கே நடப்பதுபோல, ஜெயவர்த்தனே ஸ்ரீலங்காவிலே இருக்கக்கூடிய தமிழர்களை அழிக்க அந்த சிங்கள ராணுவத்தை அனுப்பி அங்கே கொலை செய்வதுபோல, அல்லது சம்பல் பள்ளத்தாக்கு கொள்ளைக் கூட்டத்தினர் கொள்ளையடிக்க வந்ததுபோல, அங்கே அரசினுடைய ரதகஜ துரகபதாதிகள், ஒரு நூறு பேர்கள், 20 ஜீப்கள், இரண்டு மகிழ்வுந்துகள், சில வேன்கள் எல்லாம் வருகின்றன. நூறு பேர்களுக்கு மேலே வருகின்றார்கள். அங்கே வந்து திடுதிப்பென்று இறங்குகின்றார்கள். எல்லோரையும் விரட்டுகின்றார்கள். குறிப்பிட்ட வீட்டிற்குச் செல்கின்றார்கள். அங்கே அவர்கள் என்ன செய்கின்றார்கள் என்று சொன்னால், அதைத்தான் பார்க்க வேண்டும் அந்தக் குறிப்பிட்ட நபர் 3—6—1985 அன்று ஒரு ஆயிரம் ரூபாய் பணம் கட்டியிருக்கின்றார். அவர் ஒரு விவசாயி. அவர்கள் சிலம்புச்செல்வர் அவர்களுடைய நேரடி சீடர். அவருடைய பெயர் ஆறுமுகம் என்பது. ஊர் திருத்துறைப்பூண்டி. இன்றைக்கும் அவருடைய சீடராக இருந்து

கொண்டிருக்கின்றார். அவர் வீட்டிலே போய் இப்படிச் செய்கின்றார்கள். ஆயிரம் ரூபாய் முதல் நாள் கட்டியிருக்கின்றார்கள். அதற்கு அடுத்த நாள் . . . .

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கூட்டுறவுக் கடன் வசூலிக்கின்ற நிகழ்ச்சிகள் பற்றிப் பேசிக்கொண்டிருக்கின்றார்கள் என்று கருதுகிறேன். வேளாண்மைத் துறையினுடைய விவாதம் நடந்துகொண்டிருக்கிறது. வேளாண்மைத் துறையிலே ஈடுபட்டிருக்கின்ற விவசாயிகளுக்கு கூட்டுறவுத் துறை கடனைக் கொடுத்து அந்தக் கடனைக் கட்டாத சூழ்நிலையில் அவர்கள் அதை வசூலித்திருக்கின்றார்கள் என்பதைப்பற்றித் தகவல் தெரிவித்துக்கொண்டிருக்கின்றார்கள். நான் அதற்குள்ளேகூட நுழைய விரும்பவில்லை. ஆனால் யாரோ ஒருவரிடத்திலே, வசூல் நடவடிக்கை எடுக்கப்பட்டதுபற்றிக் கூறும்போது, மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களுடைய பீடர், பீடர் என்று குறிப்பிட்டுப் பேசுவது நம் மேலவைத் தலைவருக்கு மரியாதையை அளிப்பதாக அமையாது, அது இந்த அவைக்கும் மரபாக அமையாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, துணைத் தலைவர் அவர்கள் அதற்காகத்தான் ஒரு கருத்தைச் சொன்னார்கள். வேளாண்மைத் துறையிலே சாகுபடி பண்ணும்போது ஒரு அமைச்சர், தண்ணீர் விடும்போது ஒரு அமைச்சர், அறுவடை செய்யும்போது ஒரு அமைச்சர், வரி வசூலிக்கின்றபோது ஒரு அமைச்சர் என்று இருக்கிறது.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** மாண்புமிகு தலைவர் அவர்களே, வேளாண் பெருமக்களுடைய பிரச்சினை என்பது எல்லாவற்றிலும் விரிந்து பரந்து கிடக்கின்றது. மின்சாரம், வேளாண் பெருமக்களோடு தொடர்புடைய பிரச்சினை. அதற்காக ஒரே ஒரு துறையாக ஆக்கிவிட முடியாது. அதேபோல, கூட்டுறவுத்துறை என்பது வேளாண் பெருமக்களோடு தொடர்புடையது, அதற்காக, சேர்ந்து ஒரு அமைச்சர் வந்தாகவேண்டும் என்ற நியதியைக் கொண்டுவர முடியாது. பிரச்சினைகள் பல்வேறு வகைகளில் பரந்து விரிந்து கிடக்கின்றன. இங்கே விவாதத்திற்கு வைத்திருப்பது, வேளாண்மை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு. அதனுடைய அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினர் கருத்துத் தெரிவித்தால், நான் பதில் சொல்வதற்கு வசதியாக இருக்கும். அவர்கள் எல்லாத் துறைகளிலேயும் இருக்கின்ற பிரச்சினைகளை, கருத்துக்களை இங்கே எப்படியும் பதிவு செய்துவிட வேண்டும் என்ற அளவில் பேசினால், பதிலை அதற்கெல்லாம் என்னிடத்திலே எதிர்பார்க்க முடியாது.





(முற்பகல் 11-25)

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** தலைவரவர்களே, விவசாயப் பெருங்குடி மக்களுடைய தொடர்புடைய பிரச்சினைகள் பற்றி நான் பேசுகிறேன். அவற்றுக்கு வேறு, வேறு இலாக்காக்கள் பதில் சொல்ல வேண்டுமென்று சொன்னால்; அது அவைக் குறிப்பிலே இருந்தால், பின்னால் பரிசீலனை செய்யட்டும். மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களை இழுக்க வேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை. பாதிக்கப்பட்டவரே மடல் எழுதி, 'நான் இன்னாருக்கு வேண்டியவர்' என்று சொல்லி, 'பாதிக்கப்பட்டிருக்கிறேன்' என்று சொல்லியிருப்பதால் சொல்கிறேன். உள் நோக்கம் கற்பிக்க அல்ல. பாதிப்புக்களைச் சொல்வது என் கடமை. அதைச் சொல்ல விழைகிறேன். அவரும் ஒரு விவசாயி என்றதால் சொல்ல விழைகிறேன். மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொல்லாவிட்டாலும்கூட, விவசாயப் பெருங்குடி மக்களுக்குப் பாதிப்பு ஏற்படுகிறது என்பதால் கூட்டுப் பொறுப்புடைய அமைச்சரவை கூடி, கலந்து பேசக்கூடாது என்பதல்ல. இதைப் பின்னாலே கூடச் செய்ய முடியும். அதற்காக இதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இப்போது மிகக் கடுமையாக ஜப்தி நடவடிக்கை நடந்து கொண்டிருக்கிறது. இப்போது விதைக்க வேண்டிய காலம். மேட்டூர் அணையிலே பயிர் செய்வதற்கு தண்ணீரைத் திறந்துவிட்டால், முதலிலே விதை நெல்லைத்தான் தெளிக்க வேண்டும். அதை ஜப்தி செய்திருக்கிறார்கள். அந்த ஆறுமுகம் வீட்டிலே டி.கே.எம். 9 குறுவை விதை; சி.ஆர். 1009 சம்பா விதை இருந்தது. அந்த இரண்டையும் கலந்து ஜப்தி செய்திருக்கிறார்கள். விதை நெல்லையே ஜப்தி செய்தால், எப்படி விவசாயம் நடக்கும்? எப்படி உற்பத்தி பெருகும்? அவருக்கு 12 ஆண்டுக்காலம் கடனை நீட்டித்திருக்கிறோமே, இப்போதுள்ள நிலையில் விதை நெல்லைக்கூடவா விடக்கூடாது? இவ்வளவு மோசமாகவா ஜப்தி செய்ய வேண்டும்? அங்கேயுள்ள சம்பா விதை நெல்லை எடுத்துப் போயிருக்கிறார்கள். விதை நெல்லை எடுத்தால், எப்படி விவசாயம் செய்ய முடியும்? அதைக் கேட்க விரும்புகிறேன். வேளாண்மை அமைச்சருக்கு இதில் தொடர்பு இருந்தாலும், இல்லாவிட்டாலும், சம்பந்தப்பட்ட இலாக்காவுக்கு இதைப்பற்றிப் பரிந்துரை செய்யலாம் என்ற அடிப்படையிலே சொல்கிறேன். வேறு ஊரிலே, அதாவது தோளாச்சேரி என்ற கிராமத்தில், வாசலிலே இருந்த நெல் பட்டரையைப் பிரித்து எடுத்துச் சென்றிருக்கிறார்கள். அவ்வூரிலுள்ள கோவிந்தராஜன் என்பவர் வீட்டிலே இது நடந்திருக்கிறது. மளிகைக் கடை சாமான்களை வீதியிலே எறிந்திருக்கிறார்கள் ஜப்திக்கு வந்த 2 பேர்கள் வீட்டிலே பெண்களின் நகையைக் கழட்டிச் சென்றிருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய மக்கள், சர்வ கட்சியினர்,

[திரு. க. மீனாட்சிசுந்தரம்] [1985 ஜூன் 28

கொத்தமங்கலம் என்ற ஊரில் ஜப்தி நடந்தபோது, "விதை நெல்லை எடுக்காதீர்கள், விவசாயிகளைக் கஷ்டப்படுத்தாதீர்கள்" என்று வேண்டுகோள் விட்டபோது, அவர்கள் தடுக்கச் சென்றதாகச் சொல்லி, 15 பேர்களைக் கைது செய்துள்ளார்கள். கைது செய்யப்பட்டவர்களில் மணலி காதர், விவசாயி சங்கத் தலைவர், திரு. இலக்குமணன், திராவிட முன்னேற்றக் கழகம்; திரு. கணேசன், காங்கிரஸ் கமிட்டி வட்டத் தலைவர்; திரு. கருணாநிதி, காங்கிரஸ் கமிட்டி வட்டாரத் தலைவர். திரு. இராசமாணிக்கம், வழக்கறிஞர், சி.பி.எம்.; திரு. கலியமூர்த்தி, ஜனதா . . .

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** கட்சியைப் பார்த்துச் செய்யும் நடவடிக்கை அல்ல, கடனைப் பார்த்துச் செய்யும் நடவடிக்கை.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** நிதி அமைச்சர் ஒருமுறை சொல்கிறார், ஜப்தி நடவடிக்கைகள் இல்லை என்று. இரண்டு நாட்கள் கழித்து, நடவடிக்கை எடுக்கப்படும் என்கிறார். அரசினுடைய கொள்கை என்ன? விவசாயிகளைக் கொடுமைப்படுத்துவதுதான் கொள்கையா? அவர்களுடைய் கடன்களைத் தள்ளுபடி செய்ய இருக்கிறார்களா அல்லது அவர்களைக் கொடுமைப்படுத்த இருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன். இதை இந்த அளவோடு விட்டுவிட்டு, அடுத்த பிரச்சினைக்குப் போகிறேன்.

துணைத் தலைவர் அவர்கள் ஒரு பிரச்சினையைச் சொன்னார்கள். நெல்லுக்குத் தேவையான விலையை நிர்ணயிக்க வேண்டுமென்று சொன்னார்கள். மற்ற எல்லாவற்றுக்கும் விலை ஏறுகிறது. ஆனால் நெல்லைப் பொறுத்தவரையில், அது மிகக் குறைவாகவே இருக்கிறது. மத்திய அரசும் அவர்களுக்கு விலையைக் கூட்டவில்லை. இப்போது உழவுச் செலவு, உரச் செலவு, பணியாளர் செலவு, பூச்சி மருந்து செலவு, டிரான்ஸ்போர்ட் செலவு, கடன் வாங்க ஆகும் செலவு, வட்டி கட்டும் செலவு—இப்படி பல செலவுகள். உழுபவன் கணக்குப் பார்த்தால், உழக்குதான் மிஞ்சும் என்ற முறையில்தான் இருக்கிறது. வேறு எதுவும் இல்லை என்ற நிலையில் உழவர்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். நெல்லின் விலையை உயர்த்துவது குறித்து அமைச்சரவர்கள் சொன்னதாக பத்திரிகையிலே ஒரு செய்தி பார்த்தேன். "200 ரூபாய் அளவுக்கு குவிண்டால் ஒன்றுக்கு உயர்த்த முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறோம்" என்று செய்தி பார்த்தேன். மத்திய அரசு அதைக் குறைக்க முயன்றாலும், நம்முடைய அமைச்சரவர்கள் பிடிவாதமாக இருந்து, அதைச் சாதித்துத் தர வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.



1985 ஜூன் 28] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

(முற்பகல் 11-30)

விதையைப் பொறுத்தவரையில், விவசாயப் பண்ணையில் விலை அதிகமாக இருக்கிறது. அங்கு ரூபாய் 3-20-க்குத் தருகிறோம். அதே நேரத்தில் வெளியிலே விதையின் விலை 2 ரூபாய்தான். அப்படியும் பண்ணையிலிருந்து தருகின்ற விதை சிறப்பாக இருக்கிறதா, பயனுள்ளதாக இருக்கிறதா என்றால் இல்லை. அது கூட முளைக்காமல் போய்விடுகிறது. இதுகுறித்து ஆழமாக அதிகாரிகளை வைத்து கவனிக்க வேண்டும். நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சென்ற ஆண்டு மஞ்சள் நோய் வந்தது. அது துங்குரோ வைரஸ் என்கிற நோய். எவ்வளவோ முயற்சி செய்தும், அதை அழிக்க முடியவில்லை. பயிர்தான் அழிந்தது. விவசாயத் துறையில் எவ்வளவோ பெரிய பெரிய நிபுணர்களை எல்லாம் வைத்திருக்கிறோம். இருந்தாலும் அந்த நோயைப் பூரணமாக அழிக்கும் ஆற்றல் நம்முடைய இலாகாவிடத்தில் இல்லையே? இதுகுறித்து இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? இனி வருங்காலத்தில் இம்மாதிரி வராமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பயிர்களுக்கு மருந்து, உரம் எல்லாம் தரப்படுகிறது. குவிண்டால் ஒன்றுக்கு 15 ரூபாய் அதிகம் தருகிறோம் என்று சொல்லிக்கொண்டு உரம் அல்லது பூச்சிக்கொல்லி மருந்து தருகின்ற நிலைமை இருப்பதைக் காண்கிறோம். இப்படிக் கொடுப்பதை விவசாயிகளுக்கு தேவையான நேரத்தில் கொடுப்பதில்லை. தேவையில்லாத நேரத்தில் கொடுப்பதால், அந்த விவசாயிகள் அதை பாதி விலைக்கும் இன்னும் சில வேளைகளில் அங்கேயே இருக்கிற ஏஜெண்டுகளிடம் ¼ விலைக்கும் விற்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. எனவே இனிமேல் மானியம் அளிப்பதை பணமாக அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பவர் ஸ்பிரேயரை முன்பு வாடகைக்குக் கொடுத்து வந்தார்கள். இப்பொழுது தருவதில்லை. வருங்காலத்தில் அதைத் தர வேண்டும்.

எலித் தொல்லை மிகவும் அதிகமாக இருக்கிறது. நாற்பது சதவிகித விவசாயப் பொருள்களை எலிகள் சாப்பிடுகின்றன என்று ஆராய்ச்சியாளர்களே சொல்கிறார்கள். நாட்டிலே சில பெருச்சாளிகள் மனிதர்களின் போர்வையிலே கொள்ளையடிப்பது போல் இந்த எலிகளும் நிலங்களிலேயுள்ள நெல்லைக் கொள்ளையடிக்கின்றன. எலி ஒழிப்புத் திட்டத்தை தஞ்சையில் 27 ஆயிரம் ஏக்கரில் நடைமுறைக்குக் கொண்டு வந்து அதில் வெற்றியும்

பெற்றார்கள். இத்திட்டத்தை திருச்சி, புதுக்கோட்டை போன்ற மாவட்டங்களுக்கும் ஏன் நடைமுறைப்படுத்தவில்லை? எப்போதுமே எலிகள் ஒரே இடத்தில் இருப்பதில்லை. அதிலும் கோடைப் பயிரைப் பொறுத்தவரையில், எல்லா எலிகளும் ஒரே இடத்தில் விளையும் கோடைப் பயிரை நாடி வந்து விடுவதால், நிலங்களில் கடலைச் செடிகள்தான் இருக்கின்றன, அடியிலே கடலை இல்லை. ஆகவே எலி ஒழிப்புத் திட்டத்தினை தஞ்சையைத் தொடர்ந்து எல்லா மாவட்டங்களிலும் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, பூச்சிக் கொல்லிகளுக்காக ஒன்பது சோதனைக் கூடங்களை ஏற்படுத்தியிருப்பது பயனளித்துள்ளது. இதனை எல்லா மாவட்டங்களுக்கும் ஒன்று வீதம் அமைக்க வேண்டும்.

சிறப்புத் திட்டங்கள் என்கிற அடிப்படையில் வறட்சியின் காரணமாக 1983-84 ஆம் ஆண்டில் புல்டோசர் மூலமாக 24 லட்சம் ரூபாய் செலவில் நிலத்தைச் சீர்திருத்தம் செய்திருப்பதைப் பாராட்டுகிறேன். ஆனால் இப்படி சீர்திருத்தம் செய்திருக்கும் 1,600 ஏக்கர் நிலத்திற்கும் தண்ணீரே இல்லையே! அதனால் பயன் என்ன? தண்ணீர் கிடைப்பதற்கான ஏற்பாட்டைச் செய்யாததால், அதைப் பயன்படுத்த முடியவில்லை. மீண்டும் ஒரு காலத்தில் புல்டோசர் கொண்டு சரி பண்ண வேண்டிய நிலை ஏற்பட்டு விடுமோ என்று ஐயப்படுகிறேன். அதற்கு இடம் கொடுக்காத வகையில் இதுகுறித்து சரியான நடவடிக்கை எடுக்க வேண்டும். அதை சாகுபடி நிலமாக மாற்ற, தண்ணீருக்கு உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படியானால்தான் அத்திட்டத்தின் பலன் நமக்குக் கிடைக்கும்.

அடுத்து, காய்கறி விலை இன்றைக்கு ஏறியிருக்கிறது. ஒரு கிலோ தக்காளி செங்கல்பட்டு காய்கறி கோவாப்பரேட்டில் விற்பனைக் கூடத்திலேயே ஐந்து ரூபாய்க்கு விற்கப்படுகிறது. வெளியிலே ஏழு ரூபாய்க்கு மேல் விற்கப் படுகிறது. கத்தரிக்காய் போன்ற மற்ற காய்கறிகளின் விலையும் மிக அதிகமாக உயர்ந்திருக்கிறது. காய்கறி விலை உயராத வகையில் மற்றும் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் இந்த அரசு என்னென்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

சோயாபீன்ஸ் எண்ணெயை மக்கள் உபயோகிப்பதை இப்போது நிறுத்தி விட்டார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால், அதில் மீன் வாடை வருகிறது. ஆகவே அதை மக்கள் புறக்கணிக்கிறார்கள் என்பது என் கருத்து.



(முற்பகல் 11-35)

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** அதனால்கூட சிலர் விரும்பக்கூடும் அல்லவா?

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** அந்த வாடையை அசைவர்கள் விரும்பக் கூடும். சைவர்கள் புறக்கணிக்கிறார்கள். எல்லோரும் விரும்பும் வகையில், அந்த மீன் வாடையை அந்த சோயாபீன்ஸ் எண்ணெயில் நீக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்ததாக, சர்க்கரை ஆலைகள் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். தஞ்சை மாவட்டத்தில் வடபாதிமங்கலத்தில் தனியார் துறை சர்க்கரை ஆலை இருக்கிறது. அதேநேரத்தில் குருங்குளத்தில் பொதுத் துறை நிர்வாகத்திலும் ஒரு சர்க்கரை ஆலை இருக்கிறது. பொதுத் துறை நிர்வாகத்தில் இயங்கும் சர்க்கரை ஆலையில் இருக்கக்கூடிய முன்னேற்றம், ஏற்படக்கூடிய உற்பத்தி, விவசாயிகளுக்குக் கிடைக்கும் நன்மைகள் தனியார் துறையில் இல்லை. இதைப் பொறுத்தவரையில், அரசைப் பாராட்ட வேண்டும். மிகச் சிறப்பாக இருக்கிறது. கரும்பு கொண்டு வருகிற விவசாயிகளை வரவேற்பது, அரசு நிர்ணயித்த விலையையே கொடுப்பது, அதுவும் உடனேயே பணத்தைக் கொடுத்துவிடுவது போன்ற நன்மைகள் குருங்குளம் பொது சர்க்கரை ஆலையில் இருக்கிறது. ஆனால் தனியார் சர்க்கரை ஆலையான வடபாதிமங்கலத்தில், இதற்கு நேர்மாறான முறைகள் இருப்பதைப் பார்க்கிறோம். அரசு நிர்ணயித்த விலைக்குக் குறைவாகக் கொடுக்கும் பணத்தைக்கூட, அந்தக் கரும்பு விவசாயிகளுக்கு, சர்க்கரை தயாரித்து விற்ற பிறகுதான் கொடுக்கும் நிலை இருக்கிறது. இதனால் வடபாதிமங்கலம் சர்க்கரை ஆலையைச் சுற்றி இருக்கும் கரும்பு விவசாயிகள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைச் சீர்திருத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதே நேரத்தில் ஒரு வேண்டுகோள் விடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர், கும்பகோணத்தில் ஒரு பொதுத் துறை சர்க்கரை ஆலையை நிறுவ முயற்சி எடுத்திருக்கிறார்கள். கும்பகோணத்தில் சர்க்கரை ஆலை உருவானால், அது பொதுத் துறையிலோ, கூட்டுறவுத் துறையிலோதான் நிறுவப்படும். ஆனால் வடபாதிமங்கலம் சர்க்கரை ஆலையினர் அந்த கும்பகோணம் சர்க்கரை ஆலையை நிறுவ விடாமல் என்னென்ன இடையூறுகளைச் செய்ய வேண்டுமோ அவ்வளவையும் செய்கிறார்கள். அங்கே சர்க்கரை ஆலை அமைப்பதை எதிர்க்கும் நோக்கில் செயல்படுகிறார்கள். எப்படியும் தனியார் ஆலையின் நோக்கம் நிறைவேறாத

வகையில் அரசு அல்லது கூட்டுறவுத் துறை சர்க்கரை ஆலை நிறுவப்பட வேண்டுமென்று கேட்டு, எனக்கு பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி கூறி அமைகிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்** : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வேளாண்மை குறித்த கொள்கை விளக்கக்குறிப்பின் மீது என்னுடைய கருத்துக்களைக் கூறுவதற்கு முன்பு, இங்கே சொல்லப்படும் கருத்துக்கள், பேசப்படும் பேச்சுக்கள் நாட்டு மக்களைச் சென்றடைய வேண்டும், குறைந்த பட்சம் நமக்கு வாக்களித்தவர்களுக்காவது போய்ச் சேரவேண்டுமென்ற ஆசை அனைவருக்கும் இருக்கிறது என்பதால், அந்தப் பேச்சுக்கள் முதலில் இங்கே கருத்துக்களைச் சொல்வதற்கு தலைவர் பொறுப்பு ஏற்பவர்களுடைய கவனத்தை ஈர்க்க வேண்டிய அவசியமும், செய்தி நிருபர்களுடைய கீர்தை ஈர்க்க வேண்டிய அவசியமும் நமக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் இங்கே அரை மணி நேரம் பேசினாலும்கூட, ஆங்கிலப் பத்திரிகைகளைப் பொறுத்தவரையில், "Dr. Janarthanam stressed the need for attractive salaries to the Agricultural graduates" என்று ஒரே வரியில் செய்தியோடும், தமிழேடுகளில் இரண்டு மூன்று பெயர்களைப் போட்டு, இதையெல்லாம் சொன்னார்கள் என்றும், இன்னும் சில நேரத்தில் இன்னென்ன கேள்விகளுக்கு இன்னென்ன அமைச்சர்கள் பதில் சொன்னார்கள் என்றும் போட்டுவிடுகிறார்கள். இதன் காரணமாக எப்படி செய்தி நிருபர்களைக் கவருவது என்று நினைத்து, பத்திரிகைச் செய்திகளைத் தொகுத்துச் சொல்லிவிடுவது சிறப்பாக இருக்கும் என்ற முடிவோடு என் உரையைத் துவக்குகிறேன்.

இன்று தமிழகத்திலே மட்டுமல்லாமல், இந்தியாவிலேயே நமது விவசாயத் துறை பாராட்டப்படக்கூடிய நிலையில் இருக்கிறது என்ற கருத்து இருக்கிறது. இதை மத்திய அமைச்சர்களே பாராட்டியிருக்கிறார்கள் என்ற நிலை இருக்கிறது. கரும்பு உற்பத்தியில், நமது தமிழகம் முதலிடத்திலும், அரிசி உற்பத்தியில் இரண்டாவது இடத்திலும் இருக்கிறது என்பதை புள்ளி விவரங்கள் எடுத்துக் காட்டுகின்றன. உலகிலேயே கரும்பு உற்பத்தியில் இந்தியாதான் முதலிடம் வகிக்கிறது என்ற பெருமையும் நமக்குண்டு. இதை உள்ளபடியே எண்ணிப்பார்த்து, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுக்கும், அமைச்சர் அவர்களுக்கும், இதிலே பொறுப்பு வகிக்கிற அதிகாரிகளுக்கும் இந்தப் பாராட்டுரை நிச்சயம் போய்ச் சேரும் என்ற





நம்பிக்கை எனக்கிருக்கிறது. இப்போது வேளாண்மைத் துறை இயக்குநராக இருக்கிற திரு. ஆதிமூலம் அவர்கள் எங்களுடைய மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவராக அரும்பணியாற்றியவர்கள். அவர்கள் விவசாயத்தில் அதிகம் ஈடுபாடு கொண்டவர்கள். ஆகவே இந்தத் துறை மேலும் வளர்ச்சி பெறும் என்று எதிர்பார்க்கலாம்.

நவீன விவசாயத்தில் டிராக்டர்களை அதிகம் பயன்படுத்த வேண்டும் என்று அண்மையில் ஒரு கருத்தரங்கில் கருத்துக்கள் சொல்லப்பட்டன. 'டிராக்டர் என்பது திறமையின் சின்னமாகிவிட்டது' என்று 'ஜே' பண்ணையைச் சேர்ந்தவர்கள் குறிப்பிட்டார்கள். இதன் காரணமாக விவசாயத்தில் நிறைய வளர்ச்சி ஏற்பட்டுள்ளது என்று கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

(முற்பகல் 11-40)

அடுத்து, ஏழை எளியவர்கள், சிறு விவசாயிகள் பயன்படுத்தும் வகையில் குறைந்த வட்டிக்குக் கடன் திட்டங்களை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். விவசாயத்தைப் பொறுத்த மட்டில், மின்சாரத்திற்கும் விவசாயத்திற்கும் இடையே நடந்துகொண்டிருக்கிற போட்டியைப்பற்றிக் குறிப்பிட்டாக வேண்டும். எந்த நேரத்தில் மின்சாரம் வரும், எந்த நேரத்தில் நிறுத்தப்படும் என்பது விவசாயிகளுக்குத் தெரியாத நிலையில் மிகவும் அவதியுறுகிறார்கள். மின்சாரம் வருகிறது என்று நினைத்து மோட்டார் பம்ப்செட்டைத் திறந்து விடுகிறார்கள். தண்ணீர் வாய்க்கால் வழியாக ஓடி வயலுக்குள் விழுவதற்குள் மின் துண்டிப்பு ஏற்பட்டுவிடுகிறது. இதுபோல் மூன்று, நான்கு தடவைகள் ஏற்பட்ட பிறகு, இனி மின்சாரம் வந்தும் பயனில்லை என்கிற முடிவுக்கு விவசாயிகள் வந்துவிடுகிறார்கள். எனவே இந்நிலையைப் போக்கிட வாய்க்காலில் தண்ணீர் வீணாகாமல் இருப்பதற்கு பிளாஸ்டிக்கை உபயோகப்படுத்தி, வாட்டர் மேனேஜ்மெண்ட் முறைகளைப் பயன்படுத்திடுவோமானால், ஓரளவுக்கு நிலைமையைச் சமாளிக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மின்சாரம் அடிக்கடி துண்டிக்கப்படுவதால், எந்த அளவுக்கு விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதைப் பற்றி இந்து பத்திரிகையில் ஒருவர் குறிப்பிட்டிருக்கிறார்.

"The crop should have fared still better, but erratic power supply has drastically affected our hopes. We could not irrigate at the right time and the crop that grew so well initially began to dry at the crucial phase".

இவ்வாறு திரு. ஜி. வேணு நாயுடு, புதிய முறை மூலமாக பயிர்செய்பவர், தன் வேதனைகளைக் கூறியிருக்கிறார். எனவேதான் மின்சாரத் துறையும், விவசாயத் துறையும் இணைந்து செயல்பட்டால், இதுபோன்ற துன்பங்கள் குறையும் என்று நான் கருதுகிறேன்.

விவசாய வளர்ச்சியிலே தொழிற் துறையின் பங்கும் கணிசமாகத் தேவை என்று மாண்புமிகு முன்னாள் மத்திய அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் போன்றவர்கள் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். தொழில் துறைக்கு விஞ்ஞான, நவீன தொழில் நுட்ப முறைகள் எவ்வளவு அவசியமோ அதேபோன்று விவசாயத் துறை வளர்ச்சிக்கும் இவை அவசியம் என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார்.. மேலும், "இந்த வகையில் விவசாய விளைபொருள் உற்பத்தியை அதிகரிக்க, விவசாயத் துறையில் உள்ளவர்களின் வருமானத்தைப் பெருக்க, தொழில் துறையினர் உதவ முடியும்" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதைப்போலவே மத்திய திட்டக் கமிஷன் உறுப்பினர்-செயலர் திரு. கே. வி. ராமநாதன் அவர்கள், "தரமான விதை உற்பத்தி போன்ற பல்வேறு வழிகளில் விவசாயத் துறை வளர்ச்சிக்கு தொழில் துறையினர் உதவ முடியும்" என்று கூறியிருக்கிறார். தமிழக விவசாயத் துறை செயலர் திரு. ஏ. வெங்கடராமன் அவர்களும் தொழிற் துறையினர் எப்படியெல்லாம் விவசாயத் துறைக்கு உதவலாம் என்று கருத்து தெரிவித்திருக்கிறார்கள். இவ்வாறு விவசாயத் துறைக்குத் தொழில் துறை உதவுமானால், உற்பத்தியாகக் கூடிய விளைபொருள்கள் உலக மார்க்கெட்டில் நன்கு விற்பனையாகக்கூடிய அளவுக்கு உயர்வு ஏற்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மூனு ஆதி அவர்கள் தலைமையில் விவசாய உயர்மட்டக் குழு அமைத்திருக்கிறோம். அவர் சில கருத்துக்களைக் கூறியிருக்கிறார். அவற்றை அரசு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சிறிய கடன்கள், நீண்ட காலக் கடன்களின் வட்டியை ரத்து செய்துவிட்டு, கடன் தொகையை மட்டும் ஐந்தாண்டுக் காலத்தில் அவர்கள் திருப்பித்தரும் வகையில் உத்தரவிடுவது பயனுள்ளதாக இருக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதை எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளுக்குச் செய்வது தனிப்பட்ட பிரிவினருக்குச் செய்வது என்றில்லாமல், அவர்களுக்குச் செய்யும் உதவி ஒட்டுமொத்தமாக நாட்டு வளர்ச்சிக்கு என்று கருத வேண்டும். எப்படி பிளேக், காலரா போன்ற வியாதிகள் வந்து மக்கள் அவதியுறும்போது, பொது நிதியிலிருந்து அரசு நிவாரணம் தருகிறதோ அதைப்போல, பயிர்களும் ஒட்டுமொத்தமாகப் பல நோய்களால் பாதிக்கப்படும்போது, பொது நிதியிலிருந்து உதவிட முன்வர





வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். விவசாயப் பயிருக்கு வரக்கூடிய நோயினால் ஏற்படும் சுமையை விவசாயிகள்மீது ஏன் சுமத்துகிறீர்கள் என்று கேட்கிறார்கள். எனவே இதை அரசு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

Modernising Agriculture என்று தலைப்பிட்டு Indian Express பத்திரிக்கை தன் தலையங்கத்தில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறது :—

"..On the farm front, some of the new technologies are far more appropriate than gradual improvements in traditional technologies, though there is no inherent conflict betwwen the two.".

நம்முடைய விவசாயிகள் பழைய முறைகளிலிருந்து நவீன முறைகளுக்கு படிப்படியாக மாற வேண்டுமென்று கருதத் தேவை இல்லை என்கிற இக்கருத்தையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

குறிப்பாக, நெற்பயிரில் துங்ரோ என்கிற நோயால் பயங்கர பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. தென்னாற்காடு மாவட்டத்தில் மட்டும் 18,000 ஹெக்டேர் பரப்பளவு நிலம் பாதிக்கப்பட்டிருக்கிறது. இதனால் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நோய்களிலிருந்தும் பயிர்களைப் பாதுகாக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். நெற்பயிர்களைப் பாழாக்கும் பூச்சிகளை ஒழிப்பதற்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-45)

அதற்காக நெற்பயிரை அழிக்கும் பூச்சிகளைக் கட்டுப்படுத்துவதற்கு ஒரு விசேஷ திட்டத்தை இந்திய விவசாய ஆராய்ச்சிக் கழகம் அனுமதித்திருப்பதாக துணை வேந்தர் திரு. இராஜகோபாலன் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அவர்கள் ஒரு கருத்தரங்கை அறிஞர்களை எல்லாம் கொண்டு ஏற்பாடு செய்திருப்பதால் அதன்மூலம் நல்ல கருத்துக்களும், பயனுள்ள ஆலோசனைகளும் பெறுவார்கள் என்று நான் கருதுகிறேன். அதோடு இன்று விவசாயத்தில் நாம் பூச்சி மருந்துகளை நிறையப் பயன்படுத்துகிறோம். சில கனிகளை நாம் வாங்கிச் சுவைக்கும்போது, அந்தப் பூச்சிகள் சாப்பிடும் மருந்தை முதலிலே நாம் சாப்பிட வேண்டியிருக்கிறது. சில காய்கறிகளைச் சுவைக்கும்போது, நாம்தான் அந்தப் பூச்சிகளாக மாறியிருக்கிறோமோ என்ற சந்தேகம் எழுகின்ற அளவுக்கு அதை அதிகமாகப் பயன்படுத்துகிறார்களோ என்ற அளவில் 'இந்து' பத்திரிகையில் ஒரு எடிட்டோரியல் எழுதி

யிருந்தார்கள். அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்

A study found in certain samples of fruits, vegetables and milk, the pesticide residues were above the tolerant limits prescribed by F.A.O. and W.H.O. In Karnataka there was an attack of paralysis.

அதாவது நிலங்களிலே பயன்படுத்துகிற மருந்து வகைகளை அதிகமாகப் பயன்படுத்துவதாலே வருகிற விளைவுகளை நாம் கொஞ்சம் எச்சரிக்கையோடு கவனிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இப்போது இருக்கிற விவசாயத் துறையினுடைய நிலையிலே, நம்முடைய நோக்கங்கள் தெளிவாக இருக்க வேண்டும். டாக்டர் சுவாமிநாதன் அண்மையிலே ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். அவர்கள் சொல்கிறபோது, நம்முடைய முயற்சிகள் பரவலாக இருக்க வேண்டுமென்றும், வாட்டர் மேனேஜ்மென்ட் என்பதைப் போன்ற நவீன எண்ணங்களிலே நாம் கருத்தைச் செலுத்த வேண்டுமென்றும் கருத்துத் தெரிவித்தார்கள். சிறு விவசாயிகள் யார் என்பதைப்பற்றி நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். . அதற்குப் பலர் பலவிதமான தகுதிகளைச் சொல்கிறார்கள். தமிழக அரசைப் பொறுத்தமட்டில், 2½ ஏக்கர் நஞ்சை, 5 ஏக்கர் புஞ்சை வைத்திருந்தால், அவன் சிறு விவசாயி. ரிசர்வ் பாங்கைப் பொறுத்தமட்டில், 5 ஏக்கர் நஞ்சை அல்லது புஞ்சை இருந்தால், அவன் சிறு விவசாயி. ஐ.ஆர்.டி.பி.-ஐப் பொறுத்தமட்டில், 2.5 ஏக்கர் நஞ்சை அல்லது புஞ்சை இருந்தால், அவன் சிறு விவசாயி. ஏ.ஆர்.டி.சி.-ஐப் பொறுத்தமட்டில், அவர்கள் வேறு நிலையில் கணக்கிடுகிறார்கள். நம்முடைய கூட்டுறவு சங்கங்கள் ரிசர்வ் பாங்கினுடைய கணக்கை ஏற்றுக் கொள்கிறார்கள். அதனாலே இதற்கெல்லாம் ஒட்டுமொத்தமாக, சிறு விவசாயி யார் என்பதை அகில இந்திய அளவிலே ஒரு எடைபோட்டுக்கொள்வது நல்லது என்று நான் கருதுகிறேன்.

அடுத்து, டீ பயிரை கொடைக்கானல், ஏற்காடு போன்ற பகுதிகளிலே பயிரிடுகிற முயற்சியை நான் வரவேற்கிறேன். அதே நேரத்திலே அதற்கு ஏற்ற இடமாக இருக்கிற நீலகிரியையும் கொஞ்சம் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அங்கே உருளைக்கிழங்கு பயிர் செய்து, அது நீலகிரியினுடைய மலையை தோல் உரித்ததைப் போல், அடிக்கடி அந்த மண்ணைச் சுரண்டிச் சுரண்டி, மண் வளமை இழப்போடு, மழை பெய்கிறபோது மலைச் சரிவுகளில் பெரும் பாதிப்பும் ஏற்படுகின்ற காரணத்தாலே, மாற்றாக "தேயிலைப் பயிருக்கு அதிகம் போங்கள்" என்று வற்புறுத்தப்பட்டது. ஆனால் ஒரு ஏக்கர் அளவிலே ஒருவன் தேயிலைப் பயிருக்குப் போவானானால், 10 ஆயிரம்.





15 ஆயிரம் ரூபாயை முதலீடு செய்ய வேண்டும். அதற்காக ஒரு வழிவகை இருந்தாலொழிய, அவன் மாற்றுப் பயிருக்குப் போக முடியாது. திரும்பத் திரும்ப அந்த உருளைக்கிழங்கு பயிருக்குப் போய், உடல் அரிப்பைப் போல அது மண் அரிப்புக்கு வழி வகுக்கும் என்பதைக் கருத்திலே கொண்டு அதைச் செய்ய வேண்டும். அப்படியானாலும்கூட அவர்களுக்கு ஒரு சிரமம் இருக்கிறது. என்னவென்றால், இரண்டு மாதங்களுக்கு முன்பு டீ விலை உயர்ந்து மிக்க மகிழ்ச்சியோடு அவர்கள் இருந்தார்கள். இப்போது இரண்டு ரூபாய்கூட கிடைக்காத வகையிலே சோர்ந்து போயிருக்கிறார்கள். இவர்களை கோத்தகிரி போன்ற பகுதிகளிலே பார்க்கலாம். டீ விலை ஏறினால் வீதிகளிலே ஜீப்புகளாக ஓடிக் கொண்டிருக்கும்; இறங்கினால் வீதியிலே நடையாக நடப்பார்கள். அந்த அளவு ஆண்டுக்காண்டு சோதனைக்கு அவர்கள் ஆட்படுத்தப்படுகிறார்கள் என்பதைக் கருதி, விலை நிர்ணயம் அவர்களுக்குச் சீராக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதைப்பற்றிக்கூட இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள்.

The trouble in Sri Lanka has also helped the country to improve the foreign market. என்று ஸ்ரீலங்காவிலே இருக்கிற, தேயிலைத் தோட்டங்களிலே இருக்கிற சிரமங்கள் தமிழ்நாட்டிலே இருக்கிற, இந்தியாவிலே இருக்கிற தேயிலைகளுக்கு ஒரு வழி தந்திருக்கின்றன என்று சொன்னார்கள். ஆனால் அவர்கள் செய்வது இதைவிட அதிகம். ஸ்ரீலங்காவிலே இருக்கிற அரசினுடைய மன நிலையை ஒரு உதாரணமாகக் கொள்ளலாம். நீலகிரிக்கு என்று உலகம் எல்லாம் புகழ் பெற்ற நீலகிரி டீயை நம்முடைய நீலகிரியிலே தயார் செய்து கொண்டிருந்தால், அவர்களும் ஒரு டீயைத் தயார் செய்து அதிலே நீலகிரி டீ என்று முத்திரை குத்தி அதை உலகம் எல்லாம் அனுப்பி நம்முடைய டீக்கு இப்படி ஒரு போட்டியை ஒரு அரசாங்கமே—பல தவறுகளையும் செய்து கொண்டிருக்கிறது போல இந்தத் தவறையும் செய்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

கரும்பைப் பொறுத்தவரையில், தமிழகத்திலே, இந்தியாவிலே ஒரு முதன்மை பெறுகிற நிலைமையும், இன்னும் பல ஆலைகள் உருவாகுகின்ற நிலைமையும் வந்து கொண்டிருக்கிற நேரத்தில் அவர்களுக்கு கூடுதலாகப் பணம் வழங்குவதற்கு, நிர்ணயிப்பதற்கு அரசு முடிவு செய்திருப்பதாக நான் அறிகிறேன். அதைச் செய்து அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும். காரணம் இப்போது இடு பொருள்களின் விலை அதிகமாகி, கொள்முதல் விலை குறைந்து கொண்டு வருவதால், கரும்புச் சத்து அளவு குறையும் அபாயம் ஏற்படும் என்று கணித்திருக்கிறார்கள்.

[டாக்டர் இரா. சனார்த்தனம்] [1985 ஜூன் 28

(முற்பகல் 11-50)

அடுத்து, விவசாய உற்பத்திப் பொருள்களைப் பாதுகாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியது மிகவும் முக்கியமான ஒன்றாகும். காரணம் உற்பத்தியாவதே ஒரு சிறப்பு. அப்படி உற்பத்தியை அதிகரித்து பொருளை விளைவித்த பிறகு, அதைப் பாதுகாப்பதற்கான முயற்சியை நாம் மேற்கொள்ளாவிட்டால், பூச்சி போன்ற இடையூறுகளிலிருந்து காப்பாற்ற வேண்டும். இத்தனைக்கும் பிறகு விளை பொருள்களை நாம் எப்படியாவது காப்பாற்றியாக வேண்டும். அதாவது "Paddy bags spilled over the roadside due to lack of storage space.".

இப்படி வேறு ஒரு பகுதியில் வைக்க வேண்டிய கட்டாயம் வந்தது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். உணவுப் பொருள்களை மிகவும் பாதுகாப்பாக வைத்துக் காப்பாற்றுவதற்கான வழிவகைகளை இன்னும் அதிகமாகக் காண வேண்டும். அப்படி முறையாகப் பாதுகாக்கவில்லை என்றால், மிகுந்த இழப்புக்கு நாம் ஆளாகக்கூடும். ஏற்கெனவே நம் உற்பத்தியில் பத்தில் ஒரு பாகத்தை எலி சாப்பிடுவதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். எனவே அதிலிருந்தும் நாம் விளைபொருளைக் காப்பாற்ற வேண்டும்.

அடுத்து, தமிழகத்தில் உணவு உற்பத்தியைப் பெருக்கி இருப்பதற்காக மத்திய அமைச்சர் மக்வானா அவர்கள் தமிழகத்தைப் பாராட்டியிருக்கிறார்கள். நாம் 50 சதவீதம் நெல் உற்பத்தி செய்கிற சிறப்பைப் பாராட்டியிருக்கிறார்கள்.

Tamil Nadu was very lucky to have about 50 per cent of its land under irrigation which was 10 per cent more than the national average. என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதோடு பொதுவாக நாட்டின் நிலையை நினைத்துப் பார்க்கிறபோது, மற்றொன்றையும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதாவது

"On the necessity to take action on the food front, the Minister said that for about 70 crore population, they produce 15 crore tons of foodgrains per year now. By the end of the century their population would have shot upto 100 crores when their requirements would rise to 23 crore tons.".



1985 ஜூன் 28] [டாக்டர் இரா. சனார்த்தனம்]

என்று எதிர்காலத்தைப்பற்றி கணித்திருக்கிறார்கள். அதனால் நாம் தன்னிறைவு பெறுவதற்கும் எதிர்காலத் தேவையை ஆராய்ந்து உற்பத்தியைப் பெருக்குகிற மகத்தான பணியில் ஈடுபட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, விதைப் பெருக்குத் திட்டம் என்ற வகையில் வேளாண்மைப் பல்கலைக் கழகம் நல்ல விதையை விவசாயிகளுக்குத் தருகிற முயற்சியைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அவ்வாறு தரப்படும் விதைகள் பாதிப்பு இல்லாத விதைகள்தானா என்றும் நாம் பரிசோதிக்க வேண்டும். 'சீட் டிரீட்மென்ட்' செய்யப்பட வேண்டும். நல்ல முறையில் விளைந்தது என்பது மட்டும் போதாது. நாம் தருகிற விதை வீரியப் பொருள் கொண்டது தானா என்பதையும் அதன் மூலம் மஞ்சள் நோயைத் தடுக்க முடியுமா என்றும் பார்க்க வேண்டும்.

அடுத்து, ஸ்டேட் சீட் பார்ம்களில் இருக்கிற விதைகள் தரமாக இருக்கின்றனவா என்பதை பிளாண்ட் புரொடெக்ஷன் அதிகாரிகள் சென்று பார்த்து தரத்தைக் கண்காணிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் விதை விநியோகம் சீராக நடைபெறுகிறதா என்பதையும் அனைத்து விவசாயிகளும் விதை பெற முடிகிறதா என்பதையும் நாம் கண்காணிக்க வேண்டும். தமிழகத்தில் மிக முக்கியமான கடலை விதையைப் பற்றியும் நாம் கண்காணிக்க வேண்டும். அடுத்து, ஆயில் பார்ம் என்பது மலேசியா போன்ற நாடுகளில் மிகப் பெரிய வருவாயைத் தேடிக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. தமிழகத்தில் அதிக ஆயில் உற்பத்தியை உருவாக்க முடியுமா என்று ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட வேண்டும். இங்கே நிறைய கடல் பகுதி இருக்கிறது. எனவே நிறைய தென்னை பயிரிட சாத்தியமுள்ளது. கேரளத்தில் அதிகமான இடத்தில் தென்னையைப் பயிரிட்டாலும், அதைக் காட்டிலும் குறைந்த இடத்தில் நாம் தென்னையைப் பயிரிடுகிறோம் என்றாலும், ஒரு மரத்திற்கு கேரளத்தில் 40 காய் விளைகிறது என்றால், இங்கே 100 காய் விளைகிறது என்கிற நிலையைப் பார்க்கிறோம். எனவே இங்கே ஆயில் பார்ம் என்பது மிகச் சிறப்பாக உருவாக்கப்பட முடியும். இந்தியாவைப் பொறுத்தமட்டில், சமையல் எண்ணெய் இறக்குமதிக்காக ஆயிரம் கோடி ரூபாய் செலவு செய்கிறோம். அப்படி இருக்கும்போது, ஆயில் பார்ம் அமைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டால், தற்போது செலவாகும் அன்னிய செலாவணியை நாம் மிச்சப்படுத்தலாம். 3,000 கோடி, 4,000 கோடி ரூபாய் உலக வங்கியிடமிருந்து கடன் வாங்கிவிட்டு அவர்கள்

எப்போது கழுத்தைப் பிடிப்பார்களோ என்ற நிலை இருக்கும் இந்த நேரத்தில் அதிலும் குறிப்பாக இறக்குமதிக் கொள்கை தளர்த்தப்பட்ட இந்த நேரத்தில் நம் எதிர்கால நிலையைக் கருத்தில் கொண்டு ஏற்றுமதிக்கான பொருள்களின் உற்பத்திக்கு அதிக வாய்ப்பு வசதிகளைச் செய்து தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பயிர் பாதுகாப்புக்காகத் தேவைப்படும் மருந்துகளை நாம் கிடங்குகளில் வைத்திருந்து விவசாயிகளுக்குக் கொடுக்கிறோம். இந்த மருந்து எப்படி வைத்துப் பாதுகாக்கப்படுகிறது என்பதையும் நாம் கண் காணிக்க வேண்டும். காரணம் மனிதர்கள் சாப்பிடுகிற மருந்துகளுக்கு ஒரு காலாவதி தேதி இருப்பதைப் போல், இத்தகைய பயிர் பாதுகாப்பு மருந்து களுக்கும் இருக்க வேண்டும். அவைகளைக் காலம் கடந்து விவசாயிகளுக்குக் கொடுப்பதால், விவசாயிகளுக்கும் அதனால் லாபம் இல்லை. நமக்கும் அதிக மாக நட்டம் ஏற்படுகிறது. எனவே காலம் கடந்து போன பயிர் பாதுகாப்பு மருந்துகளைப் பயன்படுத்தாமல் இருப்பதற்கு முயற்சிகளை மேற்கொள்ள முடியுமா என்றும் பார்க்க வேண்டும்.

அடுத்து, தரக் கட்டுப்பாடு பணிகளைச் செம்மைப்படுத்த உர ஆய்வு கலப்பெட்டிகள் வழங்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதன் அவசியம் எனக்குப் புரியவில்லை. நல்ல ஒரு காரியம் என்ற முறையில், பயிர் பாதுகாப்புக்கு உள்ளதைப் போலவே மருந்துகளுக்கும் அப்படி ஏதாவது செய்ய வழிவகை இருக்கிறதா என்பதை நான் அறிந்துகொள்ள விரும்பு கிறேன்

(முற்பகல் 11-55)

விவசாயத் துறையைப் பொறுத்தவரையில், கோவையில் உள்ள பல்கலைக் கழகத்திலிருந்து ஆண்டுக்காண்டு 200 பட்டதாரிகளும், வேறு பகுதிகளில் இருந்து வருகிறவர்களையும் சேர்த்துக் கணக்கிட்டால், தமிழகத்திலே ஆயிரம் பட்டதாரிகள் உருவானாலும், 90 சதவீதம் பேர் ஆராய்ச்சிப் பணி களிலும், வங்கிப் பணிகளிலும் இருக்கின்ற நிலை இருக்கிறது. எக்ஸ்டென்ஷன் சைடில் அதிகம் பேர் வராத காரணத்தால், விவசாயிகளுக்கு படித்த இளைஞர்களின் அறிவு போய்ச் சேரவில்லை என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இவர்களை ஊக்கப்படுத்தி விவசாயப் பட்டதாரிகளுக்கு அதிக ஊதியங்கள் கொடுத்து வங்கிகளைக் காட்டிலும் நம்மிடம் வரக்கூடிய அளவிற்கு அரசாங்கம் வசதி செய்து கொடுக்க முடியுமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். பல்கலைக் கழகத்தின் மூலமாக தரமான விதைகளைத்



தருகிறோம். பயிர் பாதுகாப்பு தருகிறோம். நிலத்தைப் பரிசோதனை செய் கிறோம். உரத்தைப் பரிசோதனை செய்கிறோம். விவசாயிகளுக்குக் குறுகிய காலப் பயிற்சிக்கான வகுப்புகளை நடத்துகிறோம்.

மாற்றுத் தலைவர் (திரு. வி. வி. வி. ஆனந்தம்): இன்னும் ஐந்து பேர் பேசியிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் பிறகு பதிலுரை தரவிருக்கிறார் கள். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் தன்னுடைய பேச்சை கூடிய விரைவில் முடித்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

டாக்டர் இரா. சனார்த்தனம்: எந்த அளவிற்கு நாம் நம்முடைய இலக்கை எட்டியிருக்கிறோம் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். காய் கறிகளைப் பொறுத்த வரையில், உற்பத்தி செய்ய வேண்டும் என்பதில் ஊக்கம் தருவதோடு விற்பனைக்கும் வழிவகை காண வேண்டும். சூப்பர் மார்க்கெட் எல்லா இடங்களிலும் இருக்கிறது. அங்கே காய்கறிக் கடை இருக்கிறது. நீலகிரியில் காய்கறி விளைகிறது. அதை நாம் பெற்று பல பகுதிகளுக்கு அனுப்புகிற முறையைக் கையாண்டால் நல்லது. பல்வேறு பகுதிகளில் காய்கறி வளர்க்க முடியும். வீடுகளில் தோட்டம் என்கிறார்கள். வீடுகளில் பயிரிடப்படுகிறது என்று சொல்கிறார்கள். என் வீட்டிற்கு வந்து காய்கறிகளைப் போடுகிறீர்களா என்று யாரும் கேட்கவில்லை. பரவலாக நகர்ப்புற வீடுகளிலும், ஊக்கம் தர வேண்டும். கல்விக் கூடங்களும் செய்யலாம்.

ஸ்டோரேஜ் என்பது ஏதோ குளிர் அறையில் பழங்களை வைத்து அடைப்பது என்பதல்ல. பழங்களை அழுகாமல் பாதுகாக்க வேண்டும். வெளிநாடுகளில் எப்படி பாதுகாக்கிறார்கள் என்று பார்க்க வேண்டும். அதை ஆராய்ந்து கையாள வேண்டும். வெளி நாடுகளில் உள்ளேயுள்ள பழங்களில் ஒரு பூச்சி இருந்தால்கூட, அதைத் தூக்கியெறிவார்கள். நம்முடைய நாட்டில் அப்படியே வைத்துக்கொள்வார்கள். ஆகவே ஸ்டோரேஜ் என்பது அடைத்து வைப்பது என்பது மட்டுமல்ல. ஸ்டோரேஜில் கவனம் செலுத்த வேண்டும்.

தென்னையைப் பொறுத்த வரையில், 'நெபாண்டிஸ்' என்ற நோய் பெரிய அளவில் பாதித்திருக்கிறது. இந்த நோய் எங்கேயிருந்து வந்தது என்ற ஆராய்ச்சி வந்தது. பிலிப்பைன்ஸ் நாட்டிலிருந்து வந்தது என்றார்கள். பிறகு ஆந்திராவிலிருந்து வந்தது என்றார்கள். இதிலே நாம் கவனிக்க வேண்டும். வெளிநாடுகளில் போகும்போது நாம் இங்கேயிருந்து பழங் களைக் கொண்டு போகக்கூடாது என்ற கட்டுப்பாடு இருக்கிறது. அதைப்

போலவே நாமும் எந்த மாநிலத்திலிருந்து இந்த வியாதி வருகிறதோ அது வராமல் தடுக்க ஏதாவது செய்ய முடியுமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயப் பல்கலைக் கழகத்திலுள்ள உதவிப் பேராசிரியர்களுக்கு அடிப்படைச் சம்பளம் 1,100 என்ற அளவில் இருக்க வேண்டும் என்ற வேண்டுகோளை இந்த அரசு பரிவுடன், கனிவுடன் கவனிக்கும் என்று கருதுகிறேன். அவர்கள்பால் அன்புள்ளம் கொண்ட அமைச்சர் அவர்கள் நிச்சயம் அவர்களுடைய வேண்டுகோளை நிறைவேற்றுவார்கள் என்று நினைக்கிறேன். நான்காவது ஊதியக் குழுவில் தமிழக அரசு வாரி வழங்கியிருக்கிறது. யூ.ஜி.சி. தன்னுடைய முடிவைத் தராத நிலையில் அந்த முடிவை அறிந்து நல்லாசிரியர்களை உருவாக்கும் வகையில், உயர்ந்த நிலையில் அவர்கள் வருவதற்குரிய சம்பள விகிதங்களை செயல் படுத்த வேண்டும். யூ.ஜி.சி. என்று சொல்லும்போது, தென் மாநிலங்கள் அளவில் யூ.ஜி.சி. வைத்துக்கொண்டு செயல்பட முடியுமா என்ற கருத்தை கர்நாடகா கல்வியமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அதையெல்லாம் நாம் எண்ணிப்பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

குறிப்பாக நம்முடைய விவசாயிகளுடைய மறுமலர்ச்சி என்பது, நவீனப்படுத்துதல் நம்மிடம் எப்படி இருக்கிறது என்பதைப் பொறுத்திருக்கிறது. காரணம் எவ்வளவோ திட்டங்களை நாம் அமைத்தாலும், நம்மிடம் இருப்பதைக் கொண்டுதான் செயல்படுத்த முடியும். நாம் பெறுகிற நிதியைக் கொண்டுதான் பயன் அடைய முடியும். ஆகவே அரசு எப்படி சீராக்குவது, உள்ள நிலையை எப்படிப் பயன்படுத்துவது என்றால், உற்பத்தியைப் பெருக்குவதுதான். மற்றும் பயிர்களை புதிய பூச்சிகள் தாக்குவது இல்லாத நிலையை உருவாக்க போதிய கவனம் செலுத்த வேண்டும். இந்தச் சூழ்நிலையில் பேசுகின்றபோது, ஸ்ரீலங்கா தமிழர் பிரச்சினை பாட்டன் பூட்டன் காலத்திலேயுள்ள துன்பம் என்பதால் பூட்டானில் உள்ள திம்புவில் கூட நல்ல முடிவு காண வேண்டும் என்று தெரிவித்து, விவசாயத் துறையில் தமிழகம் முன்னணியில் உள்ளது என்ற பெருமையை எண்ணி பூரித்து அமைகிறேன்.

(நண்பகல் 12-00)

**திரு. ப. மாணிக்கம்:** மாண்புமிகு மேலவை மாற்றுத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறைக் கொள்கை சம்பந்தமான பல்வேறு முக்கியப் பிரச்சினைகளை இங்கே தெரிவித்துக் கொண்டிருந்தாலும், சென்ற ஆண்டிலேயும் அதற்கு முன்னாலும் ஏற்பட்ட சில பிரச்சினைகள் மீது கவனம் செலுத்தவில்லை. கவனக் குறைவு ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.



குறிப்பாக தமிழகத்திலே, பெயர் பெற்றது மலை வாழை. சிறு மலையிலே, இன்னும் அதையொட்டிய பல வட்டாரங்களிலும் கோடைக்கானல் வட்டாரத்தில், பண்ணைக்காடு பகுதியிலும் அது அறவே அழிந்துவிட்டது. இப்போது நம்முடைய விவசாயத் துறை கல்லாயன் மலைப்பகுதியிலே நோயற்ற கன்றுகளை விளைவித்து, அத்தகைய வாழையை உற்பத்தி செய்ய முயற்சிப்பதாகத் தகவல். இந்த வாழை அழிந்துவிட்டது என்பது மட்டுமல்ல, தமிழகத்திலே ஒரு முக்கியமான பொருளாக மலைவாழை இருக்கின்றது. அந்த நோயைத் தீர்ப்பதற்கு விவசாயப் பல்கலைக்கழகம் ஆராய்ச்சியெல்லாம் செய்திருக்கின்றது. இந்த நோயை அகற்றச்செய்த முயற்சிகள் அனைத்தும் தோற்றுவிட்டன. அது ஒரு முக்கியமான பயிர். முக்கியமாக மலை வாழ் பகுதி விவசாயிகளுக்கு வாழ்வைத் தந்து வந்த பயிர். அது அழிந்துவிட்டது வேதனைக்குரியது. அந்தப் பயிருக்கு வந்துள்ள நோய் 'குடிகொத்து' நோய் என்று குறிப்பிடுகின்றார்கள். அந்த நோய் வந்தபோது ஆராய்ச்சித் துறையிலே நாம் ஏன் அதற்குரிய கவனம் செலுத்தவில்லை? ஏன் செய்யவில்லை என்பதைவிட, ஏன் செய்ய முடியவில்லை என்று தான் கேட்கிறேன். ஏன் செய்ய முடியாமல் போய்விட்டது? விவசாயத் துறையில் விஞ்ஞானிகள் இருந்தபோதிலும், ஏன் தவறிவிட்டது என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதுமட்டுமல்ல. விவசாயத் துறையிலே கல்லூரி இருக்கின்றது. ஆராய்ச்சிக்காக நாம் நிறைய செலவு செய்ய வேண்டும். இதற்காக நிதியை அதிகமாகக் கூட்டலாம், வருங்காலத்திலாவது செய்யலாம். பல பயிர்களுக்கு நோய் வரக்கூடிய ஆபத்து இருக்கிறது. நெல்லுக்கு 'புகையான்' என்று ஒரு நோய் வந்திருக்கிறது. இதனாலே தஞ்சை மாவட்டத்திலே விளைந்த பயிர் பாழாகியிருக்கின்றது. பால் வைக்கின்ற நேரத்திலே அந்தப் பூச்சி ஏறியிருக்கின்றது. அதிலே 2 ஏக்கர், 3 ஏக்கர் அளவுக்குக்கூட அழிந்துவிடுகின்றது. விளைந்த பயிர், கதிர் சாய்ந்துவிடும். பல இடங்களிலே பரிதாபமாக இருக்கின்றது. முளைத்து வருகின்ற நேரத்தில், சில நாட்களில் பயிர் காய்ந்து விடுகிறது. நெல் மணியிலே பூச்சி விழுந்து, பாலை உறிஞ்சிவிடுகிறது. இப்படிப்பட்ட நோய் இரண்டு ஆண்டுக்காலமாக இருக்கின்றது. பெரிய அளவிலே இருக்கின்றது. தஞ்சை மாவட்டத்திலே விவசாயிகள் பாதிக்கப்படுகின்றார்கள். இது அசலுக்கே மோசமாகின்றது. அந்த நிலைமைக்கு வந்துவிடுகிறது. அதுவும்கூட பல பேர்கள் யோசனை சொன்னார்கள். தஞ்சை மாவட்டத்தில், இராமநாதபுரம் மாவட்டத்தில் விவசாயிகள் தாங்களாகவே எல்லாச் சொந்த முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களே பல்வேறு முயற்சிகளைச் செய்திருக்கின்றார்கள். அந்த நிலைமைகளைப்பற்றி நாம் கேட்டாலே இந்த விவசாயி

கள் பயிரைக் காப்பாற்ற பட்டபடும் பாடு நமக்குத் தெரிகிறது. இதெல்லாம் இருந்தும் கூட, நம்முடைய விவசாயத் துறையிலே அதற்காக உள்ள அதிகாரிகள் கொடுத்த மருந்துகளும் பலன் அற்றுப்போய்விட்டன. நெல்லுக்கு புகையான் நோய். மணிலா பயிருக்கும் நோய் வந்தது. அதுவும்கூட மருந்துகள் தூவப்பட்டும் பலன் இல்லாமல் போயிற்று. மணிலாவைப் பொறுத்தவரையில், தமிழ் நாட்டில் உற்பத்தியாகும் இடம் தென் ஆற்காடு மாவட்டம், தர்மபுரி மாவட்டம் போன்ற மாவட்டங்கள். அந்த மாவட்டங்களிலே ஒரு முக்கியமான பயிர் மணிலா பயிர். அதற்கு வந்த நோய்களைத் தீர்க்க கொடுத்த மருந்துகளும் பலனற்றுப்போயிற்று. நெல், மணிலா, அதுபோன்று

(பிற்பகல் 12-05)

மலை வாழை. நம்முடைய விவசாய ஆராய்ச்சித் துறை இருக்கிறது, விவசாயக் கல்லூரிகள் இருக்கின்றன. இப்படிப்பட்ட நோய்கள் வரும்போது, இதற்கென்று 'க்ராஷ் ப்ரோக்ராம்' என்ற முறையிலே ஸ்பெஷல் ஸ்குவார்ட் போட்டுச் செய்ய வேண்டும். பல்வேறு நாடுகளிலே இந்த மாதிரி விளைச்சலுக்கு நஷ்டம் வரும்போது செய்கிறார்கள். விவசாயி உழைத்து, பலன் காணும்போது, அவை அழிந்து போய்விடுகின்றன. அங்கேயெல்லாம் அப்படிப்பட்ட நிலையிலே விசேட அக்கறை செலுத்துகிறார்கள். தமிழ் நாட்டிலே, நடைமுறையிலே 'ரொட்டீன் மெதட்ஸ்' என்ற முறையிலே சில காரியங்களைச் செய்கிறோம். அது பலனளிக்காமல் இருக்கிறது. அதனால் மலை வாழை, நெல், மணிலாப் பயிர் ஆகியவற்றுக்கு வரும் நோய்கள் சம்பந்தமாக விவசாயப் பல்கலைக் கழக ஆராய்ச்சித் துறை அதிக கவனம் செலுத்த வேண்டும். இன்றைக்கு அந்த நோய்கள் மறைந்துவிடவில்லை. மீண்டும் புகையான் நோய் தாக்கும் நிலைதான் இருக்கிறது. இது தஞ்சை மாவட்டத்தில் பெரிய அளவுக்கு இருக்கிறது. அதற்குப் பல காரணங்கள் சொல்லுகிறார்கள். நிறைய லீவ்ஸ் இருந்தால், வராது என்று சொல்லுகிறார்கள். லீவ்ஸ் குறைந்தால் வருமென்று சொல்லுகிறார்கள். வெறும் சொந்த அனுபவம் மூட அனுபவம் என்று சொல்லுகிறார்கள். விஞ்ஞானிகள் சொல்ல வேண்டும். விவசாயிகள் அனுபவத்தை மட்டும் பார்க்காமல், வேறு காரணங்கள் இருக்கின்றனவா என்று பார்க்க வேண்டும். அப்படிப் பார்த்து, இந்த நோய்களைத் தீர்க்க வேண்டும். இதை முதல் காரியமாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு கரும்பு உற்பத்தியிலே முதல் இடம் வகிக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் அவர்கள் பாராட்டினார்கள். நெல்லிலே இரண்டாவது இடம். இதெல்லாம் பாராட்டப்பட வேண்டிய அம்சங்





கள். எங்கே குறை இருக்கிறது என்பதையும், அபிவிருத்திக்குக் கொண்டு வர வேண்டுமென்பதையும் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர வேண்டிய கடமை இருப்பதால், நம்முடைய அவையிலே இவற்றைச் சொல்ல வேண்டியிருக்கிறது.

இதிலே இரண்டாவது அம்சம். தஞ்சையிலே விவசாயம் என்பது 3,000 ஆண்டுகளாக நடக்கிறது. காவிரி டெல்டாவிலே நெல் விவசாயம் பல்லாண்டுக் காலமாக நடந்து வருகிறது. உலகத்திலேயே பழமையான நெல் விவசாயம் நடக்கும் பகுதி அது. அங்கே விளைச்சல் குறைவாகத்தான் இருக்கிறது. திருநெல்வேலி மாவட்டத்தில், மதுரை மாவட்டத்தில், மற்ற ஆற்றுப் பாசனம் உள்ள இடங்களில் உள்ள விளைச்சலைவிட காவிரிப் பாசனத்தில் குறைவாக இருக்கிறது. குறிப்பாக கீழ் பகுதியில் மிகக் குறைவு. மணலிலும், பாசன முறையிலும் குறைபாடுகள் இருக்கின்றன. அங்கே ஒரு விவசாயக் கல்லூரி இல்லை. பக்கத்திலே, சிதம்பரத்திலே இருக்கிறது. அதை விட்டால், மதுரையிலே இருக்கிறது. பல்வேறு காரணங்களால் அப்படி இடம் அமைகிறது. நவீன அரசியலிலே, நவீன வாழ்க்கையிலே சில கல்லூரிகள், சில இடங்களில் அமைகிறது என்பது வாஸ்தவம்தான். கடைசியாகச் சென்ற ஆண்டு கூட ஒரு கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. திருநெல்வேலி மாவட்டத்திலே, கிள்ளி குளத்திலே விவசாயக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. நல்லதுதான். நம்முடைய தமிழ் நாட்டிலே உள்ள தேவைக்கு நான்காவது கல்லூரி என்றாலும், அது அதிகமில்லை. எனவே தஞ்சை மாவட்டத்தில் ஒரு கல்லூரி ஆரம்பிக்க அரசு முயற்சிக்க வேண்டுமென்று

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு நம்முடைய தமிழ் நாட்டிலே எண்ணெய் வித்துக்கள் என்ற பெயரில் உள்ளதில், முதலிலே மணிலாப் பயிறு பற்றி எடுத்துக் கொள்கிறேன். மணிலாப் பயிறு, தேங்காய், எள், சூரிய காந்தி, சோயா பீன்ஸ் இவைகள் எல்லாம் இதிலே வருகின்றன. குறிப்பாக மணிலாப் பயறும், சோயா பீன்ஸும் ஒரு சப்ளிமெண்டரி டையட்டாக இருக்கிறது. உணவுப் பொருளாகவும் பயன்படுகிறது. கர்நாடகாவில் சோயா பீன்சைப் பயன்படுத்தி புதிய உணவுப் பண்டங்களை தயாரித்திருக்கிறார்கள். அது மீல் மேக்கராக இருக்கிறது. எனவே சோயா பீன்ஸ் உற்பத்தியை விஸ்தரிக்க முடியுமா என்று பார்க்க வேண்டும். சில இடங்களில் அதற்கான வாய்ப்பு இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். நம்முடைய வேளாண் துறையிலே அதை ஒரு உணவுப் பொருளாகக் கொண்டு வருவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. எனவே சோயா பீன்ஸ் உற்பத்தியைப் பெருக்க வேண்டும். குறிப்

பாக வேர்க்கடலை என்பது எண்ணெய் வித்தாக மட்டுமல்ல, சமீப காலத்தில் போக்கு என்னவென்றால், அது உணவுப் பொருளாக பல்வேறு விதங்களில் பயன்படுத்தப்படுகிறது, சப்ளிமெண்டரி டையட்டாகப் பயன்படுத்தப் படுகிறது.

(பிற்பகல் 12-10)

இன்னும் சொல்லப்போனால் வேலூர் போன்ற இடங்களில் இருக்கிற மருத்துவ மனைகளில் ஏழையெளியவர்களுக்கு இதனை ஒரு புரோட்டீன் டையட் என்கிற முறையில் கொடுக்கிறார்கள். முன்பு டையட்டாக புரோட்டீன் மாத்திரையைக் கொடுத்தது நமக்கெல்லாம் தெரியும். அந்த வகையில் வேர்க் கடலையை மக்கள் அதிகமாகப் பயன்படுத்தும் வகையில் நாம் முயற்சிக்கவேண்டும். தமிழ் நாட்டிலுள்ள மக்கள் அதிகமாக அரிசியைத்தான் சாப்பிடுகிறார்கள். இன்னும் ஜனப்பெருக்கம் அதிகமாகிக்கொண்டே இருந்தால், ஆடுமாடுகளைத்தான் அதிகமாகத் தேட வேண்டிய நிலை ஏற்படும். அப்படிப் பார்த்தால், இருக்கின்ற கால்நடைகள் போதாது. அந்த வகையில் மணிலா பயிர் மிக முக்கியமான ஒன்று. கடந்த இரண்டு ஆண்டுகளாக மணிலாப் பயிருக்கு நோய் வந்தது. இதில் அரசு கவனம் செலுத்தி இன்னும் அபிவிருத்தி செய்ய வேண்டும். கடந்த ஆண்டு விளைச்சல் சற்று குறைவாக இருந்தாலும், ஒரு சந்தர்ப்பத்தில் விலை அதிகமாக அவர்களுக்குக் கிடைத்தது. குறிப்பாக புஞ்சைப் பயிர் என்கிற நிலையில் இதனை தென்னாற்காடு, சேலம், தர்மபுரி, புதுக்கோட்டை போன்ற மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கலாம். தஞ்சையில் கூட இன்றைக்கு நெல்லுக்குப் பிறகு கடலை போடுகிறார்கள். மணிலா உற்பத்தியில் அரசு அதிக கவனம் செலுத்த வேண்டும். அரசே இதற்காக நாம் கொடுக்கின்ற விலை குறைவுதான் என்று ஒத்துக்கொள்கிறது. மணிலா பயிரிடப்படுகின்ற இடங்களை இன்னும் விஸ்தரிக்க வேண்டும், அதற்கு நோய் வராமல் தடுக்க முன் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

அடுத்து, பருத்தியைப் பொறுத்தவரையில், அது புஞ்சைப் பயிர். தமிழ் நாட்டுக்கு இது நவீன உண்மை அல்ல. உலகத்திலேயே பருத்தியின் தாயகம் தமிழகம்தான் என்று வரலாறே இருக்கிறது. இது உண்மை. அதனால் தான் பழைய காலத்திலே பஞ்சு இங்கிருந்து ரோமாபுரிக்குச் சென்றதாக நாம் படித்திருக்கிறோம். அந்த வகையில் அதற்கு 'காட்டன்' என்று பெயரிருக்கிறது. தமிழ் நாட்டிலிருந்து பல நாடுகளுக்கு விதைகள் எடுத்துச் செல்லப்பட்டிருக்கின்றன. குறிப்பாக மணிலா உற்பத்தியை எடுத்துக் கொண்டால், குஜராத், ஆந்திராவுக்கு அடுத்து வருவது தமிழ் நாடு. அது





போல் பருத்தி உற்பத்தியிலும் நாம் முன்னணியில் இருக்கிறோம். ஆனாலும் உற்பத்தியைப் பெருக்க முடியவில்லை. காரணம் விவசாயிகளுக்கு இதன் மூலம் நஷ்டம் ஏற்படுகிறது. சமீப காலமாக மத்திய அரசு புஞ்சை விவசாயத்தில் கவனம் செலுத்தி வருகிறது. ஆனால் தமிழக அரசு இதிலே அவ்வளவு கவனம் செலுத்தவில்லை. எவ்வளவு பகுதியை விஸ்தரிக்கலாம் என்கிற விவரத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அது போதாது. நான் சொல்கிறேன், இன்னும் கணிசமான அளவு விஸ்தரிக்கலாம். இது இரண்டாவது மிகப் பெரிய பயிர். சமீப கால போக்கைச் சுட்டிக் காட்டுகிறேன். விவசாயிகளுக்கு வருமானம் குறைவாக இருப்பதாலும், நோய் வந்து இப் பயிரைத் தாக்குவதாலும் அவர்களால் அதிகமாகப் பயிர் செய்ய முடியவில்லை. அதனால் தரிசாகப் போடுகிறார்கள். கடந்த 2 ஆண்டுகளாக திருநெல்வேலி, இராமநாதபுரம் போன்ற மாவட்டங்களில் வேலியில் போடுகின்ற முள்செடியைப் பயிரிடுகிறார்கள். 60 ஏக்கர் நிலம் ஒரு குடும்பத்திற்கு இருக்கிறது. அந்த நிலத்திற்குத் தண்ணீர் வசதி இல்லை. இருக்கின்ற தண்ணீரும் சவடு தண்ணீர். ஆகவே முள் செடி போட்டால் அதிகமாக வருமானம் வருகிறது என்று கேள்விப்பட்டு, அவர் 8 ஏக்கரில் முள் செடிக்கான விதையைப் போட்டார். இப்போது விவரம் தெரிந்தவர்கள் பலர் புஞ்சைப் பயிர்களைப் போட்டு கஷ்டப்படுவானேன் என்று எண்ணி வேலிச் செடிக்கான விதையைப் போட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

(பிற்பகல் 12-15)

அப்படி தேவகோட்டைப் பகுதியில் இருக்கிறது என்பதை நேரடியாக நான் அறிவேன். பருத்தி விவசாயம் செய்வதால், விவசாயிகளுக்கு அதிக நன்மை ஏற்படுவதில்லை என்பதால் புதிய 'டிரெண்ட்' வந்து வேலிக் கருவையைப் பயிரிட்டு அதிக லாபம் சம்பாதிக்கலாம் என்று நினைக்கக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. நமது மாநிலத்திற்கு போதிய அளவில் விறகு இருக்கிறதா என்பது வேறு பிரச்சினை. இராமநாதபுரம் மாவட்டத்தில் வேலிக் கருவையை நம்பி அதிகக் குடும்பங்கள் இருக்கின்றன. நாம் சமூகக் காடுகள் வளர்க்கிறோம். ஆனால் வேறு நிர்ப்பந்தங்களால் பருத்தி விவசாயம் குறைந்து, அந்த இடத்தில் வேலிக்கருவையைப் போட ஆரம்பித்திருப்பதை நாம் தடுக்க வேண்டும். பருத்தி சாகுபடி படிப்படியாகக் குறைந்துகொண்டு போவதை அரசு தடுத்து நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழ்நாட்டில் ஒரு முக்கியமான பயிர் பருத்தி. புஞ்சை விவசாயிகளைப்பற்றி இந்தக் கொள்கைக் குறிப்பில் சரியான தகவல்கள் அமையவில்லை என்பது என் கருத்து. வரக்கூடிய காலத்தில், புஞ்சைப் பயிர்களுக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும். அமைச்சருக்கு எவ்வளவு சிக்கல்கள் இருக்கின்றன

என்பது தெரியும். ஆனால் இன்றைக்கு மத்திய அரசு வறட்சிப் பகுதிகளுக்கு ரூ. 516 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறது என்று தெரிகிறது. எனவே அதைப் பயன்படுத்தி, புஞ்சைப் பகுதிகளில் விவசாய அபிவிருத்திக்கு அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தோட்டக்கலை சம்பந்தமாக ஒரு குறிப்பிட்ட விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். சேலம் மாவட்டத்திலும் தர்மபுரி மாவட்டத்திலும் ஆமணக்கு விதைகள் அதிகமாகப் பயிராகும் வாய்ப்பிருக்கிறது. வானாவாரி பூமி அது. ஆகவே இன்னும் அதை அபிவிருத்தி செய்யவும், அப்படி உற்பத்தி செய்த ஆமணக்கு விதைகளை நல்ல விலையில் கொள்முதல் செய்யவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படி நடவடிக்கை எடுத்தால், அங்கே பாதிக்கப்பட்டிருக்கிற விவசாயிகளைக் காப்பாற்ற முடியும்.

அடுத்ததாக, தோட்டக்கலைத் துறையில், போதுமான பயிற்சி பெற்ற, குறிப்பிட்ட அனுபவம், நல்ல படிப்பு வாய்ந்த அதிகாரிகள் குறைவாக இருப்பதைத் தவிர்க்க வேண்டும். எனது இந்த விவரங்களில் மாறுபாடு இருக்கக் கூடும். நான் நேரடியாக அறிந்த விவரம் இது. குறிப்பாக தர்மபுரி மாவட்டத்தில் இந்த நிலைமையைப் போக்க வேண்டும்.

தர்மபுரி, சேலத்துடன் இருந்தபோது, தர்மபுரி பகுதியில் மாம்பழம் நிறைய விளைந்து வந்தது. அதனால் சேலத்திற்குப் பெயர் வந்தது. அந்தப் பகுதிகள் இப்போது தர்மபுரியில் இருக்கின்றன. அங்கே அதிகமான பழத்தோட்டங்களை அபிவிருத்தி செய்ய வேண்டும். விவசாய வருமானம் குறைவாக உள்ள இடங்களில், பழத்தோட்டங்கள் அதிகமாக ஏற்படுத்த வேண்டும். அரசு அதில் தக்க கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தோட்டக் கலை வளர்ச்சிக்காக சேலம், தர்மபுரி மாவட்டம் மட்டுமல்லாமல், புதுக்கோட்டைப் பகுதியில் சிவப்பு மண் அதிகமாக இருப்பதால், அங்கும் தோட்டங்கள் போட தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நெல் விலையைப் பற்றி ஒரு வார்த்தை. சில ஆண்டுகளுக்கு முன்பு ஒரு குவிண்டால் நெல் 150 ரூபாய் விலையாக இருந்தது. இப்போது உற்பத்திச் செலவு அதிகம். பஞ்சாபில் நெல் உற்பத்திக்கு ஆகும் செலவுக்கும், நம் நாட்டில் நெல் உற்பத்திக்கு ஆகும் செலவுக்கும் அதிக வித்தியாசம் இருக்கிறது. அவர்கள் பூமிக்கு அதிக விளைச்சல் இருக்கிறது. லோக்கவிலேயே விற்றுவிடுகிறார்கள். அவர்கள் பெரும்பாலும் நெல்லை பணப்பயிராக விற்றுவிடுகிறார்கள். அவர்களுடைய செலவையும் கணக்கில் எடுத்துக்கொண்டு, அகில இந்திய அளவில் விலை நிர்ணயம் செய்கிறார்கள். ஏற்கெனவே நமது மாநில அரசு இதுகுறித்து மத்திய அரசுக்கு ஒரு விளக்க



மான மெமோரண்டமே கொடுத்திருக்கிறார்கள். இப்போதுகூட நம்முடைய மாநில அரசு நெல்லுக்கு விலை நிர்ணயம் செய்வதில், நம் மாநிலத்தில் உற்பத்திச் செலவை கணக்குப் பார்த்து, அதற்குத் தகுந்தவாறு மத்திய அரசுக்குச் சொல்வதிலும், வாதாடுவதிலும் கவனம் செலுத்த வேண்டும்.

(பிற்பகல் 12-20)

ஏனென்றால், உற்பத்திச் செலவு (Production Cost) ஆந்திரா, தமிழ் நாடு, பஞ்சாப், ஒரிசா மாநிலங்களில் ஒவ்வொன்றிலும் வெவ்வேறாக இருக்கிறது. மாறுபடுகிறது. அதனால்தான் நம்முடைய மாநிலத்தில் அகில இந்திய சராசரி என்று சொல்லி சராசரி நிர்ணயித்திருப்பது சரியல்ல. பஞ்சாப் மாநிலத்தில் உற்பத்திச் செலவு மிகவும் குறைவாக இருக்கலாம். ஆனால் தமிழகத்தில் உற்பத்திச் செலவு அதிகம். எனவே விவசாயிகள் மிகவும் ஏழ்மைக்கு ஆளாகிறார்கள். குறிப்பாக தஞ்சாவூர் மாவட்டத்தின் கீழ்பகுதி, திருச்சி மாவட்ட விவசாயிகளில் நெல் உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகள் மிகவும் மனச்சோர்வு அடைந்திருக்கிறார்கள். நெல்லைப் பயிரிடுவதால் மிச்சமில்லை, வருமானமில்லை என்பதால், இவர்கள் பணப்பயிர்களான கரும்பு, வாழை பயிரிடலாமா என்று கருதி, அவ்வாறு பயிரிடப் போகிறார்கள். இது மிகவும் ஆபத்தான நிலையைக் கொண்டுவரும். அதுமட்டுமல்ல, நெல்லைப் பயிரிடும் விவசாயி மிகவும் கடனாளியாக மாறியிருக்கிறான். ஜப்தி அவனைப் பின்தொடர்கிறது. இவ்வாறு 'ஃப்பாப்ரிகேஷன் ஏற்படுவது மிகவும் அபாயகரமானது. இதனால் ஹோம் மார்க்கெட் சுருங்கும். நெற் பயிர் தமிழ் நாட்டின் முதல் பயிர். ஆகவே அகில இந்திய அக்ரிகல்சுரல் பிரைசஸ் கமிஷன் மேற்கூறிய அகில இந்திய சராசரிக் கொள்கையை மாற்றி, பிராந்திய சராசரி விலைக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டும். அகில இந்திய விலை என்கிறபோது, பஞ்சாபில் விளைச்சல் அதிகம். தமிழ் நாட்டில் குறைவு. இதற்கு விவசாய உற்பத்தி முறையில் மாறுதல்கள் இருப்பதும் காரணமாக இருக்கலாம். ஆகவே உற்பத்திச் செலவைக் கணக்கிட்டு பிராந்திய சராசரி விலை நிர்ணயிப்பதற்கு நம் அரசு மத்திய அரசுடன் பேசி முடிவெடுக்க வேண்டும். அதற்கு நம் விவசாயிகள் நிச்சயமாக தங்கள் முழு ஆதரவையும் ஒத்துழைப்பையும் தருவார்கள் என்பதையும் கூறிக்கொள்கிறேன்.

கடைசியாக, காவிரி நீர்ப் பிரச்சினை. இதில் இன்னும் நாம் தாமதம் செய்யக்கூடாது. இப்பிரச்சினையை இன்னும் நாம் தள்ளிப் போடக்கூடாது. இப்பிரச்சினை குறித்து பல தடவை நாம் சர்வகட்சிக் கூட்டங்களைக் கூட்டி

யிருக்கிறோம். அதன் உள் விவகாரங்களை இந்த் அவையிலே இப்போது விவாதிப்பது அவ்வளவு உதவிகரமாக இருக்காது என்பதால், ஒரே ஒரு விஷயத்தை மட்டும் சொல்ல விரும்புகிறேன்.

நமக்குள்ள உரிமைகளை நிலைநாட்டுவது என்ற ஒரே அடிப்படையில் இருப்பதைவிட நாம் இன்றைய சூழ்நிலையில் என்ன செய்யலாம் என்று பார்க்க வேண்டும். 1974-லேயே பரிசீலனைக்கு வரவேண்டிய ஒப்பந்தம் இன்னும் வராமல் இருக்கிறது. கர்நாடக அரசு தன்னுடைய தேவைக்கு நீர் தேவை என்று வலியுறுத்துகிறது. மத்திய அரசும் இப்பிரச்சினையில் காலம் கடத்துகிறது. இதனால் நாம் ஒரு உடன்பாட்டுக்கு வர முடியவில்லை. இப் பிரச்சினையில் இரு மாநில அரசுகள் சம்பந்தப்பட்டிருக்கின்றன. இப்போது கேரளாவும் சேர்ந்துகொண்டிருக்கிறது. எல்லா மாநிலங்களிலும் இன்றைக்கு நீருக்கும், மின்சாரத்திற்கும் பெரிய சண்டை நடந்துகொண்டிருக்கிறது. இச்சண்டை எளிதில் முடியாது. இது இரண்டும் அனைத்திற்கும் மூலப் பொருளாக இருப்பதால், இதனால் வரக்கூடிய சண்டை எளிதில் முடியாது. எனவே, இப்பிரச்சினையில் காலம் தாழ்த்தாது ஒரு முடிவுக்கு வருவதற்கு (flexible standpoint) என்ற முறையில் ஒரு முடிவுக்கு வர வேண்டும்.

நமக்கு குறைவாக நீர் வழங்கப்படும் என்று சொல்லிவிட்டார்கள். நம் பொறியியல் வல்லுநர்கள், நீர் குறைந்தாலும்கூட சமாளிக்கலாம் என்று கூறி வழிவகைகளையும் கூறியிருக்கிறார்கள். வாட்டர் மேனேஜ்மெண்ட் மூலம் சமாளிக்கலாம் என்று கூறியிருக்கிறார்கள். இந்த விஷயத்தில் நாம் இன்னும் பலவீனமாக இருக்கிறோம். வாய்க்கால்களை கல், சிமிண்ட் கொண்டு நவீனப்படுத்தினாலும், நல்ல மழை பெய்தால் அடித்துக்கொண்டு போய்விடு கின்றன. சில இடங்களில் மட்டும் அவை திட்டு திட்டாக இருக்கின்றன. இதை நான் யாரையும் மட்டம் தட்டிப் பேசவேண்டுமென்பதற்காகக் கூற வில்லை. கட்டும் ஏற்பாடுகள் அவ்வளவு பலவீனமாக இருக்கின்றன. இது எப்படி இருந்தபோதிலும், காவிரி நீர்ப் பிரச்சினையில் திருச்சி, தஞ்சை மாவட்டங்கள் பாதிக்கப்படுகின்றன. குறிப்பாக தஞ்சாவூர் மாவட்டம் மிகப் பெரிய அளவில் பாதிக்கப்பட்டிருக்கிறது. இதில் அவசரமாகவும், ஆழ்ந்தும் கவனம் செலுத்தி சீக்கிரம் முடிவெடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தமிழ் நாட்டில் நன்செய் பயிர் விவசாயம் அதிக அளவில் காவிரி நீர்ப் பகுதியில்தான் இருக்கிறது. அது பெரிதும் பாதிக்கக்கூடிய நிலைமை, இதில் கவனம் செலுத்தாவிட்டால் ஏற்படும் என்பதை நாம் உணர வேண்டும்.

இது ஜூன் மாதம். தண்ணீர் நிறைய வந்துகொண்டிருக்கிறது. எனவேதான் திறந்து விடுங்கள் என்று சொல்கிறோம். ஜூன் 1 ஆம்



(பிற்பகல் 12-25)

தேதியே தண்ணீர் வருமென்று தஞ்சை விவசாயிகள் எதிர்பார்ப்பது வழக்கம். ஜூன் 15-க்கு இது பெரும்பாலும் பிந்தாது. இன்றைக்கு ஜூன் 28. இப்பொழுதுதான் தண்ணீர் அதிகமாக கபினியில் பிடிமானம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. மேட்டூருக்குத் தண்ணீர் ஏராளமாக வந்து கொண்டிருக்கிறது. எப்போது தண்ணீரைத் திறந்து விடப்போகிறோம்? இதிலே முடிவுக்கு வந்து நாம் தண்ணீரைப் பங்கு கொள்வதிலே, குறிப்பாக கர்நாடகத்திலே இருந்து ஒரு இணக்கமாகப் பெறுவதிலே என்ன என்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமோ அவைகளை எடுத்து சீக்கிரம் முடிவுக்குக் கொண்டுவருவது அவசியம் என்று வலியுறுத்தி அமைகிறேன்.

கவிஞர் முத்துலிங்கம்: துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் நிலப் பரப்பு ஒரு லட்சம் 30 ஆயிரத்து 69 சதுர கிலோ மீட்டர்கள் என்கிறார்கள். இங்கே வாழ்கிற மக்கள் தொகை 5.1 கோடி. ஐந்து கோடி பேர் வாழ்கிற இந்த நாட்டிலே இந்த ஆண்டு சென்ற ஆண்டைவிட அதிகமான மழை பெய்திருக்கிறது என்று இந்த விவர அறிக்கையிலே குறிப்பிடப்பட் டிருக்கிறது. தென்மேற்குப் பருவ மழை சென்ற ஆண்டைவிட சராசரி பெய்யக்கூடிய மழையைவிட அதிகமான மழை பெய்திருக்கிறது என்றும் அது பரவலாகப் பெய்யாத காரணத்தால் புதுக்கோட்டை, இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கர் மாவட்டம் போன்ற மாவட்டங்களில் எல்லாம் விவசாயம் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது என்றும் குறிப்பிடப் பட்டிருக்கிறது. மழை பெய்யவில்லை, அதனால் விவசாயம் பாதிக்கப்பட்டு விட்டது என்பதை ஆண்டாண்டுக் காலமாகச் சொல்லித்தான் வருகிறோம். மழை பெய்யவில்லை, அதனால் விவசாயம் பாதிக்கப்பட்டுவிட்டது என்று சொல்வது, விஞ்ஞான சாதனம் வளர்ந்திருக்கக்கூடிய இந்த நாளில் சொல்வது பொருத்தமற்றது என்று நான் கருதுகிறேன். மழையே பெய்யாத அரேபியா நாடுகளில் விஞ்ஞான சாதனங்களைப் பயன்படுத்தி பாலைவனமாக இருந்த பகுதிகளை எல்லாம் சோலை வனங்களாக மாற்றி இருக்கும்போது மழை அதிகமாகப் பெய்யக்கூடிய இடத்திலிருந்து மழை பெய்யாத இடத்திற்குத் தண்ணீரைக் கொண்டு செல்வதற்காக விஞ்ஞான ரீதியில் நாம் என்ன வழி முறைகளைக் காணவேண்டுமோ அதைக் கையாள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இருக்கின்ற நீர்ப்பாசனம் நமக்குப் போதாது. அதற்காகப் புதிய குளங்களை வெட்ட வேண்டுமென்று நான் சொல்லவில்லை. இருக்கின்ற குளத்திற்கே தண்ணீர் வரவில்லை. சில குளங்களில் நீர் பிடிப்புப் பகுதி களிலேயே சிலர் புறம்போக்கு நிலமாக அதை மாற்றி, ஆக்கிரமித்துக்கொண்டு, தென்னங் கன்றுகளையும், முந்திரிகளையும் நட்டு விடுகிறார்கள். இதனால்

குளத்திற்கு வருகின்ற நீர் பாதிக்கப்படுகிறது. அதனால் விவசாயம் பாதிக்கப்படுகிறது. கன்னியாகுமரி மாவட்டம், திருநெல்வேலி மாவட்டம் போன்ற பகுதிகளில் இப்படி நடந்திருக்கிறது. திருநெல்வேலியிலே இலந்தைக்குளம் என்ற ஒரு கண்மாயைத் தூர்த்துவிட்டு நாம் வீட்டு வசதி வாரிய வீடுகளையும், அரசாங்க அலுவலகங்களையும் கட்டியிருக்கிறோம். அந்தக் குளத்தால் பாசனம் பெற்ற நிலங்கள் எல்லாம் வீடுகளாக மாறிவிட்ட காரணத்தால், அந்தப் பாசனத்திற்கு அவசியம் இல்லாமல் போய்விட்டது என்று நாம் வீடுகள் கட்டியிருக்கிறோம். அப்படியே இருந்தாலும், அந்தக் குளம் ஆடு மாடுகள் குடிப்பதற்கு பயன்பட்டது. மனிதர்கள் குடிப்பதற்கு இல்லாவிட்டாலும், குளிப்பதற்காவது அது பயன்படும் என்று அந்த மக்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், சென்னைப் புறநகர், மதுரைப் புறநகர் போன்ற பகுதிகளில் விவசாயத்திற்காகப் பயன்படும் நிலங்களை எல்லாம் சில ரியல் எஸ்டேட்காரர்கள் அதிகப் பணம் கொடுத்து வீட்டு மனைகளாக வாங்கிக்கொண்டு போய்விடுகிறார்கள். அதனால் விவசாயம் பாதிக்கப்படுகிறது. ஆகவே நிலம் வைத்திருப்பவர்கள் விவசாய நிலங்களாக இருக்கக்கூடிய நிலத்தை வீட்டு மனைக்காக யாருக்கும் விற்கக்கூடாது என்று ஒரு தடைச் சட்டத்தை அரசாங்கம் கொண்டுவர வேண்டும். அல்லது விவசாயம் செய்யக்கூடிய அந்த நிலச் சொந்தக்காரர்களேகூட அதை வீடு கட்டுவதற்கு நாம் அனுமதிக்கக்கூடாது. விவசாயத்தை ஒருபுறம் வளர்க்க வேண்டும், பெருக்க வேண்டுமென்று சொல்லிவிட்டு, விவசாயத்திற்குப் பயன்படக்கூடிய நிலங்களை எல்லாம் வீட்டுமனைகளாக மாறுவதற்கு நாம் அனுமதித்துக் கொண்டிருப்பது விவசாயப் பெருக்கத்திற்கு வழிகோலியாக அமையாது என்பதை மட்டும் நான் அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். வட நாட்டிலே எப்போது பார்த்தாலும் வெள்ளத்தால் பஞ்சம் ஏற்பட்டு விடுகிறது. தமிழ் நாட்டிலே வெள்ளம் இல்லாத காரணத்தாலே பஞ்சம் ஏற்பட்டு விடுகிறது. இதைப் போக்குவதற்காக நம் இந்திய நாடு சுதந்திரம் அடைந்த காலத்திலே 1947-லே ஐரோப்பிய நாடுகளில் ஒன்று கங்கை-காவிரியை இணைப்பதற்காக ஒரு ஒப்பந்தத்தைத் தாருங்கள் என்று மத்திய அரசிடம் கேட்டது. ஆனால் அவர்கள் "அப்படிக் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. அவைகளைக் கட்டிக் கொண்டாலே போதும், சேத வெள்ளத்தைத் தடுத்து விடலாம்" என்றார்கள். அப்போது கூட வட நாட்டில் ஏற்படுகின்ற அந்த வெள்ளச் சேதத்தைத் தடுப்பதற்காக அணைகள் கட்டினால் போதுமென்றுதான் அவர்கள் கருத்திலே கொண்டார்களே தவிர, இந்திய நாடு முழுவதும் அந்தத் தண்ணீர் வந்து பாய வேண்டுமென்று அக்கறை கொள்ளவில்லை. அப்படி அதைப் பயன்படுத்தி கங்கை-காவிரியை இணைத்திருந்தால், இந்திய நாடு இன்றைக்கு வளமாக மாறி



யிருக்கும், விவசாயம் பெருகியிருக்கும். அப்படி இந்திய நாட்டை வளப்படுத்தாமல், சில தனிப்பட்ட முதலாளிகளை வளப்படுத்தியிருக்கிறோம் என்பதை நினைக்கும்போது வருத்தமாக இருக்கிறது. மத்திய அமைச்சராக இருந்த திரு. கே. எல். ராவ் அவர்கள் கூட கங்கை-காவிரி இணைப்பு சாத்தியமாகாது என்று சொல்லிக்கொண்டிருந்த நேரத்திலே, சாத்தியமாகுமென்று கூறி, 600 பக்கங்களுக்கு மேல் ஒரு புத்தகம் எழுதினார்கள். இரண்டு முறைகளிலே கங்கை ஆற்றுத் தண்ணீரை தமிழ் நாட்டிற்குக் கொண்டு வரலாம் என்று கூறினார்கள்.

(பிற்பகல் 12-30)

விந்திய மலை வரை கால்வாய் மூலமும் கொண்டு வந்து பிறகு நீரழுத்தக் குழாய்கள் மூலம் தென் பகுதிக்குக் கொண்டு வரலாம் என்று சொன்னார்கள். கங்கையாற்று நீரை நர்மதை மற்றும் மகாநதியில் விட்டு, அதற்குப் பிறகு கோதாவரியில் விட்டு, அதற்குப் பிறகு கிருஷ்ணா நதிக்குக் கொண்டு வந்து ராயலசீமா வழியாகத் தமிழ்நாட்டில் வட பெண்ணை வடாற்காடு மாவட்டத்தில் உள்ள தென் பெண்ணை, பாலாறு போன்ற ஆறுகள் வழியாகக் கொண்டு வந்தால் தமிழ்நாடு வளமடையும் என்றும் குறிப்பிட்டிருந்தார்கள். ஆனால் இந்திய அரசு அதைச் செய்ய முன்வரவில்லை. அப்படி இந்திய அரசு திட்டமிட்டு செயல்பட்டிருந்தால் இத்தனை ஐந்தாண்டு திட்டங்களைக் கூட போட்டிருக்க வேண்டிய அவசியமில்லை. இந்த நாட்டிலே சுதந்திரத்திற்குப் பிறகு ஏழு ஐந்தாண்டுத் திட்டங்கள் போட்டும்கூட வறுமைக் கோட்டுக்குக் கீழே 52 சதவீத மக்கள் இன்னும் இருப்பதாகத்தான் அரசாங்கப் புள்ளி விவரங்கள் குறிப்பிடுகின்றன. ஆனால் இந்த நாட்டு துரதிருஷ்டம் மத்திய அரசு தன் கையில் எதை எதை எடுத்துக்கொள்ளக் கூடாதோ, அவைகளையெல்லாம் தன் பொறுப்பில் எடுத்துக் கொண்டிருக்கிறது. தேவையில்லாதவைகளை எல்லாம் கூட தன் பொறுப்பிலே எடுத்துக் கொண்டிருக்கிறது. மாநிலப் பட்டியலில் இடம் பெற்றிருந்த கல்வியைப் பொறுத்தவரையில்கூட, மத்திய அரசு பங்காளி உறவைச் சொல்லி கல்வியைக் கூட்டுப்பட்டியலில் கொண்டு வந்துவிட்டது. ஆனால் நதி நீர்ப் பங்கீட்டைப் பொறுத்தவரையில், மத்திய அரசு அதில் தலையிட மறுத்துவிட்ட காரணத்தால், அந்தப் பிரச்சினை மாநில அரசுகளுக்கிடையில் இன்றைக்குப் பெரிதாக வளர்ந்துவிட்டது. காவிரி பிரச்சினையில் தமிழகம் முறைப்படி பெற வேண்டிய நீரைப் பெறுவதற்குக்கூட இன்னமும் கருநாடகத்தைக் கெஞ்ச வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. அப்படி நாம் கெஞ்சிய பிறகும் அவர்கள் கொடுக்க மாட்டோம் என்று சொல்லுவதோடு, 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தையே மீறி மேற்கொண்டு அவர்கள் இன்றைக்கு அணையைக் கட்டிக் கொண்டிருக்கிற காட்சியைக் காண்கிறோம். ஒரு மாநிலத்தில் ஓடுகிற ஆற்றின் நீரை மற்றொரு

மாநில மக்கள் பயன்படுத்திக் கொள்வதற்குள்ள உரிமையைப் பாதுகாப்பதில் மத்திய அரசு உறுதுணையாக இல்லாமல் இன்றையதினம் தேசிய ஒருமைப்பாடு பற்றி பேசுவதிலே எந்த நியாயமும் இருப்பதாக நான் கருதவில்லை.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே பேசும்போது, தமிழகத்தில் விவசாயிகளிடம் ஜப்தி செய்வதைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். இந்தியாவிலேயே ஏழை விவசாயிகளுக்கு இலவசமாக மின்சாரம் கொடுத்ததே நம்முடைய தமிழக அரசுதான். வேறு எங்கேயும் இல்லை. அதுமட்டுமல்ல. விவசாயிகளின் பணிக் காலத்தில் அவர்கள் இறந்தால் பண உதவியும் பயிருக்குப் பாதுகாப்பையும் ஏற்படுத்திக் கொடுத்தது புரட்சித் தலைவர் அவர்களின் அரசுதான். அப்படிப்பட்ட அரசில் இத்தகைய கெடுபிடி இருந்தால்—அதாவது சில பகுதிகளில் இருந்தால்—விவசாயிகளால் எப்போது கொடுப்பதற்குச் சௌகர்யப்படுகிறதோ அப்போது வாங்கிக்கொள்ள வேண்டும் என்று அதிகாரிகளுக்கு அரசு சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழிற்சாலைகளைத் தொடங்க ஊக்கமளிக்க வேண்டும் என்று தொழில் தொடங்குகிறவர்களுக்கு 40 சதவீதம் அல்லது 60 சதவீதம் என்று அரசாங்கம் கடன் கொடுப்பதோடு பல நேரங்களில் அதை ரத்து செய்து விடுகிறது என்றும் சொல்லுகிறார்கள். காரணம் அப்போதுதான் தொழில் தொடங்குகிறவர்களுக்கு உற்சாகம் பெருகி, உற்பத்தியைப் பெருக்குவார்கள் என்று சொல்லப்படுகிறது. இப்படி பெரும் பணம் படைத்த முதலாளிகளுக்கே கடன் ரத்து செய்யும்போது, ஏழை எளிய விவசாயிகளுக்குக் கொடுத்த கடனை ரத்து செய்யக் கூடாதா என்ற கேள்வி எழும். அது நியாயமாகக்கூட தோன்றலாம். ஆனால் அதைச் செயல்படுத்தும்போது, பல்வேறு சங்கடங்கள் இருக்கின்றன. இந்திய நாட்டின் முதுகெலும்பாக இருப்பது விவசாயம். முதுகெலும்புகளாக இருப்பவர்கள் விவசாயிகள். எனவே அந்த முதுகெலும்புகளை முறித்து விட வேண்டாம் என்று கவனத்தில் கொண்டு செயல்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கரும்புபற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் டாக்டர் சனார்த்தனம் அவர்களும் திரு. மாணிக்கம் அவர்களும் குறிப்பிட்டார்கள். இந்தியாவிலேயே தமிழகம்தான் கரும்பு உற்பத்தியில் முதலிடம் வகிக்கிறது என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதற்காக நான் அரசுக்குப் பாராட்டு தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் கரும்பு உற்பத்தி செய்யப்படும்போது, விவசாயிகளுக்குச் சேரவேண்டிய முழுப் பயனும் போய் அவர்களைச் சேருவதில்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். பதிவு செய்யப்பட்ட கரும்பு என்றும் பதிவு செய்யப்படாத கரும்பு என்றும் இரண்டு பிரிவுகளை வைத்திருக்கிறார்கள்.



உண்மையில் அரசாங்கம் கரும்புக்கு என்ன விலையை நிர்ணயம் செய்கிறதோ அந்த விலையைத்தான் கரும்பாலைகள் கரும்பு உற்பத்தியாளர்களுக்குக் கொடுக்க வேண்டும். ஆனால் பதிவு செய்யப்பட்ட கரும்புக்கு மட்டுமே அரசு நிர்ணயித்த விலையை கரும்பாலைகள் கொடுத்துவிட்டு, பதிவு செய்யப்படாத கரும்புக்கு பாதி விலையைத்தான் கொடுக்கின்றன. அரசாங்கம் விலையை நிர்ணயும் செய்திருந்தும், கரும்பாலைகள் இந்த வகையில் கரும்பு உற்பத்தி செய்யும் விவசாயிகளை ஏமாற்றிக் கொண்டிருக்கின்றன. அதற்கான வரிப் பணம் அரசாங்கத்திற்குப் போகிறதா என்றால் அதுவுமில்லை. அதைப் பற்றிய கணக்கையே அரசுக்கு கரும்பாலைகள் காட்டுவதில்லை. அதுமட்டுமல்ல, கரும்பு எடை போடுவதிலும் தவறு நடக்கிறது. விவசாயிகள் ஒரு எடை போட்டுக்கொண்டு வந்தால், ஆலைகள் வேறுவிதமாக எடை போட்டு விலை தருகிற நிலை இருக்கிறது. இதனாலும் விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள்.. இப்படி வாங்கப்படும் கரும்பை சீனியாக மாற்றி வெளியே விற்றுவிடுகிறார்கள். அது மட்டுமல்ல. கழிவுப் பொருளையும் தொழிற்சாலைகளுக்கு மூலப் பொருள்களாகக் கொடுத்து நிறையப் பணம் சம்பாதிக்கிறார்கள். எனவே கரும்பாலைச் சொந்தக்காரர்கள் இப்படி கருப்புப் பணம் சம்பாதிப்பதைத் தடுக்கும் வகையில் விவசாயிகளிடமிருந்து அரசே நேரடியாகக் கரும்பை வாங்கி ஆலைகளுக்குக் கொடுக்க முன்வர வேண்டும். இதன் மூலம் அரசாங்கத்தையும் விவசாயிகளையும் ஏமாற்றக்கூடிய சர்க்கரை ஆலைகளையெல்லாம், நான் ஏற்கெனவே இந்த மன்றத்தில் கேட்டுக்கொண்டபடி, நாட்டுடைமையாக ஆக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். அப்போதுதான் விவசாயிகளுக்கு அது உண்மையில் பலனளிப்பதாக இருக்க முடியும் என்று சொல்லிக்கொண்டு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

**திரு. க. சுப்பு:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின்மீது ஒரு சில கருத்துக்களை நான் கூற விரும்புகிறேன்.

கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிட்டிருப்பதைப்போல், தமிழகத்தில் உணவு உற்பத்தி பெருகி உள்ளது. அதிலும் கரும்பு உற்பத்தியில் நாம் இந்தியாவிலேயே—என் உலகத்திலேயே முதலிடம் வகிக்கிறோம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. உலகத்திலேயே என்று மொத்தத்திலேயே சொல்லியிருக்கலாம். இருந்தாலும் 2, 3 தடவை சொல்ல வேண்டுமே என்று சொல்லியிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்.

(பிற்பகல் 12-35)

அதுமாதிரி நெல் உற்பத்தியிலும் இரண்டாவது இடத்தில் நாம் இருக்கிறோம். அந்த அளவிற்கு நம்முடைய உணவு உற்பத்தி பெருகியிருக்கிறது. நம்முடைய கொள்கை உணவு உற்பத்தியைப் பெருக்குவதும், ஊரகத் தொழிலை வளர்ப்பதும்தான். பொருளாதாரத்தை மேம்படுத்துவது என்ற அடிப்படையில் இது கொண்டுவரப்பட்டிருக்கிறது. முதலிலே இருந்ததைவிட இரண்டு மடங்கு பெருக்கியிருக்கிறோம் என்பது உண்மை. அந்த அளவிற்கு விஞ்ஞான வளர்ச்சியின் புதிய விளைவு இது. இதிலேயுள்ள ஒரே கஷ்டம் மக்கள் தொகை உற்பத்தி அதைவிட அதிகமாகியிருப்பது. இதனால் எவ்வளவு உற்பத்தியை எட்டினாலும் போதவில்லை. மக்கள் தொகை அதிகமாக இருப்பதால், மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த வேண்டிய அவசியம் இருக்கிறது. தமிழக அரசாங்கம் இந்தத் துறையை நல்ல முறையில் வைத்திருக்கிறது. கட்டுப்பாட்டுடன் வைத்திருக்கிறது. மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தி, உணவு உற்பத்தியைப் பெருக்கும்போது, நாம் முதலிடத்திலே வருகிறோம். அது பெருமைப்படத்தக்க ஒன்று. கரும்பு உற்பத்தி, பருத்தி உற்பத்தி, நெல் உற்பத்தி ஆகியவற்றில் நாம் முதலிடத்தில் இருக்கிறோம். ஆனால் எவ்வளவு உற்பத்தியானாலும், வாழ்க்கை நிலையிலே மாற்றம் இல்லை. விவசாயத்தைப் பொறுத்த வரையில், விவசாயிகள் அதைத் தங்கள் வாழ்க்கை முறையாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள், வியாபாரம் அல்ல. ஆகவே அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயர வேண்டும் என்றால், வேளாண்மைத் தரம் உயர்த்தப்பட வேண்டும். வாழ்க்கைத் தரமும், வேளாண்மையும் இணைந்திருக்கின்றன. அப்படிப்பட்ட முறையில் பார்க்கும்போது, வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள மக்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது. அதற்காக தமிழக அரசாங்கத்தை நாம் ஒன்றும் சொல்ல முடியாது. இதற்கு அகில இந்திய அளவிலே தேசியக் கொள்கை உருவாக்கப்பட வேண்டும். ஆகவேதான் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தும் திட்டம் உருவாக்கப்பட்டது. நார்மன் பார்லோ—அவர் ஒரு அமெரிக்கன் சையன்டிஸ்ட், எஃப்.எ.ஓ., கன்சல்டன்ட்—என்பவருடைய திட்டத்தை வைத்து பசுமைப் புரட்சியைக் கொண்டு வந்தோம். அந்தத் திட்டத்தின் அடிப்படையில்தான் இப்போது உருவாக்கப்படுகிறது. அதற்காகத்தான் உலக வங்கியின் கடன், மற்றும் இன்னும் எந்தெந்த இடத்தில் கிடைக்குமோ அங்கெல்லாம் வாங்குகிறோம். அந்த வெளிநாட்டு டெக்னாலஜியை—தொழில் நுணுக்கங்களைக் கொண்டு வருகிறோம். அதிலேயிருந்து வந்ததுதான் ஹைபிரிட் வெரைட்டீஸ். அதிகமாக உற்பத்தி கொடுக்கக் கூடிய இந்த ஹைபிரிட் விதைகளோடு நோய்களையும் சேர்த்துக்கொண்டு





வந்துவிட்டோம். இந்த நோய்கள் எல்லாம் முன்பு இங்கேயிருந்ததா என்றால், நிச்சயமாகக் கிடையாது. பின்பு எப்படி வந்தது? இந்தப் பயிர்களைப் பாதிக்கும் நோய்கள், பூச்சிகள் எல்லாம் புதியவை. மருந்துகளும் புதியவை. விதைகளைக் கொடுத்தவன்தான் மருந்துகளைக் கொடுக்கிறான். அங்கேயிருந்து அனுப்பப்பட்ட விஞ்ஞானத்தோடு பொருளாதாரமும் இணைந்திருக்கிறது. இதிலே மனோப்பலி பார்க்கிறார்கள். எண்ணெய் பெற்றுள்ள நாடு எண்ணெயில் லாபம் சுட்டுகிறது. மல்டி-நேஷனல்ஸ் இதிலே முயற்சி செய்கிறார்கள். விஞ்ஞானத்தோடு உரத்தையும், பூச்சி மருந்தையும் எல்லாவற்றையும் சேர்த்து அனுப்புகிறான். இதிலேதான் டி.வி. புரோகிராம் வருகிறது. டி.வி. புரோகிராம் என்றால், இந்த டி.வி. புரோகிராம் அல்ல. ட்ரெய்னிங் அண்டு விசிட்டிங் புரோகிராம். உலகம் முழுவதும் தங்கள் கட்டுப்பாட்டில் இருக்கத்தான் இந்த புரோகிராம். நம்முடைய அக்ரிகல்சுரல் டிப்பார்ட்மென்டில் டி.வி. புரோகிராம் தீவிரமாக இருக்கிறது. இந்த இணைப்பு உலகரீதியாக இருக்கிறது. இந்த இணைப்பு நம்மிடம் மட்டும் அல்ல. மொத்தத்தில் இந்தியா முழுமைக்கும் உள்ள கொள்கை இது. நாம் நியாயமாகச் செய்கிறோம், கட்டுப்பாட்டுடன் செய்கிறோம். அப்படிச் செய்வதில் உற்பத்தியைப் பெருக்கியிருக்கிறோம். ஆனால் தேசிய அளவில் எடுக்க வேண்டிய சில முடிவுகள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்போது சில பூச்சிகளை ஒன்றுமே செய்ய முடியாது என்று சொன்னார்கள். அந்த அளவிற்கு அவைகள் பவர்ஃபுல், ஆம்னி பொட்டென்ட். பருத்தியை புலோடோனியம் தாக்குகிறது என்றால், பல பூச்சி மருந்துகளைப் பயன்படுத்தியதன் விளைவாக அது தன்னுடைய ஆற்றலை இழந்துவிட்டது. அதுதான் நவீன விவசாய முறை. அவர்கள் கொண்டு வந்துள்ள ஹைபிரிட் வெரைட்டீஸ் பூராவும் மற்றவைகளைப்போல சாதாரணமானவைகள் அல்ல. அதற்கு மானோகல்ச்சர்தான், மல்டிகல்ச்சர் கிடையாது. அந்த நெல்லைப் போட்டால், நெல்தான் தொடர்ந்து போட வேண்டும். அதனூடே ஊடு பயிரைக்கூட போட முடியாது. அப்படிப் போட்டால் வளராது. அதற்காக முதலில் அதிகம் உரம் போட வேண்டும். அதுவும் புது வகையான உரம் போட வேண்டும். மருந்து தெளிக்க வேண்டும். ஐ.ஆர். 8-ஐப் பயிரிட்டால் தொடர்ந்து அதையே பயிரிட முடியாது. இது ஒரு குறுகிய காலப் பயிர். பிறகு ஐ.ஆர். 20-ஐக் கொண்டு வரவேண்டும். இப்படி வெரைட்டீஸ் மாற்றிக்கொண்டே போகிறோம், உரம் போடுவதை அதிகமாக்கிக்கொண்டே போகிறோம். பூச்சி மருந்தை அதனால் அதிகம் தயாரிக்க வேண்டும். பூச்சிகள் மருந்தையே மிஞ்சும் அளவிற்கு வந்து நிலமும் தன்னுடைய சக்தியை இழந்துவிடுகிற நிலைக்கு வந்திருக்கிறது. மருந்து தயாரிக்கும் போபால் கம்பெனி ஒரு அமெரிக்க கம்பெனி.

[திரு. க. சுப்பு] [1985 ஜூன் 28

(பிற்பகல் 12-40)

நம் ஊர் கம்பெனிக்காரர்கள் உற்பத்தி செய்கின்ற உரம் எங்கே விலை போகின்றது? அமெரிக்காகாரன் கம்பெனி உரம் விலை போகிறது. அந்த உரம் நம் நிலத்திற்குள்ளேதான் போகிறது. இந்த நிலம் நாளடைவில் சத்தை இழந்துவிடுகிறது. இந்தப் புதிய வகையான உரத்தை அதிலே போடும்போது, இதிலே இந்தப் பூச்சி மருந்துகளைப் போடும்போது, அந்த நிலம் நாளடைவில் கெட்டுப் போகக்கூடிய அபாயம் இருக்கிறது. ஒரு கட்டத்திலே பார்க்கும்போது, ஒன்றுமே போட முடியாத நிலை வருகிறது. இரண்டாவது நம் ஊரிலே இருக்கக்கூடிய வெரைட்டிகள் எல்லாம் போயிற்று. நம் ஊரிலே டிரெடிஷனலாக, பாரம்பரையாக வைத்திருந்த நெல் வகைகள் இருக்கின்றனவா? இப்போது நிச்சயமாக இல்லை. நூறு ஆண்டுகளுக்கு முன்னாலே நம்முடைய நாட்டிலே இருந்த நெல்லுடைய வகைகள் 126 என்று சொல்கின்றார்கள். 100 ஆண்டுகளுக்கு முன்னால் என்னென்ன வகைகள் இருந்தன என்று சொன்னால்கூட, அந்த வகை எங்கே என்று சொல்ல முடியாது. புத்தகங்களிலே வேண்டுமானால் வைத்திருப்பார்கள். மனப் பாடம்தான் பண்ணிக்கொள்ள வேண்டும். அந்த நெல் இந்த நெல் என்று சொல்வார்கள். அந்த நெல் வகைகள் எல்லாம் கேள்விப்பட்ட மாதிரி இருக்கிறதே தவிர, அந்த நெல் எல்லாம் இப்போது இல்லை. டிரெடிஷனல் ஆக வந்த நெல் இருந்தாலும் அந்த முறையிலே, நம் நாட்டு முறையிலே விவசாயம் செய்ய முடியும். அதையெல்லாம் பல்லாயிரக்கணக்கான ஆண்டுக் காலமாக அதனுடைய நுணுக்கங்களைத் தெரிந்தவர்கள், அவர்கள் திறமை இல்லாமல், அறிவு இல்லாமல் இல்லை. அவர்கள் அதிலே பழகியிருப்பவர்கள். அவர்கள் அக்ரிகல்சுரல் காலேஜிலே பட்டம் வாங்காமல் இருக்கலாம். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே அவர்களுக்கு இடம் கிடைக்காமல் இருக்கலாம். அவர்களுக்கு இதெல்லாம் கிடைக்காது இருக்கலாம். அவர்கள் பாரம்பரையாக விவசாயம் பண்ணியவர்கள். அவர்களுக்கு விவசாயம் பற்றித் தெரியும். விதைகளைப்பற்றித் தெரியும். பருவ நிலைபற்றித் தெரியும். உரம் போடுவதுபற்றித் தெரியும். அந்த முறைகளைப்பற்றித் தெரியும். இன்றையதினம் அது அழிந்து விட்டது என்பதை நியாயமாக நாம் ஒப்புக் கொள்ள வேண்டும். நிச்சயமாக அந்த நெல் எல்லாம் இப்போது கிடையாது. அந்த மாதிரி நெல் எல்லாம் வந்தால், டிரெடிஷனல் நெல் வந்தால், சத்துள்ளதாக இருக்கும். இப்போது இருக்கின்ற நெல்லிலே கிடையாது. இப்போது உள்ள பயிருக்கே வலிவு கிடையாது. அப்படி இருக்கும்போது, அதிலே வருகின்ற நெல்லுக்கு எப்படி சத்து இருக்கும்? சிலர் பேசும்போது சொன்னார்கள். சில காய்கறிகளை, முகர்ந்து பார்க்கும்போது, வாடை



1985 ஜூன் 28] [திரு. க. சுப்பு]

வருகின்றது என்று சொன்னார்கள். வெளிநாடுகளிலே இந்த மாதிரி உற்பத்தி பண்ணினால். அதை அவர்கள் சாப்பிடுவதில்லை. அதிகமாக இந்தமாதிரிக் காய்கறிகளைச் சாப்பிட முடிவதில்லை. ஆப்பிளைக்கூட சாப்பிட முடியவில்லை. அந்த ஆப்பிள் பூராவும் பூச்சி மருந்து அடித்து அந்த வாடைதான் அடிக்கிறது. அதுமாதிரி கறவை மாடுகள். அந்தக் கறவை மாடுகளுக்கு கெமிகல் புட்தான் கொடுக்கின்றார்கள். அதனாலே அந்த மாடு கொடுக்கின்ற பால் வேண்டாம் என்று சொல்கின்றார்கள். அதன் பால் வேண்டாம் என்றே ஒரு மூவ்மெண்ட் நடக்கிறது. அந்த மூவ்மெண்ட் மூலம் வெளிநாட்டிலேயிருந்து புல் இறக்குமதி செய்து, அந்த புல்லைச் சாப்பிடுகின்ற மாடு கறக்கின்ற பால்தான் எங்களுக்கு வேண்டுமென்று சொல்கின்றார்கள். அப்படி எல்லாம் இளைஞர்கள் போராட்டம் நடத்திக்கொண்டிருக்கின்றார்கள். பல நாடுகளிலே மலைபோல பால் குவிக்கப்பட்டிருக்கிறது. அப்படி இருந்தாலும் உண்ண முடியவில்லை. இந்த 'கெமிகல் புட்' கலந்ததனாலேயேதான் அப்படி இருக்கிறது. அதேமாதிரி இன்றையதினம் இங்கே நாம் அதிகமாகப் பயன்படுத்துகின்ற பூச்சி மருந்துகள் அப்படி வந்து கொண்டிருக்கின்றன. இனிமேல் நாம் உண்ணவே முடியாது என்று ஒரு அபாயகரமான நிலை வந்துகொண்டிருக்கின்றது என்று கருதுகிறேன். 126 வகை நெல் இப்போது எங்கே இருக்கிறது என்று பாருங்கள். அதே மாதிரிதான், பாஸ்ட் எக்ஸ்பிரியன்ஸ், பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளில் நம்மைவிட அட்வான்சாகப் பண்ணினார்கள். நாம் இப்போது லேட்டஸ்ட் நிலைதான். நாம் பண்ணமாதிரி ஐ.ஆர். எட்டு ஐ.ஆர். 20 எல்லாம் பயிர் பண்ணினார்கள். நம் ஊரிலே இப்போது அந்த டிரெடிஷனல் நெல் இல்லை. இப்போது விதையெல்லாம் யார் உற்பத்தி பண்ணுகிறார்கள்? ஏகபோக முதலாளிகள் கையில் இப்போது விஞ்ஞானிகள் இருக்கின்றார்கள். அவர்கள் இந்தத் துறையில் 'கான்சென்ட்ரேட்' பண்ணிக்கொண்டிருக்கின்றார்கள். அந்த விஞ்ஞானிகளைப் பூராவும் அவர்கள்தான் வைத்துக்கொண்டிருக்கின்றார்கள். எல்லாம் அங்கே போய்விட்டது. அவர்கள் இல்லை என்று சொல்லிவிட்டால், நமக்கு எல்லாம் போய்விடும். நம் 'கன்ட்ரோல்' போய் விடும். அவர்கள் கொடுத்தால்தான் உண்டு என்ற நிலைமை வரும். அதிலே ரகங்களின் பெயர்களைக்கூட மாற்றி வைத்துவிட்டிருக்கின்றார்கள். பொன்னி, கன்னி என்று சொல்கின்றார்கள், அந்த ரகங்கள் பெயர்கள் எல்லாம் மாற்றப் பட்டிருக்கின்றன. இப்போது மதியழகன், அறிவழகன் என்று எல்லாம் மாற்றிக்கொண்டிருப்பதுமாதிரி அதன் பெயர்களையும் மாற்றிக் கொண்டிருக்கின்றார்கள். மற்றபடி பெயரிலேதான் மாற்றங்கள் இருக்கின்றன. நமக்கு மூன் அபாயம் இருக்கின்றது. எத்தனைதான் நாம் விவசாயத்தில் வளர்ச்சி பெற்றிருந்தாலும், ஒரு அபாயம் இருக்கிறது. பாரம்பரையாகச் செய்துவந்த

முறைகளைப் பார்க்க வேண்டும். அதுதான் நமக்கு சமயத்தில் கைகொடுக்கும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், மலைப்பழம், மலை வாழை, திருமலைப்பழம், என்று சொல்வார்கள். ரொம்பவும் பெயர் பெற்றது. அது இப்போது போனதாக ஆகிவிட்டது. அதற்கு என்ன காரணம்? விவசாயிகளுக்கு ஊக்கமில்லை என்பதுதான். அவர்களுக்கு நம்பிக்கை இல்லை. ஏன் நம்பிக்கை இல்லை? அவனுக்குத் தெரியாத மருந்தை எல்லாம் கொடுத்து பயிர் செய்யச் சொல்கிறோம். பத்து பேர்கள் 20 போகருக்கு டிரெயினிங் கொடுக்கிறார்கள் என்று சொல்கின்றார்கள். ஆனால் அவர்கள் அதைப் பின்பற்ற மாட்டேன் என்கின்றார்கள் என்று சொல்கின்றார்கள். எனக்கே தெரியவில்லை, பெயர் வரமாட்டேன் என்கிறது. அப்படிப்பட்ட மருந்துப் பெயர்கள் இருக்கின்றன. அவனுக்கு மருந்து எவ்வளவு அடிக்க வேண்டும் என்பது தெரியாது. இவ்வளவையும் தெரிந்துகொண்டு ஒரு விவசாயி பயிர் செய்வது என்பது முடியுமா? நடைமுறையில் சாத்தியமாக இருக்கிறதா? அதனாலே அபாயம் இருக்கிறது. பூச்சி மருந்துகளால், போபாலிலே ஏற்பட்டிருக்கின்ற இந்த டிராஜெடி மாத்திரம் அல்ல. அகில இந்திய ரீதியிலே 10 ஆயிரம் பேர்கள் இப்படிப்பட்ட மருந்து அடிப்பதனாலே பாதிக்கப் பட்டிருக்கின்றார்கள். ரொம்ப அபாயகரமான கட்டத்திலே இருந்து கொண்டிருக்கின்றார்கள். இயற்கையாக இருக்க வேண்டும். நாம் இன்னும் பழைய முறைகளைக் கைவிடாமல் பின்பற்ற வேண்டும். அவைகளைக் கைவிடாமல் இருக்க வேண்டும். அதற்கு வேண்டிய முயற்சிகளை எடுக்க வேண்டும். உணவு உற்பத்தியைப் பெருக்க முடியாமல் இருக்கிறோம். டபுள் ஆக்க முடியுமா, டிரிபிள் ஆக்கமுடியுமா என்றால், ஆக்க முடியும் என்று கூட சொல்வார்கள். அதுவும் ஒரு கட்டம் வரைதான். அப்புறம் ஒன்றுமே ஆக்க முடியாது. அதைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கிச் சொல்ல வேண்டும். இன்னொரு பக்கம் டபுள் ஆக்கினாலும், விவசாயிகள் ஊக்கம் இல்லாமல் போனதற்கு என்ன காரணம்? அவர்களுக்குக் கட்டுப்படியாகக்கூடிய விலை இல்லை. அதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். அக்ரிகல்சுரல் பிரைசஸ் சப்போர்ட் கமிஷனிலே சொல்லியிருக்கின்றார்கள். அது யாரை, ''சப்போர்ட்' பண்ணுகிறது? எனக்குத் தெரியவில்லை. அதில் விலை என்பது யதார்த்த விலையையொட்டி இருக்கிறதா? இல்லை. ஜப்பானிய முறைக்கு வந்தோம். ஜப்பானிய முறையைப்பற்றிச் சொன்னார்கள். ஆனால் ஜப்பானிலே என்ன

(பிற்பகல் 12-45)

விலை கொடுக்கிறார்கள் என்று பார்த்தோமா? உற்பத்திக்கு முழுமையாக ஆகும் காஸ்ட்—நெல் உற்பத்திக்காக ஆகும் முழுச் செலவு, அதோடு கட்டுப்படியாகக்கூடிய லாபத்தையும் சேர்த்து வைத்து நிர்ணயம்





செய்கிறார்கள். அதனால் அவனுக்கு இன்சென்டிவ் வருகிறது. குறைந்த நிலத்திலே, அதிக விளைச்சலை எடுக்க நினைக்கிறான். அப்படி இங்கே வருகிறதா? கடன்மேல் கடன், அதற்கு வட்டி. கடைசியில் அசல் எல்லாம் மூழ்கி விடுகிறது. இப்போது கிராமங்களில் உள்ள குழந்தைகள்கூட பழைய விளையாட்டுகளை விளையாடுவதில்லை. இப்போது போலீஸ்காரர் நான், தாசில்தார் நீ என்று பேசிக்கொண்டு விளையாடுகிறார்கள். அந்த அளவுக்கு கடன் வசூல், ஜப்தி நடவடிக்கைகள் குழந்தைகள் உள்ளத்திலே ஊறிவிட்டது. அது தேசிய உணர்வோடு வளர்கிறது. கடன் தொல்லைகளில் இருக்கிறவன் கஷ்டப்பட்டு உழைக்கிறவன் என்பதை உணர வேண்டும். ஜப்பானில் அவ்வளவு விலை கொடுப்பதால்தான் அவர்கள் கஷ்டப்படுவதில்லை. சைனாவில் 1/3 பங்கு சப்சிடி கொடுக்கிறார்கள். ஃபுட் ப்ரொடக்ஷனுக்கு அங்கே சப்சிடி தருகிறார்கள். இங்கே விவசாயிகள் தவிர, எல்லோருக்கும் கிடைக்கிறது. நகரங்களில் உள்ள கன்ஸ்யூமர்களைப் பாதுகாக்க வேண்டுமென்று நினைக்கிறோம். அதனால் குறைந்த விலைக்கு, சப்சிடைஸ் பண்ணிக் கொடுக்கிறோம். மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்கள் சொன்னது போல, விவசாயக் கூலிகள் ஆர்கனைஸ்டு ஆக இருப்பதால், இவ்வளவு கூலி கொடுக்க வேண்டுமென்று நிர்ணயிக்கிறோம். அதுகூட எல்லா இடங்களுக்கும் அல்ல. அவர்கள் ஆர்கனைஸ்டாக இருக்கும் இடங்களில் கொடுக்கிறார்கள். விலைவாசி ஏறும்போது டி.ஏ. கொடுக்கிறோம். ஒரு பக்கம் கூலியை அதிகரிக்கிறோம். ஆனால் விவசாயி விளைபொருள்களுக்குச் சரியான விலையை நிர்ணயிக்கிறோமா என்றால், இல்லை. அக்ரிகல்சுரல் பிரைசஸ் கமிஷன் எல்லா இடங்களையும் ஒரே மாதிரி பார்க்கிறது. பக்ரா நங்கல் பகுதியில் உள்ளவர்களுக்கும் ஒரே விலை; இங்கே இராமநாதபுரம் மாவட்டத்தில் ஆழமாகக் கிணற்றைத் தோண்டி, விவசாயம் பண்ணுகிறவனுக்கும் அதே விலைதான். சரியான விலை கொடுக்க வேண்டும். இன்றைக்கு 'சையின்டிபிக்' என்று பேசுகிறோம். இது 'மோஸ்ட் அன்சயின்டிபிக்'. நாமே தனியாக ஒரு ப்ரைசஸ் கமிஷன் வைக்க முடியுமா என்று பார்க்க வேண்டும். நாம் ப்ளானிங் கமிஷன் வைக்கிறோம். அதைப்போல தனியாக பிரைசஸ் கமிஷன் வைக்க வேண்டும். அது விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகும் விலையை நிர்ணயிக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்கள் பருத்திபற்றிச் சொன்னார்கள். அது உற்பத்தி அதிகமாகிறதென்றால், ஏரியா குறைகிறது. எல்.ஆர். என்று ஒரு பருத்தி போடுகிறார்கள். இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் அது அதிகமாக வருகிறது. நல்ல விளைச்சல் இருக்கிறது. ஆனால் அதைப் பயிரிடுபவர்களுக்கு ஊக்கமில்லை. விலை வீழ்ந்துவிட்டது. விவசாயிகளின் பருத்திக்கு விலை கொடுக்க மனமில்லை. 400, 450, 500 ரூபாய், அதற்கு மேலே போகவில்லை.

[திரு. க. சுப்பு] [1985 ஜூன் 28

கவர்ன்மென்ட் ஆஃப் இந்தியா டெலிபரேட்டாக 'அண்டர் ப்ரைசிங்' வைத்திருக்கிறதென்று சொன்னார்கள். காரணம் 'இன்டஸ்ட்ரீஸ் ப்ரெஷர்'. அந்த முதலாளிகள் ப்ரெஷரால் அப்படி வைக்கிறார்கள். அவர்களுக்குக் கட்டுப்படி ஆக வேண்டுமென்று செய்துள்ளார்கள். நான் என்னதான் 'ரெப்ரசென்டேஷன்' செய்தாலும், நடக்கவில்லை. அந்த அளவுக்கு அக்ரிகல்சரல் ப்ரைசஸ் கமிஷனில் சரியாக விலை நிர்ணயிக்கப்படுவதில்லை. விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகும் விலையைக் கொடுக்க வேண்டும். செலவின் அடிப்படையிலே விலையை நிர்ணயிக்க வேண்டும். அப்படி இல்லாததால், ஒவ்வொரு தடவையும் நாம் கஷ்டப்படுகிறோம். வேளாண் விளைபொருள் கமிஷன் அப்படிச் சொல்லியிருக்கிறதென்று சொல்லுகிறார்கள். நாம் அப்படி சாக்கு போக்கு சொல்ல முடியாது. ஏனென்றால் நாம் நேரடியாகச் சம்பந்தப்பட்டிருக்கிறோம். தமிழ் நாட்டில் வெள்ளம், புயல், வறட்சி மூன்றும் வருகிறது. இதனால் விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். பருவ காலத்தை நம்பி பயணம் போகிறார்கள். இதனால் நிரந்தரமாக விவசாயம் பண்ணினால், போட்ட ரூபாயை எடுக்கலாம் என்ற நிலை இல்லை. கடன் வாங்கிப் போட்டாலும், போட்டதை எடுக்க முடியவில்லை. இதனால் விவசாயிகளுடைய நிலைமை பரிதாபமாக இருக்கிறது. அதற்கு பயிர் இன்ஷ்யூரன்ஸ் ஸ்கீம் என்று கொண்டு வந்திருக்கிறார்கள். பல இடங்களில் அது இருக்கிறது. அதைச் சீராக்க வேண்டும். பயிர் இன்ஷ்யூரன்ஸ் ஸ்கீமில் உள்ள கோளாறு, ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பரேஷனில் கிராப் இன்ஷ்யூரன்ஸ் என்று வைத்திருக்கிறார்கள். அவர்கள் சில ரூல்ஸ் வைத்திருக்கிறார்கள். அதிலே இன்டிவிஜுவல் அப்ரோச் கிடையாது. இன்டிவிஜுவல் பயிர் செய்தாலும், அவன் இன்ஷ்யூர் செய்தால், அதைப் பொறுத்து கொடுப்பதில்லை. ஏரியாவைசாக வைத்திருக்கிறார்கள். தாலுக்கா வைஸ் 10 வருட ஆவரேஜ் யீல்ட் பார்க்கிறார்கள். அதைவிட அதிகமாக இருந்தால், இன்ஷ்யூரன்ஸ் கிடையாது. ஒரு ஊரிலே அதிகமாக 'யீல்ட்' இருக்கலாம். சுற்றியுள்ள இடங்களிலே அந்த அளவுக்கு இருக்காது. எனவே ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பரேஷன் ரூல்சை மாற்ற வேண்டும். அதை நாம் மாற்ற முடியாது. மத்திய அரசு மாற்ற வேண்டும். அதற்கு நாம் குரல் கொடுக்க

(பிற்பகல் 12-50)

வேண்டும். மத்திய அரசு அதை எல்லாம் மாற்றி, சாதாரண விவசாயிகளை ஊக்கப்படுத்தும் வகையில் பயிர் இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தைக் கொண்டு வர வேண்டும். இன்றைக்கு நாம் பார்க்கிறோம். பல மில்களில் அவர்களாகவே தீ வைத்து விட்டு இன்ஷ்யூரன்ஸ் பணத்தைப் பெற்று விடுகிறார்கள். அதுபோல் பல இடங்களில் கப்பல்களை அவர்களாகவே மூழ்கடித்து விட்டு இன்ஷ்யூரன்ஸ் பணத்தை வாங்கிக் கொள்கிறார்கள். மத்திய அரசு முதலில்



1985 ஜூன் 28] [திரு. க. சுப்பு]

நான் குறிப்பிடுகின்ற ரூல்சை மாற்ற வேண்டும். மத்திய அரசின் பட்ஜெட்டில் தேசிய-அளவிலே இப்படிப்பட்ட ஒரு பயிர் இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தைக் கொண்டு வருவார்கள் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால் அப்படிக் கொண்டு வரவில்லை. இது சம்பந்தமாக 'லிபரலைஸ்' செய்து விவசாயிகளை ஊக்கப் படுத்தும் வகையில், நேரடியாக பலன் அவர்களை சென்றடைகின்ற வகையில் இன்ஷ்யூரன்ஸ் ஸ்கிமை அமுல்படுத்த வேண்டும். விவசாயிகளுக்குக் கட்டுப் படியான விலை உற்பத்திப் பொருள்களுக்குக் கிடைக்க வேண்டும். அதுபோல் நவீன முறையில், அவர்களை ஊக்குவிக்கும் முறையிலுள்ள குறைகளை எல்லாம் களைய வேண்டும். விவசாயிகளின் மேம்பாட்டுக்காக பல்கலைக் கழகம் இன்னும் இதுபோன்ற பல்வேறு அமைப்புகள் எல்லாம் நல்லமுறையில் இயங்கி வருகின்றன. ஆனாலும் இருக்கின்ற குறைபாடுகள் களையப்பட வேண்டும். கடன் தொகைகளை ரத்து செய்ய வேண்டியதுதான். ஆனாலும் அபராத வட்டித் தொகை போன்றவைகளை எல்லாம் பாங்குகள்தான் பெற்றுக்கொண்டிருக்கின்றன. அதுகூட வேண்டாமென்று சொல்லிவிட்டால், நன்றாக இருக்கும். ரிசர்வ் வங்கிதான் அதைப் பெற வேண்டுமென்று சொல்கிறது. அவர்கள் அப்படிச் சொல்கிறார்களே என்பதற்காக நாமும் அப்படிச் செய்ய வேண்டுமென்று இல்லை.

வேளாண்மை உயர் மட்டக் குழு சில பரிந்துரைகளைச் செய்திருக்கிறது. ஒருமனதாகப் பரிந்துரை செய்த பிறகு, அவற்றை நிறைவேற்றுவதுதான் நியாயம். இதேமாதிரி ஒரு நிலைமை இன்டஸ்ட்ரிசில் ஏற்பட்டிருந்தால், அவர்கள் சும்மா இருப்பார்களா ? அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள் களுக்கு நியாயமாக என்ன விலை நிர்ணயிக்க வேண்டுமோ அதற்கு மேலேயே வைத்து விற்கிறார்கள். ஆனால் விவசாயிகளைப் பொறுத்தவரையில், அவர்கள் போடுவது கிடைத்தால் போதும் என்கிற நிலையில் மிகவும் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள்.

இன்றைக்கு பாசனத் துறையான பொதுப் பணித் துறைக்கும் விவசாயத் துறைக்கும் ஓர் ஒருங்கிணைப்பு மிக மிகத் தேவை. இரண்டுக்கும் தனித்தனி அமைச்சர்கள் இருக்கலாம். ஆனால் இப்பொழுது ஒருங்கிணைப்பு இல்லை. நீர்ப்பாசன இலாகா இவ்வளவு தண்ணீர் போதும் என்று சொல்லும்போது, விவசாய இலாகாவில் இருப்பவர்கள் இது போதாது என்று சொல்கிறார்கள். இப்போது பயிரிடப்படுகின்ற ரகங்கள் ஹை ஈல்டிங் வெரைட்டீசாக இருப்பதால், அதிகமாகத் தண்ணீர் தேவை என்கிறார்கள். நிலைமை இப்படி இருப்பதால், அவசியம் இரண்டு பேருக்கும் இடையில் ஒரு கோ-ஆர்டினேஷன் வேண்டும். அதிகாரிகள் மத்தியில் ஒரு இணைப்பு இருப்பது விவசாயிகளுக்கு மிகவும் நல்லது.

[திரு. க. சுப்பு] [1985 ஜூன் 28

அடுத்து, விவசாயிகளின் நலன் கருதி பாசன வசதிக்காக கோடிக் கணக்கான பணத்தை ஒதுக்குகிறோம். ஆனால் உள்ளபடியே விவசாயிகளுக்காகக் கட்டப்படுகின்ற சிறு சிறு பாசன வாயில்களான கண்மாய்கள் திரும்பத் திரும்ப உடைகின்றன. உடைவதற்காகத்தான் இப்படி கட்டுகிறார்களோ என்று எனக்கொரு சந்தேகம். அந்த அளவுக்கு கட்டுவதும் உடைவதும் திரும்பவும் கட்டுவதும் உடைவதுமாக இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய ஊருக்குப் பக்கத்தில் கட்டப்பட்ட ஒரு கண்மாய் இவ்விதமாக மூன்று தடவை உடைந்தது. கட்டப்படும் கண்மாய்கள் உடைகிற காரணத்தால், உடைகிற கண்மாய் எங்களுக்கு வேண்டாம் என்கிற எண்ணத்தில், இதைப்பற்றி நாங்கள் 'இன்சிஸ்ட்' பண்ணவில்லை. கான்டிராக்டர்கள் ஏதோ கடமைக்குச் செய்வதுமாதிரி எல்லா வேலையையும் இழுத்துப் போட்டுக்கொண்டு செய்கிறார்கள். அவசர அவசரமாக போதிய கவனம் செலுத்தாமல் போடுவதால், கண்மாய் உடைந்து போகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய ஊருக்குப் பக்கத்தில் நடைபெற்ற சம்பவத்தைக் குறித்துக்கொண்டு வந்து கொடுத்தார்கள். இப்படியெல்லாம் அரசு நல்ல எண்ணத்தில் முதலீடு செய்கிற பணம் இடையில் ஏற்படுகிற கோளாறுகளினால் வீணாகிறது, விவசாயப் பெருமக்களுக்கு அதன் பலன் கிடைக்கவில்லை. இம்மாதிரி எத்தனை இடங்களில் நடக்கிறது என்று பார்க்க வேண்டும். என்ஜினியர்களிடம் இதற்கான பொறுப்பை அளிப்பதன் காரணம் அவர்கள் படித்திருக்கிறார்கள், ஆகவே உடையாமல் கட்டுவார்கள் என்கிற எண்ணம். அப்படி இருக்கும்போது, உடைகிற கண்மாய் கட்ட படித்த என்ஜினியர் எதற்கு? ஏன் உடைந்தது என்று அவர்களைக் கேட்டால், திரும்பவும் கட்ட பணம் தருவீர்கள் என்பதால், உடையும்படி கண்மாய் கட்டினேன் என்று அவர்கள் சொல்லும் நிலை இருந்தால், எப்படி? இம்மாதிரி நடக்கின்ற குறைகளை உடனடியாகப் போக்க வேண்டும். கீழ்மட்டத்தில் நடைபெறுகின்ற இம்மாதிரிச் செயல்களை உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும்.

அடுத்து, தென்னை வளர்ச்சித் திட்டங்களுக்கு என்று பணம் ஒதுக்கினோம். மூன்று ரூபாய்க்கு மேல் விற்ற தேங்காய் இன்றைக்கு

(பிற்பகல் 12-55)

1½ ரூபாய்க்குக் கிடைக்கிறது. அதன் பிறகு தென்னை மரம் அதிகமாக வளர்த்து என்ன செய்வது? அதிகமாகத் தேங்காய் விளைச்சல் ஏற்பட்டுள்ளதால் தேங்காய் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. தஞ்சை மாவட்டத்திலும் அதிக தேங்காய் உற்பத்தியாகியிருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் அதிகப்பட்ட தேங்காயை பவுடர் ஆக்கிவிடலாம் என்று



1985 ஜூன் 28] [திரு. க. சுப்பு]

பார்த்தால், அதில் அதிகமான எண்ணெய்ப் பசை இருப்பதால், பவுடராக்க முடியவில்லை. நாகர்கோயில் தேங்காய்தான் பவுடருக்குப் பயன்படுகிறது. தக்காளி விலை ஏறிவிட்டதாக மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் வருத்தப்பட்டார். வருத்தப்படக்கூடாது. விளைச்சல் அதிகமாகிவிடுகிற காலத்தில் கிலோ தக்காளி 30 பைசாவுக்கு விற்கிறது. உறுப்பினர் அவர்கள் சம்பளம் வாங்குகிறவர்களுக்காகவே பேசக்கூடாது. உற்பத்தியாளர்களையும் பார்க்க வேண்டும். விலைவாசி உயர்ந்துவிட்டால், அதற்காக அரசாங்கம் ஊழியர்களுக்கு பஞ்சப்படி கொடுத்துவிடுகிறது. பஞ்சம் ஏற்பட்டால்தான் படி கொடுக்கப்படுகிறதே, அப்புறம் என்ன கவலை? பஞ்சப்படி கேட்டுவிடுகிறீர்கள், ஆளா இல்லை? அவ்வப்போது டி.ஏ. இன்ஸ்டால்மெண்ட் கொடுக்கப்பட்டுவிடுகிறது. ஆகவே உற்பத்தியாளர்களுக்கு ஏற்படும் நஷ்டத்தைப் பற்றியும் பேசவேண்டும். ஆனால் விவசாயிகளுக்குத்தான் அவர்கள் பிரச்சினையை எடுத்துச் சொல்ல ஆள் இல்லை, கவனிப்பாரற்று அனாதையாக இருக்கிறார்கள் அவர்கள். ஆகவே அத்தியாவசியப் பொருட்களின் உற்பத்தி விலையை அரசாங்கம் அவ்வப்போது நிர்ணயிக்க வேண்டும். அவர்களுக்குக் கிடைக்கிற லாபம் நடுவில் உள்ள இடைத்தரகர்களுக்குத்தான் பெரும்பாலும் போய்விடுகிறது. அதையும் தடுக்க வேண்டும். உற்பத்தி விலை உற்பத்தியாளர்களுக்கே போய்ச் சேர வேண்டும். தக்காளி அதிகமானால், அதை உடனே தொட்டியில் கொட்டிவிடாமல், ஒரு ஜாம் பாக்டரி வைக்க முடியுமா என்று பார்க்க வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். உற்பத்தி அதிகமாகும்போது, சப்போர்ட் பிரைஸ் (விலை) கொடுக்க வேண்டும். அப்படி அளித்தால், அவர்களுக்கும் விவசாயத்தில் ஊக்கம் ஏற்படும். அந்த ஊக்கத்தைக் கெடுக்கக்கூடாது. இப்படி பல்வேறு பிரச்சினைகள் இருந்தாலும், இந்தக் கொள்கைக் குறிப்பில் நல்ல திட்டங்கள் அடங்கியுள்ளன. அவற்றைப்பற்றிப் பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி கூறி என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

143955

திரு. எல். ஜெயச்சந்திரன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பில் கலந்துகொண்டு பேச எனக்கு வாய்ப்பளித்த தங்களுக்கு முதலில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் இந்தக் கொள்கைக் குறிப்பில் நல்ல பல திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். அதற்காக அமைச்சர் அவர்களுக்கும், தமிழக அரசுக்கும் என்னுடைய பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

V21,32'N85
N85;216.5

தமிழக அதிகாரிகளுக்கு மேல் பயிற்சி கொடுப்பதற்காக பிலிப்பைன்ஸ் நாட்டுக்கு ஏழு பேர்களை அனுப்ப இருப்பதாக இங்கே சொல்லப் பட்டிருக்கிறது. இப்போது நெல் உற்பத்தியில் இந்தியாவிலேயே தமிழ் நாடு இரண்டாவதாக இருக்கிறது. அதை முதலாவதாகக் கொண்டுவர, அந்த அதிகாரிகள் பிலிப்பைன்ஸில் பெறும் பயிற்சிகள் பயன்பட வேண்டுமென்று விரும்புகிறேன்.

இங்கே பேசிய உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை ஒருமித்துச சொன்னார்கள். இந்த மானியக் கோரிக்கைக்கு அதிக நிதி ஒதுக்கம் செய்ய வேண்டுமென்று சொல்லி, அப்போதுதான் நல்ல பல திட்டங்கள் மூலம் அதிக விளைபொருள் வளர்ச்சி ஏற்படும் என்றும், அதன்மூலம், நாட்டுக்கே மொத்தமான முன்னேற்றம் ஏற்படும் என்றும் சொன்னார்கள். அதையே நானும் சொல்ல விரும்புகிறேன். அதிக நிதி ஒதுக்கம் செய்ய வேண்டுமென்று மத்திய அரசிடம் நமது அரசு வாதாடி அதிக நிதி பெற வேண்டும். நெல், கரும்பு போன்ற விவசாய விளைபொருட்களுக்கு நியாயமான விலையை நிர்ண யிக்க வேண்டும், இல்லாவிட்டால் பிரச்சினைகள் உருவாகும் வாய்ப்பு இருக் கிறது என்று திரு. சுப்பு அவர்கள் சொன்னார்கள். காலம் மிகவும் அதிகமாகி விட்ட காரணத்தால், நான் என் கருத்துக்களைச் சுருக்கமாகக் கூறி முடித்துக் கொள்கிறேன். விவசாய விளைபொருட்களுக்கு தேசிய விலை நிர்ணயம் செய்யப்பட வேண்டுமென்று நீண்ட நாட்களாக நாம் குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். விலை நிர்ணயிக்கும் குழுவில் மூன்று பேர் இடம் பெறுவார்கள் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. அந்தக் குழுவை விரைவில் அமைக்க வேண்டும். அதில் விவசாயிகளின் பிரதிநிதி ஒருவரையும் சேர்த்து, அவர்களின் நீண்ட நாளைய கோரிக்கையான தேசிய விலை நிர்ணயம் செய்து அவர்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டும். அப்படி விலை நிர்ணயிக்கப்படாவிட்டால், அவர்கள் மன விரக்தியடைந்து, அதன்மூலம் நெல் போன்ற விளைபொருட்களை நிறுத்திவிட்டு, விலை அதிகம் கிடைக்கும் என்று சவுக்கு போன்ற பயிர்களைப் பயிரிடப் போய்விடுவார்கள் என்ற உணர்வு இப்போது இருப்பதாகச் சொல்கிறார்கள். ஆகவே விரைவில் இதுகுறித்து அரசு நல்ல முடிவெடுக்க வேண்டும்.

அடுத்ததாக, கரும்பு விவசாயிகளுக்கு, தமிழக அரசு 30—1—1985 அன்று வெளியிட்ட ஆணையில் ரூ. 50 மானியம் அளிப்பதாகச் சொல்லி யிருக்கிறது. இதன் காரணமாக அரசுக்கு ரூ. 9 கோடி செலவாகும் என்றும் சொல்லப்பட்டிருந்தது. ஆனால் இன்றுவரை ரூ. 2 கோடிதான் கரும்பு விவசாயிகளுக்குக் கொடுத்திருக்கிறார்கள். மேலும் இரண்டு கோடி





கொடுக்கப்பட இருக்கிறதென்றும் ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். மீதமிருக்கும் ஐந்து கோடியை விரைவில் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்பு இம்மன்றத்தில் கவன ஈர்ப்புத் தீர்மானம் ஒன்றிற்குப் பதிலளிக்கையில் விரைவில் கொடுக்க ஆலோசனை செய்து கொண்டுவருகிறோம் என்று குறிப்பிட்டார்கள். அதை விரைவாகக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழு தன் பரிந்துரைகளை அரசுக்குத் தந்திருப்பதாகவும், அதில் நல்லபல சலுகைகள் விவசாயிகளுக்கு இருப்பதாகவும் அறிகிறோம். மேற்படி பரிந்துரையின்மேல் விரைவில் விவசாயிகள் பலன் பெறும் வகையில் ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-00)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** விவாதம் முடியும் வரை, அவையின் அனுமதியோடு, அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. எல். ஜெயச்சந்திரன் :** அடுத்து, இதுவரை வெல்லத்தை வியாபாரிகள் வாங்கி விற்பனை செய்து கொண்டிருந்தார்கள். இனி அதை சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாகக் கொள்முதல் செய்ய வேண்டுமென்று அறிவிப்பு கொடுக்க இருப்பதாக அறிகின்றேன். அப்படிச் செய்தால், வியாபாரிகளுக்குப் பெரிதும் நஷ்டம் ஏற்படும். எனவே அவ்வாறு செய்ய வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நம் விவசாயிகள் விவசாயத்திற்கு முக்கியமாக உபயோகிக்கும் டிராக்டர், டிரெயிலர் மற்றும் உழவுக் கருவிகளுக்கு நம் மாநிலத்தில் விதிக்கப் படும் விற்பனை வரி மிக அதிகமாக இருக்கிறது. விற்பனை வரி வேளாண்மைத் துறையின்கீழ் இல்லை என்றாலும்கூட, சம்பந்தப்பட்ட துறையுடன் பேசி, குறைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பாண்டிச்சேரி மாநிலத்தில் இருப்பதுபோல், விவசாயிகள் வாங்கும் டிராக்டர், டிரெயிலர், உழவுக் கருவி களுக்கு அங்கே கொடுப்பதுபோல், சலுகை கொடுத்தால், அவர்கள் அவற்றை வாங்குவதற்கு இயலும் என்று கூறிக்கொள்கிறேன். புதுவை மாநிலத்தில் அவற்றிற்கு விற்பனை வரி இல்லை என்பதையும் கூறிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் பயிர்களுக்கு வரும் நோய்கள் பற்றி யெல்லாம் சொன்னார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் நோய்களைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார்கள். ஆனால் இதுவரை குறைந்ததாகத் தெரியவில்லை.

அதைப்போல, பூச்சி மருந்து விவசாயிகளுக்கு மான்ய விலையில் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் கூறினார்கள். பரிசீலிப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்களும் கூறினார்கள். அதன்மேல் மாவட்டங்களில் எந்த அளவுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பது குறித்து விரிவான அறிக்கை வாங்கி, நடவடிக்கை எடுக்கப்படாத இடங்களைக் கவனித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

இன்று காலை மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவராமன் அவர்கள் கேள்வி நேரத்தில், ஒரு கேள்வி கேட்டிருந்தார். அதாவது விவசாயப் பெருங்குடி மக்களுக்கு அளிக்கப்படும் போர்-வெல்லுக்கான (bore wells) வாடகைக் கட்டணம் ஐந்து ரூபாயிலிருந்து 25 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறதென்றும், ஏர் கம்ப்ரெஸார் 40 ரூபாயிலிருந்து 150 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறதென்றும், அது உண்மையா என்றும் கேட்டிருந்தார். அதற்கு பதிலளித்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விலையேற்றத்தினால் அவ்வாறு ஏற்பட்டதென்று கூறினார். ஆனாலும் இந்த அளவுக்கு, கிட்டத்தட்ட 300 சதவீதம் உயர்த்தும் நிலை வேண்டியதில்லை. அந்த அளவுக்கு விலையை ஏற்றினாலும், விவசாயிகளுக்கு கேட்கும்போது உடனடியாகக் கொடுப்பதில்லை என்றும், அது ஏன் என்று கேட்கப்பட்டதற்கு, நிதிப் பற்றாக்குறை என்றும் கூறினார்கள். இதுபோன்ற கருவி வேண்டுமென்றால், ஒரு விவசாயி மூன்று மாதங்களிலிருந்து ஆறு மாதங்கள் வரை காத்துக் கிடக்க வேண்டியிருக்கிறது. நிதி இல்லை என்றால், எப்படி நம் அரசு வீடு கட்டுவதற்கென்று உலக வங்கியிடம் 400 கோடி ரூபாய் கடன் வாங்கியிருக்கிறதோ அதேபோல் இதற்கும் கடன் தொகை பெற்றாவது விவசாயிகளுக்கு உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நம் மாநிலத்தில் நிறைய உர வியாபாரிகள் இருக்கிறார்கள். அவர்களே உரம் தயாரிக்கிறார்கள். அவர்கள் தயாரிக்கும் உரங்கள் தரமற்றவையாக இருக்கின்றன. அதிகாரிகள் சரியாகப் பார்ப்பதில்லை. அவர்கள் ரசாயனக் கலவையைச் சரியாகப் பார்ப்பதில்லை. அவர்கள் தயாரிப்பதை, அது எவ்வளவு தரக்குறைவாக இருந்தாலும், விவசாயிகளிடம் விற்று கொள்ளை இலாபம் அடிக்கிறார்கள். இதைத் தீவிரமாகக் கவனித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விவசாயிகளுக்கு நல்ல தரமான உரம் கொடுக்க முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-05)

**அவர்களையும் நம்முடைய சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.**





அடுத்ததாக, கடலூர் தாலுக்காவில் உள்ள பெருமாள் ஏரி ஆழப்படுத்தப்பட வேண்டுமென்பது அந்தப் பகுதி மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கை. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களிடம் அந்தப் பொறுப்பு இல்லையென்றாலும், மாண்புமிகு திரு. சுப்பு அவர்கள் கூறியது போல, நீர்ப் பாசனத் துறை அந்த வேலையைச் செய்ய வேண்டுமென்றும் அவர்களோடு ஒருங்கிணைந்து அந்த ஏரியை ஆழப்படுத்தினால், ஏறத்தாழ பத்தாயிரம் ஏக்கர் பயிர்கள் அதனால் நீர்ப் பாசனம் பெற்று லாபம் அடையும் என்பதையும் கூறிக்கொள்கிறேன்.

அடுத்ததாக, வீராணம் ஏரித் திட்டத்திற்காக தென்னாற்காடு மாவட்டத்தில் ராட்சதக் குழாய்கள் நிறையப் போடப்பட்டிருக்கின்றன. இந்த மாமன்றத்திலேகூட அதுபற்றி கேள்வி எழுப்பினோம். இப்போது அந்தத் திட்டம் முழுமையாக நிறைவேற்றப்படவில்லை என்பதால், பல கோடி ரூபாய் செலவு செய்து தயாரித்த ராட்சதக் குழாய்களை அப்படியே போட்டு வைத்திருக்கிறார்கள். இன்றும் பரிதாபகரமாக ரோட்டிலே அவைகள் கிடக்கின்றன. அதை வைத்துக்கொண்டு வீராணம் ஏரியிலிருந்து தென்னாற்காடு மாவட்டத்தின் நீர்ப் பாசனத்திற்காவது உபயோகப்படுத்த முடியுமா என்று அமைச்சர் அவர்கள் பரிசீலிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய மாநிலத்தில் ஒரு சில விவசாயக் கல்லூரிகள்தான் இருக்கின்றன. வடாற்காடு மாவட்டத்திலே விவசாயக் கல்லூரி வேண்டுமென்று நீண்ட காலமாகக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அதையும் அரசு நிறுவுவதற்கு ஆவன செய்ய வேண்டும். அதைப்பற்றிப் பரிசீலிப்பதாகக் கேள்வி நேரத்திலேகூட அவர்கள் கூறியுள்ளார்கள். வடாற்காடு மாவட்டத்திலே ஒரு விவசாயக் கல்லூரி ஆரம்பிக்க வேண்டும்.

'ஆயில் சீட்ஸ்' கார்ப்பரேஷன் ஒன்று வைத்திருக்கிறார்கள். அதில் அந்த விதைகளானது தரமானவையாக இல்லை என்று பெரும்பாலான விவசாயிகள் கூறுகிறார்கள். சில சமயங்களிலே பல்வேறு காரணங்களுக்காக பலரிடமிருந்து அந்த விதைகளை வாங்குகிறார்கள். அது தரமான விதைகளாக இல்லை என்று ஒரு பரவலான குறை இருந்து வருகிறது. அதைப் போக்க, அதன் தரத்தினை நல்ல அதிகாரிகள், எக்ஸ்பரிமென்ட் செய்து விவசாயிகளுக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மற்றும் நான் கூறவேண்டிய பல்வேறு கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் கூறிவிட்டதால், இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே என்னுடைய

விவாதத்தை இத்துடன் முடித்துக்கொண்டு மீண்டும் ஒருமுறை நமது மாநிலம் கரும்பு உற்பத்தியிலே முதன்மையாகவும், நெல் உற்பத்தியிலே இரண்டாவதாகவும் இருப்பதற்கு முக்கியக் காரணமாக இருந்த நம்முடைய தமிழக அரசையும், அமைச்சர்களையும், மற்றும் அதிகாரிகளையும் இந்த நேரத்தில் பாராட்டிக் கூறி, மேலும் விவசாயிகளுக்கு ஒரு நல்ல எதிர்காலத்தை அமையுங்கள் என்று கேட்டு, அமைகிறேன். வணக்கம்.

திரு. எம். பி. சுப்பிரமணியம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை கொள்கை குறித்த விவர அறிக்கையை இங்கே சமர்ப்பித்திருக்கிறார்கள். இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே தமிழ்நாடு பல துறைகளிலே பெருமைப்படத்தக்க சாதனைகளை நிகழ்த்தியிருக்கிறது என்று குறிப்பிட்டதை நான் முழு மனதாக ஆமோதிக்கிறேன். நானும் அந்தப் பெருமையிலே பங்குகொள்கிறேன். தமிழ்நாடு மட்டுமல்லாமல், இந்தியா முழுவதுமே வேளாண்மைத் துறையிலே கடந்த 30 ஆண்டுக்காலமாக, வெளிநாட்டவர்கள் பாராட்டக் கூடிய அளவில் பெருமைப்படத்தக்க அளவில் பெரிய முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்பதை நாம் குறைத்து மதிப்பிட முடியாது. ஒரு காலத்திலே 1950-52-ல் இந்தியா முழுவதும் ஐந்து கோடி டன் தான் உணவு உற்பத்தி இருந்தது என்பது நமக்குத் தெரியும். ஆனால் இன்றைய தினம் உணவு உற்பத்தியில் 15 கோடி டன்களை மிஞ்சுகிற அளவுக்கு இந்தியாவிலேயும், தமிழ்நாட்டிலேயும் மிகப் பெரிய முன்னேற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறோம். இன்னும் சொல்லப்போனால், மறைந்த பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் அமெரிக்கா சென்றபோது, அமெரிக்கப் பொருளாதார நிபுணர்கள் எல்லாம் அவர்களைப் பார்த்து, எத்தனையோ துறையிலே அமெரிக்கா விஞ்ஞான முறையிலே முன்னேறி இருந்தாலும், மிகவும் பஞ்சத்தாலும், பசியாலும், பிணியாலும் இருந்த இந்திய பாரத தேசம் உணவு உற்பத்தியிலே, பற்றாக்குறையிலே நிரந்தரமாக இருக்குமென்று நாங்கள் எண்ணி இருந்ததை மாற்றி, உணவுத் துறையிலே பற்றாக்குறை நீங்கி, உபரியாக இருக்கிற அளவுக்கு நிகழ்த்திய சாதனைகளைக் கண்டு நாங்கள் ஆச்சரியப்படுகிறோம் என்று சொன்னார்கள். இன்றைய தினம் உணவுத் துறையிலே வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய அளவுக்கு நாம் முன்னேறியிருக்கிறோம். இன்னும் ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். ஓராண்டுக் காலத்துக்கு மழையே பெய்யவில்லை என்றாலும், நம் நாட்டு மக்களுக்குத் தேவையான அளவு உணவு உற்பத்தி கையிருப்பு மாநிலங்களிலேயும், மத்திய அரசிடத்திலேயும் இருக்கிறது என்று சொன்னார்கள். புதிய முறைகளைக் கையாண்டதின் பலன் இது என்பதை நாம் குறைத்து மதிப்பிட வேண்டியதில்லை என்று குறிப்பிட விரும்புகிறேன். நவீன





முறைகளைக் கையாளுவதனாலே ஏற்படக்கூடிய இடைஞ்சல்கள், நோய்கள், விவசாயிகள் படுகிற அவதிகள், பற்றி எல்லாம் மாண்புமிகு திரு. சுப்பு அவர்கள் சொன்னார்கள் ; உண்மை. நானும் ஒரு விவசாயி என்ற முறையிலே ஒன்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஒரு ஏக்கர் நிலத்திலே 16 மூட்டை. 20 மூட்டைக்குக் கூட உற்பத்தி செய்ய முடியாத காலம் மாறி, இன்று 60 மூட்டை நெல் எடுக்கக்கூடிய அளவுக்கு இருக்கிறது என்று சொன்னால், இது அரசாங்கத்தினுடைய கொள்கை மட்டுமல்லாமல் அதிலே ஈடுபட்டிருக்கிற விவசாயிகள், தொழிலாளர்கள் ஆகியவர்களுடைய பங்கும் இருக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

(பிற்பகல் 1.10)

பொதுவாக, நவீன காலத்தில் பல பிரச்சினைகள் எழத்தான் செய்யும். மனிதர்களுக்கேகூட சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்னாலே இப்படிப்பட்ட வியாதிகள் வந்ததில்லை. ஆனாலும் இப்போது புதிதாக வந்திருக்கிற வியாதிகளுக்குத் தேவையான மருந்துகளைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் நாம் ஈடுபட்டுக்கொண்டுதான் இருக்கிறோம். அதைப்போலவே விவசாயத் துறையில் நவீன முறைகளைக் கையாளும்போது பல புதிய நோய்கள் வரத்தான் செய்யும். புதிய புதிய பிரச்சினைகள் உருவாகத்தான் செய்யும். அவைகளைப் போக்குவதற்கான முயற்சிகளில் நாம் ஈடுபட்டுதான் ஆக வேண்டும். முயற்சி இல்லாமல் சமுதாயமே இல்லை, அரசாங்கமே இல்லை. எனவே அதைக்கண்டு நாம் மலைக்க வேண்டாம் என்று பொதுவாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, இங்கே காவிரி பிரச்சினை குறித்து பலரும் குறிப்பிட்டார்கள். அது இந்தத் துறைக்குச் சம்பந்தப்பட்ட பிரச்சினையா இல்லையா என்று பார்க்காமல், அந்தப் பிரச்சினை இங்கே எழுப்பப்பட்ட காரணத்தால், இரண்டொரு கருத்துக்களை மட்டும் நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

1925 ஆம் ஆண்டு காவிரி நீர் சம்பந்தமாக செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் 1974 ஆம் ஆண்டு முடிவடைந்துவிட்டது. அதற்குப் பிறகு கடந்த 10 ஆண்டுகளாக நாம் பேசிக் கொண்டிருக்கிறோம். இது இரண்டு மாநில அரசுகள் சம்பந்தப்பட்ட பிரச்சினை என்ற காரணத்தால், மத்திய அரசு தனது கொள்கையை அல்லது தனது முடிவை மாநிலங்கள் மீது திணிக்க முடியாது என்பதை நாம் அனைவரும் அறிவோம். இரண்டு மாநில அரசுகளும் ஒப்புக் கொண்டாலொழிய, அல்லது ஒப்புக் கொள்கிறோம் என்று ஒப்புக் கொண்டாலொழிய, மத்திய அரசு இந்த விஷயத்தில் தன் கொள்கையை அல்லது தன் எண்ணத்தை இந்த அரசுகள் மீது திணிப்பதற்கு வழிவகையே

இல்லை. எனவே சம்பந்தப்பட்ட இரண்டு அரசுகளுமே இந்தப் பிரச்சினை பற்றி பேசி ஒரு முடிவுக்கு வருவதுதான் பின்னால் பிரச்சினைக்கு வழியில்லாமல் இருக்கும் என்று விரும்பினோம். மேலும் தமிழ்நாட்டிலும் கருநாடகத்திலும் வேறு வேறு கட்சிகள் ஆட்சிப் பொறுப்பில் இருந்தன. எனவே அவைகள் இரண்டும் மனம் ஒப்பி பேச வேண்டும் என்று மத்திய அரசு விரும்பியது. மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் பேசும்போது, ஒரு கருத்தைச் சொன்னார். நீதிமன்றத்திற்குச் சென்றால், பலன் கிடைக்கும் என்று அவர் குறிப்பிட்டார். எனக்கு என்ன தோன்றுகிறது என்றால், 1924 ஆம் ஆண்டு ஏற்பட்ட ஒப்பந்தமானது, வேறு ஒரு ஒப்பந்தம் ஏற்படுகிற வரை செயலில் இருப்பதாகத்தான் கருத வேண்டும். It is deemed to exist until an alternative agreement is made. அந்த அளவில் பார்க்கும்போது, உச்ச நீதிமன்றத்திற்குப் போய் இப்போதைய 'ஸ்டேடஸ்குவா', வேறு ஒரு ஒப்பந்தம் உருவாகிற வரை தொடர வேண்டும் என்று ஏன் ஒரு உத்தரவை நாம் வாங்கக் கூடாது? இதைக் குறித்து சட்ட நிபுணர்களைப் பரிசீலிக்கச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இரண்டு அரசாங்கங்களும் பேச முடியவில்லை என்றால், பிறகு இரண்டு பேரோடும் சேர்ந்து மத்திய அரசு இந்தப் பிரச்சினை குறித்து பேசி முடிவெடுக்கலாம் . . .

திரு. ஆர். டி. சீத்தாபதி : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, குறுக்கிடுவதற்காக மன்னிக்க வேண்டும். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுடைய கவனத்திற்கு ஒரு நிகழ்ச்சியை நினைவு படுத்த விரும்புகிறேன். ஏற்கெனவே தமிழக அரசு காவிரி பிரச்சினை சம்பந்தமாக சுப்ரீம் கோர்ட்டில் ஒரு வழக்கைத் தொடர்ந்தது. மறைந்த இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் "அந்த வழக்கை வாபஸ் வாங்கிக் கொள்ளுங்கள், நான் கருநாடக அரசோடு பேசி தமிழ்நாட்டுக்குத் தேவையான தண்ணீரை வாங்கித் தருகிறேன்" என்று சொன்ன உறுதி மொழியின் பேரில்தான், தமிழக அரசு அன்றைக்கு அந்த வழக்கை வாபஸ் பெற்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். பி. சுப்பிரமணியம் : அப்போது இருந்த நிலை வேறு. அப்போது கருநாடக மாநிலத்தில் காங்கிரஸ் ஆளும் கட்சியாக இருந்தது. ஆனால் மைய அரசுகூட ஒரு மாநில அரசுமீது தன்னுடைய விருப்பத்தைத் திணிக்க முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதுதான் தமிழ்நாட்டின் நிலை என்றால், அந்த நிலை கருநாடகத்திற்கும் பொருந்தத்தானே செய்யும். எனவேதான் இரண்டு அரசுகளும் பேசி எங்களால் ஒத்துப் போக முடியவில்லை என்று மத்திய அரசுக்குச்



சொன்னால், அவர்களே ஒரு ஆர்பிடிரேஷனுக்கு ஏற்பாடு செய்யலாம். அதைச் செய்யாமல் இங்கே பேசிக் கொண்டிருப்பதில் பயனில்லை என்பதைத்தான் நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

அடுத்து, அக்ரிகல்சுரல் பிரைஸ் கமிஷன் பற்றியது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் கூறியதைப் போல், நீண்ட நெடுங்காலமாகவே விவசாயிகள் உற்பத்திக்காக செலவுசெய்கிற செலவைக் கணக்கில் கொண்டு விலை நிர்ணயம் செய்ய வேண்டும் என்று கோரி வருகிறார்கள். எப்படி துணி நெய்கிற ஆலைகளுக்கு விலை நிர்ணயம் செய்யும்போது, எல்லா செலவு களையும் கணக்கில் எடுத்துக் கொண்டு விலை நிர்ணயம் செய்கிறார்களோ, அப்படியே இங்கேயும் நிர்ணயிக்க வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டு வந்ததன் அடிப்படையில், மத்திய அரசு அதற்கு ஒப்புதல் தருகிற வகையில் ஒரு அறிக்கை தற்போது வந்திருக்கிறது. இதன் காரணமாகத்தான் ஏ.பி.சி. (அக்ரிகல்சுரல் பிரைஸ் கமிஷன்) என்கிற பெயரையே மாற்றி அமைக்கும் வகையில் அரசு ஒரு திட்டத்தை அண்மையில் அறிவித்திருக்கிறது. இது இன்றையதினம் விவசாயிகளுக்கு நம்பிக்கை ஊட்டக் கூடியதாக இருக்கிறது.

அடுத்து, தமிழ்நாட்டில் உணவு தானியங்களை வாங்கிச் சாப்பிடுகிறவர்கள் 100-க்கு 70 சதவீதம் இருக்கிறார்கள். தஞ்சை மாவட்டத்தில் நெல் உற்பத்தி இருக்கிறது என்று சொன்னால்கூட, சிறிய விவசாயிகள், விவசாயக் கூலிகள் அப்போது தங்களுக்குக் கிடைப்பதை விற்றுவிட்டு, லீன் மன்த் போது விலைக்கு வாங்கிச் சாப்பிடுகிற நிலைதான் இருக்கிறது. இந்த நிலையில் அரசாங்கம் கூடுதலாக விலை வைத்தால், வாங்கிச் சாப்பிடுகிற நிறையச் சாதாரண மக்களுக்கு, இருக்காது என்று தெரிவித்துக்கொள்கிறேன். எனவே என்ன செய்யலாம் என்றால், கட்டுப்படியாகக் கூடிய விலையை விவசாயி களுக்குக் கொடுத்து வாங்கி கன்சியூமர்களுக்கு அரசு மான்யம் கொடுத்து

(பிற்பகல் 1-15)

விற்றால் ஒழிய, வேறு வழி இருக்காது. விலைகளை உற்பத்தியாளர்களுக்குக் கூடுதலாகக் கொடுப்பதன் மூலமாக கன்ஸ்யூமர்களுக்குக் கஷ்டம் ஏற்படக் கூடாது என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, கரும்பு, நெல், பயறு வகைகளில் தமிழ்நாடு மிகப் பெரிய முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். கரும்பு உற்பத்தியிலும், நெல் உற்பத்தியிலும் தமிழ்நாடு மற்ற மாநிலங்களைவிட முதலாவதாக இருப்பதாகச் சொன்னார்கள். அதற்காக என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். கரும்புக்கு ஆந்திரம், கர்நாடகம், உத்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் கொடுக்கிற விலையை

[திரு. எம். பி. சுப்பிரமணியம்] [1985 ஜூன் 28

இங்கே கொடுக்க முடியவில்லை எவ்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மத்திய அரசாங்கம் என்ன விலையை நிர்ணயித்தாலும், மாநில அரசாங்கம் கூடுதலாகக் கொடுக்க வழிவகை காண வேண்டும் என்று இந்த அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

வேளாண்மைத் துறை செயல்வினை முறைத் திட்டம் என்ற புத்தகத்தில் பக்கம் 2-ல் திருந்திய விதை உற்பத்தித் திட்டத்திற்கு 1985-86 ஆம் ஆண்டிற்கு செலவு மதிப்பீடு ரூபாய் 14.06 கோடி என்று சொல்லப்பட்டிருக்கிறது. நாலாவது பக்கத்தில் 'விதைகள்' என்ற தலைப்பில் 1985-86 ஆம் ஆண்டுக்கு செலவு மதிப்பீடு 76 கோடி ரூபாய் என்றும் தெரிவித்திருக்கிறார்கள். 11-வது பக்கத்தில் அரசு விதைப் பண்ணைகள் 45 செயல்பட்டு வருகின்றன என்று தெரிவித்து அதன் லாப நட்டக் கணக்குகளையெல்லாம் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதில் 1980-81, 1981-82, 1982-83, ஆகிய ஆண்டுகளில் லாபம் என்று குறிப்பிட்டுவிட்டு, 1983-84 ஆம் ஆண்டுக்கு, ஆடிட் செய்யவில்லை, இருந்தாலும் பத்து இலட்சம் ரூபாய் லாபம் வரலாம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். 1984-85 மற்றும் 1985-86 ஆம் ஆண்டுகளுக்கு ஏன் மதிப்பீடு போடப்படவில்லை? மேலும் ஒரு பக்கத்திலே செலவினம், ஒரு பக்கத்திலே லாபம் என்று இருக்கிறது. அதில் ஒன்றுக்கொன்று என்ன சம்பந்தம் என்று அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தரமான விதைகள் விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்பதற்காக 46 விதைப் பண்ணைகள் உள்ளன. அவற்றில் 3 விதைப் பண்ணைகள் பல்கலைக் கழகங்களின் மேற்பார்வையிலும் மற்றவைகள் அரசின் நேரிடையான பார்வையிலும் உள்ளன. அதற்காகும் செலவை, நிகரச் செலவாக எடுத்துக்கொள்கிறார்களா, அல்லது சப்சிடியாகக் கொடுக்கப்பட்டதையும் கணக்கில் எடுத்துக்கொள்கிறார்களா என்று தெரியவில்லை. தனியாரிடத்திலே வாங்கும்போது, கூடுதலாக விலை கொடுத்து வாங்கும்போது, சப்சிடி கொடுப்பதை நஷ்டத்திலே காட்டுகிறார்களா என்பதையெல்லாம் அமைச்சர் அவர்கள் விளக்கமாகக் கூற வேண்டும்.

ஆய்வுக்கூடங்கள் மொத்தம் தமிழ்நாட்டில் 15 இருக்கின்றன. நடமாடும் ஆய்வுக்கூடங்கள் 16 இருப்பதாகவும் 1984-85 ஆம் ஆண்டில் 8,22,000 நிகழ்வுகள் முதற்கண் ஆய்வு செய்யப்பட்டன என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆய்வுக்கூடங்கள் இருந்தாலும், விவசாயிகள் விரும்பினாலும், அதைப் பரிசோதனை செய்ய பல மாதங்கள் ஆகின்றன. தமிழ்நாட்டில் உள்ள எல்லா விவசாய நிலங்களுக்கும் ஆய்வு நடத்தலாம். ஐந்தாண்டுக்குள் நடத்தி முடிக்கலாம். இந்த பூமியில் என்ன பயிர் செய்யலாம், என்ன உரம்



1985 ஜூன் 28] [திரு. எம். பி. சுப்பிரமணியம்]

போடலாம் என்பதைப்பற்றியெல்லாம் கிராமங்களில் உள்ள கிராமசேவக்குகள் மாதிரி எடுத்துச் சொன்னால், அது விவசாயிகளுக்கு வழிகாட்டுவதாக இருக்கும். எக்ஸ்டென்ஷன் அதிகாரிகளையும், கிராமசேவக்குகளையும் வைத்து இதைத் தொடர்ந்து செய்ய வேண்டும் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

ஆக்ரோ-சர்வீஸ் என்று அரசாங்கத்தின் சார்பாக ஒவ்வொரு வட்டாரத்திலும் வைத்திருக்கிறார்கள். அதைப் போலவே தனியாரும் 'ஆக்ரோ-சர்வீஸ்' வைத்திருக்கிறார்கள். அரசாங்க ஆக்ரோ-சர்வீசை விட தனியார் நடத்தும் ஆக்ரோ-சர்வீசில் விவசாயிகள் கேட்டவுடனே கருவிகளையும், தரமான முறையில் சேவைகளையும் செய்வதாக புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

நில மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் புல்டோசர்களை விவசாயிகள் கேட்கும் போது, அவைகளைக் குறைந்த விலையில் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். 135 புல்டோசர்கள், 175 'டிராக்டர்கள் இருப்பதாகச் சொல்கிறார்கள். அரசாங்கத்திடமிருந்து புல்டோசர்களை வாங்க 6 மாதங்கள் 7 மாதங்கள் ஆகின்றன. அப்படியே வாங்கினாலும், ஒரு மணி நேரத்திற்கு 160 ரூபாய் செலவு செய்து, மேட்டு நிலத்தைச் சரி செய்வதைவிட, நிலத்தையே வாங்கலாம் போல இருக்கிறது. அந்த அளவிற்குக் கூடுதலாக இருக்கிறது. ஆகவே 'சப்சிடைஸ்ட் ரேட்' என்ற அளவிலே கொடுக்கலாம் என்று குறிப்பிட விரும்புகிறேன். அரசாங்கம் எத்தனையோ துறைகளில் பணத்தைக் கொடுத்துவிட்டு வசூல் செய்யாமல் இருக்கிறது. அது போலவே விவசாயிகள் மேட்டு நிலத்தைச் சரி செய்து நஞ்சை நிலமாக மாற்ற எடுத்துக்கொள்ளக் கூடிய இந்த முயற்சிக்கு குறைந்த விலையில் புல்டோசர்களைக் கொடுக்கலாம், தேவையானால் கடனும் கொடுக்கலாம், இதைப் பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-20)

அதுபோலவே சேலம், கோவை போன்ற மாவட்டங்களில் கிணறுகள் வெட்டுவதானால், 120 அடி, 140 அடி, 150 அடி போகிறது. ஒரு கிணறு வெட்டுவதற்கு 40 ஆயிரம் ரூபாய் முதல் ஒரு லட்சம் வரை செலவாகிறது. இப்படிச் செலவு செய்து 120 அடி போன பிறகும், தண்ணீர் கிடைக்காமல் பல நேரங்களில் போய்விடுகின்றது. அப்படிப் போய் விடுகின்றபோது, அந்த விவசாயக் குடும்பமே அழிந்து போகிறது. அத்தகைய போபத்து இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆலோசனை ஒன்றைச் சொல்கிறேன். அரசினுடைய உதவியின் பெய ரால் நவீன இயந்திரங்களைக் கொண்டு நீர் மட்டத்தை அறிந்துகொள்ளக் கூடிய ஒரு அமைப்பு இருக்கிறது. கிணறு வெட்டி அது பொய்த்துப்போய் விட்டது என்றால், அதற்குச் செலவான பணத்தில் ஏறத்தாழ 100-க்கு 75 பங்கு அந்த அமைப்பு திருப்பித் தரக்கூடிய அளவுக்கு ஒரு ஆலோசனை செய்ய வேண்டும். அது விவசாயிகளுக்குச் செய்யக்கூடிய உதவியாக இருக்கும். அப்படி இல்லை என்றால், இரண்டு மூன்று முறைகள் கிணறு வெட்டினால், நிலத்தையே விற்றாலும், அந்தக் கிணறு வெட்டிய செலவை ஈடுகட்ட முடியாத நிலைமை ஏற்பட்டு விடுகிறது. இத்தகைய ஆபத்தான சூழ்நிலை இருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

தமிழ்நாட்டிலே உள்ள நிலங்களிலே 1/3 பங்கு ஆற்றுப்பாசனம், ஏரிப் பாசனம் ஆகியவற்றை நம்பித்தான் இருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே நினைவுபடுத்த விரும்புகிறேன். ஆனால் தஞ்சாவூர், திருச்சி போன்ற பகுதிகளிலே, காவேரி தண்ணீர் பாயக்கூடிய இடங்களிலே தண்ணீர் செலவழிப் பதைப் பார்த்தால், சேலம், கோயம்புத்தூர், தர்மபுரி ஆகிய மாவட்டங் களைப் பார்த்தவர்களுக்கு வயிறெல்லாம் பற்றி எரிகிறது. காரணம்— வயலிலே தண்ணீர் விழுந்து, அந்த வயல் நிறைந்து, அடுத்த வயலுக்குப் போகிறது, அடுத்து அடுத்த வயலுக்குத் தண்ணீர் பாய்ந்து, அந்த வயல் நிறைந்து அடுத்த வயலுக்குப் போகிறது. அதனால் தண்ணீர் எவ்வளவோ பாழாகிறது, வீணாகிறது. இதை நான் நேரடியாகக் கண்டேன். அவ்வளவு தண்ணீர் சேலம் மாவட்டத்திலே, கோயம்புத்தூர் மாவட்டத்திலே இருக்கு மானால், தங்கமே அங்கே எடுத்துவிடலாம். ஆனால் தண்ணீர்ப் பஞ்சம் அந்த மாவட்டங்களிலே இருக்கிறது. தஞ்சை மாவட்டத்திலே, திருச்சி மாவட்டத்திலே, குறிப்பாக காவேரி டெல்ட்டா பகுதியிலே உபயோகப்படுத்தக் கூடிய தண்ணீரை நல்ல முறையில் பயன்படுத்தினால், அதைப்போல 50 சதவிகிதம் நிலத்திற்கு கூடுதலாகத் தண்ணீர் கிடைக்க முடியும். அதை இராமநாதபுரம் மாவட்டத்திற்கும் புதுக்கோட்டை மாவட்டத்திற்கும் கொடுக்கலாம்; திருச்சி மாவட்டத்திலே பல பகுதிகளுக்குக் கொடுக்கலாம். ஏற்கெனவே உலக வங்கியிலே கடனை வாங்கி வாய்க்காலைச் சீர்படுத்து வதற்கும், நவீனப்படுத்துவதற்கும் திட்டம் அமைய இருக்கிறது என்பது நமக்கு நன்றாகத் தெரியும். ஆனால் எந்தக் காலக்கட்டத்திலே, எப்போது முடியும் என்று தெரியவில்லை. இந்த காலக்கட்டத்திலேகூட இன்று தஞ்சைக்குப் போனால் பார்க்கலாம். தண்ணீர் போகிறது என்றால், வயலில் இறங்கி கரை மேலே போய் அடுத்த வயலுக்குப் போகிறது, பிறகு அடுத்த வயலுக்குப் போகிறது. இப்படி பாய்ந்துகொண்டேயிருக்கிறது. இதை மாற்றுவதற்குரிய வழிவகைகள் உண்டா என்பதைச் சிந்திக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.



அடுத்து, மானாவாரி சாகுபடி குறித்து இங்கே சொல்லியிருக்கிறார்கள். இது மிக முக்கியமான திட்டம் என்பதை நான் சொல்ல விரும்புகிறேன். கிராமப்புறங்களிலே பெரும்பாலும் மிகவும் ஏழைகளாக இருக்கக்கூடியவர்கள், மானாவாரியாக—வானம் பார்த்த பூமியாகத்தான் வைத்திருக்கின்றார்கள். மழை பொய்த்தால் இல்லை. மழை பெய்தால் உண்டு. மழை பெய்தாலும் காலாகாலத்தில் பெய்ய வேண்டும். விதை விதைக்கின்றபோது, பெய்ய வேண்டும், களை எடுக்கின்றபோது மழைபெய்ய வேண்டும். அப்போது மழை இல்லை என்றால், பலனில்லை. ஆகவே ஒரு முன்னேற்றகரமான, லாபகரமான காரியங்களை அவர்களுக்குச் செய்தோமானால் அது அவர் களுக்கு உதவிகரமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். உணவு தானிய உற்பத்திக்கு மட்டுமல்லாமல், அதிலே ஈடுபட்டிருக்கின்ற சிறிய விவசாயிகளுடைய வருமானத்தையும் மனதிலே கொண்டு இந்தத் திட்டத்தை உற்சாகத்தோடு செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன். இன்றைக்கு மத்திய அரசும் இதற்கு பெரிய அளவிலே உதவி செய்ய முன் வந்திருக்கிறது. இது வரவேற்கத்தக்கது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டபடி, 1985—86-ல் 2 ஆயிரம் எக்டேர் நிலம் இந்தத் திட்டத்தின் கீழ் அமுலாக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்கள் கூறியிருக்கின்றார்கள். இதனுடைய வெற்றியைக் கணக்கிலே கொண்டு இதன் அனுபவத்தையொட்டி பெருமளவில் இதை விஸ்தரிக்க வேண்டும் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

இன்னொன்றை நான் இங்கே குறிப்பிலே பார்த்தேன். டிரை லேண்ட் டெக்னாலாஜிக்கல் பாப்புலரைசேஷன் என்று ஒரு திட்டத்தைப் பார்த்தேன். புதிய 20 அம்சத் திட்டத்தின்கீழ் 1984—85 ஆம் ஆண்டில் 26,823 விவசாயக் கருவிகளும், 1,214 பெர்டிலைசர்ஸ் கம் சீட்டிங்ஸும் விநியோகிக்கப்பட்டன. இவை விநியோகிக்கப்பட்டன என்று சொன்னால், இனாமாகவோ, கடனா கவோ அல்லது மான்யமாக, யார் யாருக்கு என்ன அடிப்படையிலே விநி யோகிக்கப்பட்டன என்ற விவரங்களையெல்லாம் தெளிவாக்குவார்கள் என்று கருதுகிறேன். அது அவர்களுக்குப் பயன் உள்ளதாக இருக்கும் என்பதை நான் குறிப்பிடுகிறேன்.

மற்றொன்று, வறட்சியான பகுதியிலே குட்டைத் திட்டங்கள். அதாவது கசியும் குட்டைகள். மிகவும் வரவேற்கத்தக்க திட்டம். அப்படி ஏற்படுத்துவதன் மூலமாக ஏரியில் பக்கத்திலே நீர் மட்டம் உயர்ந்து இருக்கும். அதனாலே பலன் அளிக்கக்கூடிய நிலைமைகள் இருக்கின்றன. அதுபோலவே செக் டேம்ஸ் திட்டம். இந்த இரண்டுமே மிகப் பெரிய திட்டங்கள். மிகப் பெரிய அளவிலே செய்ய வேண்டும் என்பதைக் குறிப்

பிட விரும்புகிறேன். 1985—86 ஆம் ஆண்டு ஆயிரம் குட்டைகளும் 500 செக் டேம்களும் 10 கோடி ரூபாய் செலவிலே செய்ய இருப்பதாக குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. முடியுமானால், அதைப் பெரிய அளவிலே செய்யலாம். நான் பல இடங்களிலே ஆத்தூர் தாலுக்கா போன்ற இடங்களிலே பார்த்திருக்கிறேன்.

(பிற்பகல் 1-25)

மற்றொன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். "டிரவுட் ப்ரோன் ஏரியாஸ் ப்ரோகராம்" என்ற பெயரிலே 1985-86-லே 4,41,13,000 ரூபாய் செலவிடப்பட உத்தேசிக்கப்பட்டு, 1,43,68,000 ரூபாய் செலவழிக்கப்படாமல், அடுத்த ஆண்டு ஒதுக்கியிருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. அதற்குரிய திட்டங்கள் இல்லையா? அதிகாரிகள் காலாகாலத்தில் திட்டங்களைச் செயற்படுத்தவில்லையா என்பதை அறிய விரும்புகிறேன்.

இரண்டாவதாக, ஒன்றை எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். விவசாயிகள் இப்போது இரசாயன உரங்களைப் பயன்படுத்த வேண்டிய காலகட்டம் இருக்கிறது. அந்த உரங்கள் தரமானவையா என்றால் இல்லை. பல இடங்களில் விவசாயிகள் ஏமாற்றப்படுகிறார்கள் என்று குறிப்பிட விரும்புகிறேன். சாதாரண மண்ணை அள்ளிக்கொண்டு போய், இதுதான் உரம் என்று சொன்னாலும், அப்பாவி மக்கள் அதை ஏற்றுக்கொள்ளும் நிலைமை இருக்கிறது. 9,741 உர மாதிரிகள் எடுத்து, ஆய்வு செய்யப்பட்டதில் 1,492 மாதிரிகள் தரமற்றவை, ஏமாற்றம் செய்யப்படுபவை என்று கண்டுபிடித்து, அதன்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகச் சொல்லப்படுகிறதென்றால், கண்டுபிடிக்க முடியாதவை எத்தனையோ இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கிராமங்களில் இருக்கிறவர்களுக்கு உரத்தின் பெயரே தெரியாது. அப்பாவி மக்களிடம் வியாபாரிகள் கொள்ளை அடிக்கிறார்கள். உரக் கடை வைத்திருக்கிறவர்கள் 2, 3 ஆண்டுகளில் பல லட்சம் ரூபாய்க்கு அதிபதியாகும் நிலைமை கிராமப்புறங்களிலும், மேஜர் பஞ்சாயத்துக்களிலும் இருக்கிறது. இதிலே கவனம் செலுத்த வேண்டும். பெஸ்டிசைட்ஸ் விற்பனையிலும் இத்தகைய நிலைமை ஏற்படுகிறது. விவசாயிகளுக்கு சரியான பூச்சி மருந்தைத் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு இல்லவே இல்லை. இதிலே அரசாங்க அதிகாரிகள் விவசாயிகளுக்குத் துணையாக இருந்தால்தான் முடியும். பொதுவாக விவசாயிகளோடு தொடர்பு கொண்டுள்ள அதிகாரிகளுக்கு சரியான 'மோடிவேஷன்' இருந்தாலொழிய இந்த அரசாங்கத்தின் திட்டங்கள்





முழுப் பலனை அளிப்பதாக இராது. இண்டகிரேட்டட் டிரைபல் டெவலப்மெண்ட் ப்ரோக்ராம்—இதை வரவேற்கிறேன். சேலம் மாவட்டத்திலும், தென் ஆற்காடு மாவட்டத்திலும் இந்தத் திட்டம் இருக்கிறது. கல்ராயன் மலையிலே பழப் பண்ணை வைத்து, நல்லமுறையிலே நடைபெற்று வருவதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. கல்ராயன் மலையிலே கடுக்காய், லட்சக் கணக்கான மரங்களில் உற்பத்தியாகி, பல கோடி ரூபாயை அந்நியச் செலாவணியாகத் தரும் நிலையில் இருக்கிறது. அவை இயற்கையாகவே உற்பத்தியான மரங்கள். இன்றையதினம் அவை கவனிப்பாரற்று, குறைந்து கொண்டே வருகிறது. எந்தவித சிரமமும் இல்லாமல், அவர்களுக்கு வருவாய் கொடுப்பதாக இருக்கிறது. அதைப்பற்றி ஆராய்ச்சி செய்து, பெரிய அளவில் அதை வளர்க்க முடியுமா என்பதை இந்தத் திட்டத்தின் மூலம் பார்க்க வேண்டும்.

அடுத்து, ரெகுலேட்டட் மார்க்கெட்டை ஆரம்பிக்க வேண்டுமென்று சட்டம் போட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினரவர்கள் இங்கே பேசியபோது குறிப்பிட்டார்கள். விவசாயிகள் உற்பத்தி செய்த பிறகு, அவர்களுக்கு என்ன விலை அளிக்க வேண்டுமென்பதை நிர்ணயிப்பதைவிட, உற்பத்தி செய்வதற்கு முன்பே ஒரு விலையை நிர்ணயித்தால், அது விவசாயிகளுக்குப் பெரிதும் உதவியாக இருக்கும். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். தேங்காய் பற்றிச் சொன்னார்கள். 3 ரூபாய், 4 ரூபாய் போன வருடம் விற்றது. இந்த வருடம் 1 ரூபாய் விற்கிறது. இடையிலே என்னவாயிற்று? வெளி நாட்டு சக்திகள் அதற்குக் காரணம் என்கிறார்கள். அதைப்போல, சேலத்திலே மரவள்ளிக் கிழங்கு, குச்சி வள்ளிக் கிழங்கு முக்கியமான கேஷ் கிராப். ஒரு வருடத்திலே ஒரு மூட்டை 50, 60 ரூபாய் விற்கிறது. ஏக்கருக்கு 10 அல்லது 15 ஆயிரம் ரூபாய் கிடைக்கும். அதற்கடுத்த வருடம் ஒரு மூட்டை 7, 8 ரூபாய் முதல் 15 ரூபாய் வரை விற்கிறது. ஏக்கருக்கு 1,500 ரூபாய்கூட வருமானம் வராத நிலை இருக்கிறது. இந்த மார்க்கெட் யார் கையிலே இருக்கிறது? கல்கத்தாவில் உள்ள சில வியாபாரிகள் சேலம் ஜவ்வரிசி மார்க்கெட்டை கையிலே வைத்துக்கொண்டிருக்கிறார்கள். விவசாயிகளிடம் கிழங்கை வாங்கும் ஜவ்வரிசி ஆலை அதிபர்கள் தங்கள் கையிலே வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இப்போது கூட்டுறவுத் துறையிலே ஒரு நிறுவனத்தை ஏற்படுத்தியிருந்தாலும், நிலைமை மாறவில்லை. சென்ற 6 மாதங்களுக்கு முன்பு இருந்த விலையில் பாதி அளவுக்குக்கூட இப்போது இல்லை. எனவே ஆண்டுத் துவக்கத்திலேயே இந்த விலைதான் என்று நிர்ணயித்தால், அதற்குத் தகுந்த முறையில் விவசாயிகள் செய்யலாம். குறைந்த அளவுக்கு விலை

இருந்தால், அரசாங்கமே செலவு செய்து, அதை வாங்கத் தயாராக இருக்க வேண்டும். அந்த அளவுக்குச் செய்தால்தான், விவசாயிகளுக்கு உதவி செய்ய முடியும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-30)

இறுதியாக ஒன்று, வீட்டு விவசாயம் என்கிற பெயரால் ஆதி திராவிடர் குடும்பங்களுக்கு, அவர்களுடைய வீடுகளுக்குப் பின்னால் உள்ள புழக்கடைகளில் பயிரிட முருங்கை, பப்பாளி போன்றவை வழங்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். இந்தச் செடிகளை மற்றவர்களுக்கும் வழங்கி இதனை விரிவாக்க வேண்டும். இந்த இரண்டு செடிகளும் முக்கியமானவை. அந்த வகையில் அனைவருக்கும் இலவசமாக வழங்க வேண்டும்.

அடுத்து, விவசாயப் பயிர்களுக்குப் பூச்சி மருந்தை எப்படி அடிப்பது, பூச்சிகளை எப்படி ஒழிப்பது என்பதுபற்றி விவசாயிகளுக்கு நேரடியாகப் பயிற்சி அளிப்பதுதான் நல்லது. ஆனால் 1984-85 ஆம் ஆண்டு 7,400 ஆசிரியர்களுக்குப் பயிற்சியளித்திருப்பதாகவும், 1985-86-ல் 7,480 பள்ளி ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிக்க இருப்பதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆசிரியர்களே விவசாயிகளாகவும் இருக்கும் நிலையில், அவர்கள் இதன்மூலம் பலன் பெறலாம். ஆனால் மற்றவர்களைப் பொறுத்தவரையில், எந்த ஆசிரியராவது விவசாயிகளிடம் சென்று இப்படி இப்படிச் செய்ய வேண்டுமென்று சொல்லி, வழிகாட்டியாக இருக்கிறாரா என்று எண்ணிப்பார்க்க வேண்டும். இப்படிப் போட்டு பயிற்சி அளிப்பதன் நோக்கம் என்ன என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. பயிற்சிக்காக என்று ஒதுக்கப்பட்ட பணத்தை எப்படியாவது செலவழிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் இப்படிச் செய்கிறார்களா என்பதற்கான பதிலை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீது நல்ல கருத்துக்களை வழங்கியமைக்காக மாண்புமிகு காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் மற்றுமுள்ள அத்தனை உறுப்பினர்களுக்கும் முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வழங்கப்பட்டிருக்கின்ற நல்ல ஆலோசனைகள் வேளாண்மைத் துறையை செழுமைப்படுத்துகின்ற ரசாயன உரமாக பயன்படும். சுட்டிக்காட்டியிருக்கின்ற கண்டனங்கள் நல்ல பூச்சி மருந்தாகப் பயன்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த





1984-85 ஆம் ஆண்டைப் பொறுத்தவரையில், அது ஒரு சாதனை ஆண்டு என்று சொல்லும் அளவுக்கு நம்முடைய சாதனை இருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு சுட்டிக்காட்டுகிறேன். தென்மேற்குப் பருவ மழை சரியான தருணத்தில் கிடைக்கவில்லை என்ற நிலையில், வட கிழக்குப் பருவ மழையும் 33 விழுக்காடு குறைவாகப் பெய்தாலும், துங்குரோ வைரஸ், மஞ்சள் நோய் காரணமாக நெல் பயிர் பாதிக்கப்பட்டிருந்த நிலையிலும் அவற்றை எல்லாம் பொறுமையாகச் சமாளித்து நம்முடைய விவசாயத் துறையினர் சொல்லிய சில ஆலோசனைகளை ஏற்று, புரிந்து, உணர்ந்து நல்ல முறையில் விளைச்சலை உண்டுபண்ணியது நம்முடைய விவசாயப் பெருமக்கள் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கரும்பு உற்பத்தியிலே உலகத்திலே முதல் இடத்தையும், நெல் உற்பத்தியிலே உலகத்திலே இரண்டாம் இடத்தையும் நாம் பெற்றிருக்கிறோம் என்று சொல்வது நம்முடைய முதுகை நாமே தட்டிப் பாராட்டிக்கொள்ள அல்ல. ஒவ்வொரு நிலையிலும் உலகத்தினுடைய விவசாயிகள் வளர்ச்சியிலும், இந்தியத் துணைக் கண்டத்தினுடைய விவசாயிகள் வளர்ச்சியிலும் நாமும் இணைந்திருக்கிறோம் என்பதைப் புரிந்துகொள்ளப் பயன்படும் குறிப்பு என்பதற்காக அது சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. விவசாயிகளுக்கு நவீன முறைகளைக் கற்றுத் தந்து அந்த முறைகளைப் பின்பற்றச் செய்ய வேண்டுமென்ற கருத்தையும் இந்தத் துறை ஏற்றுக்கொண்டிருக்கிறது. அதே நேரத்திலே பழைய முறைகளை முற்றிலுமாகப் புறக்கணித்து ஒதுக்கிவிட்டு விட வேண்டுமென்ற கருத்தை ஒத்துக்கொள்ளவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் அவர்கள் இங்கே வேளாண்மைத் துறை தொடர்பாக பல்வேறு கருத்துக்களைத் தொகுத்து ஒரு அரிய கலைக் களஞ்சியம் போல் உரை நிகழ்த்தினார்கள். நவீன முறைகளை வேளாண்மைத் துறை நடைமுறைப்படுத்துவது பற்றி சுட்டிக்காட்டினார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் நவீன முறைகளிலே வரக்கூடிய சிக்கல்களை எடுத்தியம்பினார்கள். வேளாண்மைத் துறையைப் பொறுத்தவரையில், டாக்டர் சனார்த்தனம் அவர்கள் சொன்ன கருத்துக்கும் திரு. சுப்பு அவர்கள் சொன்ன கருத்துக்கும் இடையிலேதான் இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். பழைய முறைகளை அப்படியே விட்டுவிடாமல், அதே நேரத்தில் உலகளாவிய முறைகளில் இருக்கிற விஞ்ஞான உத்திகளை அலட்சியப்படுத்தாமல், நம்முடைய வேளாண்மைத் துறையின் உயர்விற்குரிய நடவடிக்கைகளை தொடர்ந்து மேற் கொண்டிருக்

கிறோம், மேற்கொண்டும் வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். விவசாயம் செய்கிற, விவசாயப் பயிரை உற்பத்தி செய்து உற்பத்தியைப் பெருக்குகிற விவசாயப் பெருமக்கள் எந்த அளவுக்கு உயர்தரத்தை அடைய நடவடிக்கை எடுத்திருக்கிறது இந்த அரசு என்கிற கேள்வியைக் கேட்டால் இந்த அரசின் சார்பாக வேளாண் பெருமக்கள் தொடர்ந்து பல்வேறு சலுகை களை அனுபவித்து வருகிறார்கள் என்பதோடு கூட, மத்திய அரசு வழங்கு கின்ற பல்வேறு சலுகைகளையும் நம்முடைய விவசாயப் பெருமக்களுக்கு இந்த அரசின் மூலமாகத் தொடர்ந்து வழங்கி வருகிறோம் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். துணைத் தலைவர்

(பிற்பகல் 1-35)

அவர்கள் தஞ்சை மாவட்டத்தில் நிலவுகிற நிலைமைகளை இங்கே எடுத்துச் சொன்னார்கள். மின்சாரம் வழங்குவதில் அறிவிப்புகள் முரணாக இருக் கின்றனவே என்று குறிப்பிட்டார்கள். நான் இந்த அவையின் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன், தஞ்சையில் குறுவை சாகுபடிக்கு பகல் 6 மணி நேரமும், இரவு 8 மணி நேரமும் என்ற வகையில் தொடர்ந்து மின்சாரத்தை வழங்க ஆணையிட அரசு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இடைவெளி அதிகம் இருப்பதால், சிக்கல் ஏற்படும் என்று துணைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். பகலுக்கும் இரவுக்கும் அவ்வளவு இடைவெளி இல்லையென்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மேட்டூர் அணை எப்போது திறக்கப்படும் என்பதைக் குறிப்பிட்டு, 'விரைவில்' என்பதற்கு வெவ்வேறு விளக்கங்கள் சொல்லக்கூடாது என்று குறிப்பிட்டார்கள். மாண்புமிகு பாசனத் துறை அமைச்சரும் என்னிடத்தில் ஒரு கருத்தைச் தெரிவித்திருக்கிறார்கள். கபினி ஆற்றிலிருந்து தண்ணீர் வந்தவுடன், இரண்டொரு நாளில் அதுகுறித்து முடிவு செய்து நான்கைந்து தினங்களுக்குள் மேட்டூர் அணையைத் திறந்துவிடக்கூடிய வாய்ப்பு இருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

நெல் உற்பத்தி செய்யக்கூடிய விவசாயப் பெருங்குடி மக்களுக்கு கட்டுபடி யாகக் கூடிய விலை கிடைக்க வேண்டுமென்று அரசு எண்ணிப் பார்க்கிறது. விளை பொருட்களுக்கு எவ்வளவு விலை நிர்ணயிப்பது என்பதில் சிக்கலே இல்லை. மைய அரசில் இருக்கிற வேளாண்மை விலை நிர்ணயிப்புக் குழு நிர்ணயிக்கிற விலைக்கேற்ற வகையில், அதிகப்படும் தொகையைப் பணமாகக் கொடுத்தால், விவசாயிகளுக்கு நன்மை பயக்காது என்று கூறி, உரமாகக் கொடுக்கிறீர்களே என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதை உரமாகக் கொடுப்பதில் என்ன பயன்,





பணமாகக் கொடுக்கலாமே என்று சொன்னார்கள். தரக்கூடாது என்றல்ல. ஆனால் பணமாகத் தருவது தவறு என்று ரிசர்வ் வங்கி சுட்டிக்காட்டியிருக்கிற காரணத்தின் அடிப்படையில்தான் உரமாக வழங்குகிறோம் என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

நெல்லுக்கு இந்த ஆண்டிலும் குவிண்டாலுக்கு உதவித்தொகையாக ரூ. 15 வழங்குவதற்காக ரூ. 20 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்பதையும் நான் மாண்புமிகு உறுப்பினர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

பூச்சித் தாக்குதலை நாம் சமாளிக்கத் தவறியிருக்கிறோம், அதனால் பயிர்கள் நாசமாகியிருக்கின்றன என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்களும் மற்றவர்களும் இங்கே குறிப்பிட்டார்கள். விவசாயப் பணியிலேயே ஒரு கட்டமாக, ஒரு அங்கமாக பூச்சி மருந்து தெளிப்பது, நோய்களைக் கட்டுப்படுத்துவது என்பது இருக்கிறது. பூச்சி மருந்துகள் தெளிக்காத அளவுக்கு விவசாயத்தை மேற்கொள்ளவேண்டுமென்று நாம் கனவு கண்டாலும், தொடர்ந்து அது விவசாய முறைகளில் ஒன்றாக ஆகிவிட்டது. அப்படி நோய்களைக் கட்டுப்படுத்துவதற்குரிய முயற்சிகளை மிகப் பெரிய அளவில் இந்த அரசு எடுத்திருக்கிறது. அது 'துங்ரோ' நோயானாலும், மஞ்சள் வைரஸ் நோயானாலும் அவைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிற வகையில், இந்தத் துறை அயர்ந்து தூங்கிவிடவில்லை. பெரிய அளவில் விவசாயப் பெருமக்களுக்கு அந்த மருந்துகளை எப்படித் தெளிக்க வேண்டுமென்ற கருத்துக்களைச் சொல்லிக் கொண்டு வருவதோடு, மானிய விலையில் அவர்களுக்கு மருந்து வகைகளையும் தருகிறோம். ஆனால் தொடர்ந்து இந்த நோய்களைத் தடுப்பதிலேயே காலம் கடத்தாமல், புதிய முயற்சிகளிலும் ஈடுபட வேண்டும். இல்லாவிட்டால் விவசாயப் பெரு மக்களுடைய வாழ்வில் இருள் சூழ்ந்துவிடும். நோய்களைக் கண்டுபிடிக் கிறோம், அதே நேரத்தில் நோய் தாக்காத ரகங்களை உடனடியாகக் கண்டு பிடித்து, அந்த ரகங்களைப் பயிரிட வேண்டுமென்று விவசாயிகளுக்குச் சொல்லியிருக்கிறோம். அந்த வகையில் புதிய ரகங்கள் ஒவ்வொரு கட்டத் திலும் விவசாயிகளுக்கு அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இது தொடர்ந்து நடக்கவேண்டிய பணி, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் சொன்னதைப்போல, இது தொழில் அல்ல, இது ஒரு வாழ்க்கை முறை, இன்னும் சொல்லப்போனால், இது ஒரு தொண்டு என்று சொல்லக்கூடிய வகையில், அவர்கள் இந்தச் சிக்கல்களை சமாளித்துக்கொள்ள முடியாமல், அதை விட்டு ஓடிவிடாமல் தொடர்ந்து செய்து கொண்டிருக்கும் நிலைமையில்

இருக்கிறார்கள். ஆகவே அந்த வகையில், எந்தெந்த முறையில் அவர்களுக்கு ஊக்கத்தையும், உற்சாகத்தையும் வழங்க முடியுமோ அதைத் தொடர்ந்து வழங்குகிறோம் என்பதைக் கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்திருக்கிற கருத்துக்களின் அடிப்படையில், மானாவாரி நிலங்களைச் சாகுபடி செய்வதற்கு நவீன முறைகளை எப்படிப் பயன்படுத்துவது என்ற வகையில், இந்த ஆண்டு அரசு திட்டமிட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். உப்பு நீர் படிந்த நிலங்களை நல்ல நிலங்களாக மாற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன. களைகளை அகற்ற களைக்கொல்லி மருந்துகளுக்கு 50 சதவீதம் மானியம் வழங்க இந்தத் துறை திட்டமிட்டிருக்கிறது. எண்ணெய் விதைகளைப் பொறுத்தவரையில், ஜே. எல். 24 என்ற கடலை ரகம் விவசாயப் பெருமக்களால் வரவேற்கப்பட்டிருக்கிறது. கடந்த ஆண்டு இறவைப் பாசனத்தில் ஹெக்டேருக்கு 2 டன் என்ற அளவுக்கு மகசூல் கிடைத்திருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்கள் சொல்கிறபோது, நிலக்கடலை மிகப் பெரிய அளவில் பயிராகிறது என்றாலும், இந்தக் கொள்கைக் குறிப்பில் அது காணப்படவில்லையென்று சொன்னார்கள். இந்தக் கொள்கைக் குறிப்பில் 26-ஆம் பக்கத்தில் வழங்கப்பட்டிருக்கிற புள்ளி விபரங்களை அவர்கள் பார்த்தால், நிலக்கடலை முதலிடத்தில் குறிக்கப்பட்டிருக்கிறது என்பதைக் காணலாம். நாம் நிர்ணயித்த இலக்கை விட, அதிக விளைச்சல் நிலக்கடலையில் ஏற்பட்டிருக்கிறது என்பதைக் குறிப்பிட

(பிற்பகல் 1-40)

விரும்புகிறேன். அதைப்போலவே சோயா, மொச்சை, ஆமணக்கு, எள் போன்றவைகளை எல்லாம் அதிக அளவில் உற்பத்தி செய்யக்கூடிய திட்டங்களைத் தீட்டியிருக்கிறோம் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

மற்றொன்று, எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையத்தின் சார்பாக 144 இலட்சம் ரூபாயில் நெய்வேலியில் ஓர் உழவியல் மையம் அமைக்கப்படவிருக்கிறது என்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். மேலும் தேசிய பால்வள நிறுவனத்தினுடைய துணையோடு, உதவியோடு, நிதி ஆதாரத்தோடு நாம் தமிழ் நாடு எண்ணெய் வித்துக்கள் கூட்டுறவு உற்பத்தியாளர் இணையத்தைத் தொடங்கினோம். அதில் 152 கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கப்பட்டிருக்கின்றன என்பதையும் அவற்றினால் இந்த ஆண்டு 23,340 டன் நிலக்கடலை கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது என்பதையும் அதனால் நிலக்கடலை உற்பத்தி செய்யக்கூடிய விவசாய மக்களுக்கு நல்ல பலன் கிடைக்கும் என்பதையும், நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



திருவண்ணாமலை, விருத்தாசலம் ஆகிய இடங்களில் இருக்கும் இரு எண்ணெய் ஆலைகள் (டான்காப்) மூலமாக கடலை எண்ணெய் விற்பனைக்கு வரவிருக்கிறதென்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பொறியியல் துறை மூலமாக கசிவுநீர் குட்டைகள் கட்டப்பட்டிருப்பது எவ்வளவு பயனளிக்கிறது என்பதை மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இங்கே சுட்டிக்காட்டினார்கள். ஊரக வேலை வாய்ப்பு காப்புறுதித் திட்டத்தின்கீழ் அவைகள் கட்டப்பட்டிருக்கின்றன. தொடர்ந்து ஐரோப்பிய பொருளாதார நிதிக் குழுவினுடைய உதவியோடு இருநூறு ஹெக்டேருக்குக் குறைவான பாசனப்பரப்பு கொண்ட ஏரிகளை எல்லாம் நவீனப்படுத்துகின்ற முயற்சிகளையும் நாம் மேற்கொள்ளவிருக்கிறோம். நாம் மழையை மட்டும் நம்பியிருக்கக் கூடாது, தண்ணீரை பெருமளவிலே வீணாக்கவும் கூடாது என்கிற வகையில் சுழற்றுப் பாசனம், சொட்டுநீர்ப் பாசனம் போன்ற முறையை, நூறு ஹெக்டேரில் 300 பண்ணைகள் அமைத்து, அதன் மூலமாக வேளாண் பெருமக்களுக்கு விளக்கிக் காட்டியிருக்கிறோம். அதைப்போலவே பொறியியல் மையம் திருச்சியில் இருப்பதை இன்னும் கொஞ்சம் விரிவுபடுத்தி, அதிலே விவசாயப் பெருமக்களும் பயிற்சி பெறத் தக்க அளவுக்கு நிலைமைகளை உருவாக்க இருக்கிறோம் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களை சேமித்து வைக்கக் கூடிய வசதி விவசாயிகளுக்கு இல்லாத காரணத்தால்தான், பல நேரங்களில் அவர்கள் பொருளாதார அடிக்கு ஆளாகிறார்கள் என்பதை நாம் மறந்து விடுவதற்கில்லை. தக்காளியினுடைய விலை குறைகின்ற நேரத்திலே என்ன சூழ்நிலை, அதிகமாகின்ற நேரத்திலே என்ன சூழ்நிலை என்றெல்லாம் இங்கே கருத்துக்கள் பரிமாறப்பட்டன. அப்படிப்பட்ட அழுகும் பொருள்கள் உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகள், விவசாயப் பொருள்களை சேமித்து வைக்க முடியாத காரணத்தால், உடனடியாக வியாபாரிகள் கேட்கிற விலைக்கு விற்றாக வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகின்ற காரணத்தால், அவர்கள் பலமான அளவுக்கு பொருளாதார வீழ்ச்சிக்கு ஆளாகிறார்கள். வர்த்தகப் பெருமக்களின் சூதாட்டத்திலே பகடைக்காய்களாக இவர்கள் மாற்றப்படுகிறார்கள். இந்த நிலைமைகளையெல்லாம் போக்க வேண்டும் என்ற வகையில் தான் அழுகும் பொருள்களைச் சேமித்து வைத்து, விவசாயப் பெருமக்களுக்கு உரிய விலையைப் பெற்றுத்தர அதிக அளவுக்கு கிட்டங்கிகள் அமைக்கப்பட வேண்டுமென்ற வகையிலே அரசு திட்டமிட்டிருக்கிறதென்பதையும், 103 கோடி ரூபாய் அளவில் உலக வங்கியின் உதவியோடு தமிழகத்தினுடைய ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் இன்னும் நல்லமுறையில் கட்டப்படவிருக்

கின்றன என்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். 89 ஊரகக் கிட்டங்கிகள் இப்போது கட்டப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டு புதிதாக 15 ஊரக கிட்டங்கிகளும் கட்டப்பட இருக்கின்றன என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

13 விற்பனைக் குழுக்களினுடைய கட்டுப்பாட்டின்கீழ் 271 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் இப்போது தமிழகத்திலே இயங்கிக்கொண்டிருக்கின்றன. பெரியார் மாவட்டத்திற்கு என்று தனியாக ஒரு ஒழுங்குமுறை விற்பனைக் குழு அமைக்கப்பட இருக்கிறதென்பதையும் நான் இப்போது சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தோட்டத் துறை மூலமாக பழச் செடி உற்பத்தியை அதிகப்படுத்தும் முறையில் கடந்த ஆண்டு 19 இலட்சம் வழங்கப்பட்ட பழச்செடிகள் இந்த ஆண்டு 30 இலட்சமாக வழங்கப்பட விருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, என்கோபட் நிறுவனத்தின் மூலமாக, இலவசமாக விசைத் தெளிப்பான்கள் போன்றவைகளை பழுதுபார்ப்பதற்குரிய பணி முகாம்களை ஏற்படுத்திட இருக்கிறார்கள் என்பதையும், வேளாண் கருவிகளை விற்பனை செய்வதற்கு தஞ்சாவூர் மாவட்டம், மதுரை மாவட்டம் போன்ற பகுதிகளில் படிப்படியாக சிறப்பு அங்காடிகளையும் அவர்கள் நிறுவ இருக்கிறார்கள் என்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

வேளாண் தொழில் கழகத்தின் சார்பாக இந்த ஆண்டு ஒரு இலட்சம் டன் பெருமான அளவுக்கு உரம் விற்பனை செய்யப்பட இருக்கிறது என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தென்காசிக்கு அருகில் மல்லிகைப் பூவிலிருந்து 'சென்ட்' தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று நிறுவப்பட இருக்கிறது என்பதையும் அதைப்போலவே புதுக்கோட்டை மாவட்டம் கொல்லாகுளம் என்கிற கிராமத்தில் அரிசி தவிட்டிலிருந்து எண்ணெய் எடுக்கிற ஒரு ஆலை நிறுவப்பட இருக்கிறதென்பதையும் நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நம்முடைய வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் மூலமாக பல்வேறு பயனுள்ள பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. வேளாண்மைப் பல்கலைக்கழகம் தஞ்சை மாவட்டத்திற்குத் தேவை என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்கள் தெரிவித்தார்கள். தஞ்சாவூர் மாவட்டத்தில் காட்டுத்தோட்டத்தில் வேளாண்மைக் கல்லூரி அமைக்கப்படவிருக்கிற தென்பதையும், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயச்





சந்திரன் அவர்கள் கோரிக்கை ஏற்கப்பட்டு, வட ஆற்காடு மாவட்டம் நவலாக்கிலே இன்னொரு கல்லூரி அமைக்கப்பட விருக்கிறதென்பதையும், நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

16 புதிய ரகங்களை கடந்த ஆண்டிலே வேளாண்மைப் பல்கலைக் கழகம் வழங்கியிருக்கிறது. தொடர்ந்து வேளாண்மை விஞ்ஞானிகள், பூச்சிக் கொல்லி மருந்துகளைக் கண்டுபிடிக்க தொடர்ந்து ஆராய்ச்சி செய்து வருகிறார்கள். சிறு மலைப் பழம் அழிந்துவிட்டதென்ற ஏக்கம் நமக்கு இருந்தாலும், அதைக் காப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதையும் வேளாண்மைப் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் தடியன்குடிசை என்ற பகுதியிலே ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகிறார்கள். ஆகவே தொடர்ந்து தமிழகத்தினுடைய வேளாண்மையைப் பாதுகாப்பதற்குரிய நடவடிக்கைகள் எல்லா வகையிலும் மேற்கொள்ளப்படும் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-45)

பல்வேறு பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கடந்த ஆண்டிலே முகவை மாவட்டம், தர்மபுரி மாவட்டம், புதுக்கோட்டை மாவட்டம் ஆகிய மாவட்டங்களில் 30 வட்டாரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஒரு வட்டாரத்திற்கு 15 லட்சம் ரூபாய் என்கிற வகையிலே 450 லட்சம் ரூபாய் செலவிடப்பட்டது. இந்த ஆண்டு முகவை மாவட்டம், காமராசர் மாவட்டம் பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம், தர்மபுரி மாவட்டம், நெல்லை மாவட்டம் ஆகிய மாவட்டங்களில் இன்னும் 43 வட்டாரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒரு வட்டாரத்திற்கு 12 லட்சம் ரூபாய் என்கிற அளவிலே 516 லட்சம் ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே சுட்டிக்காட்டியிருக்கின்ற அத்தனை கருத்துக்களுக்கும் பதில் சொல்வதற்கு நேரம் இல்லை என்றாலும் அந்தக் கருத்துக்கள் எல்லாம் இந்தத் துறையினுடைய கவனத்திற்குரியவை, நடவடிக்கைக்கு உரியவை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். வேளாண் பெருமக்களைத் தாக்குகின்ற பல்வேறு பிரச்சினைகள், பல்வேறு துறைகளிலே பரவி இருப்பதனை இங்கே உறுப்பினர்கள் தெரிவித்தார்கள். அந்தப் பிரச்சினைகள் எல்லாம் பல்வேறு துறைகளின் மூலமாக உரிய கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதையும் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி இங்கே பேசிய உறுப்பினர்கள் வழங்கியிருக்கின்ற கருத்துக்களுக்கு மீண்டும் நன்றி கூறி விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

(மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து) [1985 ஜூன் 28

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உதவிப் பேராசிரியர்களுடைய குறை பற்றி இன்று அரசு பரிசீலித்து வருகிறதா?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** மாண்புமிகு டாக்டர் சனார்த்தனம் அவர்கள் தெரிவித்திருக்கின்ற கருத்தை அரசு தீவிரமாகப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் 11-7-1985 வியாழக்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 1-46)

5. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

238. தமிழ்நாடு 1944 ஆம் ஆண்டு அடகுக்கடைக்காரர்கள் விதிகளில் திருத்தம் செய்வது தொடர்பாக கூட்டுறவுத் துறையின் 12-2-85 ஆம் நாளிட்ட 68 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1943 ஆம் ஆண்டு அடகுக் கடைக்காரர்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1943) 22(4) பிரிவின்கீழ் அவை முன் வைக்கப்படுகிறது.]

239. வருவாய்த்துறையில் 23-7-1985 ஆம் நாளிட்ட, 351/1965, III ஆம் எண் அறிவிக்கையில் திருத்தம் செய்வது தொடர்பாக வணிகவரிகள்—அறநிலையத்துறையின் 2-5-85 ஆம் நாளிட்ட, 379 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது.]

240. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச்சட்டத்தின் கீழ், இரால், ஏனைய வகை மீன் இடங்களின் கொள்முதல் மீது செலுத்தத்தக்க வரியிலிருந்து வணிகர் ஒருவருக்கு அளிக்கப்பட்ட விதிவிலக்கு தொடர்பாக வணிகவரிகள்—அறநிலையத்துறையின் 8-5-85 ஆம் நாளிட்ட 404 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது.]



1985 ஜூன் 28]

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்

* 126. தொழில் கொள்கையும் திட்டங்களும் (பெருந் தொழில்கள்), 1985-86 (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

127. 1985-86 ஆம் ஆண்டிற்கான தொழில்கள் பற்றிய சாதனைத் திட்டம் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

128. 1985-86 ஆம் ஆண்டிற்கான புவியியல் மற்றும் சுரங்கத்துறை பற்றிய செயலாக்கத் திட்டம் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

129. 1984-85 ஆம் ஆண்டின் பொதுப் பணித்துறையின் (கட்டடப் பிரிவு) பணிகள் பற்றிய ஆய்வுரை (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

* 27-6-1985 அன்று மேலவை உறுப்பினர்கள் அனைவருக்கும் சுற்றோட்ட முறையில் அனுப்பப்பட்டது.

## இணைப்பு

[818 ஆம் பக்கத்தில் இனம் 3(1)-க்கான அடிக் குறிப்பைக் காண்க]

மதுரை, திருநகரிலுள்ள சீதாலெட்சுமி மில்ஸ் என்னும் நூற்பாலையில் சுமார் 1,300 தொழிலாளர்கள் பணி புரிகின்றனர்.

2. திருவாளர்கள் சுலைமான் சேட், மகேந்திரன் மற்றும் சுந்தர்ராஜ் என்ற 3 தொழிலாளர்களின் வேலை நீக்கத்தை ஆட்சேபித்து ஆலையிலுள்ள தொழிலாளர்கள் 29-5-85 இரவு முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். திருவாளர்கள் சுலைமான் சேட், மகேந்திரன் ஆகியோர் மீது ஒப்பந்தக்காரர் களிடம் ரூ. 2,000/- லஞ்சம் பெற்றதாகவும், திரு. சுந்தர்ராஜ் என்பவர் மீது திறமையின்மை, கவனக்குறைவு, பணியாமை போன்றவற்றிற்காக குற்றம் சுமத்தப்பட்டு அகவிசாரணைக்குப் பிறகு 27-5-85 முதல் வேலை நீக்கம் செய்யப்பட்டனர். இத் தொழிற் தகராறில் மதுரை தொழிலாளர் துறை உதவி ஆணையர் (சமரசம்) மற்றும் தொழிலாளர் துறை துணை ஆணையர் முன்பு நடைபெற்ற பேச்சு வார்த்தைகளில் ஒரு முடிவும் ஏற்படவில்லை.

3. இத் தொழிற் தகராறில் 18-6-85 அன்று சென்னை தொழிலாளர் துறை தனித் துணை ஆணையர் மதுரை சென்று பேச்சு வார்த்தை நடத்தினார். வேலை நீக்கம் செய்யப்பட்ட 3 தொழிலாளர்களைத் திரும்பவும் வேலைக்கு எடுத்துக் கொள்ள நிர்வாகம் அப்போது இணங்கவில்லை. பிரச்சனையில் தீர்வு காண வழக்கை நடுவர் தீர்ப்புக்கோ அல்லது இரு தரப்பினரும் சேர்ந்து தொழில் நீதிமன்றத் தீர்ப்புக்கோ விடலாம் என்று தொழிலாளர் துறை தனித் துணை ஆணையரால் ஆலோசனைகள் வழங்கப்பட்டன. மேற்கொண்டு இப் பிரச்சனையில் தொழிலாளர் துறை தனித் துணை ஆணையர் முன்பு பேச்சு வார்த்தைகள் 28-6-85 அன்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இப் பிரச்சினையில் சமரசப் பேச்சு வார்த்தைகள் மூலம் ஒரு சுமூகமான முடிவு காண்பதற்கு எல்லாவிதமான முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.

## இணைப்பு II

[819 ஆம் பக்கத்தில் இனம் 3(2)-க்கான அடிக் குறிப்பைக் காண்க]

1981-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி குடியாத்தம் நகராட்சியின் மக்கள் தொகை 72,044 ஆகும்.

2. குடியாத்தம் நகராட்சியின் குடிநீர் திட்டம் 1960 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டு நகராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டது. மேலும் இக் குடிநீர் திட்டத்தின் மேம்பாடு திட்டம் 1981-ஆம் ஆண்டு முடிக்கப்பட்டு 24 மணி நேர குடிநீர் வழங்குதலுக்கு ஆவண செய்யப்பட்டுள்ளது. இத்திட்டங்





களின்படி இந்நகராட்சியில் எல்லா மக்களுமே பயன்பெறுகிறார்கள். இக் குடிநீர் திட்டத்தின் தலைப்பிடம் கவுண்டன்ய ஆறு மற்றும் பாலாறு ஆகும். நாள் ஒன்றுக்கு 16 மணி நேர அளவிற்கு நீரேற்றம் செய்து சுமார் 41 லட்சம் லிட்டர் நீர் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது குடியாத்தம் நகராட்சியில் 17 ஆழ்குழாய் கிணறுகள் உபயோகத்தில் உள்ளது. மேலும் 17 திறந்தவெளி கிணறுகளும் பயன்படுத்த ஏற்றவகையில் பொதுமக்களின் உபயோகத்தில் உள்ளது.

3. எனினும், உயர்ந்துவிட்ட மக்கள் தொகை காரணமாக மேலும் ஒரு மேம்பாட்டுத் திட்டம் ரூ. 99-40 இலட்சம் மதிப்பீடு செய்யப்பட்டு பணி ஆய்வில் உள்ளது.

## இணைப்பு III

[820 ஆம் பக்கத்தில் இனம் 4-க்கான அடிக் குறிப்பைக் காண்க.]

### கொள்கை விளக்கம்—1985-86.

### வேளாண்மை

நமது பொருளாதாரச் சீர்மைக்கு வேளாண்மை இன்றியமையா அடிப் படை என்பதோடு, இத்தொழிலில் ஏற்படுகின்ற சிறு ஏற்றத்தாழ்வு கூட, சமுதாயம் முழுவதையுமே உயர்த்தவோ, தாழ்த்தவோ செய்யும். இதனைக் கருத்தில் கொண்டு உணவு உற்பத்தியைப் பெருக்கவும் ஊரக பொருளாதாரத்தை உயர்த்தவும், தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களைத் தீட்டி செயல்படுத்துகிறது. அவற்றுள் வேளாண்மை விரிவாக்கப் பணிகளை சீரமைக்கும் திட்டம், தரமான விதை, உரம், பூச்சி மருந்து போன்ற இடு பொருட்களைத் தக்க நேரத்தில்—தக்க இடத்தில்—கிடைக்க வழி செய்யும் திட்டம், வேளாண் தொழில் நுட்பங்களை விரைந்து பரப்பும் திட்டம், தக்க காலத்தே மேற்கொள்ளும் பயிர் பாதுகாப்புத் திட்டம், அதிலும் குறிப்பாக பெருவாரியான பரப்புகளில் எடுக்கப்படும் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்புத் திட்டம், சிறிய நீர் பராமரிப்பு மற்றும் மானாவாரி சாகுபடி அபிவிருத்தி போன்ற சில திட்டங்களையும், செயல் முறைகளையும் முக்கிய குறிக்கோளாக கோடிட்டுக் காட்டலாம்.

இத்திட்டங்களின் பலனாக செந்நெல்லும் செங்கரும்பும் தமிழகத்திற்கு உயர் பெயர் ஈட்டித் தந்திருக்கிறது. கரும்பு உற்பத்தித் திறனில் தமிழகம் இந்தியாவிலேயே முதலிடத்தையும், அரிசி உற்பத்தித் திறனில் இரண்டாவது இடத்தையும் வகிக்கிறது. உலக ரீதியில் கூட, கரும்பு உற்பத்தித் திறனில்

[1985 ஜுன் 28

நாம் தான் முதலிடம் வகிக்கிறோம். நம் மாநிலத்தில் விளையும் மற்ற உணவுத் தானியங்களின் சராசரி உற்பத்தித் திறன்கூட, இந்தியச் சராசரி உற்பத்தி திறனை விட மிகுதியாகவே உள்ளது என்று பெருமிதம் அடையலாம். இருப்பினும் உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய தேவையும் வாய்ப்பும் உள்ளது.

### பருவ நிலைகள்.

இவ்வாண்டு தென்மேற்கு பருவத்தில் கிடைக்கப்பெற்ற 505.4 மி.மீ. மழை சராசரி மழையளவான 444 மி.மீ.ஐ. விட சிறிது அதிகம் என்றாலும் இம் மழை பரவலாக பெய்யவில்லை. அதன் காரணமாக மானாவாரி பயிர்களில் பாப்பு வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது. வடகிழக்கு பருவத்தில் சராசரி மழை அளவான 448.4 மி.மீ.க்கு பதிலாக 344.2 மி.மீ. அளவுதான் மழை பெய்தது. மேலும், இம்மழை மாநிலம் முழுவதும் பரவலாக பெய்யவில்லை. இதன் விளைவாக இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கம், காமராசர் மற்றும் வட ஆற்காடு மாவட்ட ஏரி பாசன நிலங்களும் புதுக்கோட்டை மற்றும் தருமபுரி மாவட்ட மானாவாரி சாகுபடியும் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டன.

நவம்பர் மாத புயலால் ஏற்பட்ட வெள்ளம் சென்னை மற்றும் செங்கல் பட்டு மாவட்டங்களை மோசமாக தாக்கி பயிர்களுக்கும், பொது உடைமை களுக்கும் சேதம் விளைவித்தது.

செங்கை மாவட்டத்தில் நெல் மற்றும் இதரப் பயிர்கள் மிகவும் பாதிக்கப் பட்டு வெள்ள நிவாரணமாக விதை, உரம், ஜிப்சம், பூச்சிகொல்லி மருந்து ஆகியவை இலவசமாக சிறு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. உப்பு மற்றும் மணல் மேவப்பட்ட நிலங்களின் சீர்திருத்தம் உரிய துறைகள் மூலம் செயல் படுத்தப்பட்டன.

### பயிர் உற்பத்தி.

குறைவான மற்றும் பரவலாகப் பெய்யாத பருவமழை, பெருமளவு மானா வாரி பயிர்ச் சாகுபடியை பாதித்தது மட்டுமின்றி ஓரளவு மழையை நம்பி யுள்ள ஏரிகளின் கீழ் பயிராகும் பயிர்களின் சாகுபடியையும் பாதித்துள்ளது. பருவநிலைப் பாதிப்பிலிருந்து விடுபட, அரசு தம் திறமை முழுவதையும் பயன் படுத்தி மாற்றுப் பயிர் சாகுபடி முறைகளை செயல்படுத்தி தேவைப்பட்ட இடங்களுக்கு விதை, உரம் மற்றும் பூச்சி மருந்துகளைக் கொண்டு சென்று நிலைமையைச் சமாளிக்க வேண்டியிருந்தது.



1985 ஜுன் 28]

இவ்விடர்ப்பாடுகள் காரணமாக 1984-85-ம் ஆண்டில் உற்பத்தி கீழ்க் கண்டவாறு இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| அரிசி .. .. .. | 56.00 | இலட்சம் டன்கள் |
| சிறு தானியங்கள் .. | 18.00 | ஷை |
| பயறு வகைகள் .. | 3.40 | ஷை |
| கரும்பு (வெல்லம் அளவில்) | 20.50 | ஷை |
| பருத்தி .. .. | 4.75 | இலட்சம் பொதிகள். |

### நெல் மற்றும் சிறு தானியங்கள்.

1985-86-ம் ஆண்டு சுமார் 26.50 இலட்சம் எக்டேர்களில் நெல் சாகுபடி செய்வதன் மூலம் சுமார் 63 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்ய குறிக்கோள் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதே போல் மானாவரி சாகுபடியில் கவனம் செலுத்தி சிறு தானியங்கள் உற்பத்தியை சுமார் 22 இலட்சம் டன்களாக உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்தக் குறியீடு இறவை மற்றும் மானா வாரி சாகுபடிக்கு ஏற்றதாக பருவநிலை அமையும் என எதிர்பார்த்து நிர்ண யிக்கப்பட்டது.

புதிய இரகங்களை அறிமுகப்படுத்தல், தேவையான அளவு இடுபொருட் களை காலத்தே வழங்குதல், ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகள், தக்க நீர் பராமரிப்பு முறைகள் மற்றும் மானாவரி சாகுபடி முறைகள், திருத்திய அறுவடைக்குப்பின் கையாளப்பட வேண்டிய தொழில் நுட்பங்கள் ஆகியவை முன்சொன்ன குறிக்கோள்களை அடைய கையாளப்படப் போகும் வழிமுறைகளாகும்.

### எக்டேருக்கு 5 டன் நெல் உற்பத்தி.

இவ்வாண்டு அரிசி உற்பத்தியைப் பெருக்க எக்டேருக்கு 5 டன் என்ற திட்டம் புகுத்தப்பட்டது. இம் மாநிலத்தின் அரிசி தேவையைப் பூர்த்தி செய்ய தற்போதுள்ள பரப்பிலேயே உற்பத்தியை அதிகப்படுத்தி அதன் மூலம் உபரியாகும் நிலங்களை வேறு பணப் பயிர்களுக்கு திருப்புவதன் மூலம் வேளாண் குடிமக்களின் வருவாயை பெருக்கி ஊரகப் பொருளாதார நிலையை உயர்த்தும் முயற்சியே இத் திட்டத்தின் சீரிய நோக்கமாகும். இவ்வாண்டு குறுவை பருவத்தில் கிடைக்கப் பெற்ற விளைச்சல் மிகவும் ஊக்கமளிப்பதாக உள்ளது. மாநிலத்தில் பல இடங்களில் எக்டேருக்கு 5 டன் உற்பத்தி எடுக்கப்

பட்டுள்ளது. இதே நிலையைச் சம்பா பருவத்திலும் பெற எல்லா வித முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் 1985-86-ம் ஆண்டு தீவிர மாகச் செயல்படுத்தப்படும்.

### 3பி திட்டம்.

ஊரக வளர்ச்சியே வேளாண்மை விரிவாக்கப் பணியின் முடிவான குறிக் கோள். இலாபகரமில்லாத எவ்வித விரிவாக்க பணியும் அர்த்தமற்றது. இக் குறிக்கோளை நினைவில் கொண்டு உற்பத்தித் திறனையும், இலாபத்தையும் அதிகரிக்க வழி செய்யும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. இத் திட்டத்தில் ஒவ்வொரு வேளாண்மை உதவி இயக்குநரும் தங்கள் எல்லைக்குட்பட்ட இரண்டு இடங்களில் இரண்டு செயல் விளக்கங்கள் 10 முதல் 20 எக்டேர் பரப்பில் அமைத்து, அதில் பங்கு பெறும் விவசாயிகள் நிலத்திலேயே பொருத்தமான புதிய வேளாண்மைத் தொழில் நுட்பங்களை செயல் விளக்கம் செய்து காட்ட வேண்டும். இத்திட்டம் 1985-86-ம் ஆண்டு விரிவுபடுத்தப் படும்.

### உயர் விளைச்சல் இரகத் திட்டம்.

1984-85 ஆம் ஆண்டு 23.05 இலட்சம் எக்டேரில் நெல்லும், 8.15 இலட்சம் எக்டேரில் சிறு தானியங்களும் உயர் விளைச்சல் இரகங்களின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. 1985-86 ஆம் ஆண்டு சுமார் 24.00 இலட்சம் எக்டேர்களில் நெற் பயிறும் மற்றும் சுமார் 10 லட்சம் எக்டேர்களில் சிறு தானிய உயர் விளைச்சல் இரகங்களை பயிரிட திட்டமிடப்பட்டுள்ளது.

புதிய 20 அம்சத் திட்டத்தின்கீழ் 1984-85 ஆம் ஆண்டில் 26,823 பலவகை யான வேளாண்மைக் கருவிகள் வழங்கப்பட்டன. 1,214 விதை மற்றும் உர மிடும் கருவிகள் வழங்கப்பட்டன. 1985-86 ஆம் ஆண்டும் 20,000 விதை மற்றும் உரமிடும் கருவி உட்பட விவசாயக் கருவிகள் வழங்க உத்தேசிக்கப் பட்டுள்ளது.

### பருத்தி.

கோடை சாகுபடி பருத்தி பரப்பு அதிகமானதன் காரணமாக 1984-85-ம் ஆண்டு சுமார் 2.68 இலட்சம் எக்டேரில் பயிரிடப் பட்டு, 4.75 இலட்சம் பொதிகள் உற்பத்தி அடையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. 1985—86-ம் ஆண்டு 3.60 இலட்சம் எக்டேரில் பயிரிட்டு 5.00 இலட்சம் பொதிகள் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.



### கரும்பு.

தற்போதுள்ள 23 சர்க்கரை ஆலைகள் மற்றும் வெல்லம் தயாரிப்பாளர் களின் தேவையை பூர்த்தி செய்ய கரும்பு பெருக்கத்திட்டம் செயல்படுத்தப் பட்டு வருகிறது. 1984-85-ம் ஆண்டு 1.83 இலட்சம் எக்டேரில் கரும்பு பயி ரிடப்பட்டுள்ளது. இவ்வாண்டு கரும்பு (வெல்லம் அளவில்) உற்பத்தி 20.50 இலட்சம் டன்களாக இருக்கும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது. 1985-86-ம் ஆண்டு 1.82 இலட்சம் எக்டேரில் பயிரிடப்பட்டு, 22.00 இலட்சம் டன்கள் வெல்லம் என்ற அளவில் கரும்பை உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

இம்மாநிலத்தில் 21 ஒட்டுண்ணி உற்பத்தி நிலையங்கள் உள்ளன. 1984-85-ம் ஆண்டில் கரும்பு இடைக்கணு புழுவைக் கட்டுப்படுத்தும் ஒட்டுண்ணியை வளர்த்து 7,826 எக்டேரில் விடப்பட்டுள்ளது. அதே போல 1985-86-ம் ஆண்டு 10,500 எக்டேரில் ஒட்டுண்ணிகள் விடப்படும்.

### பயறு வகைகள்.

நமது மாநிலத்தில் பயறு வகைத் தேவைகள் ஆண்டுக்கு ஏறத்தாழ 9 இலட்சம் டன்கள் ஆகும். ஆனால், நம்முடைய உற்பத்தி சுமார் 3 இலட்சம் டன்களாகவே உள்ளது. எனவே, நமது தேவையைப் பூர்த்தி செய்ய, பெருமளவு பயறு வகைகள் பிற மாநிலங்களிலிருந்து இறக்குமதி செய்யப்படு கிறது. பயறு உற்பத்தியை இரு மடங்கு ஆக்குவதற்காக, 1980—81-ம் ஆண்டு "பயறு உற்பத்தி ஆண்டுத் திட்டம்" என்ற மாநில அரசுத் திட்டம் ஒன்று தொடங்கப்பட்டது. 1984-85 ஆம் ஆண்டில் பயறு வகை சாகுபடி பரப்பு 10.34 இலட்சம் எக்டேரிகளில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. 1984—85-ம் ஆண்டில் கோடைப் பருவத்தில் தீவிர சாகுபடி திட்டத்தை மேற்கொண்டு 4.5. இலட்சம் எக்டேரில் பயிறுவகைகள் பயிரிட உத்தேசிக்கப் பட்டுள்ளது 1984—85-ம் ஆண்டு பயறு வகைகள் உற்பத்தி சுமார் 3.40 இலட்சம் டன்களாக இருக்கும் என மதிப்பிடப் பட்டுள்ளது. 1985—86 ஆம் ஆண்டில் 10.10 இலட்சம் எக்டேரில் பயறுவகை சாகுபடி செய்து உற்பத்தியை 3.50 இலட்சம் டன்கள் ஆக்க திட்டமிடப்பட்டுள்ளது.

பயறுவகை உற்பத்தியை அதிகரிக்க, நுண்ணுயிர் கலவையைப் பயறுவகை விதைகளுடன் கலந்து விதைக்கும் பொருட்டு நுண்ணுயிர் கலவைப் பொட்டலங்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. 1984-85-ம் ஆண்டு 4.928 இலட்சம் பொட்டலங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. 1985-86-ம் ஆண்டில் 7 இலட்சம் பொட்டலங்கள் விநியோகிக்கப்படும்.

இலை வழியாக "டை அமோனியம் பாஸ்பேட்" தெளிப்பதால் பயறு உற்பத்தி அதிகரிக்கிறது. இத்திட்டத்தின்கீழ் 1984-85-ம் ஆண்டு 10,572 எக்டேரில் "டை அமோனியம் பாஸ்பேட்" தெளிக்கப்பட்டுள்ளது. 1985-86 ஆம் ஆண்டில் 10,000 எக்டேரில் இத்திட்டத்தை செயல்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பயறு உற்பத்தி நுணுக்கங்களை வேளாண் பெருங்குடி மக்கள் அறிந்து கொள்ளும் பொருட்டு, ஊராட்சி ஒன்றியத்திற்கு ஆண்டுக்கு நூறு விவசாயிகள் விதம் தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது. 1984-85ம் ஆண்டு 36,821 விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 1985-86 ஆம் ஆண்டிலும் 36,800 விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

மைய அரசின் பயறு வகைத் திட்டம் மற்றும் கோடைப் பயறு வகை சாகுபடித் திட்டங்களின் கீழ் 1984-85-ம் ஆண்டு 2,480 எக்டேரில் நீர்பாசன மானியம் வழங்கப்பட்டுள்ளது. 522 எக்டேர் பரப்பளவில் திருபணத் தளைகள் அமைக்கப்பட்டன. 50 சதவீத மானியத்தில், உழவர்களுக்குப் பூச்சி மருந்துகள் 4,097 எக்டேர் பரப்பளவிற்கு வழங்கப்பட்டன. 50 சதவீத மானியத்தில் 1,194 பயிர்ப்பாதுகாப்புக் கருவிகளும், 1,64,759 நுண்ணுயிர் கலவைப் பொட்டலங்களும். விநியோகிக்கப்பட்டுள்ளது. மேலே குறிப்பிட்ட இத்திட்டப் பணிகள் 1985-86 ஆம் ஆண்டிலும் செயல்படும். இது தவிர 1984-85 ஆம் ஆண்டு 4,724 குவிண்டாலுக்கு சான்று பெற்ற விதை உற்பத்தி மானியத் தொகை இத்திட்டத்தின் கீழ் அளிக்கப்பட்டுள்ளது. 1985-86 ஆம் ஆண்டில் 6,000 குவிண்டால்கள் சான்று பெற்ற விதைகளுக்கு மானியம் அளித்து கொள்முதல் செய்யப்படும்.

## புகையிலை.

வாய்மூலம் மெல்லும் புகையிலை விளைச்சலையும் தரத்தையும், அதிகரிக்க இப்பயிரின் கட்டுக்கோப்பு சாகுபடி முறைகளை நாற்றங்கால் முதல் அறுவடை வரை எடுத்துரைக்கவும், திருபணத் தளைகள் அமைத்து விளக்கவும், ஒரு திட்டம் நமது மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 1984-85-ம் ஆண்டு 0.12 இலட்சம் எக்டேர்கள் வரை பயன் அடைந்துள்ளது. 1985-86-ம் ஆண்டில் இத்திட்டம் 0.19 இலட்சம் எக்டேரில் செயல்படுத்தப்படும்.



வளர்ந்து வரும் மக்கட் தொகைக்கு உணவளிக்கவும் மற்றும் ஏனைய விளைபொருட்களை உற்பத்தி செய்யவும் வேண்டிய முயற்சிகளின் தொடர்பாகவும் வேளாண் குடிமக்களின் பொருளாதார நிலையை உயர்த்தும் சீரிய நோக்கத்துடனும், 1985-86 ஆம் ஆண்டு கீழ்க்கண்ட உற்பத்தி இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது :—

(இலட்சம் டன்கள்)

| | |
|---|---|
| அரிசி .. .. .. .. | 63.00 |
| சிறுதானியங்கள் .. .. .. | 22.00 |
| பயறுகள் .. .. .. .. | 3.50 |
| கரும்பு (வெல்லம் அளவில்) .. .. | 22.00 |
| பருத்தி .. .. .. .. | 5.00 |

இலட்சம் பேல்கள் (பொதிகள்).

## விதை பெருக்கத் திட்டம்.

மாநிலத்தில் மொத்தம் 44 அரசு விதைப்பண்ணைகள் உள்ளன. அவை குறிப்பாக ஆதார விதை உற்பத்தியையும், ஓரளவு சான்றிதழ் பெற்ற விதைகளையும் உற்பத்தி செய்வதில் ஈடு பட்டுள்ளன. இதற்குத் தேவையான (மூலவிதை) கோவை வேளாண்மைப் பல்கலைக் கழகத்திடமிருந்து பெறப்பட்டு அரசு விதைப் பண்ணைகளில் பெருக்கம் செய்து விவசாயிகளுக்கு வினியோகிக்கப்படுகிறது.

## நெல் மற்றும் சிறுதானியங்கள்.

அதிக உற்பத்திக்கு முக்கிய இடுபொருள் பொறுக்கு விதையே ஆகும். இவ்வரசின் தற்போதைய கொள்கை மொத்த பரப்பிற்கு தேவையான விதையில் நெல்லில் 10 சதவீதமும், கேழ்வரகில் 15 சதமும், இராகச் சோளத்தில் 7 சதமும், ஒட்டுரகச் சிறு தானியங்களுக்கு 40 சதமும் துறை மூலம் விநியோகம் செய்வதாகும்.

1984-85 ஆம் ஆண்டு 14,143 டன்கள் நெல் விதையும், 364 டன்கள் கேழ்வரகு விதையும், 537 டன்கள் இரகச் சோளம் விதையும், 81 டன்கள் ஒட்டுரகச் சோளம் விதையும், 408 டன்கள் கம்பு விதையும். 110 டன்கள் மக்காச் சோள விதையும் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

### 1985-86 ஆம் ஆண்டிற்கான திட்டம்.

1985-86 ஆம் ஆண்டு கீழ்க்கண்டவாறு சான்றிதழ் பெற்ற விதைகள் விநியோகம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.—

| | பரப்பு விழுக்காடு. | விதை அளவு டன்கள். |
|---|---|---|
| நெல் .. .. | 12 | 16,200 |
| கேழ்வரகு .. .. | 16 | 226 |
| இரகச் சோளம் .. | 7 | 161 |
| ஒட்டுரகச் சோளம் .. | 40 | 157 |
| ஒட்டுரகக் கம்பு .. | 40 | 432 |
| ஒட்டுரக மக்காச் சோளம் .. | 40 | 122 |

### பயறு வகைகள்.

1984-85 ஆம் ஆண்டு சான்றிதழ் பெற்ற விதைகள் உட்பட 2,498 டன்கள் தரமான விதைகள் விநியோகிக்கப்பட்டன. 1985—86-ஆம் ஆண்டு 10 சதம் பரப்புக்கு தேவையான 2,635 டன்கள் விதை விநியோகம் செய்யப்படும்.

### புகையிலை.

1984-85 ஆம் ஆண்டு 440 கிலோ விதைகள் கொள்முதல் செய்து விநியோகம் செய்ய உத்தேசிக்கப்பட்டதில், 363 கிலோ விதைகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. 1985-86 ஆம் ஆண்டு 440 கிலோ விதைகள் கொள்முதல் செய்து விநியோகம் செய்யப்படும்.

### பருத்தி.

பருத்தி சாகுபடியில் மானாவாரி பரப்பில் 10 சதம் பரப்புக்கும் இறைவை பரப்பில் 15 சதம் பரப்புக்கும் தரமான விதைகளை விநியோகம் செய்வது இத்துறையின் கொள்கையாகும். அதன்படி 1984-85 ஆம் ஆண்டில் 3,512 குவிண்டால்கள் விதை விநியோகம் செய்யப்பட்டுள்ளது. 1985-86 ஆம் ஆண்டு 5,485 குவிண்டால்கள் தரமான பொறுக்கு விதை விநியோகம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.





### கரும்பு.

கரும்பு விதைக் கரணை பெருக்குத் திட்டம் மூன்று அடுக்குகள் கொண்ட தரமான விதைக்கரணைகள் பெருக்கம் செய்யும் நாற்றங்கால் திட்டமாகும். 1984-85-ம் ஆண்டு 32 எக்டேர்கள் முதல் தர, 362 எக்டேர் இரண்டாம் தர மற்றும் 3,086 எக்டேர் வணிக ரீதி நாற்றங்கால் நிறுவப்பட்டுள்ளது.

1985-86 ஆம் ஆண்டு 35 எக்டேரில் முதல் தரம், 350 எக்டேரில் இரண்டாம் தரம், மற்றும் 3,500 எக்டேரில் வணிக ரீதி நாற்றங்கால் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### இடுபொருள் இருவார விழாக்கள்.

விவசாயிகளிடையே வேளாண் இடுபொருள்களை காலத்தே மற்றும் போதிய அளவு பயிருக்கு இடுதல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த ஆண்டுக்கு இரண்டுமுறை இரு பருவங்களுக்கு வெகுமுன்னதாகவே இடுபொருள் இருவார விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. அதில் வேளாண் இடு பொருள்கள் சம்பந்தப்பட்ட எல்லா நிறுவனங்களும் பங்கேற்கும். அதில் கருத்துக்காட்சி, கிராமங்களிலேயே இடு பொருள்கள் வழங்கும், மரம் நடுதல் ஆகியவை அமைப்பதுடன் மைய மற்றும் மாநில உயர்மட்ட அலுவலர்களும் பங்கேற்பார்கள். இத்திட்டம் 1985-86 ஆம் ஆண்டும் தொடரப்படும்.

### உரங்கள்.

1984-85 ஆம் ஆண்டு 3.94 இலட்சம் டன்கள் தழைச்சத்து, 1.38 இலட்சம் டன்கள் மணிச்சத்து மற்றும் 1.58 இலட்சம் டன்கள் சாம்பல் சத்து அடங்கிய உரங்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. இவ்வாண்டு உர விநியோகம் மொத்தம் 6.90 இலட்சம் டன்களாகும். இது ஒரு குறிப்பிடத்தக்க சாதனையாகும். உர உபயோகத்தை அதிகப்படுத்த தீவிர உர விநியோகத் திட்டம் சேலம், தர்மபுரி, புதுக்கோட்டை, இராமநாதபுரம், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய 6 தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் செயல் படுத்தப்படுகிறது.

இரசாயன உரங்களை, இயற்கை உரங்களுடன் பயன்படுத்த விவசாயிகளுக்கு பரிந்துரைக்கப்படுகிறது. இயற்கை உரங்களின் உபயோகத்தை ஊக்குவிக்க நீலப்பச்சைப்பாசியின் உபயோகம் நெல் பயிரிடும் விவசாயிகளிடையே பரவிட வழிவகை செய்யப்படுகிறது. 1984-85 ஆம் ஆண்டு 1,049 டன்கள் நீலப்பச்சை பாசி பெருக்கப்பட்டு 1.05 இலட்சம் எக்டேர் பரப்பில் இட விநியோகம் செய்யப்பட்டது.

1994-85 ஆம் ஆண்டு 93.68 இலட்சம் டன்கள் உள்ளூர் உரங்களும், 3.56 இலட்சம் டன்கள் மலமக்கு உரங்களும் தயாரித்து உபயோகப்படுத்தப் பட்டன.

1985-86 ஆம் ஆண்டு 3.95 இலட்சம் டன்கள் தழைச்சத்தும், 1.20 இலட்சம் டன்கள் மணிச்சத்தும், 1.20 இலட்சம் டன்கள் சாம்பல் சத்தும் கொண்ட மொத்தம் 6.35 இலட்சம் டன்களாக உர விநியோகம் செய்வது நமது குறிக்கோள் ஆகும். அதற்கான வழிமுறைகள் சில—

1. நிலத்திற்கேற்ப பரிந்துரைகள்.

2. உரமிடும் காலம் மற்றும் முறைகள் போன்ற நவீன உழவியல் முறைகளைத் தெரியப்படுத்துதல்.

3. உர நிரூபண செயல் விளக்கங்கள், வயல் விழாக்கள், இயக்கங்கள், கருத்தரங்குகள் மற்றும் விளம்பரங்கள் மூலம் உர விநியோகம் குறைவான பகுதிகளில் அதிகப்படுத்துதல். இது போன்ற செயல்முறைகள் மூலம் தீவிர உர விநியோகத் திட்டம் செயல்படுத்தப்படும் 6 மாவட்டங்களில் மேலும் இம்முறைகள் துரிதப்படுத்தப்படும்.

4. மானாவாரி சாகுபடி பகுதிகளில் உர உபயோகம் அதிகப் படுத்தப்படல்.

5. 'கரீப்' மற்றும் 'இராபி' பருவங்களுக்கு முன், தேசிய. இடு பொருள் இரு வார விழாக்கள் நடத்துவதின் மூலம் உர உபயோகம் அதிகப் படுத்துதல்.

விவசாயிகளுக்குத் தரமான உரங்களைக் குறிப்பிட்ட விலையில் கிடைக்க தரக்கட்டுப்பாடு முறைகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஒரு இலட்சம் எக்டேர் நெல் பாப்பில் நீலப்பச்சைப் பாசி இடப்படும். அதே போல் 'அசோலா' என்ற இயற்கை உரம் முதலில் அரசு விதைப் பண்ணைகளில் பெருக்கப்பட்டு விவசாயிகளுக்கு அளிக்கப்படும். ஊரக மலமக்கு உரம் தயாரிக்கும் திட்டத்திற்கும் போதிய கவனம் செலுத்தப்படும்.

## உற்பத்தி ஊக்கமளிப்பு.

1984-85 ஆம் ஆண்டு தஞ்சை மாவட்டம் முழுவதும் மற்றும் திருச்சி, தென்ஆற்காடு மற்றும் புதுக்கோட்டை மாவட்டப் பகுதிகள் அடங்கிய காவிரி ஆற்றுப்படுகை விவசாயிகளுக்கு, நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு விற்கப்படும் ஒரு குவிண்டால் நெல்லுக்கு ரூ. 15 வீதம் பெறுமான உரங்கள்



இலவசமாக குறுவை மற்றும் சம்பா பருவங்களில் அளிக்கப்பட்டது. இப் புதுமையான உற்பத்தி ஊக்கமளிப்பு திட்டத்திற்கு 14.22 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டது.

## பயிர்ப் பாதுகாப்பு.

1984-85 ஆம் ஆண்டில் 61.15 இலட்சம் எக்டேர்கள் பரப்பில் பூச்சி தடுப்பும் 21.63 இலட்சம் எக்டேரில் நோய் தடுப்பும் மேற்கொள்ளப்பட்டது. உணவு மற்றும் உணவல்லாத பயிர்களின் பரப்பில் 1985-86 ஆம் ஆண்டில் 56.87 இலட்சம் எக்டேர்களில் பூச்சித் தடுப்பும், 17.33 இலட்சம் எக்டேர்களில் நோய்த் தடுப்பும் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

1984-85 ஆம் ஆண்டில் 9.000 டன்கள் தூள் மருந்தும் 5 இலட்சம் லிட்டர்கள் திரவ மருந்தும் வாங்கி வைத்து விவசாயக் கிடங்குகள் மூலம் விற்பனை செய்ய திட்டமிடப்பட்டது. அதில் 8,022 டன்கள் தூள் மருந்தும், 5.53 இலட்சம் லிட்டர்கள் திரவ மருந்தும் விற்பனை செய்யப்பட்டது. இதே போல் 1985-86 ஆம் ஆண்டும் பூச்சி மருந்து விநியோகம் தொடரப்படும்.

நெல் குருத்துப் புழுவை கட்டுப்படுத்த 1984-85 ஆம் ஆண்டு 39,500 எக்டேரில் மருந்தடிக்கப்பட்டது. 1985-86 ஆம் ஆண்டும் நெல் குருத்துப் புழு தாக்குதலைக் கட்டுப்படுத்த இப்பரந்த அளவில் மருந்தடிக்கும் திட்டம் தொடரப்படும்.

நெல் பயிரில் புகையான் தாக்குதலைக் கட்டுப்படுத்த பரந்த அளவில் மருந்து தெளிக்கும் திட்டத்தின்கீழ் 1984-85-ம் ஆண்டு 26,400 எக்டேரில் மருந்து தெளிக்கப்பட்டது. 1985-86 ஆம் ஆண்டு 30,000 எக்டேரில் மருந்தடிக்கப்படும். இச் செலவினத்தில் பாதியை, மைய அரசும் மாநில அரசும் சமபங்கேற்கும், மீதமுள்ள பாதி செலவை சம்பந்தப்பட்ட விவசாயிகளிடமிருந்து வசூலிக்கப்படும்.

1984-85 ஆம் ஆண்டு நெற்பயிரில் 'துங்ரோ வைரஸ்' நோய் பெரும் பாலான பகுதிகளில் தோன்றி சேதம் விளைவித்தது. இதனைக் கட்டுப் படுத்த ரூ. 51.32 இலட்சம் செலவில் ஒரு சிறப்பு திட்டம் ஒப்பளிக்கப் பட்டது. 19,573 எக்டேரில் மருந்து தெளிக்கப்பட்டது. 1985-86 ஆம் ஆண்டும் இத் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு 'துங்ரோ வைரஸ்' நோய் கட்டுப்படுத்தப்படும்.

1984—85 ஆம் ஆண்டு நெற்பயிரில் (கழுத்து) குலைநோய் தாக்குதலைக் கட்டுப்படுத்த பரந்த அளவில் மருந்து தெளிக்கும் திட்டத்தின்கீழ் 27,600 எக்டேரில் மருந்து தெளிக்கப்பட்டது. அதேபோல் 1985-86 ஆம் ஆண்டும் இத்திட்டம் தொடரப்படும். இச் செலவினத்தில் பாதியை மைய, மாநில அரசால் சரி சமமாக ஏற்கப்படும். மீதியை சம்பந்தப்பட்ட விவசாயிகளிடமிருந்து வசூலிக்கப்படும்.

1984-85 ஆம் ஆண்டு ஒரு வட்டாரத்திற்கு 20 நபர் வீதம் பள்ளி ஆசிரியர்களுக்கு பயிரில் தோன்றும் முக்கிய பூச்சி மற்றும் நோய்களை கண்டறிதல், பயிர் பாதுகாப்பு மருந்துகளைக் கையாளுதல், மற்றும் கருவிகளைப் பழுது பார்த்தல் போன்ற பணிகளில் 7,400 ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. 1985-86 ஆம் ஆண்டில், 7,480 ஆசிரியர்களுக்கு இத்தகைய பயிற்சி அளிக்கப்படும்.

பயிர்ப் பாதுகாப்பு செலவைக் குறைக்கவும், திறனை அதிகப்படுத்தவும் பயிர்ப் பாதுகாப்பு முறைகளுடன் திருந்திய சாகுபடி முறைகளையும் சேர்த்து கையாளும் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு செயல் விளக்கங்கள் 1984-85 ஆம் ஆண்டு 99 நிலையங்களில் அமைக்கப்பட்டன. இத்திட்டம் 1985-86 ஆம் ஆண்டும் விரிவான அளவில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

பூச்சிநோய்க் கணக்கெடுப்புத் திட்டம் மாநிலம் முழுவதும் தீவிரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் பூச்சி நோய்த் தாக்குதல் பற்றி விவசாயிகளுக்கு முன் எச்சரிக்கை விடுக்கவும் காலத்தே பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கவும் உதவுகிறது. இத்திட்டம் 1985-86 ஆம் ஆண்டும் வேளாண்மை பல்கலைக் கழக ஆராய்ச்சியாளர்களின் கூட்டு முயற்சியுடன் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

தஞ்சை மாவட்டத்தில் 24,000 எக்டேரில் திட்டமிட்டு 1984-85 ஆம் ஆண்டில் 24,117 எக்டேரில் எலி ஒழிப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம் 1985-86 ஆம் ஆண்டும் செயல்படுத்தப்படும்.

### உழவர் பயிற்சி நிலையங்கள்.

மாவட்டத்திற்கு ஒன்றாக மொத்தம் 15 உழவர் பயிற்சி நிலையங்கள் உள்ளன. கோவை மற்றும் மதுரை மாவட்டங்களில் உள்ள நிலையங்கள் வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் கட்டுப்பாட்டிலும், உதகையில் உள்ள நிலையம் தருமபுரி தோட்டக்கலை இயக்குநர் கட்டுப்பாட்டிலும் உள்ளன.



மீதமுள்ள 12 நிலையங்கள் வேளாண்மைத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளன. 1984-85 ஆம் ஆண்டின் சாதனை மற்றும் 1985-86 ஆம் ஆண்டின் திட்டம் ஆகியவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | 1984-85 ஆம் ஆண்டின் சாதனை. | 1985-86 ஆம் ஆண்டின் குறியீடு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 ஆண்/பெண் விவசாயிகளுக்கான நிலைய பயிற்சி .. .. | 246 | 240 |
| 2 உழவர் விவாதக் குழு அமைப்பாளர்களுக்கான நிலையப் பயிற்சி .. | 97 | 60 |
| 3 கிராமப்புற களப் பயிற்சியும், செயல் விளக்கங்களும் .. .. | 1,220 | 1,220 |
| 4 பெண்களுக்கான செயல் விளக்கப் பயிற்சி .. | 125 | 120 |

### வேளாண்மை பயிற்சி பள்ளிகள்.

தமிழ்நாட்டில் 13 வேளாண்மைப் பள்ளிகள் உள்ளன. அவை கிராமிய இளைஞர்களுக்கு அறிவியல் வேளாண்மை நுணுக்கங்களைப் பற்றி அறிவு போதிக்கின்றன. ஆண்டுக்கு 325 மாணவர்கள் பயிற்சி பெறுகின்றனர். இத்திட்டம் 1985-86 ஆம் ஆண்டும் தொடர்ந்து செயல்படும்.

### மண் ஆய்வுக் கூடங்கள்.

தமிழ்நாட்டில் 15 மண் ஆய்வுக்கூடங்களும், 16 நடமாடும் மண் ஆய்வுக் கூடங்களும் உள்ளன. காஞ்சீபுரம், ஆடுதுறை, கோவில்பட்டி, கோவை மற்றும் திருச்சியில் உள்ள மண் ஆய்வுக்கூடங்களில் சிறப்பான வசதிகள் செய்யப்பட்டு "மாங்கனீசு", துத்தநாகம், தாமிரம் மற்றும் இரும்பு போன்ற நுண்ணூட்ட உரங்கள் மண்மாதிரிகளில் உள்ள அளவை ஆய்ந்தறிய வசதிகள் செய்யப்பட்டு உள்ளன. 1984-85 ஆண்டு இலக்கான 9.72 இலட்சம் மாதிரிகளில் 8.22 இலட்சம் மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. மண் மாதிரிகள் மட்டுமின்றி பாசன நீர் மாதிரிகளும் ஆய்வு செய்யப்படுகின்றன. 1985-86-ம் ஆண்டும் மண் ஆய்வைத் தொடர்ந்து செயல்படுத்தி. குறைவான உற்பத்தித் திறன்கொண்ட நிலப்பிரச்சினைகள் மண் ஆய்வுக் கூடங்கள் மூலம் சமாளிக்கப்படும்.

### உரக்கட்டுப்பாடு சோதனைக்கூடங்கள்.

இம்மாநிலத்தில் 6 உரக் கட்டுப்பாடு சோதனைக்கூடங்கள் உள்ளன. அவை ஆண்டுக்கு 10,800 உரமாதிரிகள் ஆய்வு செய்யும் திறன் கொண்டவை. 1984-85 ஆம் ஆண்டு 9,741 உரமாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. அவைகளில் 1,492 மாதிரிகள் தரமற்றவை என அறிவிக்கப்பட்டு குற்றம் புரிவோர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 1985-86 ஆம் ஆண்டும் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

### பூச்சிக்கொல்லி சோதனைக்கூடங்கள்.

பூச்சி பூஞ்சானக் கொல்லிகள் மற்றும் களைக்கொல்லிகளின் மாதிரிகள் மாநிலத்தில் உள்ள 9 சோதனைக்கூடங்களில் ஆய்வு செய்யப்படுகின்றன. இச்சோதனைக் கூடங்களின் தற்போதைய திறன் வருடத்திற்கு 18,360 மாதிரிகள் ஆகும். 1984-85 ஆம் ஆண்டு 15,352 மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. இத்திட்டம் 1985-86 ஆம் ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### மண் வள அளவை மற்றும் நில உபயோக அமைப்பு.

இம்மாநிலத்தில் 4 மண் அளவை அலகுகள் வேலூர், கோவை, தஞ்சை மற்றும் பாளையங்கோட்டையில் உள்ளன. எல்லா மாவட்டங்களுக்கும் மண் வள தகுதி குறித்து அறிக்கைகள் இம் மாநிலத்தில் முதன் முறையாக 1984-85 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டன. 1984-85 ஆம் ஆண்டில் 6.25 இலட்சம் எக்டரில் மண் அளவை மேற்கொள்ளப்பட்டது.

### வேளாண்மைக் காடு வளர்ப்பு.

மைய அரசு நிதியுதவியுடன் சிறு மற்றும் குறுநில விவசாயிகளுக்கென பழக் கன்றுகள் மற்றும் எரிபொருள், மரக்கன்றுகள் வழங்கும் இத்திட்டம் 1984-85 ஆம் ஆண்டு நடைமுறையில் இருந்தது. இதற்கென 93.4 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதில் 1984-85 ஆம் ஆண்டு 6.71 இலட்சம் பழக் கன்றுகளும் 600.47 லட்சம் இதர மரக்கன்றுகளும் 1.83 இலட்சம் விவசாயிகள் பயனடைய வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டம் புதிய திட்டமாயினும் விவசாயிகளிடையே நல்ல வரவேற்பு பெற்றுள்ளது. 1985-86 ஆம் ஆண்டும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### மினிகிட்டுகள்.

1984-85 ஆம் ஆண்டு 202,779 நெல் மற்றும் 37,571 சிறு தானிய மினிகிட்டுகள் வழங்கப்பட்டன. சிறு விவசாயிகளிடையே புதிய இரகங்களை அறிமுகப்படுத்த உதவும் இத்திட்டம் 1985-86 ஆம் ஆண்டும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.



### 1985-86 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள்.

1. மானாவாரி சாகுபடி மேம்பாடு திட்டம்: அடிக்கடி பருவமழை பொய்ப்பதின் காரணமாக இடர்ப்பாடுகளுக்கு உள்ளாகும் மானாவாரி நிலங்களில் கிடைக்கும் மழைநீரை சேமித்து, அதற்குத் தக்கவாறு பயிர்ச் சாகுபடி செய்யும் முறைகளைப் பரவிடச் செய்ய மானாவாரி சாகுபடி மேம்பாடு திட்டம் ஏழாவது ஐந்தாண்டு திட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ளது. அதன் முதல் கட்டமாக 1985-86 ஆம் ஆண்டு, 2,000 எக்டர்கள் பரப்பு கொண்ட ஒரு அலகு தொடங்கப்படும். அதில் முன்னேற்றமடைந்த மானாவாரி சாகுபடி முறைகள் செயல்விளக்கம் செய்து காட்டப்படும். இத்திட்டத்தில் பங்கு பெறும் விவசாயிகளுக்கு தகுந்த ஊக்குவிப்பு தொகையும், தேவைப்படும் கடன் வசதியும் கிடைக்க ஏற்பாடு செய்யப்படும்.

2. சான்றிதழ் பெற்ற பயறு வகைகளை மாநில மான்ய உதவியுடன் உற்பத்தி செய்தல்:

பயறு வகைகள் உற்பத்தியைப் பெருக்க தரமான விதைகள் தயாரித்து அளிக்கப்படும். பயறு விதைப் பெருக்கத்திற்கு தேர்ந்தெடுக்கப்படும் விவசாயிகளுக்கு உதவ ஒரு குவிண்டால் விதைக்கு ரூ. 200 மான்யம் அளிக்கப்படும். 1985-86 ஆம் ஆண்டில் 2,500 குவிண்டால் விதைகள் இத்திட்டத்தின் மூலம் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

3. அரசு விதைப் பண்ணைகளின் உள்ளமைப்புகளை செம்மைப்படுத்தும் திட்டம்:

இத்துறையின்கீழ் 44 அரசு விதைப் பண்ணைகள் உள்ளன. இப்பண்ணைகள் நெல், சிறுதானியங்கள், பயறு வகைகள், பருத்தி மற்றும் காய்கறி வகைகளின் ஆதார விதை மற்றும் சான்றிதழ் பெற்ற விதைப் பெருக்கத்திற்கு பயன்படுத்தப்படுகின்றன. கூடுதல் வசதிகள் செய்வதன் மூலம் இப்பண்ணைகளின் உற்பத்தி திறனை அதிகப்படுத்த முடியும்.

1985-86 ஆம் ஆண்டு இந்நோக்கத்துடன் சாக்கோட்டை மற்றும் பாப்பான்குளம் போன்ற சில தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு விதைப் பண்ணைகளில் உள்ளமைப்புகளை செம்மைப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

4. விதை சுத்திகரிப்பு நிலையங்களை வலுப்படுத்துதல்:

சுத்திகரிப்பு செய்யப்பட்ட விதைகள் தகுந்தவாறு பாதுகாக்கப்பட வேண்டும். 1985-86 ஆம் ஆண்டு திருவாரூர் மற்றும் இனுங்கூரில் உள்ள விதைச் சுத்திகரிப்பு நிலையங்களில் கூடுதல் சேமிப்பு வசதியும், போக்குவரத்து வசதிகளை துரிதப்படுத்த இணைப்பு சாலையும் ரூ. 4.80 இலட்சம் செலவில் செய்து கொடுக்கப்படும்.

[1985 ஜூன் 28

**5. விதைச் சுத்திகரிப்பு மற்றும் தரம் பிரிக்கும் இயந்திரங்கள் வாங்குதல் :**

விவசாயத் துறையின் கீழ் 56 பெரிய மற்றும் நடுத்தர விதை சுத்திகரிப்பு இயந்திரங்கள் அரசு விதைப்பண்ணைகள், வேளாண் கிடங்குகள், விதை மையங்கள் மற்றும் விதை சுத்திகரிப்பு நிலையங்களில் உள்ளன. பல விதை சுத்திகரிப்பு இயந்திரங்கள் தேவையான அளவு செயல்பட்டு ஆற்றல் இழந்து விட்டன. ஆகையால் அவைகளை மாற்ற வேண்டிய தேவை உள்ளது. மேலும் பல இடங்களில் அவை கட்டிட வசதி குறைவு காரணமாக திறந்த வெளிகளில் இருக்கின்றன.

ஆகையால் 1985-86 ஆம் ஆண்டு 5 பழைய விதை சுத்திகரிப்பு இயந்திரங்களை மாற்றவும், அவைகளுக்குத் தேவையான கட்டிடங்கள் கட்டவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**6. வைகை அணை விவசாயப் பண்ணை 2-ல் உள்ள உள்ளமைப்பைச் செம்மைப்படுத்தல் :**

வைகை அணை விவசாயப் பண்ணை 2-ல் பருத்தி கருவிதை உற்பத்தி செய்யப்படுகிறது.

1985-86 ஆம் ஆண்டு 8.12 இலட்ச ரூபாய் செலவில் நீர்ப் பாசன வசதிகளை பெருக்கவும், ஏனைய உள்ளமைப்பு வசதிகளைச் சீரமைக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**7. பவானிசாகரிலுள்ள வேளாண்மை பள்ளியில் பணியாளர்களுக்கு குடியிருப்பு கட்டுதல் :**

பவானிசாகர் வேளாண்மைப் பள்ளியில் பணியாளர் குடியிருப்பு 1.50 இலட்சம் ரூபாய் செலவில் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

**8. தரக்கட்டுப்பாடு அலுவலர்களுக்கு விரைவில் தரமறிந்திட உர ஆய்வு கலப்பெட்டி வழங்குதல் :**

தனியார் துறையில் விநியோகம் செய்யப்படும் உரங்களின் தரக்கட்டுப்பாடு பணிகளைச் செம்மைப்படுத்தவும், அந்தந்த இடங்களிலேயே சோதனை மேற்கொள்ளவும் தரக்கட்டுப்பாடு பணியில் ஈடுபட்டிருக்கும் பணியாளர்களுக்கு 1985-86 ஆம் ஆண்டு 30 உர ஆய்வு கலப்பெட்டிகள் வழங்கப்படும்.



1985 ஜூன் 28]

**9. நீர்ப்பாசன ஏரிகளின்கீழ் பண்ணை மேம்பாடு திட்டம் :**

ஏரிப்பாசன நிலங்களில் கிடைக்கும் நீரை திறமையாகப் பயன்படுத்தி அந்நிலங்களில் உற்பத்தியைப் பெருக்க பண்ணை மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1985-86 ஆம் ஆண்டு கன்னியாகுமரி மற்றும் நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக எல்லா மாவட்டங்களிலும் தலா 200 ஏக்கர் வீதம் ஏரிப்பாசன நிலம் எடுத்துக்கொண்டு நீர் பராமரிப்பிலும், பயிர்ச் சாகுபடியிலும் முன்னேற்றமடைந்த வழிமுறைகள் செயல்விளக்கம் செய்து காட்டப்படும். அவைகளில் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்படும் :—

(1) தேவைப்படும் இடங்களில் வயல் வாய்க்கால்கள் வெட்டுதல் மூலம் வயலுக்கு வயல் நீர் பாய்ச்சுதலை தவிர்த்தல்.

(2) தேவைப்பட்டால் நீர்ப்போக்குகள் மற்றும் வயல் அக உறைகள் அமைத்தல்.

(3) தேவைக்கேற்ப நிலச் சீரமைப்பு செய்தல்.

(4) வடிகால்கள் அமைத்தல்.

(5) நிலங்களைத் தரப்படுத்துதல்.

(6) அதிக உற்பத்தி அடைய தேவைப்படும் திருந்திய சாகுபடி முறைகளையும், நீர் பராமரிப்பு முறைகளையும் செயல் விளக்கம் செய்து காட்டுதல். 1985-86 ஆம் ஆண்டு 6.63 இலட்சம் ரூபாயில் 2,600 எக்டேர்களில் இப்பணி மேற்கொள்ளப்படும்.

**10. களைக் கொல்லிகள் மூலம் களைகளை கட்டுப்படுத்துதல் :**

களைக் கொல்லிகளின் பயனை விவசாயிகள் அறியச் செய்யவும், பரந்த அளவில் கடைப்பிடிக்கவும், 1985-86 ஆம் ஆண்டு 5,000 எக்டேருக்கு களைக் கொல்லி மருந்துகளை 50 சதம் மான்ய விலையில் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

**11. உப்பு படிந்த நிலங்களைச் சீர்திருத்துதல் :**

கன்னியாகுமரி மற்றும் நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக, எல்லா மாவட்டங்களிலும் ஆண்டுக்கு தலா 500 எக்டேர் வீதம் உப்பு படிந்த நிலங்கள் முன்னோடி செயல் விளக்க முறைகளாகச் சீர்திருத்தம் செய்ய ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ளது. 'ஜிப்சம்' போன்ற நில சீர்திருத்த இரசாயன பொருட்கள் 50 சதம் மானிய விலையில் வழங்கப்படும். மேலும் தகுந்த உழவியல் முறைகள் செயல் விளக்கம் செய்து காட்டப்படும். 1985-86 ஆம் ஆண்டு முதல் கட்டமாக 4 மாவட்டங்களில், 2,000 எக்டேர்களில் இந்த செயல் விளக்கங்கள் நிறுவப்படும்.

இவைகளுக்கப்பால், ஆராய்ச்சி நிறுவனங்களின் நெருங்கிய தொடர்போடு விரிவாக்க முயற்சிகள் பயிற்சி வழி தொடர்புத் திட்ட அமைப்பின் மூலம் தீவிரப்படுத்துவது மட்டுமல்லாமல் வேளாண் சமுதாயத்திற்குப் புதிய தொழில் நுட்பங்கள் காலத்தே கிடைக்க ஆவன செய்யப்படும். புதிய தொழில் நுட்பங்களில் தேவையானவற்றை தெரிந்தெடுக்க சிறந்த முறையில் பணியாற்றப்படும். வேளாண்மை உற்பத்தியை அதிகரிக்க பருவநிலை துணை போகும் என எதிர்பார்க்கலாம்.

### வேளாண்மை பொறியியல் துறை.

வேளாண் பொறியியல் துறை விவசாயிகளின் விளை நிலங்களை மேம்படுத்தியும், குறித்த காலத்தில் நவீன இயந்திரங்களைக் கொண்டு நிலங்களை உழுது கொடுத்தும், நீர்ப்பாசன வசதிகள் பெருக்கத்திற்கு தக்க ஏற்பாடுகளை செய்துகொடுத்தும் வருகின்றது. இதோடு மட்டுமின்றி நீர், நிலவளப் பாதுகாப்பு, ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்புத் திட்டங்களை செயல்படுத்துதல், இயற்கை சீற்றங்களால் ஏற்படும் வெள்ளம் மற்றும் வறட்சி நிவாரணப் பணிகளை மேற்கொள்ளுதல் முதலிய பணிகளையும் திறம்பட செயலாற்றி வருகின்றது.

மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகளை மாநில அரசு திட்டங்களின் மூலமும், மத்திய மாநில அரசுகளின் சரிபங்கீட்டு கூட்டுத் திட்டங்களின் மூலமும், மத்திய அரசு ஆதரவு திட்டங்களின் மூலமும் கீழ்க்கண்ட பிரிவுகளாக செயலாக்கம் செய்து வருகின்றது :—

(1) நில மேம்பாட்டுத் திட்டம்.
(2) சிறுபாசனத் திட்டம்.
(3) நில, நீர்வள பாதுகாப்புத் திட்டம்.
(4) பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்.

மேற்கண்ட திட்டங்களின் மூலம் 1984-85 ஆம் ஆண்டில் ஏற்பட்ட இத்துறையின் சாதனைகளும், 1985-86 ஆம் ஆண்டு செயல்படுத்தவிருக்கும் திட்ட விவரங்களும் வருமாறு :—

### நில மேம்பாட்டுத் திட்டம்.

தரிசு, மற்றும் மேடுபள்ளங்கள் நிறைந்த பூமியினைத் திருத்தி, நிலமட்டம் செய்து கொடுத்து, மேம்பட்ட நீர்ப்பாசன வசதிகளைச் செய்து கொடுப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். இதற்கு புல்டோசர் மற்றும் டிராக்டர் முதலிய இயந்திரங்களைக் குறைந்த வாடகையில் விவசாய பெருங்குடி மக்களுக்கு இத்துறையின் மூலம் வழங்கப்பட்டு வருகின்றது. இதோடு மட்டுமின்றி, நிலம் உழுதல், மண்ணைக் கிளறி விடுதல், சோக்குதல் போன்ற பணிகளைச் செய்ய டிராக்டர்களையும் மற்ற கருவிகளையும் கொடுத்து உதவி செய்து வருகின்றது.



இத்துறையின் கீழ் 135 புல்டோசர்களும், 175 டிராக்டர்களும் சீரிய முறையில் இயங்கி தமிழக விவசாயிகளுக்குப் பேருதவி புரிந்து வருகின்றன.

1984-85 ஆம் ஆண்டில் 8,600 எக்டேர் பரப்பில் நிலச் சமன் செய்யப்பட்டுள்ளது. 32,000 எக்டேர் நிலப்பரப்பில் டிராக்டர் இயந்திரத்தின் மூலம் ஆழ உழுது கொடுக்கப்பட்டுள்ளது. 1985-86 ஆம் ஆண்டில் 7,000 எக்டேர் பரப்பளவு நிலச் சமன் செய்யவும், 18,800 எக்டேர் நிலப்பரப்பில் இயந்திரங்களைக் கொண்டு பயிரிடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

### சிறுபாசனத் திட்டங்கள்.

நிலத்தடி நீரை வேளாண்மைக்குப் பயன்படுத்த வடிமுனைக் குழாய்கள், மற்றும் ஆழ்குழாய் கிணறுகள், அமைக்கப்படுகின்றன. மேலும் பாறைப் பகுதிகளில் அதிக நீரை பெறுவதற்கு திறந்த கிணறுகளில் ஆழப்படுத்துவதும், கிணற்றுக்குள் துளையிடுவதும் முக்கிய பணிகளாகும். இதற்கான தொழில் நுட்ப அறிவுரைகள் இலவசமாகவும், இயந்திரங்கள் குறைந்த வாடகைக்கும் இத்துறையின் மூலம் வழங்கப்படுகிறது.

விவசாயத்திற்கு போதுமான நிலத்தடி நீர் இருக்கும் இடங்களை நவீன இயந்திரங்களைக் கொண்டு கண்டு பிடித்து தருவதுடன், கிடைக்கும் நீரின் அளவு, நீரின் தன்மை ஆகியவற்றையும் ஆராய்ந்து கொடுத்து வருகின்றது.

இத்துறையின்கீழ், 158 இயந்திர துளைக் கருவிகளும், 103 பாறை உடைப்பு கருவிகளும், 57 நீண்ட துளையிடும் இயந்திர கருவிகளும், 410 கைத்துளைக் கருவிகளும், 22 காற்றழுத்தக் கருவிகளும், இப்பணிகளுக்காக பயன்படுத்தப்படுகின்றது.

"கிணறுகளை அமைத்துக் கொடுப்பது மட்டுமின்றி சரியான நீரேற்ற கருவிகள் அமைக்கவும், சிக்கன நீர்ப்பாசன முறைகளான, சொட்டு நீர்ப்பாசனம் மற்றும் நீர்த் தெளிப்பு Sprinkler Irrigation முறைகளை அறிமுகப்படுத்துவதிலும், தொழில் நுட்ப அறிவுரைகளுடன், திட்டங்களைச் செயல்படுத்துவதிலும்" தீவிரக் கவனம் செலுத்தப்பட உள்ளது.

1984-85 ஆம் ஆண்டில் 4,880 குழாய் கிணறுகள், 3,049 வடிமுனைக் குழாய்க் கிணறுகள், 3,427 கிணறுகளில் துளைகள் இடுதல் ஆகியவை அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. இத்துடன், 2,470 திறந்த கிணறுகளில்

ஆழப்படுத்தும் பணிகளும் நிறைவேற்றப்பட்டுள்ளன. 1985-86 ஆம் ஆண்டில் 4,850 குழாய் கிணறுகள், 2,920 வடிமுனைக் குழாய் கிணறுகள் அமைக்கவும், 2,435 கிணறுகளில் கிணற்றுக்குள் துளையிடவும், 3,010 கிணறுகளை ஆழப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

### நீர் மற்றும் நிலவள பாதுகாப்புத் திட்டம்.

நாளுக்கு நாள் பெருகி வரும் உணவு, உடை மற்றும் இதர தேவைகளுக்கு ஏற்ப, உற்பத்தியைப் பெருக்க நீர் மற்றும் நிலவளப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மிக அவசியமான ஒன்றாகும். இவ்வேளாண்மை பொறியியல் துறை, காற்று மற்றும் நீரினால் ஏற்படும் மண் அரிப்பினைத் தடுத்தல், மலைப் பகுதிகளில் ஏற்படும் நிலச்சரிவைக் கட்டுப்படுத்துதல், நீரோடைகளில் ஏற்படும் மண் அரிப்பினைத் தடுத்தல் முதலான நடவடிக்கைகளுடன், கிராமப் புறங்களில் வேலை வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்தி, நிலமற்ற ஏழை மக்களுக்கு மேற்குறிப்பிட்ட திட்டங்களைச் செம்மையான முறையில் நடைமுறைப்படுத்தி வந்துள்ளது.

நீர் மற்றும் நிலவளப் பாதுகாப்புத் திட்டங்கள் இத்துறையினரால் மலை மற்றும் சமவெளிப் பிரதேசங்களிலும், காற்றரிப்பு தடுப்பு நடவடிக்கைகள் மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களிலும், பழங்குடியினர் நல மேம்பாட்டுத் திட்டப் பணிகள் வட ஆற்காடு, தென் ஆற்காடு, சேலம், தருமபுரி மற்றும் திருச்சி மாவட்டங்களிலும், வறட்சி தாக்கும் பகுதிகளான தருமபுரி, இராமநாதபுரம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் வறட்சி நிவாரணப் பணிகளும் இத்துறையினரால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

குந்தா மற்றும் கீழ்பவானி ஆற்றுப் படுகைப் பகுதிகளில் ஏற்படும் மண் அரிப்புத் தடுப்பு நடவடிக்கைகள் மட்டுமின்றி, மேற்குறிப்பிட்ட அணை நீர்ப் பிடிப்பு பகுதிகளின் பயிர்ச் சாகுபடி முறைகள் மேம்பாட்டுத் திட்டத்திலும் கவனம் செலுத்தி, அவைகளில் ஏற்படும் வண்டல் மண் படிவத்தை மத்திய அரசு நிதி உதவியுடன் தடுத்து வருகின்றது.

### மேற்கு தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டப் பணிகள்.

சிறு சிறு நீர்பிடிப்புப் பகுதிகளாக பிரித்து, நீர், நிலவள பாதுகாப்புத் திட்டங்களை இம் மேற்குத் தொடர்ச்சி மலையில் செயல்படுத்தி இயற்கை சூழ்நிலைகளைப் பேணி பாதுகாப்பதிலும், அதனைப் போற்றி வளர்ப்பதிலும், இத்துறை மிகுந்த கவனம் செலுத்தி வருகின்றது.



மதுரை மாவட்டம், கோடைக்கானல் வட்டத்தில் டிசம்பர் 1984-லிருந்து சுமார் 318 இலட்சம் ரூபாயில் புதிதாக அங்கீகரிக்கப்பட்ட மஞ்சளாறு நீர்ப் பிடிப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில், மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு திட்டப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

ஏழாவது திட்டக் காலத்தில் இம்மேற்கு தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டப் பணிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கவும், தரிசு நிலங்களை மேம்படுத்துதல், கார, அமிலத் தன்மைகளால் பாதிக்கப்பட்ட நிலப் பகுதிகள் மற்றும் நீர் தேங்கி, வேளாண்மைக்கு உபயோகமின்றிப் போன நிலங்களைத் திருத்தி, விளைநிலங்களாக மாற்றம் செய்தல், அதிக தரிசு நிலங்களை வேளாண்மைக்கு ஏற்ற நிலங்களாக மாற்றம் செய்தல் போன்ற பணிகளில் அதிகக் கவனம் செலுத்த இத்துறை திட்டமிட்டுள்ளது.

| | 1984-85 எக்டேரில். | 1985-86 திட்ட குறியீடு பரப்பு எக்டேரில். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 மண்வளப் பாதுகாப்புத் திட்டம் மலை மற்றும் சமவெளிப் பகுதிகள் .. .. .. | 54,500 | 50,000 |
| 2 காற்றரிப்பு தடுப்புத் திட்டங்கள், மதுரை மாவட்டம் .. | 1,297 | 1,200 |
| 3 காற்றரிப்பு தடுப்புத் திட்டங்கள், திருநெல்வேலி மாவட்டம் .. | 906 | 900 |
| 4 ஓடை சீரமைப்புத் திட்டம், தென் ஆற்காடு மாவட்டம் .. | 1,105 | 1,000 |
| 5 மண்வளப் பாதுகாப்புத் திட்டம், பழங்குடியினர் பகுதி .. | 297 | 250 |
| 6 குந்தா மற்றும் கீழ்பவானி நதி பள்ளத்தாக்குத் திட்டப் பகுதி மண்வளப் பாதுகாப்புத் திட்டம் | 3,117 | 3,000 |
| 7 மதுரை மாவட்டம் மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதி மண் வளப் பாதுகாப்புத் திட்டம் .. | 726 மற்றும் 193 தடுப்பு அணைகள் | 750 |
| 8 மஞ்சளாறு நீர்ப் பிடிப்புப் பகுதி மண்வளப் பாதுகாப்புத் திட்டம் | 240 | 850 |
| 9 மண்வளப் பாதுகாப்பு மற்றும் மூலக் கூறுகளின் வளர்ச்சி பற்றிய ஆய்வு .. .. | 2,000 | .. |

[1985 மார்ச் 28

### பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்.

வேளாண்மைக்கு நீர் ஒரு முக்கிய இடு பொருளாகும். இந் நீரைச் சீரிய முறையில் பயன்படுத்தி மகசூலைப் பெருக்கவும், அனைத்து விவசாயிகளும் தங்கள் தேவைக்கேற்ப பங்கிட்டுக் கொள்ளவும் பாசனப் பகுதிகளில் நீர் பராமரிப்பு திட்டம் அமுல் செய்யப்படுகிறது.

இதனை மேம்படுத்தும் வகையில், குறித்த காலத்தில், குறித்த அளவில், தேவையான நீரை, தேவையான இடத்தில் பயிர்களுக்கு அளிப்பதற்காக, நீர் பராமரிப்புத் திட்டங்கள் இத்துறையினால் 1967 ஆம் ஆண்டு முதல் காவேரி பாசனப் பகுதியிலும், 1969 ஆம் ஆண்டு முதல் சாத்தனூர் பாசனப் பகுதியிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து தற்போது காவேரி. சாத்தனூர் பகுதிகள் மட்டுமல்லாமல், பெரியார், வைகை, கீழ்பவானி, ஆகிய பாசனப் பகுதிகளிலும் விரிவுபடுத்தப் பட்டுள்ளது.

வேளாண்மை பொறியியல் துறை, இத்திட்டத்தின் கீழ் தனித் தனியாக வயல்களுக்கு வாய்க்கால்கள் அமைத்தல், நீர் அளந்து பிரித்தனுப்பும் கட்டுமானங்களையும், மற்ற சுழற்று நீர்ப் பாசனம் முதலானவைகளை செயல் படுத்தி, நீர் பாசனப் பராமரிப்புப் பணிகள் நல்ல முறையில் செயலாக்கம் செய்து வருகின்றது. இதனால், தேவையான அளவு நீர், அனைத்து விவசாயிகளுக்கும் தேவையான நேரத்தில் கிடைப்பதோடு, தேவையில்லாத நீரை வெளியேற்றவும், நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதினால், விவசாயிகளிடையே இத்திட்டம் மிகுந்த வரவேற்பினைப் பெற்றுள்ளது.

1984-85 ஆம் நிதியாண்டில் செய்த சாதனை மற்றும் 1985-86 ஆம் ஆண்டில் செயற்படுத்த திட்டமிடப்பட்டுள்ள அட்டவணை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | பரப்பு எக்டேரில் | |
|---|---|---|
| | 1984–85. | திட்ட குறியீடு 1985–86. |
| (1) | (2) | (3) |
| 1 காவேரி பாசனப் பகுதி .. | 19,340 | 18,000 |
| 2 பெரியார்-வைகை பாசனப்பகுதி .. | 16,633 | 13,000 |
| 3 கீழ்பவானி பாசனப் பகுதி .. | 5,444 | 5,000 |
| 4 சாத்தனூர் பாசனப் பகுதி .. | 1,306 | 2,000 |
| 5 சுழற்று நீர்ப்பாசன முறை அமல் படுத்துதல் காவேரி பாசனப்பகுதி | 1,053 | 1,000 |
| 6 பெரியார்-வைகை பாசனப் பகுதி | 1,004 | 1,000 |
| 7 கீழ்பவானி பாசனப் பகுதி .... | 1,057 | 1,000 |



1985 ஜூன் 28]

இத்துடன் 1985-86 ஆம் ஆண்டு காலத்தில் ஐரோப்பிய பொருளாதாரக் குழு உதவியுடன் செங்கல்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு, புதுக்கோட்டை, இராமநாதபுரம் மாவட்டங்களில் குளத்து நீர்ப்பாசன மேம்பாட்டு திட்டங்களையும், பரம்பிக்குளம்-ஆழியாறு பாசனப் பகுதியில் பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டங்களையும் செயல்படுத்த உள்ளது.

**சிறப்புத் திட்டங்கள் :**

டிசம்பர் 1983 ஆம் ஆண்டு ஏற்பட்ட கடுமையான வெள்ளத்தினால் தஞ்சாவூர், தென் ஆற்காடு, திருச்சி, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களிலும், 1984 ஆம் ஆண்டு பிப்ரவரி-மார்ச் மாதங்களில் மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களிலும் பாதிக்கப்பட்ட விளை நிலங்களை, புல்டோசர் இயந்திரம் மூலம் ரூ. 24.82 இலட்சம் செலவில் சீர்திருத்தப் பட்டது. இதன் பயனாக 1,600.02 எக்டேர் மீண்டும் விளை நிலங்களாக்கப் பட்டது.

**ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் :**

கிராமப்புறங்களில் ஏழைகளுக்கு வேலைவாய்ப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் முகமாக ஏற்படுத்தப்பட்ட பல திட்டங்களில் ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதித் திட்டமும் ஒன்றாகும். வேளாண் பொறியியல் துறை, இத்திட்டத்தின் கீழ் கசிவு நீர்க் குட்டைகளைக் கட்டியது. இதன் பயனாக மழைக் காலங்களில் வீணாக ஓடும் மழை நீரினைத் தேக்கி அருகாமையிலுள்ள கிணறுகளில் நீர் மட்டம் உயர வழி செய்கிறது. 1984-85 ஆம் ஆண்டில் 926 கசிவுநீர்க் குட்டைகள் சுமார் 7.13 கோடி ரூபாயில் கட்டப் பட்டுள்ளன. மேலும், 1985-86 ஆம் நிதி ஆண்டில் 1,000 நீர்க்கசிவு குட்டைகளும், 500 தடுப்பணைகளும், ரூபாய் 10 கோடி செலவில் கட்டப்படும்.

### புதிய திட்டங்கள்.

1985-86 ஆம் ஆண்டு காலத்தில் இத்துறை செயலாக்கவுள்ள புதிய திட்டங்களாவன :—

1. சுழற்றுப் பாசனம் மற்றும் சொட்டு நீர் பாசன முறைகளை வேளாண் குடி மக்களுக்கு பிரபலப்படுத்துதல் ;

பாசன நீரை பயிர்களுக்குத் தேவையான அளவில் அளித்து, நீர்ச் சேதாரத்தைக் குறைப்பதற்கான வழிமுறைகளை விவசாயிகளுக்கு எடுத்துக் கூறி நீர்ப்பாசனத் திறனை அதிகரிக்கும் பொருட்டு 100 எக்டேர் முன்னோடி பண்ணைகள் Piolt Project அமைத்தல் இத்திட்டத்தில் அடங்கும்.

2. இரண்டு புல்டோசர் இயந்திரங்களும் அதனை எடுத்துச் செல்ல பாரவூர்தியும் வாங்குதல் :—

பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளில், பாசனத் திறனை அதிகரிக்க நிலச் சமம் செய்யும் பணி தலையாய ஒன்றாகும். அதனைச் செம்மையாகச் செயல்படுத்தும் பொருட்டு மேற்குறிப்பிட்ட இயந்திரங்கள் வாங்க திட்டமிடப்பட்டுள்ளது.

3. திருநெல்வேலி மாவட்டத்தில் காற்றரிப்புத் தடுப்புத் திட்டத்தில் பயிர் செய்யப்பட்ட மரங்களைப் பாதுகாத்து வளர்த்தல் :—

காற்றரிப்பு தடுப்புத் திட்டத்தில் பயிர் செய்யப்பட்ட மரங்களைக் குறைந்தபட்சம் ஐந்து ஆண்டு காலத்திற்கு பாதுகாப்பது இத்திட்டத்தின் குறிக்கோளாகும்.

4. திருச்சியிலுள்ள வேளாண் பொறியியல் துறை பயிற்சி மையத்தை விரிவுபடுத்துதல் :—

மண்வளப் பாதுகாப்பு மற்றும் வேளாண் இயந்திரங்களைப் பராமரித்தல், பயன்படுத்துதல் முதலியவற்றில் வேளான் குடி மக்களுக்கு பயிற்சி அளித்தல் மற்றும் வேளாண் பொறியியல் துறையில் பணிபுரியும் சிப்பந்திகளுக்கு பயிற்சியளிப்பதற்கு ரூ. 4.67 இலட்சத்தில் திருச்சிராப்பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள வேளாண் பொறியியல் துறை பயிற்சி மையத்தை விரிவுபடுத்துதல் இத்திட்டத்தில் அடங்கும்.

### எண்ணெய்வித்துக்கள் துறை.

தமிழகத்தில் எண்ணெய்வித்துக்கள் மேம்பாட்டுக்கெனவும், எண்ணெய் வித்துக்கள் மற்றும் தென்னை அபிவிருத்தியில் சீரிய முன்னேற்றம் கண்டிடவும் ஒரு தனித் துறை கடந்த ஐந்து ஆண்டுகளாக இயங்கி வருகின்றது. இத்துறையின் கடமை எண்ணெய் வித்துக்களின் உற்பத்தியை பெருக்கிடவும், குறிப்பிட்ட பரப்பளவில் உற்பத்தி திறன் மிகுதியாக அடைந்திடவும் எண்ணெய் வித்துக்கள் மற்றும் எண்ணெய் உற்பத்தியில் தமிழகம் தன்னிறைவு பெற்றிடவும் வழி செய்திட இத்துறை பணியாற்றுகிறது. குஜராத் மற்றும் ஆந்திர மாநிலங்களுக்கு ஒப்பாக எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியில் தமிழகம் தனித் தன்மை பெற்று விளங்குகிறது. இந்திய துணைக் கண்டத்தில் மொத்த உற்பத்தியான 125 இலட்சம் மெட்ரிக் டன்னில் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியில் தமிழகம் 14.60 இலட்சம் மெட்ரிக் டன்களை ஆண்டொன்றுக்கு உற்பத்தி செய்யும் திறன் கொண்டுள்ளது.



### 1984-85 ஆம் ஆண்டில் இத்துறையின் சாதனை.

இம்மாநிலத்தில் எண்ணெய் வித்துக்கள் பெரும்பாலும் மானாவாரி நிலங்களிலேயே பருவ மழையை எதிர்நோக்கி பயிரிடப்படுகின்றது. ஆகவே, அவற்றில் உற்பத்தி காலத்தே பெறப்படுகின்ற பருவ மழையின் அளவு மற்றும் பருவ மழையின் தன்மை ஆகியவற்றிற்கு ஏற்பவே இருக்கும்.

1984-85 ஆம் ஆண்டு 'காரீப்' பருவத்தில் ஆரம்ப காலத்தில் வறட்சி நிலை நிலவியது. இதன் காரணமாக எண்ணெய் வித்து பயிர்கள் பாதிக்கப்பட்டன. இருப்பினும், 'காரீப்' பருவத்தின் பின் பருவத்தில் அடையப் பெற்ற மிகுதியான மழையின் காரணமாக இப்பயிர்கள் செழித்து வளர வாய்ப்பு ஏற்பட்டது. கடந்த ஆண்டு பருவ நிலை சாதகமாக இல்லாமல் இருந்தபோதிலும் எண்ணெய் வித்துக்கள் சாகுபடியில் 1985 ஆம் ஆண்டில் 15.37 இலட்சம் எக்டேர் பரப்பளவில் வணிக பயிரான எண்ணெய்வித்துக்கள் பயிரிடப்பட்டது. எண்ணெய் வித்துக்களின் உற்பத்தி இவ்வாண்டு 14.60 இலட்சம் மெட்ரிக் டன் என்னும் குறியீட்டினை அடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

1985-86 ஆம் ஆண்டு தமிழகத்தில் எண்ணெய் வித்துக்களின் உற்பத்தி குறியீடு 15.75 இலட்சம் மெட்ரிக் டன்கள் என நிர்ணயிக்கப்பட்டு அதனை எய்துவதற்காக கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 1984-85-ன் சாதனைகளும், 1985-86 ஆம் ஆண்டுக்கான இலக்குகளும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

அட்டவணை

பரப்பளவு (இலட்சம் எக்டேர்களில்) உற்பத்தி (இலட்சம் மெட்ரிக் டன்களில்)

| எண்ணெய் வித்துக்கள். | 1984-85. | | | | 1985-86. | |
|---|---|---|---|---|---|---|
| | பரப்பு. | | உற்பத்தி. | | பரப்பு. | உற்பத்தி. |
| | இலக்கு. | சாதனை. | இலக்கு. | சாதனை. | இலக்கு. | எதிர்பார்க்கும் சாதனை |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| நிலக்கடலை .. | 11.65 | 12.42 | 13.25 | 14.15 | 11.82 | 14.11 |
| எள் .. | 1.60 | 1.69 | 0.65 | 0.70 | 1.60 | 0.68 |
| சூரியகாந்தி .. | 1.25 | 1.07 | 0.62 | 0.59 | 1.28 | 0.67 |
| ஆமணக்கு .. | 0.17 | 0.19 | 0.08 | 0.08 | 0.19 | 0.09 |
| சோயாமொச்சை .. | .. | .. | .. | .. | .25 | 0.20 |
| மொத்தம் .. | 14.67 | 15.37 | 14.60 | 15.52 | 15.14 | 15.75 |





தென்னை சாகுபடியைப் பொறுத்தவரையில் 1984-85 ஆம் ஆண்டு இப்பயிர் தமிழகத்தில் 1.5 இலட்சம் எக்டேர் பரப்பளவில் பயிரிடப்பட்டது. தென்னையில் உற்பத்தி இந்த ஆண்டு 158 கோடி நெற்றுக்களாகும். 1985-86 ஆம் ஆண்டு இப்பயிர் புதிய நிலங்களில் பயிரிடப்பட்டு தமிழகத்தில் தென்னை சாகுபடி 1.62 இலட்சம் எக்டேர் பரப்பளவில் பெறுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. வரும் ஆண்டில் தென்னை பயிர், இம்மாநிலத்தில் 164 கோடி தென்னை நெற்றுக்கள் மகசூல் அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எண்ணெய் வித்துக்களின் உற்பத்தி பெருக்கத்திற்கான திட்டங்கள் மாநில மற்றும் மைய அரசால் அமுல்படுத்தப்படுகின்றது. இம்மாநிலத்தில் 12 மாநில திட்டங்களும் ஒரு மைய அரசு திட்டமும் செயலாக்கப்படுகின்றன. நிலக்கடலை மற்றும் சூரியகாந்தி பயிர்களின் மேம்பாட்டுக்கென மைய அரசு 1984-85 ஆம் ஆண்டு நூறு சதவித மானியத்தில் தேசிய எண்ணெய் வித்துக்கள் அபிவிருத்தி திட்டம் என ஓர் திட்டத்தினை இம்மாநிலத்தில் செயல்படுத்தியது.

மேலே குறிப்பிட்ட அனைத்து திட்டங்களும் எண்ணெய் வித்துக்கள் பெருக்கத்தை நோக்கமாகக் கொண்டு செயல்படுத்தப்படுகின்றது. இதனை அடைவதற்கு முதற்கண் தேவை, தரமான வித்துக்கள் விநியோகம் ஆகும். இதைத் தவிர செயல் விளக்கப் பாத்தி அமைத்தல், மினிகிட் வழங்குதல், பூச்சி மற்றும் பூஞ்சாண நோய் தடுப்பு, ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறையின் மூலம் நிலக்கடலையை தாக்குகின்ற சிவப்பு கம்பளிப் பூச்சியைக் கட்டுப்படுத்துதல், இலை சுருள் பூச்சி, இலைப் புள்ளி நோய் மற்றும் துரு நோய் ஆகியவற்றை கட்டுப்படுத்துதல் ஆகிய அனைத்து முறைகளும் இத்துறையினரால் செயல்படுத்தப்படுகிறது. மைய அரசினால் செயல்படுத்தப்படுகின்ற தேசிய எண்ணெய் வித்துக்கள் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் வேளாண் பெருமக்களுக்கு தரமான வித்துக்கள் உற்பத்திக்கு இரசாயன உரங்கள், பயிர் பாதுகாப்பு, நீர்ப்பாசனம் மற்றும் திருந்திய உழவியல் கருவிகள் ஆகியவற்றின் மானிய விலையில் அளித்திட நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

வேளாண் பெருமக்களுக்குத் தரமான வித்தினை அளித்திட இத்துறை ஒரு கரு வித்து பண்ணையையும், இரண்டு ஆதார வித்துப் பண்ணைகளையும், நான்கு மண்டல விதைப் பண்ணைகளையும் இயக்கி வருகின்றது.

1981-82 ஆம் ஆண்டு வரை இத்துறை நிலக்கடலை சாகுபடியில் இரண்டு சதவீதம் பரப்பளவிற்கே வித்துக்கள் அளித்து வந்தது. இதனை மிகுதியாக்கி 1984-85 ஆம் ஆண்டு இத்துறை சாகுபடி பரப்பளவில் ஐந்து சதவீதத்திற்கு வித்துக்கள் அளித்திட ஏற்ற திட்டங்களைச் செயல்படுத்தியது. 1985-86 ஆம் ஆண்டு இதே பரப்பளவிற்கான வித்துக்கள் அளித்திட தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. ஏனைய எண்ணெய் வித்துப் பயிர்களைப் பொறுத்த வரையில் இத்துறை சாகுபடி பரப்பில் 15 சதவீதத்திற்கு எள் பயிருக்கும், 50 சதவீதத்திற்கு சூரியகாந்தி பயிருக்கும், ஆமணக்கு பயிரைப் பொறுத்த வரையில் 30 சதவீதத்திற்கும் தேவையான வித்துக்களை அளித்திட திட்டங்கள் வகுத்துள்ளது.

1985-86 ஆம் ஆண்டு இத்துறையினரால் 11,650 மெ. டன் நிலக்கடலையும், 120 மெ. டன் எள்ளும், 750 மெ. டன் சூரியகாந்தியும், 31 மெ. டன் ஆமணக்கும் விநியோகித்திட திட்டமிடப்பட்டுள்ளது. சாகுபடி பரப்பளவில் ஒரு சதவீதப் பரப்பளவிற்குத் தேவையான நிலக்கடலை சான்றிதழ் பெற்ற வித்துக்களாக அளித்திட திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளது.

சோயா மொச்சை பயிரைப் பொறுத்தவரையில் 1983-84 ஆம் ஆண்டு முதன்முறையாக மினிகிட் வழங்கி, இம்மாநிலத்தில் வேளாண்மை பெருமக்களின் மத்தியில் இப்பயிர் பரவலாக பயிரிடப்பட்டது. இத்திட்டம் 1984-85 ஆம் ஆண்டும் நீடிக்கப்பட்டது. 1985-86 ஆம் ஆண்டு இத்துறை சோயா மொச்சை சாகுபடி பரப்பினை மிகுதியாக ஆக்குவதற்கும், இப்பயிரினை 25,000 எக்டேர் பரப்பளவில் பயிரிட தேவையான வித்துக்களை அளித்து, சீர்மிகு முறைகளை வேளாண் பெருமக்களுக்கு பரிந்துரைக்க தக்க நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது.

### தென்னை அபிவிருத்தித் திட்டங்கள்.

தமிழகத்தில் தென்னை சாகுபடி மேம்பாட்டுக்கென எண்ணெய் வித்துக்கள் துறை பல்வேறு சீரிய திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது. 1985-86 ஆம் ஆண்டு இம்மாநிலத்தில் தென்னை சாகுபடி (பழைய பரப்பினையும் உள்ளடக்கி) 1.62 இலட்சம் எக்டேர் பரப்பளவில் பயிரிடப் படும். தென்னை நெற்றுக்களின் உற்பத்தி 164 கோடி நெற்றுக்களாக இருக்குமென நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இத்துறையினரால் செயலாற்றப் படுகின்ற திட்டங்களின் பயனாக தென்னை சாகுபடியில் மரம் ஒன்றுக்கு பெறப்படுகின்ற மகசூல் திறனை மிகுதியாக்குவதற்கு. 16 ஆக்கபூர்வமான திட்டங்கள் செயலாற்றப்படுகின்றன. இத்திட்டங்கள் அனைத்தும் 1985-86 ஆம்



ஆண்டும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். எண்ணெய் வித்துக்கள் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் நல்ல தரமான தென்னை நாற்றுக்கள் வேளாண்மை பெருமக்களுக்கு அளித்திட 23 சிறிய மற்றும் 5 பெரிய நெட்டை இரக நாற்றுப் பண்ணைகளும், 5 நெட்டை மற்றும் குட்டை விரிய ஒட்டு ரக தென்னை நாற்றுப் பண்ணைகளும், 3 குட்டை மற்றும் நெட்டை ரக விரிய ஒட்டு இரக தென்னை நாற்றுப் பண்ணைகளும் இயங்கி வருகின்றன. 1984-85 ஆம் ஆண்டும் இத்துறையினரால் 27.12 இலட்சம் தென்னை நாற்றுக்கள் இப்பண்ணைகளின் மூலமாக உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளன. 1985-86 ஆம் ஆண்டு இப்பண்ணைகளின் மூலமாக 30.75 இலட்சம் நெட்டை இரக நாற்றுகளும், 5.25 இலட்சம் நெட்டை மற்றும் குட்டை இரக விரிய ஒட்டு தென்னை நாற்றுக்களும், 40,000 குட்டை மற்றும் நெட்டை இரக விரிய ஒட்டு தென்னை நாற்றுக்களும் அரசு தென்னை நாற்றுப் பண்ணைகளின் மூலமாக உற்பத்தி செய்து வேளாண் பெருமக்களுக்கு விநியோகித்திட குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தென்னையை தாக்கி பெருஞ் சேதத்தை விளைவித்துள்ள கருந்தலைப் புழுவினை கட்டுப்படுத்துவதற்கு இத்துறையின்கீழ் 17 ஒட்டுண்ணி மையங்கள் இயங்கி வருகின்றது. ஆண்டொன்றுக்கு 5,000 எக்டேர் பரப்பளவில் கருந்தலைப் புழுவை கட்டுப்படுத்தும் நடவடிக்கை இத்துறையினரால் செயல் படுத்தப்படுகின்றது. இதைத் தவிர, வாடல் நோய் தடுப்பு திட்டத்திற்கு மாநில எல்லையோரங்களில் 5 சோதனை சாவடிகளும் நிறுவப்பட்டுள்ளன. இதன் மூலமாக வாடல் நோயால் பீடிக்கப்பட்டுள்ள தென்னை நாற்றுக்களை அண்டை மாநிலத்திலிருந்து தமிழ் நாட்டுக்குள் கொண்டு வருவதைத் தடுக்க தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. மேலும், 1984-85 ஆம் ஆண்டு தமிழக அரசு தஞ்சை வாடல் நோய் ஒழிப்புத் திட்டத்தின்கீழ் 20,174 தென்னை மரங்களுக்கு மான்ய விலையில் மருந்து அளித்து நோயினை கட்டுப்படுத்த தக்க நடவடிக்கை எடுத்துள்ளது. இதே போன்று கோள வாடல் நோய் தாக்கிய 3,890 தென்னை மரங்களை அகற்றிட வேளாண் பெருமக்களுக்கு மான்யம் அளித்து நோய் பரவுவதைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

வரும் ஆண்டுகளில் இத்துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகின்ற நாற்றுப் பண்ணைகளுக்குத் தரமான விதை நெற்றுக்கள் அளித்திட, தென்னாற்காடு மாவட்டத்தில் நெய்வேலி பண்ணையில் ஓர் தாய் மரத் தோட்டம் 100 ஏக்கர் பரப்பளவில் முன்னோடி திட்டமாக இவ்வாண்டில் இருந்து செயல்பட துவங்கியுள்ளது.

1985-86 ஆம் ஆண்டு, இத்துறையினரால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள புதிய திட்டங்கள் எண்ணெய் வித்துக்கள் மற்றும் தென்னை அபிவிருத்திக்கென செயலாற்றப்படும் :—

(1) எண்ணெய் வித்துக்கள் கரு வித்து உற்பத்திக்கான ஓர் பண்ணை அமைத்தல்.

(2) எண்ணெய் வித்துக்கள் பெருக்கத்திற்கென ஓர் ஆதார விதைப் பண்ணை அமைத்தல்.

(3) சோயா மொச்சை தீவிர சாகுபடித் திட்டம்.

(4) எள் அபிவிருத்தித் திட்டம்.

(5) ஆமணக்கு தீவிர சாகுபடித் திட்டம்.

(6) வெள்ளாள விடுதி ஆதார விதைப் பண்ணையில் தேவையான உபகரணங்கள் அளித்திடும் திட்டம்.

(7) நெல்லை மாவட்டத்தில் இயங்கி வருகின்ற குட்டை மற்றும் நெட்டை இரக விரிய ஒட்டு தென்னை நாற்றுப் பண்ணைக்கு புதிய பரப்பளவு கையகப்படுத்தும் திட்டம்.

**தமிழ்நாடு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்.**

தமிழ்நாடு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் கடந்த நான்கு ஆண்டுகளாக இம்மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றது. இவ்விணையம் பல்வேறு சிறிய திட்டங்களை செயல்படுத்துகின்றது. இத்திட்டம், உற்பத்தி, கொள்முதல் மற்றும் விற்பனை ஆகிய அனைத்து செயல்களையும் நிலக்கடலைச் சாகுபடியாளர்களின் நலன் கருதி செயல்படுத்துகின்றது. இவ்விணையம் ஏழு ஆண்டுகளில் 370 உற்பத்தியாளர்களின் கூட்டுறவு சங்கங்களை செங்கற்பட்டு, தென்னாற்காடு, வடாற்காடு ஆகிய மாவட்டங்களில் குறிப்பிட்ட வட்டங்களில் செயல்படுத்தும். நிலக்கடலை உற்பத்தியாளர்களின் மகசூல் இவ்விணையத்தின் மூலமாக கொள்முதல் செய்யப்பட்டு கையிருப்பு வைக்கப்பட்ட பின்னர், தர வாரியாக பிரிக்கப்பட்டு நல்ல விலைக்கு விற்பனை செய்யப்படும். அங்கத்தினர்களாக உள்ள உற்பத்தியாளர்கள், கூட்டுறவு சங்கங்களுக்குக் கிடைக்கின்ற நிகர இலாபத்தில் 50 விழுக்காடு அடைய தகுதியுடையவராவார். இத்திட்டம் ஏழு ஆண்டுகளில் ரூ. 16.01 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

உழவியல் மையம் ஒன்றும், எண்ணெய் வித்துக்கள் மையம் ஒன்றும் நெய்வேலி பண்ணையில் 122 எக்டேர் பரப்பளவில் நிறுவ திட்டமிடப்பட்டுச் செயல்படுத்தப்படும். இங்கு சாகுபடியாளர்-உறுப்பினர்களுக்கு எண்ணெய்



வித்துக்கள் வழங்கும் பொருட்டு, கரு வித்து மற்றும் தரமான விதைகள் உற்பத்தி செய்யப்படும். இதுவரையில் இவ்விணையத்தின் மூலமாக 152 கூட்டுறவு உற்பத்தியாளர்கள் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இச்சங்கங்களின் மூலமாக 23,340 மெ. டன் நிலக்கடலை 1985-86 ஆம் ஆண்டு கொள்முதல் செய்யப்படும்.

தமிழ்நாடு எண்ணெய் வித்துக்கள், உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்திற்காக ‘டாண்பெட்’ நிறுவனத்திலிருந்து திருவண்ணாமலை மற்றும் விருத்தாசலம் ஆகிய இடங்களிலுள்ள இரண்டு எண்ணெய் உற்பத்தி நிலையங்களை பெறப்பட்டுள்ளது.

சென்னையை அடுத்துள்ள கிண்டி தொழிற்பேட்டையில் இவ்விணையம் எண்ணெய் அடைப்பான்கள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றினை ரூபாய் 30 இலட்சம் முதலீட்டில் துவக்க தக்க நடவடிக்கைகள் எடுத்துள்ளது. இவ்விணையத்தால் உற்பத்தி செய்யப்படும் சுத்திகரிக்கப்பட்ட மற்றும் ‘எக்ஸ்பெல்லர்’ இரக கடலை எண்ணெய் 1985 ஆம் ஆண்டு ஜூன் மாத வாக்கில் சென்னையில் விற்பனைக்கு வரும்.

**தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள்.**

பல்வகைப்பட்ட தோட்டக்கலை பயிர்கள் வளர்ச்சிக்கான இயற்கை வளங்கள் தமிழகத்தில் மிகுந்து உள்ளன. மாநில அரசின் முக்கிய நோக்கமாக மலைச்சரிவுகள், சமவெளியான அனைத்து பகுதிகளிலும் தோட்டக்கலை பயிர்களின் சாகுபடி பரப்பினையும் உற்பத்தியினையும் அதிகரிக்கும் பொருட்டு, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை 1979 ஆம் ஆண்டு துவக்கப்பட்டு செயல்படுகிறது. இத்துறையின் பல்வகைப்பட்ட பணிகள் கீழ்க்கண்ட இனங்களின்கீழ் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன :—

1. தரமான செடிகளின் உற்பத்தி மற்றும் விநியோகம்.

2. (அ) பழப்பயிர்கள் (ஆ) காய்கறிகள், (இ) வாசனைத் திரவிய மற்றும் மலைப்பயிர்களின் உற்பத்தித் திறனை அதிகரித்தல்.

3. மலைப்பயிர்கள், அலங்கார மற்றும் தோட்டங்களின் வளர்ச்சியினை ஊக்குவித்தல்.

4. மாவட்டங்களில் தோட்டக்கலை பயிர்களின் மேம்பாட்டை தீவிரப் படுத்துதல்.

5. மலைப்பகுதிகளில் தோட்டக்கலை மேம்பாட்டிற்கு பணிகள் மேற்கொள்ளல்.

6. நீலகிரி மாவட்டத்தில், பயிற்சி வழி தொடர்பு திட்டத்தின் மூலம் விரிவாக்கப் பணியினை தீவிரப்படுத்தல்.

7. மேற்கு தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்.
8. ஒருங்கிணைந்த ஆதிவாசிகள் மேம்பாட்டுத் திட்டம்.
9. செயல்முறை தோட்டக்கலை பயிற்சி அளித்தல்.

**1. தரமான செடிகளின் உற்பத்தி மற்றும் விநியோகம்.**

நிலையான தோட்டக்கலை தொழிலமைப்பிற்கு, போதிய அளவிலான தரமான செடிகளின் உற்பத்தி இன்றியமையாததாகும். இந்நோக்கத்தினை எய்திட 53 தோட்டக்கலைப் பண்ணைகள் இயங்குகின்றன. 19 இலட்சம் பழச்செடிகள் 1984-85 ஆம் ஆண்டில் விநியோகிக்கப்பட்டன. இந்த அளவானது 1985-86 ஆம் ஆண்டில், 30 இலட்சத்துக்கு அதிகரிக்கப்படும்.

**2. உற்பத்தித்திறனை அதிகரித்தல்.**

**(அ) பழப்பயிர்கள்.**

**2.1. வாழை.**

நோய் தாக்காத, தரமான வாழைக் கன்றுகள் நவ்லாக், முதலைப்பட்டி மற்றும் சின்னகல்ராயன் மலை மையங்களிலிருந்து உற்பத்தி செய்யப்படுகின்றன. மலை வாழை சாகுபடியானது முடிக்கொத்து நோயால் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது. இதற்கு புத்துயிர் அளிக்கும் நோக்குடன், இந்நோயால் தாக்கப்படாத மலை வாழைக் கன்றுகள் சின்னகல்ராயன் மலைப் பகுதியில் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்படுகிறது. இம்மையங்களிலிருந்து 1984-85 ஆம் ஆண்டில் மூன்று இலட்சம் தரமான வாழைக் கன்றுகள் விநியோகிக்கப்பட்டன. இந்த அளவானது 1985-86 ஆம் ஆண்டில் 3.25 இலட்சமாக உயர்த்தப்படும். வாழையில் பெருமளவில் தென்படும் இலைப்புள்ளி நோயை கட்டுப்படுத்த (3,000 எக்டேரில்) பயிர்ப்பாதுகாப்பு பணியும், 6,000 எக்டேரில் நுண்ணூட்டச்சத்தினை அளிக்கும் பணியும் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

**2.2. 'மா'.**

'மா' பயிரின் பரப்பினை அதிகரிக்க, தரமான 'மா' ஒட்டுச் செடிகள் உழவர்களுக்கு அதிக அளவில் விநியோகிக்கப்படுகின்றன. 1984-85 ஆம் ஆண்டில், 2.16 இலட்சம் விநியோகிக்கப்பட்ட 'மா' ஒட்டுச் செடிகள், வரும் ஆண்டில் 2.25 இலட்சமாக அதிகரிக்கப்படும். தருமபுரி மாவட்டத்தில் அதிக அளவில் காணப்படும் தண்டு துளைப்பான் மற்றும் 'மா' தத்துப் பூச்சியினை கட்டுப்படுத்த பயிர் பாதுகாப்பு பணிகள், வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டத்தின்கீழ் ஆண்டுதோறும் ஒவ்வொன்றிலும் 2,500 எக்டேரில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பணியானது, 1985-86 ஆம் ஆண்டில் 3,000 எக்டேராக அதிகரிக்கப்படும்.



**2.3. எலுமிச்சை.**

நச்சுரி நோயால் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ள எலுமிச்சை சாகுபடியினை ஊக்குவித்திடவும், இப்பயிரின் பரப்பினை அதிகரித்திடவும் நச்சுரி நோய் தாக்காத ஈர்ப்புத் திறன் கொண்ட எலுமிச்சை செடிகள் ஒரு இலட்சம் அளவில் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்படும்.

**2.4. அன்னாசி :**

அன்னாசி சாகுபடியினை ஊக்குவிக்கும் பொருட்டு, 1.20 இலட்சம் கியூ ரக அன்னாசி கன்றுகள் பேச்சிப்பாறை மற்றும் கொல்லிமலையில் உள்ள நாற்றங்கால்களிலிருந்து ஏற்கனவே உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளன. இந்த அளவு 1985-86 ஆம் ஆண்டில் 4.50 இலட்சமாக உயர்த்தப்பட்டு விநியோகிக்கப்படும்.

**2.5. சீமை இலந்தை, சீதாப்பழம், மாதுளை மற்றும் இதர பழ வகைகள்.**

நிரந்தர தோட்டக்கலைப் பயிர் சாகுபடியின் பலனை வறட்சிக்கு இலக்காகும் பகுதிகளிலும் பெறுவதற்கு வறட்சியினை தாங்கவல்ல சீமை இலந்தை, சீதாப்பழம், மாதுளை, விளாம்பழம், நெல்லி, உயர் இரக புளி போன்றவற்றின் செடிகள் உற்பத்தி செய்யப்பட்டு உழவர்கட்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது. இப்பணியானது 1985-86 ஆம் ஆண்டில் மேலும் தீவிரப் படுத்தப்படும்.

**(ஆ) காய்கறிகள்.**

2.6. 1985-86 ஆம் ஆண்டில் குன்னூர் மற்றும் சின்னகல்ராயன் மலையில் உள்ள காய்கறி விதை உற்பத்தி மையங்களிலிருந்து ஆறு மெ. டன் விதைகள் உற்பத்தி செய்யப்படும், சமவெளிக்கான காய்கறி விதைகளின் உற்பத்தி தனியார் விதை உற்பத்தியாளர்களின் மூலமாக 75 மெ. டன் சான்றிதழ் விதைகள் தயாரிக்கப்பட்டு விநியோகிக்கப்படும். மேலும், காய்கறி விதை உற்பத்தியானது பிற அரசு பண்ணைகளிலும் ஊடுபயிராக மேற்கொள்ளப் படும். இப்பல்வகை முயற்சிகள் உயர் இரக காய்கறிகளின் பரப்பினை கணிசமாக உயர்த்திட வழி வகுக்கும்.

2.7. காய்கறி மேம்பாடு திட்டத்தின்கீழ் 1984-85 ஆம் ஆண்டில் 75 மெ. டன் விதைகள், 10.00 இலட்சம் நாற்றுக்கள் விநியோகிக்கப்பட்டன. 80 மெ. டன் காய்கறி விதைகள், 10.50 இலட்சம் நாற்றுக்கள், 15 மெ. டன் நுண்ணூட்டச் சத்துக்களின் விநியோகமும், நூறு செயல் விளக்கப் பாத்திகள் அமைத்தலும் 1985-86 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

2.8. நகர்ப்புறங்களில் இருந்துவரும் காய்கறிகளின் தட்டுப்பாட்டை பூர்த்தி செய்யும் பொருட்டு, நகர்ப்புற இல்லங்களில் வீட்டுக்காய்கறி தோட்டத்தினை அமைத்திட, நகர காய்கறி அபிவிருத்தித் திட்டத்தின் மூலமாக அனைத்து பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. சென்னை, வேலூர், திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை நகரங்களில் இத்திட்டம் செயல் படுகிறது. 1985-86 ஆம் ஆண்டில் 5.50 மெ. டன் காய்கறி விதைகள் 4.00 இலட்சம் பழம் மற்றும் இதர முக்கிய செடிகள், 70 மெ. டன் கலப்பு உரங்கள், 2.50 மெ. டன் நுண்ணூட்டச் சத்து, பயிர் பாதுகாப்பு மருந்துகளாக 21 மெ. டன் தூள் மருந்தும், மற்றும் 300 லிட்டர் திரவ மருந்துகளும் இந்நகரங்களில் விநியோகிக்கப்படும். இந்த இடுபொருள்கள் சிறிய மற்றும் தகுந்த அளவு பொட்டலங்களாக விநியோகிக்கப்படும்.

2.9. வரும் ஆண்டில் உற்பத்தியினை பெருமளவில் உயர்த்த முன்னோடி சாகுபடியாளர்களுக்கு இரண்டு இலட்சம் ரூபாய் மதிப்புள்ள கலப்பின காய்கறி விதைகளை 25 விழுக்காடு விலையில் விநியோகிக்கப்படும்.

2.10. மதுரை மற்றும் புறநகர் பகுதிகளில் அதிகரித்துவரும் காய்கறி தேவையினை பூர்த்தி செய்யும் பொருட்டு, பெரியார்-வைகை நீர்ப் பிடிப்பு பகுதிகளிலும், மதுரை நகர் சுற்றுப்புறங்களிலும், பயிர் மாற்றுத் திட்ட அடிப்படையில் 1985-86 ஆம் ஆண்டில் 800 எக்டேர் கூடுதல் பரப்பில் சாகுபடி மேற்கொள்ளப்படும்.

### (இ) வாசனைத் திரவியல் மற்றும் மலைப்பயிர்கள்.

**2.11. மிளகு.**

பேச்சிப்பாறை மற்றும் கூடலூரில் உள்ள மிளகு நாற்றங்கால்களிலிருந்து, 1984-85 ஆம் ஆண்டில் 4.70 இலட்சம் வீரிய ஒட்டு 'பன்னியூர்-1' மிளகு மற்றும் இதர இரக மிளகுச் செடிகள் விநியோகிக்கப்பட்டன. இந்த உற்பத்தி அளவானது வரும் ஆண்டில் 4.85 இலட்சமாக அதிகரிக்கப்படும்.

**2.12. மஞ்சள்.**

உலக அங்காடியில் மஞ்சள் ஏற்றுமதி நல்லதொரு இடத்தைப் பெற்றிட, விஞ்ஞான அடிப்படையில் மஞ்சளை பதப்படுத்தும் முறையின் செயல் விளக்கம், கோவை, பெரியார் மற்றும் சேலம் மாவட்டங்களில் மஞ்சள் சாகுபடியாளர்களுக்கு, 1983-84 ஆம் ஆண்டில் 44 இடங்களில் நடத்தப் பட்டது. இது வரும் ஆண்டிலும் தொடரப்படும். இதற்கான நிதி உதவியை கொச்சியிலுள்ள வாசனைத் திரவிய ஏற்றுமதி ஊக்குவிக்கும் மன்றம் அளிக்கிறது.



**2.13. முந்திரி.**

தமிழ்நாட்டிலுள்ள முந்திரி சராசரி உற்பத்தி திறன் குறைவாக உள்ளது. இதனை அதிகரிக்கும் நோக்குடன், பட்டை ஒட்டு கட்டும் பணியானது 200 எக்டேரில் ஆண்டுதோறும் மேற்கொள்ளப்படுகிறது. மூன்று முந்திரி வம்சா வழி பண்ணைகள், 120 எக்டேரில், செயல் விளக்க மையங்களாகவும், பட்டை ஒட்டு கட்டுதலுக்கு தேவையான, அதிக மகசூல் தரவல்ல பட்டைகளை அளிக்கும் நோக்குடன் பராமரிக்கப்படுகின்றன. 1983-84 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட 650 செயல் விளக்கத் திடல்கள் 1985-86 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து பராமரிக்கப்படும். தேயிலைக் கொசு தாக்குதலி லிருந்து முந்திரிப் பயிரை பாதுகாக்கும் நோக்குடன், ஆண்டுதோறும் 6,000 எக்டேரில் பயிர் பாதுகாப்பு பணி மேற்கொள்ளப்படுகின்றது. இப்பணியானது 1985-86 ஆம் ஆண்டில் 10,000 எக்டேராக அதிகரிக்கப்படும்.

**2.14. காப்பி.**

கிழக்குத் தொடர்ச்சி மலைகளில் காப்பி பயிரின் வளர்ச்சிக்கு உள்ள வாய்ப்பினை அறிய சேலம் மாவட்ட சின்னகல்ராயன் மலைப்பகுதியில் 100 எக்டேர் பரப்பில் ஒரு மாதிரி காப்பித் தோட்டம் அமைக்கப்பட்டு வருகிறது.

**2.15. வெற்றிலை.**

வெற்றிலைப்பயிரில் 'வாடல் நோய்' மிகுந்த சேதத்தை விளைவித்து வருகின்றது. இந்நோயைக் கட்டுப்படுத்த பயிர் பாதுகாப்பு மருந்துகள், மானிய விலையில் கோவை, சேலம், திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் விநியோகிக்கப்படுகின்றன.

2.16. மலைப்பயிர்களின் சாகுபடியினை விரிவாக்கிட ஏதுவான பகுதிகளை தெரிவு செய்யும் பணி 600 எக்டேரில் மேற்கொள்ளப்படுவதுடன், செடிகளும் இதர இடுபொருட்களும் மானிய விலையில் விநியோகிக்கப்படும். இத்திட்டத் திற்கென ரூபாய் 12.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**3. மலர்ப்பயிர்கள் வளர்ச்சியும் அலங்கார தோட்டங்கள் அமைக்கும் பணியும்.**

வணிக மலர்களான மல்லிகை, கனகாம்பரம், சாமந்தி, ரோசா, நிலச் சம்பங்கி போன்றவற்றின் சாகுபடியினை அதிகரிக்கும் நோக்குடன், இடுபொருட்கள் மானிய விலையில் வழங்கப்படுவதுடன், 50 செயல்விளக்கங் களும் அமைக்கப் பெறுகின்றன. 1985-86 ஆம் ஆண்டில், (10) பத்து நகரங்களில் தோட்டக்கலை கண்காட்சி நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

4. மாவட்டங்களில் தோட்டக்கலை பயிர்களின் தீவிர மேம்பாட்டுத் திட்டம்.

பயிர் மாற்றுத் திட்டம் மற்றும் தரிசு நிலங்களை சாகுபடியின்கீழ் கொண்டுவரும் அடிப்படையில் பல்வேறுபட்ட தோட்டக்கலை பயிர்களின் சாகுபடியினை அதிகரித்திட ஏதுவாக இத்திட்டம் வட ஆற்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் செயலாக்கப் படுகிறது. வருடாந்திர மற்றும் நீண்டகால பயிர்கள் சாகுபடியின்கீழ் 1985-86 ஆம் ஆண்டில் 12,000 எக்டேர் பரப்பளவில் நிலம் கொண்டு வரப்படும்.

5. மலைப்பகுதிகளில் தோட்டக்கலை மேம்பாட்டுப் பணிகள்.

கோவை, பெரியார், சேலம், தருமபுரி, வட ஆற்காடு, திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம் மற்றும் மதுரை மாவட்டங்களில் உள்ள மலைப்பகுதிகளில் வருடாந்திர மற்றும் நீண்டகால தோட்டக்கலை பயிர்களின் சாகுபடியினை பயிர் மாற்ற அடிப்படையில் புகுத்திட ஏதுவாக இடுபொருட்கள் மானிய விலையில் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகின்றன. 1985-86 ஆம் ஆண்டில் 3,500 எக்டேரில் இச்சாகுபடியினை புகுத்திட ஏதுவாக இடு பொருட்கள் வழங்கப்படும்.

5.2. நீலகிரி மாவட்டத்தில், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட பல்வகைப்பட்ட பணிகள், நீர் பிடிப்பு பகுதி மேம்பாட்டு அடிப்படையில் மாற்றியமைக்கப்பட்டு செயலாக்கப்படுகின்றன. 1984-85 ஆம் ஆண்டில், மண் வளப்பாதுகாப்பு பணிகள் 1,200 எக்டேரில் மேற்கொள்ளப் பட்டன; 40 இலட்சம் தேயிலைப் பதியன்கள் விநியோகிக்கப்பட்டன; 9,000 எக்டேரில் தேயிலையில் பயிர்ப்பாதுகாப்பு பணி மேற்கொள்ளப்பட்டது. 250 மெ. டன் தரமான உருளைக்கிழங்கு விதை விநியோகிக்கப்பட்டது; மற்றும் 50 பழம் பதனப்படுத்தும் நிருபணங்கள் மேற்கொள்ளப்பட்டது. இவ்வனைத்துப் பணிகளும், 1985-86 ஆம் ஆண்டில் மேலும் தீவிரப்படுத்தப் படும்.

6. நீலகிரி மாவட்டத்தில் பயிற்சி வழி தொடர்பு திட்டம்.

நீலகிரி மாவட்டத்தில் தோட்டக்கலை விரிவாக்கப் பணியமைப்பு, பயிற்சி வழி தொடர்பு திட்டத்தின்கீழ் சீரமைக்கப்பட்டு, உழவர்கட்கு அதிக பயனளிக்கும் வகையில் விரிவாக்கப் பணி மேற்கொள்ளப்படுகிறது.



7. மேற்கு தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்.

கீழ் பழனி மலைப்பகுதிகளில் கமலா ஆரஞ்சு அபிவிருத்திப் பணியானது, முடிக்கொத்து நோயால் அழிவுற்ற மலை வாழைப் பகுதிகளில் செயல்படுத்தப் படுகின்றது. ஆண்டுதோறும் 30,000 கமலா ஆரஞ்சு நாற்றுக்கள் விநியோகிக்கப் படுகின்றன. மித வெப்பமண்டல பழங்கள் மற்றும் வாசனைத் திரவியப் பயிர்ச் செடிகள், உரம் மற்றும் பயிர் பாதுகாப்பு மருந்துகள், திருநெல்வேலி, மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் உள்ள மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளில் விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கப்படுகின்றன. ஆண்டுதோறும் 800 எக்டேர் பரப்பளவில் இப்பயிர்கள் விரிவாக்கப்படுவதுடன், இதே அளவுக்கு மற்ற இடுபொருட்களும் வழங்கப்படுகின்றன. தரமான செடிகளை உற்பத்தி செய்யவும், மலைப்பகுதியில் நிலத்தை செவ்வனே பயன் படுத்தவும், சிறுமலையில் 200 எக்டேரில் மாபெரும் பழப்பண்ணை நிறுவப் பட்டுள்ளது. மதுரை மாவட்ட மலை அடிவாரப் பகுதிகளிலும், அர்ஜுனா நதி நீர்ப்பிடிப்பு பகுதிகளிலும் தோட்டக்கலை மேம்பாட்டு திட்டம் 1984-85 ஆம் ஆண்டில் புதியதாக அனுமதிக்கப்பட்டு 1985-86 ஆம் ஆண்டில் 450 எக்டேரில் பல்வகைப்பட்ட தோட்டக்கலை பயிர்கள் சாகுபடியினை புகுத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

8. ஒருங்கிணைந்த ஆதிவாசிகள் மேம்பாட்டுத் திட்டம்.

ஐந்து மாவட்டங்களில் 15 ஆதிவாசிகள் பகுதிகளில் 3,000 ஆதிவாசிகள் குடும்பங்களுக்குப் பயனுறும் வகையில் இத்திட்டம் செயலாக்கப்படுகிறது. விதைகள், செடிகள், உரங்கள், பயிர்ப்பாதுகாப்பு மருந்துகள் போன்ற அனைத்து இடுபொருட்களும் 50 விழுக்காடு விலையில் ஆதிவாசிகளுக்கு ஒவ்வொன்றிலும் 1,200 எக்டேர் பரப்பளவு அடைய விநியோகம் செய்யப் படுகிறது. இது நீங்கலாக செயல்விளக்க பாத்திகள் அமைக்கப்படுவதுடன், உழவியல் குறித்த பயிற்சிகளும் ஆதிவாசிகளுக்கு அளிக்கப்படுகின்றன. 1985-86 ஆம் ஆண்டில் இப்பணிகள் தொடர்ந்து நீடிக்கப்படும்.

8.2. சின்னகல்ராயன் மலையில் 400 எக்டேரில் நிறுவப்பட்டுள்ள மாபெரும் பழப்பண்ணை செயல்விளக்கப் பண்ணையாக திகழ்வதுடன் இம்மலைவாழ் ஆதிவாசி மக்களுக்கு ஆண்டு முழுமையும் வேலை வாய்ப்பினையும் நல்குகின்றது.

8.3. திருச்சிராப்பள்ளி மாவட்டம், பச்சைமலையில் ஒரு தோட்டக்கலைப் பண்ணையும், வடாற்காடு மாவட்டம், தகரக்குப்பத்தில் ஒரு மாபெரும் பழப் பண்ணையும் 1985-86 ஆம் ஆண்டில் நிறுவப்படும்.

**9. செயல்முறை தோட்டக்கலையில் பயிற்சி அளித்தல்.**

குடுமியான்மலையில் உள்ள மத்திய தோட்டக்கலை பயிற்சி நிலையத்தில், தோட்டக்கலைத்துறையில் பணியாற்றும் களப்பணியாளர்கட்குத் தொழில் நுட்ப பயிற்சி அளிக்கப்படுகிறது. தோட்டக்கலையில் செயல்முறை பயிற்சி அளிக்கும் நோக்குடன் இரண்டாண்டு பட்டயப் பயிற்சியும் ஓராண்டு மற்றும் ஆறு மாத கால சான்றிதழ் பயிற்சிகளும் ஒவ்வொன்றிலும் இருபது மாணவர்கட்கு, சென்னை தரமணி தோட்டக்கலை பயிற்சி நிலையத்தில் அளிக்கப்படுகின்றன. தோட்டக்கலைப் பயிர்களின் வளர்ச்சியினை மேலும் மேம்படுத்த, பின்வரும் திட்டங்கள் வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கி (நாபார்டு) உதவியுடன் செயல்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

1. தர்மபுரி மாவட்டத்தில் ஒருங்கிணைந்த 'மா' அபிவிருத்தித் திட்டம்.

2. தென் ஆற்காடு மாவட்டத்தில் முந்திரி மேம்பாடு திட்டம்.

3. திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் 'பருவமல்லா காலத்து மா பயிர்' மேம்பாடு.

4. திருநெல்வேலி மாவட்டத்தில் எலுமிச்சை வகைப் பயிர் அபிவிருத்தி.

மேலும் 1985-86 ஆம் ஆண்டில் பின்காணும் பகுதி இரண்டு புதிய திட்டப் பணிகள் குறிப்பாக செயலாக்கப்படும்.

1. தோட்டக்கலை பண்ணைகளுக்குச் சொட்டு நீர்ப்பாசன வசதி அளித்தல்.

2. தோட்டக்கலை பண்ணைகளுக்குக் கூடுதல் பண்ணைத் தேவைகளை அளித்தல்.

3. குடுமியான்மலை மத்திய தோட்டக்கலை பயிற்சி நிலையத்திற்குக் கட்டிட வசதி அளித்தல்.

4. பெரியார்-வைகை நீர் பிடிப்பு பகுதிகள் மற்றும் மதுரை நகர் சுற்றுப்புறங்களில் காய்கறி மேம்பாடுத் திட்டம்.

5. மானிய விலையில் வீரிய ஒட்டு காய்கறி விதைகளின் விநியோகம்.

### விதைச் சான்றளிப்புத் துறை.

விதைச் சான்றுத் துறை உரிய காலத்தில் விதைகளை சான்றளிப்பது மற்றும் 1966 ஆம் ஆண்டு விதைச் சட்டத்தை செயல்படுத்தும் பணியைச் செய்கின்றது.



### முன்னேற்றமும் சாதனைகளும்.

1983-84 மற்றும் 1984-85 ஆம் ஆண்டுகளில் விதைச் சான்றளிப்புத் திட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட பரப்பளவு மற்றும் சான்றளிப்பு செய்யப்பட்ட விதைகளின் அளவு வருமாறு :—

| ஆண்டு. | பதிவு செய்யப்பட்ட பரப்பளவு (ஏக்கரில்) | சான்றளிப்பு செய்யப்பட்ட விதைகளின் அளவு (மெட்ரிக் டன்னில்). |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1983–84 .. .. | 37,552 | 12,526 |
| 1984-85 .. .. | 49,500 (எதிர்பார்க்கப் படும் அளவு.) | 14,600 (எதிர்பார்க்கப் படும் அளவு.) |

சான்று விதைகளுக்கு விவசாயிகளிடையே நல்ல வரவேற்புள்ளதால் பரப்பு, சான்றிதழ் மற்றும் உற்பத்தியாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளன.

2. குறிப்பாக வீரிய ஒட்டு ரகப் பருத்தி உற்பத்தி 1980-81 ஆம் ஆண்டு 140 ஏக்கரில் மட்டும் நடைபெற்று வந்தது.

1983-84-ல் 667 ஏக்கரும், 1984-85-ல் 2,755 ஏக்கர் பரப்பும் பதிவு செய்யப்பட்டு உற்பத்தியில் உள்ளது. வீரிய ஒட்டுப் பருத்தி உற்பத்தியினால் கோவை மற்றும் பெரியார் மாவட்டங்களில் குறிப்பாக அவிநாசி, அன்னூர், சத்தியமங்கலம் மற்றும் கோபிச்செட்டிபாளையம் தாலுக்காக்களில் ஆண் மற்றும் பெண் விவசாய வேலையாட்களுக்கு புதிய வேலை வாய்ப்பளித்து வருகிறது. வீரிய ஒட்டுப் பருத்தி 700 மெட்ரிக் டன் அளவு உற்பத்தி செய்யப்பட்டு, தமிழகத்தின் தேவை போக மீதமுள்ள விதைகள் ஆந்திரா, மகாராஷ்டிரா மற்றும் குஜராத் மாநிலங்களில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. தமிழகத்தில் உற்பத்தி செய்யப்படும் சான்று விதைகளின் தரம் மேம்பட்டுள்ளதால் நமது மாநில விதைகளுக்கு வெளி மாநிலங்களில் அதிக அளவு தேவையேற்பட்டு வருகிறது. இதுபோன்று நமது மாநில சான்று பெற்ற 'சி.எஸ்.எச். 5' ஒட்டு வீரிய சோள விதைகளுக்கும் மற்ற மாநிலங்களில் நல்ல வரவேற்புள்ளது.

3. விதைச் சான்றுத் துறையின் இதரப் பணிகளான மறு ஆய்வு, மறு சான்றளிப்பு மற்றும் சுத்திகரிப்பு பணிகளின் மூலம் இத்துறைக்கு வருவாய் அதிகரித்து வருகிறது. 1984-85-ல் இத்துறை, 285 விதை சுத்திகரிப்பு நிலையங்களை ஆய்வு செய்து அங்கீகரித்துள்ளது.

4. விதை உற்பத்தியைக் குறித்து விதை மைய அலுவலர்களுக்கும், விவசாயிகளுக்கும், அவர்கள் நடைமுறையில் எளிதில் அறிந்துகொள்ளும் வண்ணம் பல பயிற்சித் திட்டங்களை விதை மைய அலுவலகங்களில் செயலாக்கி வருகிறது. சான்று அலுவலர்கட்கும் உற்பத்தியாளர்க்கு உதவ வல்ல தர நிர்ணய ஆய்வு முறைகளை அறிவிக்கும் பிரசுரங்கள், கையேடுகள் வெளியிடப்பட்டுள்ளன.

5. அகில இந்திய வானொலி நிலையம் கோவை, திருச்சி, திருநெல்வேலி மற்றும் சென்னை நிலையங்களில் விதைச் சான்றின் அவசியமும், தன்மைகளும், உற்பத்தி நுணுக்கங்களும் எளிதில் விளங்கும் வண்ணம் ஒலிபரப்பப்பட்டு வருகிறது.

### 1985-86 ஆம் ஆண்டிற்கான திட்டங்கள்.

1985-86 ஆம் ஆண்டிற்கு 51,850 ஏக்கர் பரப்பு சான்றளிப்பின் கீழ் கொண்டுவர திட்டமிடப்பட்டுள்ளது. பயிர் வளர்ச்சி சோதனை செய்து இனத்தூய்மை அறிய உதவியாக இருக்கும் பொருட்டு ரூபாய் 5 இலட்சம் செலவில் ஒரு கண்ணாடி ஆய்வுக் கூடம் கட்டும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இத்துறையின்கீழ் 180 பயிர் ரகங்கள் சான்றளிப்பிற்கு பதிவு செய்து சான்றளிக்கப்பட்டுள்ளது. பயிர் ரகங்களை தெரிந்து வயலின் தரத்தை அறிவதற்கு பயிற்சி மிகவும் தேவையாகிறது. இதனைக் கருத்திற்கொண்டு வேளாண்மை அலுவலர்களுக்கு விதை சான்றளிப்புப் பணியில் போதிய அறிவும் தொழில் நுட்பத் திறனும் கிடைப்பதற்கான வழிவகைகள் செய்யப்பட்டுள்ளது.

### விதை ஆய்வு.

அறிவிக்கப்பட்ட ரகங்கள், வேளாண்மைத்துறை, எண்ணெய் வித்துத் துறை மற்றும் தனியார் நிறுவனங்கள் மூலம் விற்பனைக்கு வருகிறது. இவ்வாறு விற்பனைக்கு வரும் விதைகள் தரமானதாக இருப்பதை கண்காணிக்க விதைச் சட்டம், 1966 வழி வகுக்கின்றது. இவை விவசாயிகளுக்கு தேர்ந்த தரமான விதைகள் வழங்கும் பணியை செவ்வனே செய



லாற்றி வருகிறது. 1980-81 ஆம் ஆண்டு 776 விதை மாதிரிகள் ஆய்வு செய்து முடிவுகளின்படி அறிவுரை வழங்கப்பட்டது. 1983-84 ஆம் ஆண்டு, 8,066 விற்பனைக் கூடங்களை சோதனை செய்து 5,141 மாதிரிகள் எடுத்து ஆய்வு செய்து முடிவுகளின்படி அறிவுரை வழங்கப்பட்டது. மிகவும் தரம் குறைந்த விதைகளை விற்ற விற்பனையாளர்கள்மீது நடவடிக்கைகளையும் இத்துறை மேற்கொண்டு வருகிறது. இதன் நோக்கம், போலி விதைகளை, விற்பனையாளர்கள் விவசாயிகட்கு வழங்கிடுவதைத் தடுப்பதேயாகும்.

'1984-85 ஆம் ஆண்டில் 5,000 விதை விற்பனை நிலையங்களைப் பார்வையிட குறியீடு நிர்ணயிக்கப்பட்டு, 7,790 நிலையங்களைப் பார்வையிடப்பட்டது. 4,950 விதை மாதிரிகளை எடுத்து ஆய்வு செய்யப்பட்டது.

இத்திட்டத்தில் 1985-86 ஆம் ஆண்டில், 5,400 விதை விற்பனை நிலையங்களைப் பார்வையிடவும், 5,400 விதை மாதிரிகளை எடுத்து பரிசோதனை செய்யவும் குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டு குடுமியான் மலையில் உள்ள ஒரு விதை சோதனை நிலையம் அறிவிக்கப்பட்டதாக்கப்படுவதால் மூன்று விதைப் பரிசோதனை நிலையங்கள், விதைத்தரத்தை, ஆய்வு செய்யும்.

### வேளாண்மை விற்பனைத் துறை.

வேளாண்மை விற்பனைத் துறை கீழ்க்கண்ட திட்டப் பணிகளை செயல்படுத்துகிறது :—

1. விற்பனைக் குழுக்கள் மூலமாக ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை அமைத்தலும் நிர்வகித்தலும்.

2. "அக்மார்க்" தரக்கட்டுப்பாடு.

3. பருத்தி தரம் பிரித்தல்.

4. வணிகமுறை தரம் பிரித்தல்.

5. பயிற்சி.

6. பருத்தி சான்றுரையும் சட்ட அமுலும்.

1. ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் :

வேளாண்பெருமக்களின் விளை பொருட்களுக்கு நல்ல விலை பெற்றுத் தரும் நோக்கத்துடன் தமிழகத்தில் 13 விற்பனைக் குழுக்களின் கட்டுப்பாட்டில் இதுவரை 264 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் செயல்பட்டு வருகின்றன. சென்ற ஆண்டைக் காட்டிலும், மேலும் 7 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் இந்த ஆண்டு நிறுவப்பட்டுள்ளது.

பெரியார் மாவட்டத்திற்காக தனியாக ஒரு விற்பனைக் குழுவை அமைப்பது அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

நல்ல வாய்ப்புகள் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் வளர்ச்சிக்காக 102.44 கோடி ரூபாய் நிதி உதவி கோரும் திட்டத்தை சென்ற ஆண்டு மத்திய அரசிற்கு சமர்ப்பித்ததை தற்பொழுது உலக வங்கியினர் பரிசீலித்து வருகின்றனர்.

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு 1984-85 ஆம் ஆண்டில் வந்த வேளாண்மை விளை பொருள் வரத்தும் விற்பனைக் குழுக்களின் வருமானமும் கீழ்வருமாறு :—

வரத்துக்கள்—5,18,680 மெட்ரிக் டன்.

வருமானம்—ரூபாய் 4.50 கோடி.

எல்லா விற்பனைக் கூடங்களுக்கும் நிலம் வாங்கி தேவையான அடிப்படை வசதிகளையும் படிப்படியாக செய்திட மூன்று ஆண்டுக்கான செயல் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

பெரிய நகரங்களில் காய்கனிக்காக தனியாக விற்பனைக் கூடங்களை மத்திய மான்யத்துடன் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. மேற்படி விற்பனைக் கூடங்களில், குளிர் பதன சேமிப்புக் கூடங்களும், சுகாதாரமான விற்பனை அங்காடிகளும் இருக்கும். இட வசதிகள் இருக்கும் 10 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் பணியாளர்களுக்காக குடியிருப்புகள் படிப்படியாகக் கட்டவும் திட்டமிடப்பட்டுள்ளது.

தேசிய ஊரக கிட்டங்கிகள் கட்டும் திட்டத்தின்கீழ் இதுவரை 89 ஊரக கிட்டங்கிகள் கட்டப்பட்டு வருகின்றன. மேலும் 15 ஊரகக் கிட்டங்கிகள் கட்டும் திட்டம் பரிசீலனையில் உள்ளது.

இந்த ஊரக கிட்டங்கிகளில், அறுவடையானதும், விளைபொருள்களின் விலை குறையும் பொழுது, சிறு நில விவசாயிகள் தங்களது விளை பொருட்களை இவற்றில் சேமித்து, பண உதவி பெற்று, பின்னர் நல்ல விலை கிடைக்கும் சமயம் விளை பொருள்களை விற்று பயன் பெறலாம்.

**2. "அக்மார்க்" தரம் பிரிப்பு :**

தமிழகத்தில் 36 "அக்மார்க்" ஆய்வுக்கூடங்கள் செயல்படுகிறது. மக்கள் அன்றாடம் உபயோகிக்கும் சமையல் எண்ணெய் வகைகள், நெல், தேன், மஞ்சள்தூள், மிளகாய்தூள், மசாலா பொடிகள் மேற்கூறிய ஆய்வுக்கூடங்களில் பரிசோதனை செய்யப்பட்டு தரமானவற்றிற்கு மட்டும் "அக்மார்க்"



முத்திரையிட்டு விநியோகிக்கப்படுகின்றன. அரிசி, பருப்பு வகைகள், மஞ்சள், வெல்லம், பழம், முட்டை, பாக்கு ஆகிய பொருட்களும் "அக்மார்க்" முறையில் தரம் பிரிக்கப்படுகிறது. 1984-85 ஆம் ஆண்டில் மட்டும் 4,85,503 குவிண்டால் உணவுப் பொருட்கள் இம்முறையில் தரம் பிரிக்கப்பட்டது. 1985-86-ம் ஆண்டில் மேலும் ஒரு "அக்மார்க்" ஆய்வுக்கூடத்தை ரூபாய் 2.04 இலட்சம் செலவில் நிறுவ தீர்மானிக்கப்பட்டுள்ளது.

"அக்மார்க்" ஆய்வுக்கூடங்களுக்காக இதுவரை 10 இடங்களில், சொந்தக் கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளது. இந்த ஆண்டு, காங்கேயத்தில் "அக்மார்க்" ஆய்வுக்கூடக் கட்டிடம் கட்ட அரசு ஆணை வழங்கியுள்ளது. அடுத்த ஆண்டில் மேலும் ஒரு "அக்மார்க்" ஆய்வுக்கூடம் ரூபாய் 3.50 இலட்சம் செலவில் கட்ட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**3. பருத்தி தரம் பிரித்தல் :**

பதினோரு பருத்தி தரம் பிரிப்பு மையங்கள் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் செயல்படுகின்றன. இந்த மையங்களில் விற்பனைக் கூடங்களுக்கு விற்பனைக்கு வரும் பருத்தி தரம் பிரிக்கப்படுகிறது. இதனால் விவசாயிகள் தங்கள் பருத்தியின் தரத்திற்கேற்ப நல்ல விலையைப் பெற முடிகிறது. 1984-85-ம் ஆண்டு 4.61 இலட்சம் குவிண்டால் பருத்தி தரம் பிரிக்கப்பட்டது.

**4. வணிகமுறைத் தரம் பிரித்தல் :**

102 வணிகமுறை தரம் பிரிப்பு மையங்கள் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் அமைக்கப்பட்டு செயல்படுகின்றன. விவசாயிகளின் விளைப் பொருட்கள், இங்கே தரம் பிரிக்கப்படுவதனால் விளைபொருட்களின் தரத்திற்கேற்ப விலைகளை விவசாயிகள் பெறுகின்றனர். சென்ற ஆண்டு 35.97 இலட்சம் குவிண்டால் விவசாய விளைபொருட்கள் தரம் பிரிக்கப்பட்டன.

**5. பயிற்சி :**

விற்பனைத்துறை இயக்கத்தில் செயல்படும் பயிற்சி மையம், இத்துறையின் உதவி வேளாண் அலுவலர்கள், மற்றும் விற்பனை குழுக்களின் மேற்பார்வையாளர்களுக்கு "அக்மார்க்" வணிகமுறைத் தரம் பிரிப்பில் உள்ள தொழில் நுட்பங்கள் பற்றிய பயிற்சியை 3 மாதங்களில் அளிக்கிறது. இவ்வாறு ஒவ்வொரு ஆண்டும் 60 பேர்களுக்கு பயிற்சி அளிக்கிறது.

[1985 ஜூன் 28

6. பருத்தி சான்றுரையும் சட்ட அமுலும் :

பருத்தி விதைகளின் தூய தன்மையைக் காப்பாற்றுவதும், பருத்தி அறைவை, மற்றும் பஞ்சு அழுத்தும் தொழிற் கூடங்களில் பருத்தி மற்றும் பஞ்சில் கலப்படம் செய்வதைத் தடுக்கவும் இத்திட்டம் வழிவகை செய்கிறது. இதனால் தமிழகத்திற்கு தேவையான பருத்தியின் அளவையும் பிற மாநிலங்களிலிருந்து தருவிக்கப்படும் பருத்தி, பஞ்சு அளவினையும் அறிய முடிகிறது. இதற்காக இவ்வியக்கம் சில சட்டங்களையும், விதிகளையும் இம்மாநிலத்தில் செயல்படுத்துகிறது.

கரும்புச்சாலை மேம்பாட்டுத் திட்டம்.

தமிழ்நாட்டில் வளர்ச்சி அடைந்து வரும் தொழில்களில் மிக முக்கியமானதும், வேகமாக வளர்ச்சி அடைவதும் சர்க்கரைத் தொழில் ஒன்றுதான். தமிழ்நாட்டில் 23 சர்க்கரை ஆலைகள் பல பகுதிகளில் நிறுவப்பட்டுள்ளன. கரும்பை ஆலைக்கு விரைவாக எடுத்துச் செல்ல கரும்புச் சாலை அபிவிருத்தி திட்டம் என்ற திட்டத்தினை ஏற்படுத்தி ஏற்கனவே சரியில்லாத சாலைகளை புதுப்பிக்கவும், புதிய சாலைகள் அமைக்கும் பணிகளை மேற்கொள்ளவும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

இத்திட்டத்திற்கு ஆகும் செலவினை முழுவதும் சர்க்கரை ஆலைகளிலிருந்து வசூலிக்கப்படும் "செஸ்" நிதியிலிருந்தே செலவழிக்கப்படுகிறது.

இத்திட்டம் நிறைவேற தமிழ்நாடு அரசு மூன்று கோட்ட பொறியாளர்களையும் ஒரு வட்ட பொறியாளரையும் அவர்களுக்கு உதவியாக பல அலுவலர்களையும் நியமித்துள்ளது. மேற்கூறிய அலுவலர்கள் சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் கடலூர் ஆகிய இடங்களில் பணியாற்றுகிறார்கள்.

கரும்புச் சாலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் புதிய சாலைகளை அமைத்தும், சரளைக் கற்கள் பரப்பியும், தற்போது இருக்கும் சாலைகளை மேம்படுத்தியும், தார்போட்டும், பாலங்கள் சிறுபாலங்கள், கழிவுநீர் வாய்க்கால்கள் அமைத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இவைகள் மழைக்காலங்களிலும் கரும்பினை ஆலைகளுக்குத் தடங்கலின்றிக் கொண்டு வர உதவுகின்றன.

கரும்புச்சாலை அபிவிருத்தி திட்டத்திற்கு தேவையான நிதி அந்தந்த ஆலைகளில் "லோக்கல் ஏரியாவினுள்" கொண்டுவரப்படும் கரும்பின்மீது டன் ஒன்றுக்கு ரூ. 5 வீதம் "செஸ்" வசூலிக்கப்பட்டு சேகரிக்கப்படுகிறது. 1985-86-ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.



1985 ஜூன் 28]

1980-81 ஆம் ஆண்டிலிருந்து 1984-85 ஆம் ஆண்டு வரை இத்திட்டத்தின் கீழ் செலவான தொகையின் விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| | ஆண்டு. | செலவிடப்பட்ட தொகை. |
|---|---|---|
| | 1 | 2 |
| | | ரூபாய் இலட்சங்களில். |
| 1. | 1980-81 .. .. .. .. | 180.41 |
| 2. | 1981-82 .. .. .. .. | 230.24 |
| 3. | 1982-83 .. .. .. .. | 250.67 |
| 4. | 1983-84 .. .. .. .. | 253.35 |
| 5. | 1984-85 .. .. .. .. | 225.09 |

நகர்புற கலவை எருத் திட்டம்.

தமிழ்நாட்டிலுள்ள 98 நகராட்சிகளிலும், எட்டு நகரியங்களிலும், கலவை எரு உற்பத்தித்திட்டம் செயல்படுகின்றது. இதற்கான தொழில் நுட்ப உதவியை வேளாண்மைத்துறை அளிக்கிறது. உற்பத்தி செய்யப்படும் கலவை எரு உழவர்களுக்கு அவர்களது நிலங்களில் பயன்படுத்துவதற்காக வழங்கப்படுகிறது. 1985-86-ஆம் ஆண்டில் 3,30,800 மெட்ரிக் டன் கலவை எரு தயாரிப்பதற்கான குறியீட்டளவு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. உள்ளாட்சி நிறுவனங்கள் தரமான கலவை எருவை உற்பத்தி செய்ய ஊக்குவிக்கும் பொருட்டும் கலவை எரு விற்பனையை அதிகரிக்கும் பொருட்டும் போட்டிகள் நடத்தி சுழற்கேடயங்களும் ரொக்கப் பரிசும் வழங்கப்படுகிறது.

கழிவுநீர்ப் பயன் திட்டம்.

23 நகராட்சிகள் தற்போது கழிவுநீர் பண்ணையை பராமரித்து வருகின்றன. இப்பண்ணைகளில் பசும்புல் மற்றும் பயன்தரும் பயிர்கள் வளர்க்கப்படுகின்றன. தற்போது இத்திட்டத்தின்கீழ் பயன்படுத்தப்பட்டு வரும் 265 ஏக்கர் பரப்பளவு, 1985-86-ஆம் ஆண்டில் 365 ஏக்கர் பரப்பளவுக்கு விரிவுபடுத்தப்படும்.

வறட்சிக்குட்பட்ட பகுதிகள் திட்டம்.

வறட்சிக்குட்பட்ட பகுதிகள் திட்டம் மத்திய அரசு தொடங்கிய சிறப்புத் திட்டமாகும், பல அபிவிருத்தி பணிகள் மூலம் நீண்ட காலமாக வறட்சித் தாக்குதலுக்குட்பட்ட பகுதிகளை மேம்படுத்துவதும், வறட்சித் தாக்குதலினால் இப்பகுதிகளில் ஏற்படும் கடுமையை ஓரளவு குறைப்பதும் இத்

திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டச் செலவினை மத்திய அரசும், மாநில அரசும், 50:50 விகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றன. இத்திட்டம், இராமநாதபுரம் மாவட்டத்தில் 16 வட்டாரங்களிலும், தர்மபுரி மாவட்டத்தில் 10 வட்டாரங்களிலும், புதுக்கோட்டை மாவட்டத்தில் 4 வட்டாரங்களிலும் செயல்படுத்தப்படுகிறது.

2. 1984-85 ஆம் ஆண்டிற்கு ரூ. 441-13 இலட்சம் அளவில் பல தரப்பட்ட பணிகளை இராமநாதபுரம், தர்மபுரி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் நிறைவேற்றுவதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. விடுபட்டப் பணிகளை நிறைவேற்றுவதற்காக ரூ. 143-68 இலட்சம் இம்மூன்று மாவட்ட முகமைகளுக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

3. இந்திய அரசு, தற்போது இம்மாநிலத்தில் இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கம், காமராஜர், தர்மபுரி, புதுக்கோட்டை மற்றும் திருநெல்வேலி ஆகிய 6 மாவட்டங்களில் 43 வட்டாரங்களில் இத் திட்டத்தினை இந்த நடப்பாண்டு முதல் செயலாற்றுவதற்கு ஒப்புதல் அளித்துள்ளது, மேற்படி திட்டத்திற்கு இந்திய அரசு ரூ. 516,00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டிற்கு ஒப்புதல் அளித்துள்ளது.

### தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் கழகம்.

தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் இணையகம், 1966 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இக்கழகத்தின் முக்கிய நோக்கங்கள் :—

(1) வேளாண்மை, கால்நடை பராமரிப்பு, மீன்வளம், கோழி வளர்ப்பு போன்றவற்றை நவீன முறையில் வளர்ச்சி பெற உதவும் வகையில் அவை சார்ந்த தொழில்களை ஊக்குவித்தல்.

(2) உணவுப் பொருட்களைப் பதப்படுத்தும் தொழில்களை ஊக்குவித்தல்.

இந்நிறுவனத்தில் தற்போதைய அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 400 இலட்சம் ஆகும். அதில் 360 இலட்சம் மதிப்புள்ள பங்குகள் வெளியிடப்பட்டு அதற்குரிய தொகை செலுத்தப்பட்டுள்ளது. இதில் தமிழ்நாடு அரசு ரூ. 195 இலட்சமும் இந்திய அரசு ரூ. 165 இலட்சமும் செலுத்தியுள்ளன.



1. உர விற்பனை.

பல்வேறு வகையான உரங்களை விவசாயிகளுக்கு வழங்கும் பொருட்டு, இக்கழகம் ஐந்து குறிப்பிட்ட நிறுவனங்கள் தயாரிக்கும் பல்வேறு வகையான உரங்களை விநியோகம் செய்யும் உரிமையைப் பெற்றுள்ளது. இக்கழகம் 1984-85-ஆம் ஆண்டில் அவ்வாண்டு குறியீடான 60,000 மெ. டன் உரங்களுக்கு எதிராக 53,806 மெ. டன் அளவுள்ள உரங்களை விற்பனை செய்துள்ளது. 1985-86 ஆம் ஆண்டு 1,00,000 மெ. டன் அளவுள்ள உரங்களையும் விற்பனை செய்ய திட்டமிட்டுள்ளது.

2. டிராக்டர்கள், பவர் டில்லர்கள் மற்றும் உதிரி பாகங்கள் விற்பனை.

இக் கழகம் விவசாயிகளுக்குத் தேவையான நல்ல உதிரி பாகங்களையும் டயர் மற்றும் டியூப்புகளையும் மின் கலங்களையும் தேவையான நேரத்தில், நியாயமான விலையில் சிராக தனது விற்பனை நிலையங்கள் மூலம் விநியோகம் செய்து வருகின்றது. தற்சமயம் இக்கழகம் மொத்தம் 15 விற்பனை நிலையங்களைக் கொண்டுள்ளது. அதில் 14 விற்பனை நிலையங்கள் நமது மாநிலத்திலும் ஒரு விற்பனை நிலையம் பாண்டிச்சேரியிலும் உள்ளது.

1984-85-ஆம் ஆண்டில் ரூபாய் 411-96 இலட்சத்திற்கு விற்பனை செய்துள்ளது. 1985-86 ஆம் ஆண்டில் ரூபாய் 518-81 இலட்சத்திற்கு விற்பனை செய்ய திட்டமிட்டுள்ளது.

இக்கழகம் 1984-85 ஆம் ஆண்டில் 73 டிராக்டர்களையும், 471 பவர் டில்லர்களையும் விற்பனை செய்துள்ளது. 1985-86 ஆம் ஆண்டில் விற்பனைக் குறியீடாக 140 டிராக்டர்களும், 450 பவர் டில்லர்களும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

3. பூச்சிக்கொல்லி மருந்து தயாரிப்புத் திட்டம்.

1972 ஆம் ஆண்டு இக்கழகம் பிரசித்தி பெற்ற 'பி.எச்.சி. 10 சதவிகிதம்' போன்ற பூச்சிக்கொல்லி மருந்துகளைத் தயாரிக்க ஆரம்பித்தது, தொடக்கத்தில் இக்கழகம் பூச்சிக்கொல்லி மருந்துகளைத் தனியார் நிறுவனங்களின் உதவியால் தயாரித்து வந்தது. இப்பொழுது இக்கழகம் தனது சொந்தத்தில் ரூ. 9-79 இலட்சம் முதலீட்டில் அம்பத்தூரில் ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்தியுள்ளது. இந்த தொழிற்சாலை தனது வர்த்தக ரீதியிலான உற்பத்தியை 1976 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் முதல் ஆரம்பித்தது. பெருகிவரும் பூச்சிக்கொல்லி மருந்துகளின் தேவையை ஈடுகட்ட, ரூ. 4 இலட்சம் செலவில் தேவையான வசதிகளுடன் தனது இரண்டாவது ஆலையை ஏற்படுத்தியுள்ளது. இந்திய தர நிர்ணய கழகத்தின் தரத்திற்கேற்ப உயர்ந்த பூச்சிக்கொல்லி மருந்துகள் இக்கழகத்தால் உற்பத்தி செய்யப்பட்டு பொது மக்களுக்கு இக்கழகத்தின் கிளை நிலையங்கள் மூலமும் வேளாண்மைத் துறை கிடங்குகள் மூலமும் விநியோகிக்கப்படுகின்றன.

[1985 ஜூன் 28

1984-85-ல் ரூ. 51-83 இலட்சம் மதிப்புள்ள 3,848 மெ. டன். அளவுள்ள தூள் மருந்துகளும், ரூ. 18-38 இலட்சம் மதிப்புள்ள 40,930 லிட்டர் திரவ மருந்துகளும் விற்பனை செய்யப்பட்டன. 1985-86 ஆம் ஆண்டில் ரூ. 75-90 இலட்சம் மதிப்புள்ள 5,510 மெ. டன் அளவுள்ள தூள் மருந்துகளையும், ரூ. 52-00 இலட்சம் மதிப்புள்ள 1,00,000 லிட்டர் திரவ மருந்துகளையும் உற்பத்தி செய்து விற்பனை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

**4. மீன் பிடி வலைத் தயாரிப்புத் திட்டம்.**

நைலான் நூலினாலும், பாலி எத்திலின் நூலினாலும் ஆண்டிற்கு 60 மெ. டன் அளவு மீன் பிடி வலைகளைப் பின்னுவதற்காக கிண்டியில் ஒரு ஆலையை இக்கழகம் அமைத்துள்ளது. 1984-85 ஆம் ஆண்டில் 24,850 மெ. டன் எடையுள்ள மீன்பிடி வலைகள் விற்பனை செய்யப்பட்டன. 1985-86-ல் 45 மெ. டன் எடையுள்ள மீன்பிடி வலைகளை உற்பத்தி செய்து விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

**5. இலைப்புரத மாவுத் திட்டம், உடுமலைப்பேட்டை.**

சிறு விவசாயிகள் தங்களது உற்பத்திக்கேற்ப விலையைப் பெறவேண்டி, கால் நடைகளுக்கும், கோழிகளுக்கும் தேவையான முக்கிய உணவாகிய இலைப்புரத மாவை, லூசரின் என்ற புல்வகையைப் பக்குவப்படுத்துதல் மூலம் தயாரிக்கும் தொழிலகத்தை முன்னோடியாக உடுமலைப்பேட்டையில் இக்கழகம் அமைத்துள்ளது.

இக்கழகம், 1984-85 ஆம் ஆண்டில் 286 மெ. டன். அளவுள்ள இலைப் புரத மாவை உற்பத்தி செய்துள்ளது. 1985-86 ஆம் ஆண்டில் 425 மெ. டன் அளவு இலைப்புரத மாவு உற்பத்தி செய்து விற்பனை செய்ய திட்டமிட்டுள்ளது.

**6. எண்ணெய் பிழிந்தெடுக்கும் திட்டம், போச்சம்பள்ளி.**

ரூ. 56 இலட்சம் மதிப்புள்ள, போச்சம்பள்ளியில் அமைக்கப்பட்ட சூரிய காந்தி விதைகளிலிருந்து எண்ணெய் பிழிந்தெடுக்கும் தொழிற்சாலை 1978 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் தனது வர்த்தக ரீதியிலான உற்பத்தியை துவக்கியது. இவ்வாலையின் திறனை முழுவதும் பயன்படுத்த, ஆண்டொன்றிற்கு, உரிமம் பெற்ற 12,000 மெ. டன். அளவிற்குக் கடலை எண்ணெய் வித்துக்களிலிருந்து எண்ணெய் பிழிய இந்திய அரசின் அனுமதி பெறப் பட்டது.



1985 ஜூன் 28]

கர்நாடகம் மற்றும் மஹாராஷ்டிரா மாநிலத்திலிருந்து 4,100 மெ. டன்னும் தமிழ் நாட்டிலிருந்து 2,400 மெ. டன்னும் 1984-85 ஆம் ஆண்டில் மொத்தம் 6,562 மெ. டன். சூரியகாந்தி விதைகள் கொள்முதல் செய்யப் பட்டன.

1984-85 ஆம் ஆண்டில் 3,402 மெ. டன் அளவு சூரியகாந்தி விதைகளும், 820 மெ. டன் அளவு கடலை கொட்டைகளும் இத்தொழிற்சாலையில் பிழியப் பட்டன. 1985-86 ஆம் ஆண்டில் 6,000 மெ. டன் சூரியகாந்தி விதைகளை யும், 2,000 மெ. டன் நிலக்கடலையையும் பிழிந்தெடுக்க திட்டமிடப் பட்டுள்ளது.

இக்கழகத்தின் சுத்திகரிக்கப்பட்ட சூரியகாந்தி எண்ணெயான "சனோலா" மிகவும் பிரசித்தி பெற்று விளங்குகிறது. அண்டை மாநிலங் களான கர்நாடகத்திலும் கேரளத்திலும் மற்றும் ஆந்திரப்பிரதேசத்திலும் "சனோலா" கிடைக்க வழி செய்யப்பட்டுள்ளது.

**7. கரைத்து எண்ணெய் எடுக்கும் தொழிற்சாலை, நாமக்கல்.**

இக்கழகம் செக்கு பிண்ணாக்கிலிருந்து எண்ணெய் எடுப்பதற்கும் மற்றும் அதன் சம்பந்தப்பட்ட பொருட்களைத் தயாரித்து விற்பனை செய்வதற்குமான நாமக்கல்லில் அமைக்கப்பட்ட கூட்டுறவு இணையகத்திடமிருந்து எண்ணெய் கரைத்தெடுக்கும் தொழிற்கூடம் ஒன்றை 1977 ஜூன் திங்களில் மேற்கொண்டது. இத்தொழிற் கூடம் 1977 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் தனது வர்த்தக ரீதியிலான உற்பத்தியைத் தொடங்கியது. இத்தொழிற் சாலையின் மூலதனம் ரூ. 21 இலட்சமாகும். இத்தொழிற்சாலை நாளொன்றுக்கு 15 மெ. டன் அளவுள்ள அரிசி தவிட்டிலிருந்து அல்லது 20 மெ. டன் அளவுள்ள பிண்ணாக்கிலிருந்து எண்ணெய் கரைத்தெடுக்கும் திறன் கொண்டுள்ளது.

1984-85 ஆம் ஆண்டில் 602 மெ. டன் அரிசி தவிட்டிலிருந்து எண்ணெய், கூலி அடிப்படையில் பிழிந்தெடுக்கப்பட்டது. அதே காலத்தில் 313 மெ. டன் பிண்ணாக்கிலிருந்து எண்ணெய் பிழிந்தெடுக்கப்பட்டது.

1985-86 ஆம் ஆண்டில், 4,500 மெ. டன் அரிசித் தவிட்டை பிழிந்தெடுப் பதன் மூலம் ரூ. 90-68 இலட்சம் மதிப்புள்ள 743 மெ. டன் அரிசித் தவிட்டு எண்ணெயையும், 3,735 மெ. டன் அளவு எண்ணெய் பிழிந்தெடுக்கப்பட்ட அரிசித் தவிட்டையும் விற்க திட்டமிடப்பட்டுள்ளது.

**8. கரைத்து எண்ணெய் எடுக்கும் தொழிற்சாலை, பொனக்குளம்.**

காதி மற்றும் கிராமப்புறத் தொழில்கள் வாரியத்தினரால் பட்டுக்கோட்டையில் அமைக்க உத்தேசிக்கப்பட்டிருந்த எண்ணெய் பிரித்தெடுக்கும் தொழிற்கூடத்தை இக்கழகம் ஏற்று புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள பொனக்குளம் என்ற இடத்திற்கு இதனை மாற்றியுள்ளது. இவ்வாலை நாளொன்றிற்கு 60 மெ. டன். எண்ணெய் பிண்ணாக்கிலிருந்து அல்லது 30 மெ. டன் அரிசித் தவிட்டிலிருந்து எண்ணெய் பிழியும் திறன் கொண்டது. இவ்வாலையின் திறனை நாளொன்றிற்கு 100 மெ. டன். எண்ணெய் பிண்ணாக்கிலிருந்து அல்லது 60 மெ. டன் அரிசி தவிட்டிலிருந்து எண்ணெய் பிழியும் அளவிற்கு உயர்த்தலாம்.

இவ்வாலை விரைவில் உற்பத்தியை தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1985-86 ஆம் ஆண்டில் 7,500 மெ. டன் அளவுள்ள அரிசித் தவிட்டிலிருந்து எண்ணெய் பிரித்தெடுக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**9. பூச்சிக் கொல்லி மருந்துக்களுக்கான மூலப் பொருட்கள் தயாரித்தல்.**

மெஸர்ஸ் இந்துஸ்தான் இன்செக்டிசைட்ஸ் லிமிடெட் என்ற நிறுவனத்துடன். ஆந்திரபிரதேசம், கர்நாடகம் மற்றும் மஹாராஷ்டிரா மாநிலங்களின் வேளாண் தொழில்கள் கழகங்களுடன் கூட்டுத் தயாரிப்பில் இக்கழகம் ஒரு தொழில் முயற்சியை மேற்கொண்டுள்ளது. ஆந்திரப்பிரதேசத்தில் உள்ள கோவூர் என்னும் இடத்தில் உற்பத்தி பிரிவு நிறுவப்பட்டுள்ளது. இந்த நிறுவனம் மிகவும் பிரசித்தி பெற்ற 'பி.எச்.சி. 50 சதவிகிதம்' நீரில் கரையும் தூள் மற்றும் 'பி.எச்.சி. 10 சதவிகிதம்' தூள் போன்ற பூச்சிக்கொல்லி மருந்துகளைத் தயாரிக்க ஆரம்பித்துள்ளது. இக்கழகம் ரூ. 33-76 இலட்சத்தை இந்நிறுவனத்திற்கு தனது பங்கு மூலதனமாக கொடுத்துள்ளது.

**10. 'கேஜ்வீல்' தயாரிப்பு.**

பவர் டில்லர்களுடன் விற்பனை செய்யும் 'கேஜ் வீலுக்கு' வாங்குவோரிடமிருந்து சிறந்த முறையில் எதிர்பார்ப்பு உள்ளது. 'கேஜ் வீல்' கள் திருச்சி காஞ்சிபுரம் ஆகிய இரு மையங்களில் தயார் செய்யப்படுகின்றன. இந்த கேஜ் விலை 'மிட்சுபிசி' மற்றும் 'குபோடா' பவர் டில்லர் தயாரிப்பாளர்களுக்கு மூல உபகரணமாக விற்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்த 'கேஜ் வில்' மேற்கூறிய இரு பவர் டில்லர் தயாரிப்பாளர்களின் பரிசோதனையில் உள்ளது. இதன் முடிவு விரைவில் தெரிய வரும்.





**தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் மற்றும் பணிக்கூட்டுறவு இணையம்.**

தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் மற்றும் பணிக்கூட்டுறவு இணையம் 1972 ஆம் ஆண்டு 220 வட்டார அளவிலான வேளாண்மைப் பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவு மையங்களும் 12 மாவட்ட அளவிலமைந்த கூட்டுறவு வேளாண்மைப் பணிச் சங்கங்களும் இணைந்த மாநில அளவிலான கூட்டுறவு சங்கமாக அமைக்கப்பட்டது.

இணையத்தின் முக்கிய நோக்கம் விவசாயிகளுக்கு கிராமப் பகுதிகளில் வேளாண்மைப் பொறியியல் சம்பந்தப்பட்ட வேளாண்மை பணி மையங்களை நிறுவுவதும் மற்றும் வேளாண்மைக் கருவிகளையும் இயந்திரங்களையும் வாடகைக்கு அளிப்பது மற்றும் அது சம்பந்தப்பட்ட கருவிகளையும் இடு பொருளையும் விற்பதுமாகும்.

இணையகத்தின் தற்போதைய அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூபாய் நூறு இலட்சங்களாகும். மற்றும் 31—3—1985-ன் நிலவரப்படி செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூபாய் 21-63 இலட்சங்களாகும்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் பணிக் கூட்டுறவு இணையம் மற்றும் அதனைச் சார்ந்த மையங்களின் தற்போதைய நடவடிக்கைகள்.**

**1. ஒருங்கிணைப்புத் திட்டம்.**

இத்திட்டத்தின்கீழ் டீசல் இயந்திரங்களையும் மற்றும் மின்சார மோட்டார் பம்பு செட்டுகளையும் துவக்க நிலை நிலவள வங்கியில் கடன் பெற்றுள்ள விவசாயிகளுக்கு நியாயமான விலையில் கொடுக்கப்படுகிறது. 1984-85 ஆம் ஆண்டில் 1,203 டீசல் இயந்திர பம்பு செட்டுகளும், 29 மின்சாரப் பம்பு செட்டுகளும் விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டுள்ளன.

**வணிக நடவடிக்கைகள்.**

இடு பொருட்களை விவசாயிகளுக்கு நேரடியாகவும் மற்றும் அதனைச் சார்ந்த சங்கங்கள் மூலமாகவும் தொடர்ந்து வழங்கி வருகிறது. மார்ச் 1985 வரையுள்ள காலத்தில் ரூபாய் 58-87 இலட்சம் மதிப்புள்ள இடுபொருட்களையும் கருவிகளையும் விவசாயிகளுக்கு வழங்கியுள்ளது. 1984-85-ல் இதனைச் சார்ந்த சங்கங்களின் மூலம் 252 இலட்சம் மதிப்புள்ள விவசாய இடு பொருள்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

[1985 ஜூன் 28

மாபெரும் விவசாய உற்பத்தித் திட்டம்.

இத்திட்டம் தமிழக அரசினால் கொண்டு வரப்பட்டு ஊரக வளர்ச்சி இயக்குநரால் வேளாண்மை உற்பத்தியை பெருக்கும் வண்ணம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு இவ்விணையம் 813 டீசல் இயந்திரங்களையும் 29 மின்சார மோட்டார்களையும் 1984-85 ஆம் ஆண்டில் வழங்கியிருக்கிறது.

வாடகைப் பணி மற்றும் பழுது பார்க்கும் பணிகள்.

இவ்விணையத்தைச் சார்ந்த பிரிவுகள் 233 இயந்திர கலப்பைகளையும், 183 இழுவை இயந்திரங்களையும், 167 எண்ணெய் இயந்திரங்களையும், 310 விசைத் தெளிப்பான்களையும் மற்றும் 14 பாறை பிளக்கும் கருவிகளையும் கொண்டுள்ளன. அதன் மூலம் அவை விவசாயிகளுக்கு உதவிபுரிந்து வருகின்றன. இந்த இயந்திர கலப்பை மற்றும் இழுவை இயந்திரங்களின் மூலம் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு குடிநீர் வழங்கும்பணி மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. இவ்வாறு வாடகைப் பணி மற்றும் பழுது பார்க்கும் பணிகள் மூலம் 1984-85 ஆம் ஆண்டில் இப்பிரிவுகள் 39.62 இலட்சம் ரூபாய் வருமானம் அடைந்துள்ளது.

இவ்விணையம் அதனுடைய வருமானத்தை மேலும் பெருக்கிக் கொள்வதற்காக 6 சாலை உருளைகளை வாங்கியுள்ளது. இச்சாலை உருளைகள் மூலம் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் கிராமங்களை தொடர்பு படுத்தும் வகையில் சாலைகள் அமைப்பதற்காக வாடகைக்கு வழங்கி வருகிறது. இச்சாலை உருளைகளின் மூலம் இவ்விணையம் 31—3—1985 முடிய ரூ. 2,28,712 வருமானம் அடைந்துள்ளது.

தானிய சேமிப்பு உலோக குதிர்கள்.

இந்திய அரசினால் அமைக்கப்பட்டுள்ள தானிய பாதுகாப்பு திட்டத்தை செயல்படுத்தும் வண்ணம் தானிய சேமிப்பு உலோக குதிர்களை விவசாயிகளுக்கு வழங்கி வருகிறது. இத்திட்டத்திற்காக இவ்விணையத்திற்கு இது வரை ரூ. 57 இலட்சம் சுழல் நிதியாக ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்விணையம் இதனைச் சார்ந்த மாவட்ட கூட்டுறவு வேளாண்மை சங்கங்களின் மூலமும் வட்டார அளவிலான மையங்கள் மூலமும் 1—4—1984 முதல் 31—3—1985 முடிய 784 உலோக குதிர்களை தயாரித்து வழங்கியுள்ளது.



1985 ஜூன் 28]

மத்திய அரசின் ஆதரவுடன் தொடங்கப்பட்ட திட்டங்கள்.

வேளாண்மை உற்பத்தியை பெருக்குவதற்காக விவசாயிகளுக்கு கால் நடைகளால் இழுக்கப்படும் வேளாண்மைக் கருவிகளையும் கையினால் இயக்கப்படும் கருவிகளையும் வாடகைக்கு விடுவதற்காகவும் மேற்படி கருவிகளைப் பற்றி விவசாயிகள் அதிகம் தெரிந்து கொள்வதற்காகவும் மக்கள் மத்தியில் செயல்விளக்கம் அளிக்கப்படுவதற்காகவும், இக் கருவிகளை விவசாயிகள் வாங்கி பயன்படுத்துவதற்காகவும் மானியம் வழங்கும் வகையில் மத்திய அரசு ஒரு திட்டத்தை வகுத்து செயல்படுத்துவதற்காக இவ்விணையகத்தின் பொறுப்பில் கொடுத்துள்ளது. இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கு ரூ. 82.58 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இவ்விணையம் மேற்கூறப்பட்ட கருவிகளையும் கையினால் இயக்கப்படும் கருவிகளையும் மக்கள் மத்தியில் செயல்விளக்கம் அளிக்கப்படுவதற்காக உற்பத்தியை ஆரம்பித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் ஆறு மாவட்டங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட 26 வட்டாரங்களில் ஒரு வட்டாரத்திற்கு இரண்டு வீதம் 72 விவசாய வேளாண்மை பணி மையங்களை இவ்விணையம் நிறுவியுள்ளது.

எதிர்காலப் பணிகள்.

மாவட்ட வேளாண்மை பணி மையங்களின் மூலம் பல கட்டங்களில் வேளாண்மை சிறப்பங்காடிகளை தமிழ்நாட்டில் நிறுவுவதற்கு இவ்விணையம் திட்டமிட்டுள்ளது. சிறிய மற்றும் ஏழை விவசாயிகளுக்கு வேளாண்மை இயந்திரங்கள், கருவிகள், சேமிப்பு உலோக குதிர்கள், பயிர் பாதுகாப்பு கருவிகள் மற்றும் வேளாண்மை இடுபொருள்களை மானிய விலையில் ஒரே இடத்தில் வழங்குவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்.

கல்வி.

1984-85 ஆம் ஆண்டில் சாதனைகள்—

1. திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கிள்ளிகுளத்தில் வேளாண் கல்லூரி ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. இது இப் பல்கலைக் கழகத்தின் மூன்றாவது வேளாண் கல்லூரியாகும்.

2. இவ்வாண்டில் கீழே காணும் புதிய முதுநிலைக் கல்விப் பட்டப் படிப்புகள் தொடங்கப்பட்டன :—

(அ) எம்.எஸ்ஸி. (விவ.) பண்ணைத் திட்ட நிர்வாகம் (வேளாண் கல்லூரி, கோயம்புத்தூர்).

(ஆ) எம்.ஈ. (விவ.) பின் அறுவடைத் தொழில் நுட்பம் (வேளாண் பொறியியல் கல்லூரி, கோயம்புத்தூர்).

(இ) எம்.வி. எஸ்வி. (பால் பண்ணை நுண்ணுயிரியல்) (சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி, சென்னை).

3. மூதறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சிகளை செம்மைப்படுத்தும் வகையில், மண் மற்றும் பயிர் நிர்வாக ஆய்வு மையம் ஒன்றும், பயிர்ப் பாது காப்பு ஆய்வு மையம் ஒன்றும் 1984—85 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

4. ஆராய்ச்சியாளர்கள் மற்றும் ஆசிரியர்களை ஊக்குவிப்பதற்காக சிறந்த ஆசிரியர் சிறந்த விஞ்ஞானி மெடல்கள் ஆண்டுதோறும் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

1985-86 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்கள்—

1. சேலம் மாவட்டத்திலுள்ள நாமக்கல்லில் மற்றுமொரு கால்நடை மருத்துவ கல்லூரி தொடங்குதல்.

2. கிள்ளிகுளம் வேளாண் கல்லூரியின் அடிப்படை வசதிகள், மற்றும் கல்வி வகுப்பு ஒன்று தொடங்கப்பட உள்ளது.

3. சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் பால்பண்ணை தொழில் நுட்பம், பால் பண்ணை வேதியல் மற்றும் கால்நடை விரிவினைத்துறை ஆகியவற்றில் மூதறிவியல் பட்டப்படிப்பு தொடங்கப்பட உள்ளது.

4. கோயம்புத்தூர் வேளாண் கல்லூரியில் நிர்வாக அறிவியலில் கல்வி மற்றும் ஆராய்ச்சி சம்பந்தமாக வேலைகள் மேம்படுத்தப்படும்.

5. பண்ணைத் தொழிலில் ஈடுபாடு கொண்டுள்ள படித்த இளம் விவசாயிகள் பலன் அடையும்படியாக தொலைக் கல்வித் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட உள்ளது. இத்திட்டத்தின் மூலம் இவ்விவசாயிகள் பி.விவ. தொழில் நுட்பம் (B. Agri. Tech.) பெற வாய்ப்பு ஏற்படும்.

6. பள்ளியில் தோல்வியுற்று வெளிவரும் இளைஞர்கள் சுயவேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொள்ளும் வகையில் பயிர்ப் பாதுகாப்பில் பட்டயக் கல்வி வகுப்பு ஒன்று தொடங்கப்பட உள்ளது.





ஆராய்ச்சி :

1984—85 ஆம் ஆண்டில் சாதனைகள்—

1. வெளியிடப்பட்ட புதிய இரகங்கள்.

இவ்வாண்டு கீழ்க் காணும் புதிய உயர் விளைச்சல் பயிர் இரகங்கள் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தால் வெளியிடப்பட்டன :—

1. டி.பி.எஸ். 1 நெல்.
2. பி.எம்.கே. 1 நெல்.
3. கோ. 25 சோளம்.
4. கோ. 12 ராகி (கேழ்வரகு).
5. கோ. 1 மக்காச்சோளம்.
6. கோ. 10 பருத்தி.
7. பையூர் 1 பாசிப்பயறு.
8. வி.ஆர்.ஜ. முந்திரி.
9. ஒய். சி. டி. 1 மாதுளை.
10. கொ. 5 பப்பாளி.
11. எம்.டி.யு. 1 புடல்.
12. ஒய்.சி.டி. 1 ரோஜா.
13. கோ. 1 சாமந்தி.
14. எம்.டி.யு. 1 சாமந்தி.
15. கோ. 1 வெந்தயம்.
16. சி.ஓ.சி. 85061 கரும்பு.

வேளாண் தொழில் நுட்பச் சாதனைகள் :

கீழே கொடுக்கப்பட்டுள்ள புதிய இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வேளாண் பொறியியல் துறையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன :—

டிராக்டரால் இயக்கப்படும் சால் போடும் கருவி.

டிராக்டரால் இயக்கப்படும் சால்போடும் போதே விதைக்கும் கருவி.

தானியங்கி நெல் அறுவடை இயந்திரம்.

நெல் நடுவதற்கான நடவு உபகரணம்.

அரை டன் கொள்ளளவு கொண்ட குறைந்த விலை சேமிப்புக் கலன்.

சமூக சாண எரிவாயு சாதனம்.

**2. பாசன நீர் தொழில் நுட்ப மையம் :**

பாசன நீர் தொழில் நுட்ப மையத்தில் செய்யப்பட்ட ஆராய்ச்சிகளின் சில முக்கிய கண்டுபிடிப்புக்கள் பின்வருமாறு :—

(அ) சோளம் மற்றும் மக்காச்சோளத்திற்கு எக்டேருக்கு 334 மி.மீ. பாசன நீர் பாய்ச்சுவதன் மூலம், அவற்றின் தானிய மகசூல் அதிகரிக்கின்றது.

(ஆ) சோள வயலில் வைக்கோல் மற்றும் பாலிதீன் காகிதத்தைப் பரப்பி வைப்பதன் மூலம் சோளத்தின் நீர்த் தேவைகளைக் குறைக்க முடியும்.

(இ) நெல்லுக்குப்பின் சாகுபடி செய்யப்படும் பருத்திக்கு சால் முறையில் நீர் பாய்ச்சுதல் மிகச் சிறந்ததாகும்.

(ஈ) கரும்பில் சாலின் அகலத்தை சிறிது சிறிதாக அதிகரிப்பதின் மூலம் கரும்பின் பாசன நீர்த் தேவையைக் குறைக்க இயலும்.

**3. கால்நடை மருத்துவம் :**

கால்நடை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையங்களின் செயல்பாடுகளைத் தீவிரப்படுத்துவதற்காக பிராணிகள் நல நெறியகம் ஒன்று திருச்சியில் 1984-85 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**சாதனைகள் :**

(1) ஜப்பானிய இனக்காடை இரகங்களில் சிறந்த ஒரு இரகம் தெரிவு செய்யப்பட்டு " நந்தனம் காடை " என்ற பெயரில் வெளியிடப்பட்டுள்ளது. அது போலவே " ரோடு ஐலண்ட் சிவப்பு " கோழி இனத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட " நந்தனம் 1 " என்ற கோழி இரகமும் விவசாயிகளின் நலன் கருதி வெளியிடப்பட்டது.

(2) எருமைகளின் செயற்கை இனவிருத்தி முறையிலும் விந்து சேமிப்பு முறையிலும் புதிய நுணுக்கங்கள் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளன.

(3) செம்மறி ஆடுகளுக்கு சுபா புல்லைத் தனித்தீவனமாக பயன்படுத்துவதனால் ஆடுகளின் கர்ப்பந்தரிக்கும் தன்மையிலோ அல்லது ஆட்டுக் குட்டிகளின் வளர்ச்சியிலோ கெடுதல்கள் எதுவும் ஏற்படுவதில்லை.

(4) ஜப்பானிய காடைகளை கூண்டில் வைத்து வளர்ப்பதே சிறந்த முறையாகும். கூண்டில் வளரும் காடைகளில்தான் உணவுத்திறன் அதிகமாக உள்ளதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.



**4. மீன் வளம் :**

இந்திய மற்றும் அயல்நாட்டு மீன் வகைகளை கலப்பாக வளர்ப்பதன் மூலம் ஆண்டொன்றுக்கு 6.5 டன்/எக்டேர் மீன்கள் பெற முடியும்.

தமிழக நீர்ப்பிடிப்பு இடங்களுக்கு இந்த மீன் பிடிக்கும் வலைகள் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளன.

கடல் நீரில் ஏற்படும் அசுத்தத் தன்மைகளைப் பற்றிய ஆய்வுகள் தூத்துக்குடியில் மேற்கொள்ளப்பட்டன.

**5. வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம் :**

வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு மையத்தில் செய்யப்பட்ட ஆராய்ச்சிகளின் மூலம் பின்வருவன அறியப்பட்டன :—

1. வேளாண் மறுநிதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தினால் அளிக்கப்பட்ட கடனில் கணிசமான அளவு சிறு விவசாயிகளைச் சென்று அடைந்துள்ளது.

2. தமிழகத்தில் உணவுப் பொருட்களில் பருப்பின் உபயோகம் மிகவும் குறைவாக உள்ளது.

3. சமூகக் காடுகள் திட்டத்திற்கென தனியாக கிராம சேவகர்கள் நியமித்திருப்பதின் மூலம் சமூகக் காடுகள் திட்டம் நல்ல பலன் பெற்றிருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

4. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகமும் சர்வதேச உணவுக் கொள்கை ஆய்வு நிலையமும் ஒருங்கிணைந்து ," பசுமைப் புரட்சியினால் வளர்ச்சித் தொடர்பு, வருமானப் பங்கீடு மற்றும் வேலைவாய்ப்பு ஆகியவற்றில் ஏற்படும் விளைவுகள் " என்ற ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**பல்கலைக் கழகத்தின் 1984-85 ஆம் ஆண்டின் ஆராய்ச்சித் திட்டங்கள்.**

**வேளாண்மை :**

1. பட்டுக்கோட்டை, பாலூர் மற்றும் கோவில்பட்டியில் விதை உற்பத்தியைப் பெருக்குதல்.

2. கீழ் பழனி மலைப் பகுதியில் ஆதிவாசிகளின் சமூக—பொருளாதார நிலைபற்றிய ஆய்வு—தடியன் குடிசை.

3. நெல்லில் பயிர் விளையியல் ஆய்வு—மதுரை.

4. நஞ்சை வாழை ஆராய்ச்சி நிலையம் அமைத்தல்—திருச்சி.

5. பயிர் மருந்தகங்கள் அமைக்கும் திட்டம்—சேலம், திருவில்லிப் புத்தூர்.

6. வேளாண் ஆராய்ச்சி நிலையம் அமைத்தல்—வேலூர்.

7. பண்ணைக் கட்டிட அமைப்புக்கள் பற்றிய ஆய்வு—கோயம்புத்தூர்.

8. சோயா மொச்சைச் சாகுபடி ஆராய்ச்சியை மேம்படுத்தும் திட்டம்—ஆடுதுறை மற்றும் பையூர்.

9. தென்னை ஆராய்ச்சியை வலுப்படுத்துதல்—வேப்பங்குளம்.

10. மண் கெட்டிப்படுதல் பற்றிய ஆய்வு—புதுக்கோட்டை.

11. கொத்துமல்லி மற்றும் மானாவாரிக்கான காய்கனிகள் இனவிருத்தி செய்யும் திட்டம்—அருப்புக்கோட்டை.

12. பயிர் பாதுகாப்பு ஆராய்ச்சி மையம் ஒன்று நிர்மாணிக்கும் திட்டம்—கோயம்புத்தூர்.

13. மண் மற்றும் பயிர் நிர்வாக ஆராய்ச்சி மையம் நிர்மாணிக்கும் திட்டம்—கோயம்புத்தூர்.

14. வேளாண் விரிவினை நெறியகத்தில் பயிற்சிப் பிரிவை வகைப்படுத்தும் திட்டம்.

**கால்நடை மருத்துவம் :**

1. மண்டல செம்மறி ஆடு ஆய்வு மற்றும் மேம்பாட்டு மையம்—அருப்புக் கோட்டை.

2. சென்னை மருத்துவக் கல்லூரியில் கதிரியக்கப் பிரிவுத் துறையை வலுப்படுத்துதல்.

3. கால்நடை பராமரிப்பு புள்ளியியல் துறையை வலுப்படுத்துதல்—கால் நடை மருத்துவக் கல்லூரி, சென்னை.

4. 'ஹிஸ்டாலஜி' மற்றும் 'ஹிஸ்டோ கெமிஸ்டரி' பிரிவு ஏற்படுத்துதல்—சென்னை.

5. கால்நடை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம் அமைத்தல்—தஞ்சாவூர்.

6. 'புரோடா ஜூவாலஜி' மற்றும் 'ஹெல்மிந்தாலஜி' ஆராய்ச்சி—சென்னை.

7. கால்நடை நல நெறியகம் அமைத்தல்—திருச்சி.



**1985-86-ல் தொடங்கப்பட உள்ள புதிய திட்டங்கள்.**

**வேளாண்மை :**

1. மதுரை, கிள்ளிகுளம், குன்னூர், ஆழியார்நகர், திருவண்ணாமலை, திருச்செங்கோடு மற்றும் காட்டுப்பாக்கம் நிலையங்களில் விதை உற்பத்தியைப் பெருக்கும் திட்டம்.

2. நெல்லில் ஒட்டு வீரியத்தன்மையை வணிக முறையில் பயன்படுத்திக் கொள்ளுதல் (மதுரை, ஆடுதுறை மற்றும் திரூர்).

3. கதிர் ஆராய்ச்சியை வலுப்படுத்தும் திட்டம்.

4. நெல் 'பிளாஸ்ட்' நோய்க்கு ஒருங்கிணைந்த பாதுகாப்புத் திட்டம், கோவை.

5. உயிரியல் முறையில் பயிர்ப் பூச்சிகளைக் கட்டுப்படுத்துதல் (கோவை).

**கால்நடை மருத்துவம் :**

1. இரண்டாவது கால்நடை மருத்துவக் கல்லூரி தொடங்குதல்.

2. கால்நடை மருத்துவக் கல்லூரியில் உள்ள தகவல் தொடர்பு மையத்தை வலுப்படுத்தும் திட்டம், சென்னை.

3. இரப்பை வினையியல் ஆய்வுத் திட்டம், சென்னை.

4. குளிர்ப்பதனம் செய்யப்பட்ட விந்துகளின் மூலம் ஏற்படும் கர்ப்பத்தின் எண்ணிக்கையை அதிகப்படுத்தும் ஆய்வு, சென்னை.

**மீன்வளம் :**

1. சத்துணவு வேதியல் மற்றும் சாக்கடை உபயோகிப்பு, ஆய்வு, தூத்துக் குடி.

2. புகையால் பதப்படுத்தப்பட்ட மீன்கள் தயாரித்தல், தூத்துக்குடி.

**வேளாண் விரிவாக்கக் கல்வி :**

கோவையிலுள்ள தகவல் தொடர்பு நிலையம், வேளாண்மை விஞ்ஞான கேந்திரங்கள், பயிர் மருந்தகங்கள், தேசிய ஆராய்ச்சி விளக்கத் திட்டங்கள், ஆய்வுக் கூடத்திலிருந்து பண்ணைத் திட்டம், பின்தங்கியோர் மேம்பாட்டுத் திட்டம், கிராம ஏற்புத் திட்டம் போன்றவற்றின் மூலம் பல்கலைக் கழகத்தில் செய்யப்பட்ட ஆராய்ச்சி முடிவுகள் வேளாண் மக்களிடையே நன்முறையில் பரப்பப்பட்டன. 1984-85 ஆம் ஆண்டில் 462 பயிற்சி வகுப்புகள் நடத்தப் பட்டன. இதனால் பயன பெற்றோரின் எண்ணிக்கை 13,226 ஆகும். அதோடு பயிர்ப் பாதுகாப்பு, பயிர் சாகுபடி, தோட்டக்கலை, மனையியல்,

வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் போன்றவை சம்பந்தமான 538 செயல் விளக்கங்கள் பல்கலைக் கழகத்தினால் நடத்தப்பட்டன. மேலும் ஆராய்ச்சிக் குறிப்புகள் வெளியிடுதல், வானொலி மூலம் அறிக்கைகளும், குறிப்புகளும் தருதல், தொலைக்காட்சி மூலம் விவசாயச் செய்திகள் தருதல், பொருட்காட்சிகள் நடத்துதல், திரைப்படக் காட்சிகள் ஏற்பாடு செய்தல் போன்றவற்றின் மூலமாகவும் வேளாண் ஆய்வுகள் பொது மக்களிடையே பரப்பப்பட்டன.

1984-85 ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்டு வேளாண்மைக்கென 14,163 கிலோ நெல் விதை, 746 கிலோ சிறுதானிய விதை, 20,550 கிலோ பருப்பு வகைகளின் விதை, 2,427 கிலோ பருத்தி விதை, 55,030 கரும்புக் கரணைகள், 101 கிலோ காய்கறி விதைகள், 13,108 கிலோ நிலக்கடலை விதை, 101 கிலோ எள் விதை, 2,080 கிலோ சோயா மொச்சை விதை, 1985 கிலோ சூரிய காந்தி விதை முதலியனவும் விநியோகிக்கப்பட்டன. மேலே குறிப்பிட்டுள்ள அனைத்து விதைகளும் மூல விதைகளாகும்.

### தமிழ்நாடு கரும்புப் பண்ணைக் கழகம், வடபாதிமங்கலம்.

1974-ல் நிறுவப்பட்ட தமிழ்நாடு கரும்புப் பண்ணைக் கழகத்தில் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ. 2 கோடிகள் ஆகும். இது பங்குத் தொகை ஒன்றுக்கு ரூ. 100 வீதம் இரண்டு இலட்சம் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இன்றுவரை இக்கழகத்திற்கு அரசிடமிருந்து வழங்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 27.50 இலட்சங்கள் ஆகும். இக்கழகத்தின் மொத்த நிலங்களின் பரப்பு, 4,051.74 ஏக்கர்கள் ஆகும். 13 மையங்களாகப் பிரிக்கப்பட்டுள்ள இந்த நிலங்கள் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள நீடாமங்கலம், திருத்துறைப்பூண்டி மற்றும் திருவாரூர் தாலுக்காக்களில் அடங்கியுள்ளன.

2. இக்கழகம் தோன்றியது முதல் 1974-75 மற்றும் 1980-81 ஆம் ஆண்டுகள் நீங்கலாக, மற்றைய ஆண்டுகளில் நட்டத்தையே அடைந்துள்ளது. இக்கழகத்தின் நடைமுறைகளைப் பரிசீலனை செய்ய ஒரு நிபுணர் குழுவை அரசு அமைத்தது. கழகத்தின் வளர்ச்சிக்காக, குழு சில பரிந்துரைகள் செய்தது. நிபுணர் குழுவின் பரிந்துரைகள் அரசு ஆய்வு செய்து, அதனை நடைமுறைப் படுத்த, ஆணை வழங்கியுள்ளது. கரும்புப் பயிரை, தற்போதுள்ள 500 ஏக்கரிலிருந்து 1,000 ஏக்கருக்கு உயர்த்தல், கூடுதல் பாசன வசதி ஏற்படுத்துவது, சிக்கனமற்ற சிறு நிலப் பகுதிகளைத் தவிர்த்தல் போன்ற சில பரிந்துரைகள் தற்போது நடைமுறைப்படுத்த கழகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. 1985-86-ல் 500 ஏக்கரில் கரும்பும், 2,843 ஏக்கரில் நெல்லும் மற்ற நிலங்களில் பருப்பு வகைகள், பருத்தி போன்றவை பயிரிடவும், கழகம் உத்தேசித்துள்ளது.

143955
D
V211,32'N85
N85·216·5